கலாபூஷணம், சைவப்புலவர்

சு. செல்லத்துரையின்

# வில்லிசைப் பாடல்கள்



இணுவில் - இளவாலை
அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரையின்
எட்டாம் ஆண்டு நினைவு நூல்


தெல்லிப்பழைக் கலை இலக்கியக்கள
வெளியீடு - 2018

300/-

கலாபூஷணம், சைவப்புலவர்

## சு. செல்லத்துரையின்

# வில்லிசைப் பாடல்கள்



இணுவில் - இளவாலை

அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரையின்

எட்டாம் ஆண்டு நினைவு நூல்

தெல்லிப்பழைக் கலை இலக்கியக்கள

வெளியீடு - 2018

உ

சிவமயம்

நான்எழுதும் வில்லிசையை நீபாடி நயந்துமகன்
நாவரச னும்பாடப் பயிற்றிஅரங் கேற்றினையே
மேன்மேலும் எழுதுதற்கு உந்துசக்தி யாகியநீ
நூலாகும் வேளையிதில் முன்வந்து நின்றுடுவீர்!

மலர்வு
24 . 03 . 1944



உதிர்வு
03 . 07 . 2010

# இணுவில் - இளவாலை

# திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை

## பவளவிழா ஆண்டு



சிவகாமசுந்தரி செல்லத்துரையின் வம்ச விருட்சங்கள்

# சமர்ப்பணம்

என்னினிய நாயகியார் சிவகாம சுந்தரியின்
எண்ஆண்டு நினைவாக இந்நூல் மலர்கிறது
என்அகவை எண்பதிலும் நாவரசன் ஐம்பதிலும்
மாவிரதன் நாற்பதிலும் வாழுகின்ற காலமிது.

ஆங்காங்கு கேட்டவர்காய்
ஆக்கியஇவ் வில்லிசைகள்
அத்தனையும் அரங்கினிலே
வெற்றிபெற்ற காரணத்தால்
இங்கவற்றை ஓர்நூலாய்
உருவாக்கித் தந்திட்டால்
என்றென்றும் எவ்வெவர்க்கும்
பயனளிக்கும் என்றுபல
நல்லவர்கள் சொன்னதனால்
நாமவற்றைத் தொகுத்தெடுத்து
கல்விகலை பண்பாட்டின்
கருத்துரைக்கத் தந்ததிட்டோம்
நானெழுதத் தான்பாடி
ஊக்குவிக்கும் நாயகியால்
நான்படைத்த வில்லிசையை
அன்னவர்க்கே சமர்ப்பித்தேன்.
ஆண்டாண்டு தோறுவரும்
அவர்நினைவு நூல்களிலே
எண்ஆண்டு நினைவாக
இந்நூலைத் தந்திட்டேன்.
என்னருமை மைந்தருள்ளே
அவரிருந்து எனக்குதவ
இந்நூல் மலர்கிறது
இறையருளே துணையாகும்.

'புனித வாசகம்'
பத்தாவத்தை,
இளவாலை.

**கலாபூஷணம், சைவப்புலவர்**
**சு. செல்லத்துரை.**

# என் தாய் ஊட்டிய வில்லிசை
# எனக்கு தமிழ் விருந்தாகும் நல்மருந்து

வில்லிசையில் சொல்லிசைத்து நல்லிசையாய் நாவசைத்து
துள்ளிவரும் தமிழாலே அள்ளித்தரும் பொருட்சுவையை
பருகத் தந்தார் என் தந்தை மெருகேற்றினார் என் தாய்
தந்தை தந்த தமிழை மூன்று வயதில் முத்தமிழாய்
நன்றே பயிலவைத்து நாவில் நின்றாடும் வகை செய்தார்
தீந்தமிழில் சொல்லெடுத்து தித்திக்கும் இசையமைத்து
தேன்சுவையில் வில்லிசையை தெவிட்டாமல் பாடவைத்தார்

ஐந்து வயதில் அருந்தமிழை முந்தி நான் கற்க முயற்சிதந்து
சிந்தையில் நிற்கும் வண்ணம் எந்தநாளும் எனக்கூட்டி
தந்தையின் பேச்சிலும் அவர் எழுத்தின் வீச்சிலும்
விந்தையாய் விளைந்த பூம்பாவை எனும் அரும்பாவை தன் கதையை
நல்வில்லிசையாய் நான்பாட காரணமாயிருந்து கதைமுழுதும்
ஆரணமாயமைய ஆற்றுப்படுத்தியவர் தரணியோர் போற்றும் வகை
அரங்கேற்றம் செய்துவைத்தார் அரணாம் காரைக்கால்சிவன் ஆலயத்தில்
அன்றுமுதல் இன்றுவரை அருந்தமிழைப் போற்றுகின்ற
பெரும்பேற்றைப் பெற்றேன் நான்

அன்னையிட்ட தமிழ் விண்ணையும் தாண்டியது
அன்னையோ எம்மைவிட்டு எட்டாண்டு ஓடியது
திண்ணையிலே இருக்கையிலே தினமும் உன்நினைவு - நீ
கண்ணெதிரே இருக்கையிலே கனவும் நனவானது - இன்று
வானத்தில் நீயிருந்து எமையெல்லாம் வழிநடத்துகின்றாய்
பணிகின்றோம் உன்தாள் எமை ஆற்றுப்படுத்திடுவாய்

எம் தாயின் எட்டாம் ஆண்டு நினைவு நிறைவினில்
அவர் நினைவாய் எந்தையாக்கிய சிந்தை நிறைந்த
சைவமும் தமிழும் சமூகமும் இலக்கியமும்
அறிவியலும் ஆறாம் அறிவும் நிறைந்த நல் வில்லிசைகள்
மறைந்த எம்தாய் நினைவாய் மலர்கின்றன இம்மலரில்

பாடசாலை மாணவரும் பாமரரும் பாவலரும்
நாவலராய் திகழ்வதற்கு நல்லதொரு தொகுப்பாய்
வில்லிசைகள் விளைந்துள்ளன விரும்பிப் படித்திடுவீர் - அவை
விருந்தாகும் நல் மருந்தாகும்.

**மகன் செல்லத்துரை நாவரசன்**
இலண்டன், 08.04.2018

# பதிப்புரை

**கலைப்பிரவாகம் திருமதி. கோகிலா மகேந்திரன்**
இணைச் செயலர், கலை இலக்கியக் களம்.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களத் தலைவர், கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் அமுத விழாவும், காலஞ்சென்ற திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் எழுபத்தைந்தாவது பிறந்தநாள் நினைவும் ஒன்றுகூடி வரும் இந்த ஆண்டு, அம்மா அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலிக்குரிய வருடமாயும் அமைகிறது. இந்தக் கலைத் தம்பதியினரின் மூத்த மைந்தன் செ.நாவரசன் இந்த ஆண்டு தனது ஐம்பதாவது பிறந்த தினத்தைக் கொண்டாட வேண்டும் இளைய மைந்தர் செ.மாவிரதன் நாற்பதாவது அகவை நிறைவில் மகிழ வேண்டும்.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம் சிறந்த நூல்களை வெளியிடுதல் என்ற தனது இலக்கில் 1986 முதல் இன்றுவரை சோர்வின்றிப் பயணம் செய்ய வேண்டும். எல்லாம் சரிவரும். சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்கள் செய்த இருபத்து மூன்று வில்லிசை எழுத்துருக்களின் தொகுதியாக இந்த நூல் வருகிறது.

வில்லிசை என்பது தமிழர் கலை வடிவங்களில் மிகப் பெறுமதியான ஒன்று. பிரதானமாக வில்லின் துணைகொண்டு பாடப்படுவதால் வில்லுப்பாட்டு எனப் பெயர் பெற்றாலும், துணைக் கருவிகளாக உடுக்கை, கடம், தாளம், கட்டை ஆகியவையும் இடம் பிடிக்கும்.

இந்த வில்லுப்பாட்டு எப்படித் தோன்றியது என்பது தொடர்பாக ஒரு கர்ணபரம்பரைக் கதை உண்டு. பண்டைக் காலத்துப் பாண்டிய மன்னன் வில்லுடன் வேட்டைக்குப் போனானாம். உற்சாகத்துடன் பல்வேறு விலங்குகளையும் வேட்டையாடி முடித்துவிட்டான். மாலை வந்துவிட்டது. மரநிழலில் அமைதிபெற அமரும்போது மனதிலே கலக்கம் தோன்றுகிறது. அமைச்சரை அழைத்தான் "இந்த உயிர் களைக் கொல்லும்போது எமக்கு ஒரு மகிழ்வு வருவதாக நினைக்கி றோம். ஆனால் அந்த மான் ஒன்றை நான் கொன்றபோது, அதன் குட்டி எப்படித் தவித்தது பார்த்தீர்களா? எனது மனம் அமைதியாக இல்லை. செய்த செயலுக்குப் பரிகாரம் இல்லையா?" என்று கேட்டான். அமைச் சர் சொன்னார், "உண்டு வேந்தரே. இறைவனை வேண்டி மனமுருகிப் பாடி மன்னிப்புக் கேட்போம். இசைக்கு இறைவன் இசைவான்."

காட்டிலே கச்சேரி ஆரம்பமாகியதாம். வேட்டைக்குப் போனவர்கள் வாத்தியக்கருவிகளைக் கொண்டு போயிருப்பார்களா? வில்லைத் தரையில் வைத்து அம்பால் தட்டி இசை எழுப்பினான் மன்னன். வில் சமநிலையில் நிற்க மறுத்தது. தண்ணீர் கொண்டுபோன மண்குடத்தை அதனுடன் கட்டி அணைத்துத் தட்டினான். "தந்தனத் தோம்" என்று அடி எடுத்துக் கொடுத்தார் அமைச்சர். உதவியாட்கள் கூடியிருந்து "ஆமாம்" போட ஒரு இசைக் கச்சேரி நிறைவானது. அரசனும் அமைதி பெற்றான்.

பிற்பாடு யுத்த களத்தில் வீரர்களின் மன அமைதிக்கும் பொழுதுபோக்கிற்குமெனப் பயன்பட்ட இவ்வடிவம் காலப்போக்கில் வளர்ச்சி பெற்றுச் செம்மை அடைந்து மக்களின் பொழுதுபோக்கிற்கு மட்டுமன்றிச் சமுதாய முன்னேற்றத்துக்குப் பயன்படலாயிற்று.

ஆகவே மனிதன் வேட்டையாடுதலைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்த நேரம் ஆரம்பித்த வில்லிசை என்ற கலை வடிவம் காலப்போக்கில் தனக்கே உரித்தான ஒரு கட்டமைப்பைப் பெற்றுக் கொண்டது.

காப்பு விருத்தம், வருபொருள் உரைத்தல் அல்லது நுதலிப் பாடுதல், குருவடி பாடுதல், அவையடக்கம், நாட்டு வளம், கதைக்கூறு, வாழி பாடுதல் என்று ஒரு செட்டும் செறிவும் கொண்ட அமைப்பு வில்லிசையின் தனித்துவம் எனலாம்.

இந்த நூலின் முதலாவது வில்லிசையாக அமைகின்ற விபுலானந்த அமுத வெள்ளத்தில் வரும் "தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லிசை பாட வில்லிசை பாட வந்தருள்வாய் கணபதியே" என்பது மிகப் பொதுவாகவே பாவிக்கப்படும் காப்பு.

அதையடுத்து வருபொருள் உரைத்தல் தெளிவாக வந்து விடும். இங்கே வரும் "மெய்ப்பொருள்" என்ற வில்லிசையில் "என்ன கதை சொல்லப் போகிறீர்கள்?" என்ற கேள்வியும் "ஆமாம் பொருள் தேடும் கதைதான். மெய்ப்பொருள் தேடும் கதை" என்ற பதிவும் அதற்கான மிகச் சிறந்த உதாரணம்.

"ஈழத் திருநாட்டின் மணி முடியாகத் திகழ்கின்ற யாழ்ப்பாணம் என்ற நாவலர் பெருமான் வில்லிசையில் "நாட்டு வளம்" காலத்திற் கேற்பச் சுருக்கிக் கூறப்படும். பூம்பாவை வில்லிசையில், "பூம்பாவை கதை கேட்ட புண்ணியர்கள் எல்லோர்க்கும் நாம் வணக்கம் சொல்லு கிறோம். நன்றாக வாழ்ந்திருப்பீர். மங்களம், மங்களம், மங்களம்..." என்று வாழி பாடிக் கதை நிறைவுபெறும்.

இந்த நூலைப் படிப்பவர்கள் வில்லிசை ஒன்றின் கட்டமைப் பைத் தெளிவாகப் புரிந்துகொள்வர்.

தமிழ்நாட்டிலே என்.எஸ்.கிருஷ்ணன் குழுவினர் கலைமாமணி சுப்பு ஆறுமுகம் குழுவினர் போன்றோர் வில்லிசையில் பெரும் புகழ் பெற்றதுபோல யாழ்ப்பாணத்திலும் "சின்னமணி" குழுவினர் ஆலயத் திருவிழாக்களில் எல்லாம் கொடிகட்டிப் பறந்த ஒரு காலம் இருந்தது. வீட்டுக்கு வீடு வந்து சேர்ந்த தொலைக்காட்சியும் கணினித்திரையும் ஏனைய கலைகளைப் போலவே வில்லிசையையும் பாதிக்கத்தான் செய்தன.

ஆயினும் இந்நூலாசிரியர் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து வில்லிசைக்கான எழுத்துருக்களை ஆக்கி வருகிறார். அவற்றின் உள்ளடக்கம் எப்போதும் காத்திரமானது. தரக்குறைவான நகைச்சுவையை மருந்துக்கும் காணமுடியாது. வில்லிசையைக் கேட்டு முடியும்போது ஒரு ஆழமான செய்தி மனதில் அழுந்திப் பதியும். இவற்றில் ஒன்றிரண்டு தவிர ஏனையவை பலதரம் மேடையேற்றப்பட் டவை. போட்டிகளில் பரிசுகளைத் தட்டிக்கொண்டவை. நூலில் நிறைவாகக் காணப்படும் வில்லிசை இவரது மகன் நாவரசனால் அவரது ஐந்தாவது வயதில் நிகழ்த்தப்பட்டது என்ற செய்தி மகிழ்வை யும் ஆச்சரியத்தையும் தந்து நிற்கிறது. இந்த வயதிலும் கூட கொள்ளுப்பிட்டி செஸ். தோமஸ் கல்லூரி, சைவமங்கையர் கழகம் போன்ற பிரபல பாடசாலைகளின் வேண்டுகோளுக்கிணங்க இவரால் எழுதப்பட்ட வில்லிசைகளும் இங்கு காணப்படுகின்றன.

செம்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பான புராண, இதிகாச, இலக்கியங்களில் காணப்படும் அரும்பெரும் விடயங்களைக் கதை யோடு கதையாகச் சொல்லிச் செல்வது இவரது வில்லிசை ஆக்கத்தின் சிறப்பு. தொல்காப்பியத்தில் வரும் ரசங்கள் ஓரிடத்தில் வரும். சங்க காலத்து ஐந்திணை ஒழுக்கம் பற்றிய செய்திகள் பிறிதோரிடத்தில் வரும். பசு, பாசம் பற்றிய முப்பொருள் விளக்கமும் மற்றோரிடத்தில் காணப்படும்.

"நான் எழுதத் தான் பாடி, ஊக்குவிக்கும் நாயகி" என்று மறைந்த தன் மனையாளைப் பற்றிப் புலவர் குறிப்பிடுவார். அவரது நினைவாக வரும் இந்நூல் பற்றித் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் பெருமை கொள்கிறது. நாவரசன் அவர்கள் சொல்வது போல இது விருந்து மட்டுமல்ல, உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆன்மாவுக்கு மான மருந்துமாகும்.

# அணிந்துரை

**சைவப்புலவர் கு.றஜீபன்** M.A.
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்
யாழ்ப்பாணம்.

தமிழர்களின் தொன்மையான கலைவடிவங்களில் வில்லுப் பாட்டும் ஒன்றாகும். இவ்வில்லுப்பாட்டு கலைவடிவத்தின் தோற்றம் பற்றிய அறுதியான ஆதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. செவிவழியாக சொல்லப்படும் கதைகளில் இருந்து இதன் தோற்றம் பற்றி ஊகித்து அறியமுடிகிறது. இராஜஇராஜ சோழன் காலத்தில் வில்லிசை இருந்திருக்கிறது என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் கிடைக்கின்றன.

இக்கலையினை வில்லிசை, வில்பாட்டு, விற்பாட்டு, வில்லுப்பாட்டு, வில்லடிப்பாட்டு போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. இது இசையுடன் பாடப்பட்டு வரும் கதைப்பாடல் வடிவமாகும். இதனை வில்லடிச்சான் பாட்டு என்றும் இந்தியாவின் தென்மாவட்டங்களில் அழைக்கப்படுகிறது. இது பாமரர் கலைவடிவமாக ஆரம்பத்தில் போர்க்களத்திலும் பின்னர் கோயில்களிலும் காணப்பட்டது.

நாடகத்தன்மையுடன் கதை கூறிச் செல்லும் முறைமைக்குக் கதைக் கூற்றரங்கு என்று பெயர். வில்லுப்பாட்டு முழுக்க இவ்வடிவத்துக் கான கூறுகளைக் கொண்டு விளங்குகிறது. கதைக் கூற்றரங்கில் ஒரு கதையின் பல்வேறு பாத்திரப்படைப்புக்களின் இயல்புகளையும் மிகச் சிறந்த முகபாவனைகளுடன் குறிப்பிட்ட குழுவினர் நடித்துக் காட்டும் பாங்கு. இது பார்வையாளரை மிகவும் ஈர்க்கும் வண்ணம் அமைந்து நிற்கும்.

இந்த வில்லுப்பாட்டுப் பற்றி கலைக்களஞ்சியம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "பாமர மக்கள் பரம்பரையாய்ப் பாடி வருகிற பாடலைப் பல்வரிக் கூத்து என்பர் அடியார்க்கு நல்லார். இதன் வகையிலே ஒன்று எனலாம் வில்லுப்பாட்டை. ஏனைய ஏற்றப்பாட்டு இறைவைப் பாட்டிலும் வில்லடியாகிய இது வேறானது. கிராம

தேவதைகளின் திருவிழாக் காலங்களிலே முத்தாரம்மன், இசக்கி, நீலி, சங்கிலி, பூதத்தார், சாத்தன், சுடலைமாடன் கதைகள் வில்லடியுடன் பாடப்பெறும். மேலும் போரிலே இறந்த வீரர் வரலாறுகளும், கணவரு டன் உடன் கட்டையேறி உயிர் நீத்த உத்தம மனைவியர் வரலாறு களும் வில்லடிக்குப் பொருளாகும். இவ்வினத்திலே சின்னத்தம்பி, முத்துப்பட்டன் கதைகள் பெரும் பிரசித்திபெற்றன.

பொதுமக்களிடையே பக்தி, பரோபகாரம், காதல், வீரம் முதலிய பெருங்குணங்களை வளர்க்க இக்கதைகள் பயன்படுகின்றன. உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளியிட மனிதனுக்குக் கிடைத்த கருவிகளிலே வில்லடியும் ஒன்று."

வில்லுப்பாட்டுக்கென்று தனியான மேடைவடிவம் எதுவும் இல்லை. சாதாரண மேடையில் அமர்ந்திருந்தே இதனை செய்யலாம். இதற்கென தனியான ஒலியமைப்பும் இருந்ததில்லை. ஒலியமைப்பில் வில்லுப்பாட்டு நிகழ்வு வில்லை அடிக்கும் கோலின் சத்தத்தையும், பாடல் வரிகளையும் உரைநடையையும், பின்பாட்டுக்காரன் சொற் குறிப்புக்களையுமே முதன்மையாக் கொண்டதாகும்.

வில்லுப்பாட்டுக் கலையில் வில் என்னும் இசைக்கருவி முதன்மை பெறுவதில் இருந்தே இசையின் பங்களிப்பின் முக்கியத் துவம் அறியமுடிகிறது. இதில் வில், உடுக்கை, குடம், தாளம், கட்டை ஆகிய இசைக்கருவிகள் இடம்பெறுகின்றன. வில்லுப்பாட்டின் முதன் மைக் கருவியாகிய வில்லினைத் தயாரிக்க வில்கதிர், முனைக் குப்பிகள், வடம், மணிகள், மணிகளைக் கோத்திடத் தேவையான வளையங்கள், கம்பிகள், கயிறுகள் முதலியனவாகும். பனையின் வைரம் பாய்ந்த அடிமரப் பகுதியினின்றும் செதுக்கி உருவாக்கப்படும் வில்பகுதியின் உடற்பகுதி கயிற்றால் வரிந்து சுற்றப்பெறும் மணி களைக் தொகுக்கத் தேவைப்படும் வளையங்கள் உரிய இடைவெளி விட்டு கதிரில் பொருத்தப் பட்டிருக்கும். கதிரின் நடுப்பாகம் குடத்துடன் சேர்த்துக் கட்டப்பெறும் குடம் மண்குடமாதலால் கதிரின் நடுப்பகுதி துணியால் சுற்றப்பட்டிருக்கும். வில், குடத்துடன் ஒட்டியிருக்கும் நிலை யில் நாண்வடம் மேலாகவும், கதிர்ப்பகுதி கீழாகவும் அமைந்திருக்கும். கதிரின் மேற்பகுதியில் வெண்கலக் குப்பிகள் பொருத்தப்பட்டிருக்கும்.

இரு முனைகளும் இணைக்கும் நாண் மூலம் இழுத்துக் கட்டப்பெறும். கதிரில் தொங்கவிடப்படும் மணிகள் வெவ்வேறு ஒலியமைப்பைக் கொண்டவையாகும். மணிகள் கதிரின் ஒருபக்கம் ஆறும் மறுபக்கம் ஐந்துமாகப் பதினொன்று என அமைக்கப்பட்டிருக்கும். ஒற்றைப் படையில் மணிகள் அமைப்பது பொதுவான மரபாகும்.

வில்லிசையில் வில்லடிப்பவரை புலவர் என்று அழைக்கும் வழக்கமும் சில பிரதேசங்களில் உண்டு. இங்கு வில்லினை இயக்குப வர் கைகளில் வைத்திருக்கும் போல் வீசுகோல் எனப்படுகிறது. இவ்வீசுகோல்களைக் கொண்டு புலவர் நாண்மீது தாளத்திற்கேற்பத் தட்டி இசை எழுப்புவர். வில்லுப்பாட்டில் உடுக்கு என்னும் இசைக் கருவியும் சிறப்பிடம் பெறுகிறது. தெய்வம் சார்ந்த கதைகளுக்கும், வீர அவலக் கதைகளுக்குமான உணர்ச்சிக் கூறுகளை வெளிப்படுத்த உடுக்கின் சத்தம் முக்கியமான பங்கு வகிக்கின்றது. இங்கு சிறிய வகையான உடுக்கை பயன்படுத்துவதனால் சிந்துடுக்கை என்று பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

வில்லுப்பாட்டின் முக்கியமான இன்னொரு இசைக்கருவி குடம் ஆகும். இதற்கு வில்லுக்குடம் என்று பெயர். இதன் கழுத்துப் பகுதி மிகவும் உறுதியாகவும், வாய் விளிம்பு வளைவு இன்றியும் காணப் படும். இது தனிக்கவனத்துடன் மண்ணால் உருவாக்கப்பட்டது. மேடை யில் புரியணை என்னும் வைக்கோல் வளையத்தின் மேல் வைக்கப்பெற்றிருக்கும். புரியணையின் மேல் குடம் வைக்கப்பட்டுள்ள நிலையில் தான் குடத்தின் கழுத்துடன் வில் கதிரின் நடுப்பகுதி சேர்த்து கட்டப்பெறும். குடத்தினை இயக்க பகத்தி மற்றும் சொட் டிக்கட்டை ஆகியவற்றைப் பயன்படுத்துவர். சொட்டிக்கட்டை கொண்டு குடத்தின் மீதும் தட்டி ஓசை எழுப்பப்படும்.

வில்லிசையில் பயன்படுத்தப்படும் ஏனைய இசைக்கருவி களாக தாளம், கட்டை என்பனவும் உள்ளன. இங்கு கட்டை என்பது. இரு மரக்கட்டைத் துண்டுகளால் ஆன கருவியாகும். கருங்காலி மரத்துண்டுகளே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. நீண்ட சதுர வடிவில் கைக்கு அடக்கமாக இது அமைந்திருக்கும். இதனைக் கட்டைத் தளம் என்று பெயரிட்டு வழங்குவர்.

வில்லுப்பாட்டில் முதன்மையான இடம் பெறுவது கதையாகும். வில்லுப்பாட்டு கதைகள் பல்வேறு வகையில் அமைகின்றன. மரபு வழிக்கதைகள் முதல் தற்கால நிகழ்வுகள் வரை எதையும் வில்லுப் பாட்டுக்கான கதையாகக் கொள்ளலாம். ஆனால் கட்டமைப்பு நிலை யில் அவை பொதுவான வடிவத்தைக் கொண்டு விளங்குவதைக் காணலாம். வில்லுப்பாட்டில் வரும் கதைகள் பொதுவாகப் பின்வரு மாறு அமையும்.

1. தொன்மைக் கதைகள்.
2. நாட்டுப்புறக் கதைகள்
3. தெய்வக்கதைகள்
4. சமுதாயக் கதைகள்
5. வரலாற்று வீரர் கதைகள்
6. நடப்பியல் நிகழ்வுகள். போன்றனவாகும்.

வில்லுப்பாட்டானது தனித்துவம் மிக்க பாடல் மற்றும் உரை கலந்த அமைப்பைக் கொண்டு விளங்குகிறது. காப்பு விருத்தத்தில் கதை தொடங்குகிறது. தொடர்ந்து வருபொருள் உரைத்தல், குருவடி பாடுதல், அவையடக்கம், நாட்டு வளம், அல்லது கயிலைக் காட்சி, கதைத் தலைவன் அல்லது தலைவியின் வாழ்க்கை நிகழ்ச்சி, வாழி பாடுதல் என அமையும். இங்கு காப்பு விருத்தம் என்பது கடவுள் வாழ்த்துப் பாடலாகும். வருபொருள் உரைத்த என்பது அடுத்து வரப்போகும் வில்லுப்பாட்டுக் கதையினைக் குறிப்பிடும் செய்தியாகும். குருவடிபாடுதல் என்பது குரு எனப்படும் ஆசானை வணங்கிப் பாடுவது என்பதாகும். அவையடக்கம் என்பது கற்றுத் தேர்ந்த அவையினர் முன் பாடப்போகும் தாங்கள் வணங்கி மகிழ்வதான குறிப்பினை உணர்த்து வதாகும். நாட்டு வளம் அல்லது கயிலைக்காட்சி என்பது நாட்டை போற்றிப்பாடும் பாடலாகும். இது எல்லாக் கதைகளுக்கும் பொதுவான தாக அமைக்கப்பட்டிருக்கும்.

வில்லுப்பாட்டு மேடையில் முக்கியமான கூறாக விளங்குவது வில் எனப்படும் இசைக்கருவியே எனலாம். வில்லுப்பாட்டுப் புலவரும் அவருக்குப் பக்கத்துணையாக உள்ள மற்ற பாட்டுக்காரர்களும் அவர்களுக்கென அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் இருக்கவேண்டிய முறைப்படி அமர்ந்து கொள்வர் பொதுவாக ஐந்து கலைஞர்கள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் பங்கு பெறுவர். மேடையில் அனைத்து கலைஞர்களும் அமர்ந்த பின்னர் வில்லின் முன் படைக்கப்பட்டிருக்கும்

தேங்காய், பழம், வெற்றிலைப்பாக்கு, கற்பூரம் என்பவற்றில் இருந்து தேங்காய் உடைத்து கற்பூரம் காட்டிய பின்னர் எல்லோரும் ஒன்றாக இசைக்கருவிகளை இசைப்பர். இது இராச மேளம் எனப்படும்.

வில்லுப்பாட்டானது நாடகக் கூறுகள் மிகந்து விளங்கும் கலை வடிவமாகும். இதில் பாடுகின்ற கலைஞர் வாய்மொழியாகக் கதை நிகழ்வினை நடத்திக் காட்டும் பொழுது நாடகத் தன்மையுடன் நிகழ்த் திக் காட்டப்படும். ஆரம்பகாலங்களில் பல இரவுகளில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்த வில்லிசை கால ஓட்டத்தில் நேரக்கட்டுப்பாட்டுக் குகள் சுருங்கியது.

வில்லிசை பெரும்பான்மையாக கிராமிய செல்வமாக இருப்ப தனால் இவ்வில்லிசையை மக்கள் தம் கிராமிய தெய்வங்களான சிறுதெய்வங்களின் கோவில்களில் பாடி பரவசமடைந்தனர். தென்னிந் தியாவில் கிராமங்களில் தோற்றம் பெற்ற இக்கலை வடிவமானது மிகப் பிந்திய காலத்திலேயே ஈழத்தில் அறிமுகமானது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இலங்கைத் திருநாட்டில் வில்லிசையைக் கொண்டு வந்தவர்களில் மாஸ்டர் சிவலிங்கம் திருப்பூங்கொடி ஆறுமுகம் போன்ற பலர் உண்டு. இதில் தனித்துவமானவராக லடீஸ்வீரமணி கருதப்படுகிறார். தமிழகத்திலும் இலங்கையிலும் புகழ்பூத்த வில்லுப் பாட்டு கலைஞர்களாக தோவாளை சுந்தரம்பிள்ளை, என்.எஸ். கிருஷ்ணன், குலதெய்வம் இராஜகோபால், யாழ்ப்பாணம் சின்னமணி உடப்பு பெரி.சோமாஸ்கந்தர், கலைமாமணி சுப்பு ஆறுமுகம், திருப்பூங் குடி ஆறுமுகம், லடீஸ்வீரமணி, உடுப்பிட்டியூர் யோகன், உடுப்பிட்டியூர் வானம்பாடிகள், நாச்சிமார்கோயிலடி இராஜன், கலைமாமணி விளாத் திக்குளம் இராஜலட்சுமி, திருநெல்வேலி புலிக்குடிட்டிப் புலவர், கலைமாமணி முத்துச்சாமி தேவர் போன்றவர்கள் விளங்குகின்றனர்.

இசைஞானமும் புலமையும் தமிழறிவாற்றல் மிக்கோரால் மட்டுமே வில்லிசைகளை அமைக்க இயலும் என்பதற்கு சான்று பகர்வதாக புலவர்களே இவற்றை அமைத்து வந்தமை குறிப்பிட வேண்டும். வில்லிசைக்குரிய பாரம்பரிய மரபு என்பது இசைநயம் உள்ள பாடல்களால் அமைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட கதைவகைமை யில் எழுதப்பட்டு வந்தது. இன்று இந்த நிலைமை மாற்றமடைந்து ஜனரஞ்சகம் என்ற புதிய நோக்கினால் திரையிசைப் பாடல்களையும்,

இரட்டை அர்த்தம் உள்ள வசனங்களையும் ஆபாச காட்சி வர்ணனைகளையும் கொண்டு அமைக்கப்பட்டு வரும் வில்லிசையினால் வில்லிசைப் பாரம்பரியம் என்பது எதுவென்றே அடுத்த தலைமுறையினருக்கு தெரியாமல் போகும் வாய்ப்பு உள்ளது. இன்று இலங்கையில் வில்லிசை நிகழ்வு என்பது அருகியே காணப்படுகிறது. பாடசாலைப் போட்டிகள் சிலவற்றிலும், ஒரு சில நிகழ்வுகளிலுமே இந்த நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றது. ஆனால் அவற்றிலும் முழுமையான வில்லிசை மரபு பின்பற்றப்படுவதில்லை. வில்லிசைப் பாடல்களை இசை தெரிந்த புலவர்கள் எழுதிய நிலையில் இருந்து மாறி சாதாரணமானவர்கள் எழுதத்தொடங்கியது வரவேற்கப்பட்டாலும் முழுமையான இசைநுணுக்கங்கள் நயங்கள் பின்னற்றப்படுவதில்லை. இதனால் இன்று வில்லிசைக்குரிய பாரம்பரியம் என்பது அழிவடைந்து வருகின்றது.

இத்தகைய வில்லிசைப் பாரம்பரியத்தினை தேடும் நிலையில் உள்ள ஒரு காலகட்டத்தில் தான் வெளிவருகின்றது. சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் வில்லிசைப்பாடல்களாகும். இருபத்திமூன்று வில்லிசைப்பாடல்களை கொண்டு வரும் இந்த வில்லிசைப்பாடல் நூலானது ஒரு வில்லிசைப் பாரம்பரியத்தில் அதன் பாடல்கள் அமைந்திருப்பது. வில்லிசைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி இனிவரும் காலங்களில் பேணப்பட வேண்டும் என்ற அவசியத்தினை ஏற்படுத்தி நிற்கின்றது.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் நாடறிந்த ஒரு புலவராகவும் விளங்குகின்றார். சமய அறிவும், தத்துவ அறிவும், இசை நுணுக்கங்களும் தெரிந்தவரான இவர் பல தசாப்தங்களாக இத்துறையில் ஈடுபட்டுவருகின்றார். கல்விப்பாரம்பரியமும் புலமைப்பாரம்பரியமும், இசைப்பாரம்பரியமும் ஒருங்கே கைவரப்பெற்றவரான இவரது படைப்புக்கள் அனைத்தும் எமது பாரம்பரியத்தினை பேணும் முறையிலேயே அமைந்திருக்கின்றன. பாநாடகங்கள், இசைநாடகங்கள், நாட்டிய நாடகங்கள், நாடகங்கள் என பல்துறைக்கலைச் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் புலவர் அவர்களின் இன்னொரு கலைச் செயற்பாடு வில்லிசைப் பாடல் உருவாக்கங்கள் ஆகும். பல்வேறு காலகட்டங்களில் புலவர் அவர்களால் எழுதி அரங்கேற்றப்பட்ட வில்லிசைப் பாடல்கள் இங்கு தொகுக்கப்பட்டிருக்கின்றன.

இருபத்திமூன்று தலைப்புக்களில் அமைக்கப்பட்ட இந்தப் பாடல்கள் அறம், ஆன்மீகம், வரலாறு, பெரியோர் நயப்பு, இலக்கியம், சமூகம் என்ற பல தளங்களில் அமைந்து காணப்படுவது சிறப்பான தாகும். வில்லிசைப்பாடல்களை எழுதுபவர் சிறந்த இரசனைத்தன்மை யும் நாடக அமைப்பும், இசை நுணுக்கங்களும் தெரிந்தவராக இருக்க வேண்டும். வில்லிசைப்பாடல்களில் எல்லாமே பாடல் அமைப்பில் வருவதில்லை. பாடலும், வசனமும் என உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்ற அமைப்பிலேயே வில்லிசைப் பாடல்கள் அமைந்து காணப்படுகின்றது. சைவப்புலவர் அவர்கள் நாடகத்துறையிலும் கால்பதித்தவர் பல்வேறு வகையான நாடக பிரதியாக்கங்களை எழுதி அவற்றினை அரங்கேற்றியவர். எனவே நாடக உரைப்பாங்கு என்பது அவர்க்கு இயல்பாக வரும் வடிவமாகும். எனவே நாடக பிரதியாக்க அனுபவமும், திருமுறையில் உள்ள பண்ணிசைப்பயிற்சி அனுபவமும், மரபு கவிதைப் பயிற்சியும், நாட்டிய நாடகத்திற்குரிய இரசனை அமைப்பும் கலந்து புலவர் அவர்களின் வில்லிசைப்பாடல்கள் அமைந்து காணப்படுகின்றது.

ஏனையவர்களுடைய வில்லிசைப்பாடல் அமைப்பில் இருந்து சைவப்புலவர் அவர்களின் வில்லிசைப்பாடல்கள் பிரத்தியேகமானவை. தேவையில்லாத வர்ணனைகளோ ஆபாசங்களோ எதுவுமின்றி ஒரு ஆன்மீக, அறஒழுக்க பின்னணியோடுதான் இவரின் பாடல்கள் அமைந்து காணப்படுவது. ஆரம்ப காலங்களில் இருந்த வில்லிசைப்பாடல் மரபினையே எடுத்துக் காட்டுகின்றது. ஜனரஞ்சகம் என்ற புதிய வகைமை நோக்கில் வில்லிசை மரபினை சிதைத்துவிடாமல் மக்கள் இரசிக்கக் கூடிய வகையில் எளிமைப்படுத்திய வகையில் இவரது பாடல்கள் அமைந்திருக்கின்றன.

> **"மூவேந்தர் நாட்டுக்கதை முத்தமிழில் நடந்தகதை**
> **பாவேந்தர் இளங்கோ தந்த பண்ணிமைக்கும் சிலம்பின்கதை**
> **கற்பரசி கண்ணகியாள் வழக்குரைத்து வென்றகதை**
> **அற்புதமாய்ப் பாடிடுவோம் அன்புடனே கேட்டிடுவீர்".**

மேற்குறிப்பிட்ட பாடல் இதற்கு ஒரு சான்றாகும். பாடல் அமைப் புக்கு அப்பால் அவரது வசன அமைப்பும் நாடக எழுத்துரு வடிவில்

மிக எளிமையாகவும் நளினமாகவும் அமைந்திருக்கின்றது. கதையை நகர்த்திச் செல்லும் பாங்கு புலவரின் நாடக அனுபவத்தினையே எடுத்துக் காட்டுகிறது. இவருடைய அனைத்து வில்லிசைப் பாடல்களிலும் எமது பாரம்பரியத்தினை பேணும் உளமார்ந்த அக்கறை வெளிப்படுகின்றது. எந்த ஒரு கலைப் படைப்பும் அதன் தனித்துவத்தில் இருந்து பிறழ்ந்து செல்லாமல் வளர்ச்சியடைய வேண்டும். அதற்கமைய புலவர் அவர்களின் பாடல்கள் தற்காலத்தில் உள்ளவர்கள் இரசிக்கக் கூடிய வகையில் தற்கால ரசனைப் போக்கிற்கு அமைய மரபு பிறழாமல் எழுதப்பட்டிருப்பது. சிறப்பானது.

ஈழத்தில் சந்தக்கவி, அருட்கவி, தெய்வக்கவி, ஞானக்கவி என்று பல்வேறு வகையான புலவர்கள் மேற்குறிப்பிட்ட அடைமொழிகளால் சிறப்புற்று இருந்தனர். அந்தவகையில் வீரமணி ஐயர், அருட்கவி விநாசித்தம்பி அவர்களுக்குப் பிறகு இசைப்பாடல்கள் மரபில் தனித்துவமானவராக அடையாளப்படுத்தப்படக் கூடியவராக சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களே விளங்குகின்றார். "இசைக்கவி" என்ற அடைமொழியுடன் சிறப்பிக்கக் கூடிய வகையில் இவரது வில்லிசைப்பாடல்கள் அனைத்தும் அமைந்திருக்கின்றன. வருங்காலத்தில் மாணவர்களும் பெரியோர்களும் இந்தப்பாடல்களை பயன்படுத்தக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த நூலுக்கு என்னைப் போன்றவர்கள் அணிந்துரை வழங்குவது என்பது மலைக்கும் மடுவுக்கும் இடையில் உள்ள வித்தியாசமாக உள்ளது. எனவே இசைக்கவி என அடையாளப்படுத்தப்படும் சைவப்புவர் செல்லத்துரை அவர்களின் வில்லிசைப்பாடல்கள் எமது நாட்டு வில்லிசைப் பாரம்பரியத்தினை அதன் பாரம்பரியம் சிதைவடையாமல் அடுத்த தலைமுறையினருக்கு கையளித்திருக்கின்றது என்பது மனநிறைவினைத் தருகின்றது.

வாழ்த்துக்கள்

# சைவப்புலவர் சு.செல்லத்துரையின் வில்லிசைப் பாடல்கள்

பக்கம்


01. விபுலானந்த அமுதவெள்ளம்...........01
02. மெய்ப்பொருள் ...........11
03. மெய்கண்டார்...........19
04. நாவலர் பெருமான் ...........30
05. தன்வினை தன்னைச் சுடும் ...........39
06. தீதும் நன்றும் பிறர்தர வாரா ...........45
07. கோவலன் பிரிவு ...........53
08. கண்ணகி வழக்குரை ...........62
09. கற்புக்கனல் ...........70
10. பத்தினித் தெய்வம் ...........80
11. எல்லோர்க்கும் கல்வி ...........88
12. சேர்ந்தாரைக் கொல்லும் சினம் ...........95
13. மாற்றுவலுவுடையோரை மதிப்போம் ...........103
14. செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை ...........112
15. சங்கம் தந்த அகத்திணை மரபு ...........119
16. நோதலும் தணிதலும் ...........127
17. மங்கையர் மாண்பு ...........133
18. மாதவி மாண்பு ...........142
19. அறநெறி கற்போம் ...........153
20. கல்விக்கண் ...........158
21. மானம் காத்த மன்னர்கள் ...........162
22. சமநீதியே சரிநீதி ...........169
23. பூம்பாவை ...........176

உ
சிவமயம்

வில்லிசை

## 1. விபுலானந்த அமுதவெள்ளம்

காப்பு : தந்தனத் தோம் என்றுசொல்லியே வில்லிசைபாட
வில்லிசைபாட
வந்தருள்வாய் கணதியே வரம்நீ தந்தருள்வாய் கணதியே

தந்தனத்தோம் என்று சொல்லித் தத்தித் தெய்யெனத்
தாளங்கூட்டி
தந்தனத்தோம் என்று சொல்லித் தத்தித் தெய்யெனத்
தாளங்கூட்டி -

தந்தன

தானதன்னா தானதன்னா தான தானத் தன்னானன்னா

நாடுமிக நல்ல நாடு நம்தமிழர் வாழும் நாடு
தமிழ்ஈழ நாட்டில் வாழும் தங்கத்தமிழ் மாணவர் நாம்
விபுலானந்த அமுதவெள்ளம் என்னும் ஒரு
வில்லுப்பாட்டு
வில்லெடுத்துப் பாடுகின்றோம் விருப்புடனே கேட்டிடுவீர்.

உதவி 1 : ஆமா எதைப்பற்றிப் பாடப்போகின்றீர்கள்?

உதவி 2 : அதுதான் சொன்னாரே விபுலானந்த அமுதவெள்ளம் என்று.

முதல்வர் : விபுலானந்த அமுதவெள்ளம் என்னும் தலைப்பில் விபுலானந்தர் கதையைப் பாடுகின்றோம்.

உதவி 1 : ஆமா விபுலானந்தர் என்கிறீர்கள், அமுதம் என்கிறீர்கள். வெள்ளம் என்கிறீர்கள். ஒரே குழப்பமாயிருக்கே.

முதல்வர் : சுவாமி விபுலானந்தர் தமிழ்க்குலத்தின் தலைமகன். முத்தமிழ் வித்தகர், உண்டாரைக் காக்கும் அமுதம் போன்றவர்.

பாட்டு : தனதத்த தானா தனதத்ததான
தன்னன்ன தனனன்ன தனனன்ன னானா

அமுதத்தை உண்டால் அதுஎம்மைக் காக்கும்
நோயில்லைப் பிணியில்லை மூப்பில்லைச் சாவில்லை

என்றென்றும் இளமையாய் இன்றுபோல் வாழலாம்
இன்பக் களிப்பிலே இனிதாக வாழலாம்.

உதவி 1 : அமுதத்தை உண்டால் என்றும் இளமையாய் வாழலாமா?

உதவி 2 : அப்படியென்றால் எனக்கும் கொஞ்சம்

பாட்டு : எல்லார்க்கும் தரலாமே
தென்தன தானா தென்தன தானா
தெந்தன தானா தெந்தன தானா

தென்கீழ் ஈழநாட்டில் பிறந்து
வடதமிழ் ஈழநாட்டினை ஊட்டி
செந்தமிழ் வாழும் நாடுகளெல்லாம்
சென்றிசை நாட்டிய திவ்விய அமுதம்

வசனம் : தென்கீழ் ஈழம் என்றால் கிழக்கு மாகாணமல்லவா? கிழக்கு மாகாணத்திலேயுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த காரைதீவுதான் சுவாமிகளைப் பெற்றெடுத்த பெருமைக் குரிய பூமி.

பாட்டு : தானான தானனன தானனானத் தானனன

தேன்பாயும் சோலைகளாம் மீன்பாயும் வாவிகளாம்
கன்னலொடு செந்நெல்விளை களனிகளாம்
கடல்வளமாம்
தமிழ் அமுதம் ஊற்றெடுக்கும் சான்றோர்கள்
வாழ்விடமாம்
தங்கத் தமிழ் கவியமுதம் சுரந்துவரும் பொன்னிலமாம்.

வசனம் : இத்தனை வளங்களும் நிறைந்த காரேறு மூதூர் எனப் போற்றப்படுவது காரைதீவு எனும் கிராமம். அதன் கிழக் கெல்லையாக வங்காள விரிகுடாக்கடலும், தெற்கே பசுமை கொழிக்கும் வயல் நிலங்களும் வடக்கே சாய்ந்த மருதூரும், மேற்கே பசும்புல் நிலங்களும் எல்லைகளாகக் காரைதீவினை அழகுபடுத்துகின்றன.

உதவி 1 : அடேயப்பா அவ்வளவு இயற்கையெழில் நிறைந்த ஊரா?

பாட்டு : தானான தானனனா தானான தானனனா

காரேறு மூதூராம் காரைதீவு என்னுமுயர்
ஓரூராம் கற்பரசி கண்ணகியாள் கோயில்கொண்ட
பேரூராம் பேரறங்கள் பெருகிவளர் திருவூரில்
பேரோடு வாழ்ந்தசாமித் தம்பியெனும் பெரியாரும்
பெண்ணணங்கு கண்ணம்மைத் தாயாரும்
செய்தவத்தால்
விண்ணவரும் வாழ்த்திசைக்க மண்ணவரும்
அதிசயிக்க
அமுதத்தின் கலசமென அழகியதோர் ஆண்குழந்தை
குமுதமலர்க் கொத்தெனவே அவதாரம் செய்ததுவே.

உதவி 2 : ஆமா இந்தத் தெய்வக்குழந்தை எப்போ பிறந்தது?

முதல்வர் : 1892ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29ம் நாள் அதிகாலை காரைதீவிலே சாமித்தம்பி கண்ணம்மை தம்பதிகளுக்கு இந்த அருந்தவப் புதல்வர் பிறந்தார்.

பாட்டு : தன்னான தானனனா தன்னான தானனனா

தெய்வீக யாழிசையும் செந்தமிழின் நல்லிசையும்
பழந்தமிழர் பண்பாடும் பைந்தமிழின் கலைவடிவும்
இயலிசையும் நாடகமும் எழிலார்ந்த தத்துவமும்
மேலைநாட்டு விஞ்ஞான அறிவியலும் பொருள் நூலும்
பொங்கித் ததும்பியொரு பூரணமாய்ப் பிறந்ததையா
எங்கள் தமிழ் மொழிக்கு ஏற்றம் பிறந்ததையா.

வசனம் : பிள்ளை பிறந்தவுடன் தம்பிப்பிள்ளையெனப் பெயர் வைத்தனர். கதிர்காமக் கந்தனுக்கு விற்றுவாங்கியதால் மயில்வாகனன் எனும் பெயர் பெற்றார். பாடசாலைக் கல்வி கல்லாமலே பாகம் பட்டது. உதயசூரியன் போல அறிவு வளர்ந்தது. ஆற்றல் மலர்ந்தது. ஞானம் பிறந் தது. 16 வயதில் லண்டன் கேம்பிறிச் சீனியர் பரீட்சை யில் முதல் வகுப்பில் சித்திபெற்றார். 18 வயதில் கொழும்பு ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்றார். 21 வயதில் விஞ்ஞான டிப்புளோமாப்

பட்டம் பெற்றார். 22 வயதில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பட்டம் பெற்றார். 26 வயதில் லண்டன் பி.எஸ்.ஸி. பட்டம் பெற்றார்.

பாட்டு : தெந்தன்னா தெந்தன்னா தெந்தன்னா னாதென்னா

ஒருமையிலே கற்றகல்வி எழுமையிலே தொடருமென்ற
வள்ளுவரின் சொல்லமுதை மெய்யாக்க வந்தவராய்
கருவிலே அமைந்துவந்த திருவுடைய சுவாமிகளின்
உருவிலே வந்ததையா உயர்கலையின் பெருநிதியம்.

வசனம் : 1922ல் சென்னை இராமக்கிஷ்ணமிசனில் பிரமச்சரியத் தொண்டராகி பிரபோதசைதன்யர் எனும் பெயர் பெற்றார். 1924ல் சித்திரைப் பூரணை நன்னாளிலே சுவாமி சிவானந்தரிடம் தீட்சை பெற்றுத் துறவியாகி "சுவாமி விபுலானந்தர்" எனும் ஞானப்பெயர் பெற்றார். தமிழ், ஆங்கிலம், லத்தீன், சமஸ்கிருதம் முதலாய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றார்.

பாட்டு : தன்னானா தானனனா தானனன்னா தன்னானனா

விஞ்ஞான அறிவியலில் மேல்நாட்டார் போற்றநின்றார்
மெய்ஞான தத்துவத்தில் மேதினியே வியக்கநின்றார்
முத்தமிழ்க் கலைகளிலே முழுதுணர்ந்த முனிவரானார்
இசைக் கலையில் நாட்டியத்தில் இணையில்லாப்

புகழ்படைத்தார்
ஆங்கிலத்தில் மொழியியலில் அதிசயிக்கும்
திறமைபெற்றார்
ஆசானாய் அதிபருமாய் அரியபெருந் தொண்டருமாய்
வித்தகராம் விபுலானந்தர் இத்தரையோர்
போற்றநின்றார்.

உதவி 1 : ஆமா இவர் என்ன உத்தியோகம் பார்த்தார்?

உதவி 2 : அதுதான் பாடினாரே ஆசானாய் அதிபருமாய் என்று.

வசனம் : 19ஆம் வயதில் மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரியில் ஆசிரியரானார். 21ஆம் வயதிலே கொழும்பு அரசினர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியரானார். 23ம் வயதிலே யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியிலே

விஞ்ஞான ஆசிரியரானார். 26ம் வயதிலே மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராகி விஞ்ஞானகூடம் நிறுவி வளர்த்தார். 34ஆம் வயதிலே திருமலை இந்துக்கல் லூரி அதிபரானார். 37ஆம் வயதிலே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதலாவது தமிழ்ப் பேராசிரிய ரானார். 49ஆம் வயதிலே பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியரானார்.

உதவி 1 : அடே அப்பா. இத்தனை இடங்களிலும் உத்தியோகம் பார்த்தாரா?

பாட்டு : தன்னான தானன்னா தானானா தானன்னா

தொட்ட இடம் பரிமளிக்க தூயோனின் கண்ணோட்டம்
பட்டஇடம் தூய்மை பெற்று பயன்மரமாய்க்
கனிந்ததையா
இட அடிக் கல்லெல்லாம் எழுந்தோங்கி மாளிகையாய்
தொட்டனைத்து ஊறும்கலைக் கழகங்களாய்
வளர்ந்ததம்மா

வசனம் : அவருடைய ஆசிரியப் பணியினாலே தென்தமிழ் ஈழமாம் கீழ்மாகாணத்திலும், வடதமிழ் ஈழமான வட மாகாணத்திலும், தமிழ்நாட்டிலும் எண்ணில்லாத பேரறிஞர்கள் உருவாக்கப்பட்டார்கள்.

உதவி 2 : கற்பித்தலுடன் நின்றாரா. வேறென்ன செய்தார்?

பாட்டு : தன்னான தன்னானனா தன்னான தன்னானனா

தமிழீழத் தலைநகராம் திருகோண மலையினிலே
இந்துக் கல்லூரியிவர் பணியாலே வளர்ந்ததையா
மானிப்பாய் இந்துவுமே மலர்ந்ததிவர் பணியாலே
கொழும்புராமக் கிருஷ்ணமிசன் தலைநிமிர்ந்ததிவராலே
கல்லடி உப்போடையில் சிவானந்த ஆச்சிரமம்
குருவின் அருள் ஆலயமாய்க் குவலயமே
வாழவைத்தார்.

வசனம் : இராமக்கிருஷ்ண மிசனில் சேர்ந்து ஆன்ம ஈடேற்றத்துக் காகவும் உலகம் உய்தி பெறுவதற்காகவும் துறவு பூண்ட சுவாமிகள் கயிலாய யாத்திரை சென்றார்கள். வியத்தகு ஆராய்ச்சிகள் செய்து நூல்களை எழுதினார்.

பாட்டு : தானானன்ன தானன்ன தானனன்ன தனனான

பேரானந்த ஞானவெள்ளம் பெருகிவரும் கையிலாயம்
தீராத காதலுடன் சென்றுதவம் செய்திருந்தார்
தவமிருந்தார் வரம்பெற்றார் அமுதவெள்ளம்
அள்ளிவந்தார்
அறிவமுத வெள்ளத்தினை அள்ளியள்ளிப்
பருகவைத்தார்.

வசனம் : சுவாமிகளின் புகழ் எத்திசையும் பரவியது. தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் சான்றோர் அவைகளிலே தலைமை தாங்கினார். ஆய்வுரைகள் நிகழ்த்தினார். அளப்பரும் தமிழ் அமுதத்தை அள்ளியள்ளி வழங்கினார்.

பாட்டு : தானதானன தானனதான

ஆங்கிலத்துக் கவிதைகள் பலப்பல
அழகிய தமிழ்செய்து அமுதாய்த் தந்தார்
சேக்ஸ்பியர் நாடக நுண்பொருள் தயந்து
மதங்கசூளா மணியாய்த் தந்தார்.

உதவி 1 : சுவாமிகளின் இசைக்கலைத் தொண்டு பற்றிச் சொல்லுங்களேன்.

முதல்வர் : இசைக்கலையில் நுண்ணாற்றல் படைத்த சுவாமிகள் மட்டக்களப்பு வாவியில் மீன்கள் பாடும் இசையை ஆய்வு செய்தார். அற்புதமான இசையொன்று பிறந்தது.

பாட்டு : தானனத் தானனனே தன்னானத் தானனனே

பூரணை நாளினிலெ பொன்போல் நிலாவினிலே
மட்டுநகர் வாவியிலே மதிமயங்கும் கானம் ஒன்று
மீன்பாடும் கானமது தேன்போலச் செவிபாய
தான் கேட்டு ஆய்வுசெய்தார் தெய்வீகக் கானம்தந்தார்.

உதவி 2 : சுவாமி விபுலானந்தரின் உள்ளத்திலே மீன் பாடும் இசை பாடலாகப் பிறந்ததென்கிறீர்களே...

பாட்டு : தானத் தானனா தானத்தானனா

நீலவானிலே நிலவு வீச
மாலை வேளையே மலைவு தீருவோம்

சால நாடியே சலதி நீருளே
பாலை பாடியே பலரொடாடுவோம்
நிலவு வீசவே மலைவு தீருவோம்
சாலதி நீருளே பலரொடாடுவோம்.

ரிசரி காகமா - மபதநீநிசா
சரிக மாமபா - பதநி சாசரி
ரிகம பாபதா - தநிச ரீரிகா
கமபதாதநீ - நிசரி காகமா

இந்த அற்புத இசையை இன்றும் மட்டுநகர் வாவியிலே கேட்டு மகிழலாம். எமது தமிழுக்குப் பெருமை தரும் ஐம் பெருங்காப்பியங்களில் முதன்மையான நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையை ஆராய்ந்தார். சிலம்பு கூறும் யாழ் பற்றிச் சிந்தித்தார்.

உதவி 1 : யாழ் பற்றியும் சிந்தித்தாரோ. அப்படியானால் யாழ் வாசிக்க வும் தெரியுமோ?

வசனம் : தெரியுமா! வடிவங்கூடத் தெரியாமல் மறைந்தழிந்த பண்டைய யாழின் நுட்பங்களை நுணுகி நுணுகி ஆராய்ந் தார். பத்து ஆண்டு காலம் யாழ் ஆராய்ச்சியில் மூழ்கி இருந்தார். ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மறைந்து கிடந்த தமிழரின் கலைச் செல்வத்தைத் தமிழர்முன் மீண்டும் படைத்தார்.

உதவி 2 : ஈழத்தமிழனே தலைநிமிர்ந்துநில். நல்லிசை யாழை மீளப் படைத்த தமிழ்ப் பெருங்கலைஞன் பிறந்த நாடு எங்கள் ஈழநாடு.

உதவி 1 : இசைவல்லான் இராவணேஸ்வரன் ஆண்ட நாடு இது.

வசனம் : அதுமட்டுமா. இராவணன் இராவணீயம் என்னும் இசை நூல் தந்ததும், இராவணாத்தம் என்னும் அற்புத வீணா வாத்தியம் ஆக்கியதும் இந்த ஈழநாட்டில்தான்.

பாட்டு : தானனன்னா தானனன்னா தானனன்னா தானா

இசைவல்லான் இராவணேசன் ஆண்டதமிழ் ஈழம்
ராவணீயம் என்னும் இசை நூல்தந்த ஈழம்
ராவணாத்தம் என்கின்ற ராவணனின் வீணா
வாத்தியத்தைத் தந்ததும் எங்கள் தமிழ் ஈழம்.

வசனம் : அடிகளின் யாழ் பற்றிய ஆராய்ச்சி முடிவுகள் யாழ் நூலாகி அச்சேறிக்கொண்டிருந்தன. யாழ் நூலின்படி யாழ்களும் உருவாக்கப்பட்டன. இசைத்தமிழ் உலகு அரகேற்ற நாளை அவலுடன் காத்திருந்தது. அவ்வேளை யில் நினைக்கவும் முடியாத துன்பம் ஒன்று நேரிட்டது.

பாட்டு : தானனானே தானனானே தானனானே தானனானே

நெருப்பான காய்ச்சல் வந்து நீண்ட நாட்கள்
வாட்டியதே
கொழும்பு வைத்தியசாலையிலே கொடுநோயால்
படுத்து விட்டார்
ஈழம் முதல் இமயம்வரை சென்று புகழ் தந்த உடல்
ஆடாமல் அசையாமல் அறிவிழந்து கிடந்ததையா.

வசனம் : சுவாமிகள் உயிர் போகப்போகின்றதே என்று நண்பர் கள் சூழ்ந்திருந்தார்கள். எவரும் எதிர்பாராத விதமாக அடிகள் தானாகவே எழுந்து உட்கார்ந்தார்.

உதவி 1 : என்ன ஆச்சரியம்?

உதவி 2 : இல்லை இல்லை. முகத்தில் செந்தளிப்பு கொப்பளித் தது. உதய சூரியப் பிரகாரம் போல ஞான ஒளி பிரகாசித்தது.

பாட்டு : தானத்தன்னே தானத்தன்னே தானத்தன்னே
தானத்தன்னே

அவ்வுலகம் சென்றுவந்து அனுமதியும் பெற்றதுபோல்
இவ்வுலகம் அதிசயிக்க எழுந்ததையா அரங்கேற்றம்.

உதவி 1 : என்ன யாழ் அரங்கேற்றம் நடந்ததா?

முதல்வர் : எழுந்தார் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு சென்றார். படிப்படி யாக உடல் தேறியது. யாழ் நூலும் யாழ்களும் உருவா கின. யாழ் அரங்கேற்ற முயற்சிகள் ஆரம்பமாகின. தமிழ்நாட்டில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் அரங்கேற்ற ஒழுங்குககளைச் செய்தது. கும்பகோணத்துக்கடுத்த திருக்கொள்ளம் பூதூர் இந்திரலோகம் போல விழாக் கோலம் பூண்டது.

உதவி 2 : அரங்கேற்றவிழா கோலாகலமாக ஆரம்பம் என்று சொல்லுங்கள்.

உதவி 1 : ஊர்வலம் இல்லையா?

முதல்வர் : ஊர்வலம் இல்லாமல் விழாவா. 1947ம் ஆண்டு யூன் மாதம் 5ஆம் நாள் தமிழ் கூறும் நல்லுலகப் பெரும்புல வர்களும், இசைப் பேரறிஞர்களும், பிரபுக்களும் ஒன்று கூடினர். அடிகளாரும் அவர் ஆராய்ந்து கண்ட யாழ் நூலும் நூலுக்கமைய ஆக்கப்பட்ட யாழ்களும் ஊர் வலம் வந்தன.

பாட்டு : தனனதானா தனனனன தானா

முளரி யாழும் சதுர்த்தண்டி வீணையும்
சுருதி வீணைய்பு தூயநல் இசைதரும்
பாரிசாத வீணையும் ஏந்தி
ஊர்வலம் எழுந்தது உலகே திரண்டது
மங்கல முரசம் ஓங்கி ஒலித்திட
எங்கும் பரவசம் எழுந்தது எழுந்தது.

வசனம் : ஊர்வலம் விழா மேடையை அடைந்தது. விபுலானந்த அடிகளாரின் திருக்கரத்தில் உதித்த யாழ் நூல் அரங்கேறியது. விபுலானந்த அமுதவெள்ளத்தில் மக்கள் மெய்மறந்து திளைத்தார்கள்.

பாட்டு : தெந்தன்ன னானா தெந்தன்ன னானா

யாழ் நூல் தந்தார் யாழையும் தந்தார்
யாழையும் இசைத்தார் விபுலானந்தர்
யாழிசை போலவர் புகழிசை உலகில்
ஏழிசை யாகி எண்திசை விளங்க
தமிழர் யாழிசைப் பெருமையுணர்ந்தார்
தமிழிசையாலே தலைநிமிர்ந்தாரே.

வசனம் : யாழ் நூல் தந்த முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் அரங்கேற்றம் முடிந்து ஈழம் வந்தார். தன்னை மறந்த ஆனந்தக் களிப்பில் திளைத்திருந்தார். நெருப்புக் காய்ச்சல் மீண்டும் பிடித்தது. படுக்கையானார். யாழ் நூல் அரங்கேறிய ஒரு மண்டல காலத்தில் 1947 யூலாய்

மாதம் 19ம் திகதி நள்ளிரவில் அடிகள் பூதவுடல் நீத்துப் புகழ் உடல் புகுந்தார்.

மங்களம் : தானத் த தானா தானத்த தானா
தானத் த தானா தானத் த தானா

யாழ் நூல் தந்த விபுலானந்தர்
முத்தமிழ் அறிந்த வித்தகப் புலவர்
ஆங்கில வாணியின் அருங்கலைச் செலவர்
அறிவியல் சாத்திர ஆய்வினில் வல்லோன்
வேதாந்த சித்தாந்த சாகர மானோன்
விண்ணமு தத்தை மண்ணினில் தந்தோன்
வித்தகர் விபுலா னந்தர் திருவடி
இத்தரை உளவரை நாம்தொழு வோமே.

மங்களம் மங்களம் மங்களம்.

1992இல் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் விபுலானந்தர் நூற்றாண்டு விழாவும் நூற்கண்காட்சியும் நடைபெற்றபோது அரங்கேறிய வில்லுப்பாட்டு.

அரங்கப் படையல் நூலில் வெளிவந்தது - 2007

உ
சிவமயம்

வில்லிசை

# 2. மெய்ப்பொருள்

காப்பு : தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே

தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளங்கூட்டி
தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளங்கூட்டி - தந்தன...

தந்தனத் தனாதென்னத் தந்தனத் தனா தென்ன

கற்பக விநாயகர் பொற்பதம் பிடித்தோம்
அற்புதக் கதைசொல்ல அருள்வேண்டி நின்றோம்
-தந்தன

தான தன்னா தான தன்னா தானதானத் தன்னா னன்னா

நாடுபுகழ் ஈழமதில் நல்லதமிழ்ப் பாடவல்லார்
நாடுவிட்டுப் புலம்பெயர்ந்து லண்டன்நகர் வாழுவோர்
நாம்
பாடுகிறோம் வில்லுப்பாட்டுப் பக்குவமாய்க் கேட்டிடுவீர்
ஆமா பக்குவமாய்க் கேட்டிடுவீர்

தன்னா னானா தானன னானா தன்னா னானா
தானனனானா

பாட்டு : சபையிலுள்ள பெரியோரே தாய்மாரே தந்தையரே
தம்பியரே தங்கையரே அண்ணன்மாரே அக்காமாரே
சுவையான கதையொன்று சொல்லிடுவோம் கேட்டிடுவீர்
ஆமா சொல்லிடுவோம் கேட்டிடுவீர் சொல்லிடுவோம்
கேட்டிடுவீர்

உதவி 1 : என்ன கதை சொல்லப் போகின்றீர்கள்?

உதவி 2 : புலம்பெயர்ந்து வந்தவர் நாம் பொருள் தேடும் கதை சொல்வீரோ?

முதல்வர் : ஆமாம் பொருள் தேடும் கதைதான்.
மெய்ப்பொருள் தேடும் கதை.

உதவி 1 : என்ன மெய்ப்பொருள் தேடும் கதையோ? அப்போ மெய்ப் பொருளும் உண்டோ?

முதல்வர் : இந்த உலக வாழ்வுக்காக நாம் தேடும் பொருளெல்லாம் பொய்ப்பொருள்தான். அவை நிலை நிற்பதில்லை. மறு உலக வாழ்வுக்கா - அதாவது எங்கள் உயிர் என்றும் பேரின்பப் பெருவாழ்வு பெறுவதற்காகத் தேடப்படுவதே மெய்ப்பொருள். அதுவே இறைவன் திருவருள்.

உதவி 1 : இது மெத்தப் பெரிய விஷயமாயிருக்கும் போலிருக்கே.

உதவி 2 : ஆமா கதை சொல்லி முடிய எல்லாம் வெளிக்கும் தானே. நீங்கள் கதையைச் சொல்லுங்கள்.

உதவி 1 : கதைக்குப் பெயர்?

முதல்வர் : மெய்ப்பொருள் நாயனார் கதை.

உதவி 2 : ஓகோ ஒரு ஆளின்ரை கதையா? எங்களுக்கு நல்லாய்ப் பிடிக்குமே. சொல்லுங்கள் சொல்லுங்கள்.

பாட்டு : தானத் தன்னா தானத்தன்னா
தானத் தன்னா தன்னானனா

ஈழம் முதல் இமயம் வரை ஆட்சிசெய்த மன்னர் மன்னர்
சோழவள நாட்டுக்கதை சொல்லிடுவோம் கேட்டிடுவீர்
சோழநாட்டு எல்லையிலே சேதிநாடு உண்டு கண்டீர்
சேதிநாட்டுத் தலைநகரம் தருக்கோவலூர் என்று சொல்வார்

நடை : தள்ளாவிளையுளும் தக்காதரும் தாள்வில்லாச் செல்வமும் சேர்ந்த அந்தச் சேதிநாடு தன்னிலே திருக்கோவலூர் என்னும் இடத்தைத் தலைநகராகக் கொண்டு மெய்ப் பொருள் என்னும் அரசர் ஆட்சிசெய்து வந்தார்.

பாட்டு : தன்னா தன்னா தன்னானனா
தன்னா தன்னா தன்னானனா

செங்கோல் நெறிமுறை தவறாத
எங்கோன் மெய்ப்பொருள் ஆட்சியிலே
எங்கும் இன்பம் பொங்கிடவே
இனிதாய் மக்கள் வாழ்ந்திருந்தார்.

உதவி 1 : மெய்ப்பொருள் ஆட்சியிலே ஒருகுறையும் இல்லாமல் மக்கள் வாழ்ந்திருந்தார்கள் என்று சொல்லுங்கள்.

உதவி 2 : ஆமா மெய்ப்பொருள் ஆட்சியில் விஷேசமாக என்ன செய்தார்?

பாட்டு : தன்னனான தானனனனே, தன்னனான தானனனே

சைவநீதி தளைத்திடவே தானே வாழ்ந்து காட்டினானே
சிவனடியார் சிவனெனவே தினமும் போற்றி வணங்
கினாரே

நடை : சிவசின்னங்களாகிய திருநீற்றையும், உருத்திராக்கத்தையும் அணிந்தவராய், சைவசமய அறிவாசாரம் உடையவராய், சிவனடியாரைப் போற்றிசெய்து வாழ்ந்தார். சிவசின்னம் அணிந்தவரைக் கண்டால், மக்கள் மரியாதை செய்து வணங்க வேண்டும் என்று வழமைப் படுத்தி ஆட்சிசெய்தார்.

உதவி 1 : போலிச்சாமியாருக்கும் கொண்டாட்டம் தான் என்று சொல் லுங்கள்.

உதவி 2 : ஆசாமிமாரை விட்டிட்டு உண்மைச் சாமிமாரைப் பற்றிக் கேளும்.

உதவி 1 : அப்போ ஆமாசாமி போடச் சொல்லுகிறீரா?

முதல்வர் : ஆமா சாமியும் வேண்டாம். ஆசாமியும் வேண்டாம். கதையைக் கேளுங்கள்.

பாட்டு : தானாதானா தன்னானனா
தானாதானா தன்னானனா

சேதி நாட்டின் செல்வவளச்
சிறப்பைக் கண்டான் அயல் நாட்டான்
பாதிவீரம் தானும் இல்லான்
படையெடுத்தான் சேதி நாட்டில்

நடை : சேதிநாட்டுச் செல்வத்தைச் சூறையாடவந்த முத்த நாதன் மெய்ப்பொருளுடன் போரிட்டுப் பலமுறைகள் தோற்றோடி னான்.

உதவி 1 : நல்லாயிருப்பவரைச் சூறையாடுவதுதான் பொறாமை கொண்டவரின் போக்கிரித்தனம்.

உதவி 2 : நமக்கும் அதுதானே நடந்தது. நாடுவிட்டுப் புலம் பெயர்ந்து நாம் இங்கு வந்த கதையும் இதுதானே.

நடை : பொறாமை கொண்டவர் எண்ணம் ஈடேறியவரலாறே யில்லை. பொறாமை கொண்டவன் பொறாமையாலே தான் அழிவான். பலமுறை போர் தொடுத்த முத்த நாதனுக்குத் தோல்வியே தொடர்ந்தது.

பாட்டு : தெந்தன்னானா தெந்தன்னனானா
தெந்தன்ன னாதென்ன தெந்தன்ன னானா

வஞ்சனையாலே நாடுபிடிக்க
வழியொன்று செய்தான் முத்தநாதன்
நஞ்சினை மனத்தில் கொண்டவனாக
சிவனடியார்போல் வேடமிட்டான்

உதவி 1 : நான் முந்தியே சொன்னேன். ஆசாமியார் ஏமாத்துவாங்க ளென்று. இப்ப முத்தநாதனே ஆசாமிவேடம் போட்டு வருகிறான்.

உதவி 2 : என்ன வம்பு செய்யப் போகின்றானோ. எனக்குப் பயமாயிருக்கு.

பாட்டு : தானத்தனாதன தானத்தனானா
தானத்தனாதன தானத்தனானா

நரைத்த சடைமுடி தாடிபுனைந்து
நிரைத்த தாழ்வடம் கழுத்திலணிந்து

கரைத்த நீற்றினை மேனியில்பூசி
உரைத்த சந்தனம் குங்குமம் பூசி

வசனம் : சிவனடியார் போலவே வேடம் போட்டுக்கொண்டு வஞ்சக எண்ணத்துடன் வந்தான் முத்தநாதன்.

நடை : தானத்தனான தானத்தனான

தானத்தனானா தானத்தனான

காவியுடை தரித்துக் கையில் கமண்டலங் கொண்டு
பாவிமகன் ஏட்டினுள்ளே குத்துவாள் மறைத்துவைத்து
பட்டினால் மூடிஅதைப் பரம ஆகமமென்று
திட்டமிட்டு வந்தான் மெய்ப்பொருளைக் கொல்வதற்கு

வசனம் : இவன் வேடதாரியென்றறியாத மக்களெல்லாம் உண்மையான சிவனடியார் என்றெண்ணி மரியாதை செய்து மண்டியிட்டு வணங்கினர். மன்னனைக் காண வேண்டுமெனக் கூறி மெய்ப்பொருளின் படுக்கை யறைக்கே சென்றுவிட்டான். படுக்கையில் இருந்த அரச னும் அரசியாரும் எழுந்து பணிந்து வணங்கி வரவேற்றனர்.

உதவி 1 : நான் அப்பவே சொன்னேன் ஆசாமியென்று.

உதவி 2 : ஐயையோ ஏமாறப் போகிறார்களே.

பாட்டு : தெந்தன்ன னாதென்ன னானா தென
தென்தன்ன னாதென்ன னானா

வரவேண்டும் வரவேண்டும் சுவாமி - உங்கள்
வரவு நல்ல வரவாக வரவேண்டும் சுவாமி
தரவேண்டும் தரவேண்டும் சுவாமி - ஆசி
தந்திடுவீர் உங்கள் திருவடி தொழுதோம்.

வசனம் : என்று மன்னன் மெய்ப்பொருளும் அரசியும் அவரின் காலில் விழுந்து வணங்கினார்கள்.

உதவி 1 : அந்த வஞ்சக ஆசாமியின் காலில் அரசனும் அரசியும் விழுந்து வணங்கினார்களா?

வசனம் : ஆமாம், சிவனடியாரைக் கண்டால் சிவனாகவே கருதி வணங்குவதுதானே அவர்கள் வழக்கம். சிவனடியார் போல் வந்த முத்தநாதன் அவர்களைக் கைதூக்கி விட்டான். தான் ஒரு புதிய ஆகமம் கொண்டுவந்திருப்ப தாகவும் அதனை அரசனுக்கு மட்டுமே உபதேசிக்க வேண்டுமெனவும் கூறினான். அரசனின் விருப்பப்படி அரசி அவ்விடத்தைவிட்டு அகன்றார். அரசன் சிவனடி யாரை ஒரு பீடத்தில் இருக்கச் செய்து தான் கீழே இருந்து ஆகமத்தை உபதேசிக்கும்படி வேண்டினான்.

பாட்டு : தெந்தனானா தெந்தனானா
தெந்தனானா தெந்தன்ன னானா

பட்டுப் பீடம் ஒன்றமைத்துச்
சிவனடியாரை அதிலிருந்தி
கட்டுக் கடங்கா ஆவலுடன்
ஆகமம் கேட்க அமர்ந்திருந்தான்.

உதவி 1 : ஐயையோ அநியாயம் நடக்கப்போகிறதே.

பாட்டு : கண்களை மூடிக் கைகளைக் கூப்பி
கடவுள் சிவனைக் கருத்தில் இருத்தி
உண்மை ஆகமம் என்று நினைத்து
உபதேசத்தைக் காத்திருந்தான்.

நடை : இதுதான் தக்கதருணம் எனக் கருதிய முத்தநாதன், பட்டுப்பையில் மறைத்து வைத்திருந்த குத்துவாளைக் கையில் எடுத்து, மன்னன் முதுகில் குத்தினான்.

உதவி 2 : ஐயையோ! கொடுமை கொடுமை. இது பெரிய அநியாயம்.

உதவி 1 : நான் அப்பவே சொன்னேன். இந்த ஆசாமியிடம் அரசன் ஏமாந்துவிட்டானே.

வசனம் : அரசனின் மெய்க்காவலன் தத்தன் ஓடோடிவந்து முத்தநாதனைப் பிடித்துக்கொண்டான். தன் உடை வாளை உருவி முத்தநாதனைக் கொல்லப்போனான். உடனே அரசன் அவனைத் தடுத்து,

பாட்டு : தன்னா தன்னா தன்னானா
தன்னா தன்னா தன்னானா

தத்தா தத்தா கொல்லாதே
இவர் நமர் இவரைக் கொல்லாதே
சித்தம் சிவன்பால் வைத்த இவர்
சிவவேடத்தைக் கொல்லாதே.

வசனம் : என்று கூறித் தடுத்தான். சிவனடியார் வேடத்தில் வந்தவன் முத்தநாதன் என்பதறிந்தும் பகைவனாக இருந்தாலும் சிவவேடத்துடன் வந்து சிவனை நினையவைத்ததால் இவனைக் கொல்லாமல் பாதுகாப்பாகக் கொண்டு போய் ஊரெல்லையில் விட்டுவா என்று கட்டளையிட்டான் மன்னன்.

உதவி 1 : தத்தன் பாதுகாப்பாகப் போனாலும் ஊர்ச்சனங்கள் சும்மா விடுமோ?

உதவி 2 : அதுதானே அவனை அடிச்சுக் கொன்று போடவேண்டும்.

பாட்டு : தன்னன்ன னானா தன்னன்ன னானா
தன்னன்ன னானன்ன தானன்ன தானா

மன்னனைக் கொன்ற மாபாவிமுத்தனைச்
சும்மா விடுவமோ பிடியுங்கள் பிடியுங்கள்
பிடியுங்கள் அடியுங்கள் கொல்லுங்கள் என்று
அடிதடி கொண்டங்கு கூடினர் மக்கள்.

வசனம் : கொல்ல வந்த மக்களையெல்லாம் தடுத்து நிறுத்தினான் தத்தன். இவனுக்கு ஒரு துன்பமும் நேராமல் ஊரெல்லையில் கொண்டுபோய் விடவேண்டும் என்பது மன்னன் கட்டளை. மன்னன் கட்டளைக்கு மாறு செய்யாதீர் எனத் தடுத்தான். மக்கள் ஏமாற்றத்துடன் திகைத்து நின்றனர். முத்தநாதனை ஊரெல்லையிலே விட்டுத் தத்தன் மன்னனிடம் ஓடோடி வந்தான்.

பாட்டு : தன்னாத் தன்னா தானானா
தன்னாத் தன்னா தானானா

அரசே உங்கள் கட்டளையைச்
சிரமேற் கொண்டு செய்து வந்தேன்

சிரமம் எதுவும் நிகழாமல்
ஊரெல்லையிலே விட்டுவந்தேன்
என்றான் தத்தன் என்றலுமே
நன்றே செய்தாய் தத்தா நீ
என்றும் சிவனின் அடியவரை
நன்றே மதியென உயிர்விட்டார்.

வசனம் : அரசியாரும் மற்றுமுள்ளோரும் செய்வதறியாது திகைத்துக் கதறினர். அப்போது அங்கொரு சோதி தோன்றியது. அந்தச் சோதியில் மெய்ப்பொருள் நாயனார் கலந்து சிவகதி பெற்றார்.

பாட்டு : தனதன தனதன தான தனா
தனதன தனதன தான தனா

சிவசின்னங்கள் திருநீறும்
உருத்திராக்கமும் ஐந்தெழுத்தும்
சிவனை நினையச் செய்வதனால்
அவையே மெய்ப்பொருள் பெறவழியாம்
சிவசின்னங்கள் அணிந்திடுவோம்
சிவனை நினைந்து வாழ்ந்திடுவோம்
சிவகதி ஒன்றே மெய்ப்பொருளாம்
சிவசிவ சிவசிவ சிவகதியே.

மங்களம் : தன்னானே தன்னானே தன்னானே தானே

விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டு கேட்டவர்கள்
எல்லோருக்கும் எங்களது வணக்கம் - எங்களை
மதித்தவர்கள் எல்லோருக்கும் வணக்கம்
வணக்கம் வணக்கம் வணக்கம்.

மங்களம் மங்களம் மங்களம்.

2004இல் இலண்டனில் இருந்தபோது புலம்பெயர்ந்த மூத்தோர் மன்றத்தில் நிகழ்த்துவதற்காக திரு.திருமதி முருகமூர்த்தி அன்னலட்சுமி தம்பதிகளின் விருப்பத்தின்படி பாடிக்கொடுக்கப்பட்டது.

(அரங்கப்படையல் நூலில் வெளிவந்தது 2007)

வில்லிசை

## 3. மெய்கண்டார்

தந்தனத் தோம் என்று சொல்லியே வில்லிசைபாட
வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே வரம்நீ தந்தருள்வாய்
கணபதியே
தந்தனத்தோம் என்று சொல்லித் தத்தித்தெய்யெனத்

தாளங்கூட்டி
தந்தனத்தோம் என்று சொல்லித் தத்தித்தெய்யெனத்
தாளங்கூட்டி -

தந்தன...

தானதன்னா தானதன்னா தானதானாத்தன்னா னன்னா

அன்னைதமிழ் ஈழமதில் அழகுதமிழ்ப் பாடவல்லார்
மன்னிவளர் மெய்கண்டானின் மணியான மாணவர்நாம்
மெய்கண்டரின் கதைபாட மேன்மையுடன்
வில்லெடுத்தோம்
மெய்யாகக் கேட்டிடுவீர் மேன்மைபல கண்டிடுவீர்.

முதல்வர் : சபையோர்களே இன்று உங்கள் முன்னிலையில் மெய்கண்டாரின் கதையை வில்லிசையில் பாட வந்துள்ளோம்.

உதவி 1 : யார் கதை?

முதல்வர் : ஆமாம் அதுதான் மெய்கண்ட தேவநாயனாரின் கதை.

உதவி 2 : ஓகோ நம்ம மெய்கண்டானின் கதையா? அதுதான் நமக்குத் தெரியுமே.

முதல்வர் : மெய்கண்டானின் கதையல்ல. மெய்கண்டாரின் கதையப்பா.

உதவி 1 : இரண்டும் ஒரேமாதிரி இருக்கே. இரண்டுக்கும் என்ன சம்பந்தம்?

முதல்வர் : அப்படிக் கேளுங்கள் சொல்கிறேன். கதையைக் கேளுங்கள் பின்னர் காரியம் விளங்கும்.

பாட்டு : தெந்தான தெந்தனானா தான

சித்தாந்த தத்துவத்தைச் - சைவ
சித்தாந்த தத்துவத்தைத்
தேசமெல்லாம் கண்டுணர
வைத்தபெரும் மேதை எங்கள் மெய்கண்டார் - அவர்
வித்துவத்தைப் பாடுகிறோம் கேளுங்கள்.

உதவி 1 : ஓகோ இவருடைய பெயரைத்தான் பாடசாலைக்கு வைத்தார்களோ?

உதவி 2 : போகப் போகப் புரியும். இப்போ கதையைக் கேட்போம்.

முதல்வர் : சைவசமயத்தவர்களாகப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் மெய்கண்டாரின் கதையைத் தெரிந்திருக்க வேண்டும்.

உதவி 1 : அதுசரி அவரின் ஊரென்ன? பெயரென்ன?

பாட்டு : தன்னன தன்னனன தனனான தன்னனான

அப்பரும் சுந்தரரும் அவதாரம் செய்ததினால்
இப்புவியில் பெருமைபெற்ற நாட்டிலே
திருமுனைப் பாடியென்னும் நல்லநடு நாட்டிலே
திருப்பெண்ணாகடம் என்பதொரு ஊரிலே

உதவி 1 : திருமுனைப்பாடி நாட்டிலே

உதவி 2 : திருப்பெண்ணாகடம் எனும் ஊரிலே

முதல்வர் : இற்றைக்கு 700 ஆண்டுகளின் முன் கி.பி 13ம் நூற்றாண்டிலே அச்சுதகளப்பாளர் எனும் சைவவேளாளர் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

பாடல் : தானத் தன்ன தானன னான

பூமி திருத்தி விளைபொருள் கொண்டு
தாமும் உண்டு தமையடைந்தோர்க்கும்
இல்லையென்னாது ஈந்தே உவக்கும்
வேளாண்குலத்தில் விளங்கிய செம்மல்

வசனம் : பண்டைத் தமிழர்களது பண்பாட்டைப் பழுதுபடாது பாது காத்து வருபவர்கள் வேளாளர்கள். தென்புலத் தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐம்புலத் தையும் ஓம்பி அறநெறி தவறாது வாழ்பவர்கள். அப் படிப்பட்ட உயர்குடியில் பிறந்த அச்சுதகளப்பாளரும் மனைவியும் இனிதே இல்லறம் நடத்தி வந்தார்கள். தினமும் காலையில் எழுந்து சிவனை வணங்குவார்கள்.

உதவி 1 : எப்படி வணங்குவார்கள்?

உதவி 2 : பாடிப் பாடிப் பணிந்து வணங்குவார்கள்.

பாட்டு : தானத்தன்னா தானனனா தானத்தன்னா தானனனா

வேண்டத் தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும்
தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கரியோய் நீ வேண்டி என்னைப்
பணிகொண்டாய்
வேண்டி நீயாதருள்செய்தாய் யானும் அதுவே
வேண்டினல் லால்
வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவும் உன்றன்
விருப்பன்றே.

வசனம் : கைப்போதும் மலர்தூவிக் காதலித்து நாம் தொழு தோம். முப்போதும் தலைசாய்த்து உமைவணங்கும் பேறுபெற்றோம். எப்போதும் இனிய பெருமானே எமதகத் தில் எழுந்தருள்வாய். என்று அழுது தொழுது நின்றார் கள். எல்லாச் செல்வமும் இருந்தபோதும் பிள்ளைச் செல்வம் இல்லாததால் மிகவும் வருந்தினார்கள்.

உதவி 1 : பிள்ளைச்செல்வம் இல்லையா?

உதவி 2 : பிள்ளையில்லாப் பாவி பெரும்பாவியல்லவோ.

முதல்வர் : ஆமாம் அதனால்தான் பிள்ளையில்லாக் குறையைப் போக்கி ஒரு பிள்ளைச் செல்வம் தருமாறு தொழு தார்கள்.

பாட்டு : தானனத் தானனன்னா தனனனத் தானனன்னா

தீதகன் றுலகம் உய்யத் திருமகன் வேண்டும் ஐயா
யாதினும் இனியிர் இன்றே நல்லருள் தாரும் ஐயா
ஏதேனும் வழியெமக்கு உணர்த்துதல் வேண்டும் ஐயா
மாதொரு பகனேயுன் வழிவழி அடிமை ஐயா.

என்று வணங்கினார்கள். அப்போது அச்சுதகளப்பாள ருக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

உதவி 1 : அந்த எண்ணம் என்னவோ

எமது குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் போய் முறை யிட்டால் வழி பிறக்கும் என எண்ணினார். பூசைப் பொருட்க ளுடன் இருவரும் சென்றனர். குருவின் பாதத்தில் வைத்து வணங்கினர்.

பாட்டு : தன்னனனான தனனன தன்னா

மங்கலமான மனையறங் கண்டோம்
நன்கலமான நன்மக்கள் இல்லை
பிள்ளைக் செல்வம் இல்லாக் குறையால்
அல்லும் பகலும் வாடுகிறோம் நாம்
சந்ததி தளைக்க ஒருமகன் வேண்டும்
தக்கவழி நீர் சொல்லுதல் வேண்டும்.

என்று குறையிரந்து நின்றார்கள்.

உதவி 1 : அருணந்தி சிவாசாரியார் என்ன சொன்னார்?

உதவி 2 : அனாதைக் குழந்தை ஒன்றை வாங்கச் சொல்லியி ருப்பாரோ.

முதல்வர் : அதுதான் இல்லை. வேண்டியதையெல்லாம் தரவல்ல சைவத் திருமுறைகள் இருக்க உங்களுக்கு ஒரு குறையும் வராது.

பாட்டு : தானனா தானனன்னா தன்னன்ன தானனனா

வேண்டுவார் வேண்டுவதைத் தரவல்ல செல்வம்இதோ
கையிலே இருக்கையிலே கவலையென்ன உங்களுக்கு
சைவத் திருமுறையில் எல்லாம் இருக்குதையா
மெய்யாகப் பூசைசெய்தால் வேண்டியதைப்
பெற்றிடலாம்.

வசனம் : சைவமக்களின் பெருஞ் சொத்தாகிய சைவத்திருமுறைகள் இருக்கும்போது கவலையென்ன உங்களுக்கு. திருமுறை ஏட்டுக்குப் பூசைசெய்து கயிறு சாத்திப் பார்ப்போம். அது உங்களுக்கு வழிசொல்லும்.

உதவி 1 : கயிறு சாத்திப் பார்ப்பதென்றால்?

முதல்வர் : அதாவது திருமுறைக்குப் பூசைவழிபாடு செய்து வணங்கி திருமுறை ஏட்டில் ஒரு நூலைப் போடவேண்டும். அந்த நூல் எந்த ஏட்டில் விழுகிறதோ அந்த ஏட்டை எடுத்துப் படித்துப் பார்த்தால் அதில் உமக்கு வேண்டியது இருக்கும் என்றார்.

உதவி 2 : அப்ப சாத்திரிமாரிட்டைப் போகத் தேவையில்லையோ?

முதல்வர் : யாரிடமும் போகத் தேவையில்லை. குருவின் சொற்படியே திருமுறைக்குப் பூசைசெய்து கயிறு சார்த்தினார்கள். நூல் விழுந்திருந்த ஏட்டைப் பயபக்தியுடன் எடுத்தார்கள். படித்தார்கள். அற்புதம், அற்புதம். அது ஞானசம்பந்தப் பெருமானின் தேவார ஏடு. கைமேல் பலன் கிடைத்துவிட்டது.

உதவி 1 : எங்கே ஏட்டைப் படியுங்கள்.

தேவாரம் : தானனனா தனனன்ன தன்னனனா தன்னன்னா

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளம் நினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வெயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

உதவி 2 : ஒன்றும் விளங்கவில்லையே

உதவி 1 : விளக்கமாகச் சொல்லுங்கள்.

முதல்வர் : அதாவது வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குள நீர் தோய்வினையார் அவர்தம்மைத், தீவினையே தோயாவாம். பேய் அடையா, பிரிவெய்தும், பிள்ளையினோடு உள்ளம் நினைவாயினவே வரம்பெறுவர். ஒன்றும் ஐயுற வேண்டா.

உதவி 1 : அப்ப திருவெண்காட்டு முக்குளநீரில் மூழ்கினால்

முதல்வர் : தீவினை சேராது, பேய்பிடியா, பிள்ளைச் செல்வம் கிடைக் கும், விரும்பிய எல்லாம் கிடைக்கும்.

உதவி 2 : முக்குளநீரென்றால் என்ன?

முதல்வர் : திருவெண்காட்டிலே சூரியகுண்டம், சந்திரகுண்டும், அக்கினி குண்டம் எனும் மூன்று தீர்த்தமே முக்குள நீராகும். முக்கண் மூர்த்தியாம் சிவபெருமானின் அருட்தீர்த்தம் அது.

பாட்டு : தானனனன்ன தன்னனனன்ன தன்னனனன்ன தனனான

சூரியகுண்டம் சந்திரகுண்டம் அக்கினி குண்டம் எனும்மூன்று
முக்குளநீரில் மூழ்கியெழுந்தால் தீராதவினையும்
தீர்ந்துவிடும்.

உதவி 1 : அப்புறம் என்ன நடந்தது?

முதல்வர் : திருவெண்காட்டுக்குப் போனார்கள். முக்குளநீரில் மூழ்கினார்கள். நோன்பிருந்தார்கள். அங்கேயே சில காலம் இருந்தார் கள். ஞானசம்பந்தப் பெருமானின் தேவாரத் திருவாக்கின்படி ஞானக் குழந்தையொன்று கிடைத்தது.

அச்சுதகளப்பாளரும் மனைவியும் குழந்தையைக் குல குருவாகிய சகலாகம பண்டிதரிடம் கொண்டு சென்றார் கள். அவர் குழந்தைக்கு அருட்பார்வை நல்கினார். திருவெண்காட்டுப் பெருமான் அருளால் கிடைத்ததால் அக்குழந்தைக்கு திருவெண்காடர் எனப் பெயரிட்டார். ஞானசம்பந்தர் போலவே ஞானப்பழமாக விளங்கி அறிவொளி பரப்பும் என ஆசீர்வதித்தார்கள்.

உதவி 1 : குழந்தை எங்கே இருந்து வளர்ந்தது?

முதல்வர் : திருவெண்ணெய் நல்லூரிலுள்ள மாமனாரின் இல்லத்தி லிருந்து வளர்ந்தது. மூன்று வயதாகுமுன்னே சிவஞான மனைத்தையும் உணர்ந்து தெளிந்து கொண்டது.

பாட்டு : தானன தன்ன தானனதன்ன தானனதன்னா தனனானே

ஞானசம்பந்தர் மூன்றுவயதினில் ஞானம் பெற்றார்
அதுபோலே
ஞானசம்பந்தர் திருமுறைதந்த செல்வர் திருவெண்
காடருமே
மூன்று வயது ஆகிடுமுன்னே ஞானம் பெற்றார் அதிசயமே
பெற்றஞானம் தன்னைத் தன்னிடம் வந்தோர்க்கெல்லாம்
வழங்கினரே.

உதவி 2 : ஆகா என்ன பொருத்தம், ஞானசம்பந்தர் மூன்று வயதில் உமாதேவியாரின் ஞானப்பால் உண்டு ஞானம் பெற்றார்.

உதவி 1 : சம்பந்தரின் தேவாரப் பாடலின் வழிபாட்டால் பிறந்த குழந்தை திருவெண்காடர் மூன்று வயதுக்கு முன்பே இரண்டு வயதில் ஞானம் பெற்றார். இது அதிசயந்தான்.

முதல்வர் : எல்லாம் திருவருளின் அற்புதம்தான். திருவெண்காடர் சைவ சித்தாந்த உண்மைகளையெல்லாம் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளக்கத்தொடங்கினார். பல பெரியவர்கள் அவரிடம் வந்து ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தார்கள்.

உதவி 1 : என்ன கேட்டார்கள்?

முதல்வர் : சுவாமி உயிர் என்று ஒருபொருள் உண்டா. அப்படி யாயின் உடலும் உயிரும் ஒன்றா வேறா என்று கேட்டார்கள்.

உதவி 2 : அவர் என்ன பதில் சொன்னார்?

பாட்டு : முப்பொருள் உண்மையை அறிவீர் - அந்தப்
பதிபசு பாசமே உள்பொருளாகும்

ஆதியந்தம் இல்லாப் பொருள்கள் - மூன்றும்
அநாதியா யுள்ளவை என்பதே உண்மை
சைவசித்தாந்தச் சொல் அதுவே - இந்த
முப்பொருள் உண்மையே முழுவதும் உண்மை.

உதவி 1 : கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்.

முதல்வர் : பதி, பசு, பாசம் என்னும் மூன்றுமே அநாதியான உள் பொருள்கள். உடலுக்கு வேறாக உயிரெனும் ஒரு பொருள் உண்டு. அது உடலுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருக்கிறது. உயிர் அறிவிக்க அறியும் பொருள். இறைவன் உயிருக்கு உள்ளாக இருந்து இயக்க உயிர்ப்பொருள் உட்கருவிகளை இயக்கிக் கொண்டு வாழ்கிறது. இப்படியே ஞானக்குழந்தை திரு வெண்காடரின் உபதேசம் தொடர்ந்தது. அந்தவழியால் ஆகாய மார்க்கமாகப் பரஞ்சோதி முனிவரெனும் மகா ஞானி வந்தார். திருவெண்காடரின் பக்குவ நிலையைக் கண்டார்.

பாட்டு : திருவெண் காட்டுப் பெருமான் அருளால்
தோன்றிய ஞானச் செல்வம் நீ
திருமுறைச் செல்வம் தேடித்தந்த
திவ்விய ஞானச் செல்வன் நீ
பெருநிதிசைவ சித்தாந்தத்தின்
பெரும் பேரறிவின் பொக்கிஷம் நீ.

என்று அவரை வியந்து பாராட்டினார். திருவெண் காடருக்கு ஞானதீட்சை நல்கினார்.

உதவி 1 : தீட்சையென்றால் என்ன?

முதல்வர் : தீட்சையென்றால் ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கெடுத்தல் என்பது பொருள். அதாவது உயிரைப் பீடித்துள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களின் வலியைக் கொடுத்து உயிரின் அறியாமை யைப் போக்கி மெய்யறிவு என்னும் ஞானத்தைக் கொடுத்தல் ஆகும்.

உதவி 2 : தீட்சை கொடுத்து தீட்சா நாமமும் இட்டார் என்றீர்களே தீட்சா நாமம் என்றால் என்ன?

முதல்வர் : தீட்சாநாமமாவது, அறிவு விளக்கமாகிய ஞானத்தைப் பெற்ற வருக்குச் சூட்டப்பட்டது.

உதவி 1 : என்ன பெயர் சூட்டப்பட்டது.

முதல்வர் : மெய்கண்டார் எனப் பெயர் சூட்டினார். மெய்யைக் கண் டவ ராதலால் திருவெண்காடர் மெய்கண்டார் ஆனார். பரஞ்சோதி முனிவர் தனது குருவாகிய சத்தியஞான தரிசினியின் பெயரைத் தமிழில் மெய்கண்டார் எனச் சூட்டினார்.

உதவி 1 : சத்தியயுான தரிசினிகள் எப்படி மெய்கண்டார் ஆகும்?

முதல்வர் : சத்தியஞானம் என்பது மெய். தரிசினி என்பது கண்டவர் ஆகும். ஆகவே சத்தியஞானம் ஆகிய மெய்யைக் கண்டவர் என்பது பொருள்.

உதவி 2 : அருமையான விளக்கம். உடம்பு புல்லரிக்கிறது.

முதல்வர் : மெய்கண்டாரிடம் 49 மாணவர்கள் பாடங்கேட்டனர். ஒருவர் கேட்டார் ஆணவம் என்றால் என்ன?

பாட்டு : தானன்னன்ன தனதானன, தனதன்னன்ன தனனானனன

நான் என்கின்ற அகங்காரமும்
எனதென்கின்ற மமகாரமும்
அகப்புறப்பற்றுக ளாகிவளர்ந்து
ஆணவ சொரூபம் ஆகிடுமே
வினைக்குத்தான் காரணமாய்
நின்றுயிர் தன்னை அணுவணுவாய்
தேய்த் துயயிர்வலியைப் போக்கிடும்
ஆதலின் அதன்பெயர் ஆணவமாம்.

வசனம் : இப்படியே உபதேசம் தொடர்ந்தது. மூன்று வயதுக் குழந்தை ஞான உபதேசம் செய்யும் செய்தி எங்கும் பரந்தது. குலகுரு வாகிய சகலாகமபண்டிதர் இதனைக் கேள்விப்பட்டார். கசலா கமபண்டிதர் நான் இருக்கப்

பால்மணம் மாறாத குழந்தை மெய்கண்டார் ஞான உபதேசம் செய்கின்றானா, என்று கர்வம் கொண்டார். தானே நேரில் சென்றார். சிறுவனே பெரிய ஞானிபோல ஞான உபதேசம் செய்கின்றாயே, ஆணவம் என்றால் என்ன? சொல் பார்ப்போம் என்றார். அவரையே சுட்டுவிரலால் சுட்டிக்காட்டி

பாட்டு : தானன்னத் தானன்னத் தானனே தன

நி நிற்கும் கோலமே ஆணவம் - அது
நான் என்னும் கர்வத்தி னால் வரும்
நான் என்னும் அகங்காரம் போனாலே - எந்த
நாளும் திருவருள் ஞானமுண்டாகும்.

வசனம் : என்றார். இதைக் கேட்டவுடனே சகலாகம பண்டிதரின் கர்வ மாகிய ஆணவம் அடங்கியது.

மெய்கண்டாரின் காலில் விழுந்தார். தன்னை மாணவ னாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனப் பணிந்து நின்றார். மெய்கண்டார் அவருக்கு ஞானதீட்சை கொடுத்து 'அருணந்தி சிவாசாரியார்' என்னும் தீட்சாநாமமும் கொடுத்தார்.

உதவி 1 : அப்போ மெய்கண்டார் தன் தந்தையின் குருவுக்குத் தான் குருவானார் என்று சொல்லுங்கள்.

உதவி 2 : இது பெரிய அதிசயந்தான்.

முதல்வர் : மெய்கண்டாரிடம் பாடங்கேட்ட மாணவர்கள் எல்லோ ரும் ஒரு விண்ணப்பம் செய்தனர். குருவே எங்களுக்குச் செய்த உப தேசங்களையெல்லாம் ஒரு நூலாகச் செய்து தரவேண்டும் எனக் கேட்டனர். அப்படியே 'சிவஞானபோதம்' எனும் நூலாகப் பாடிக் கொடுத்தார். 12 சூத்திரங்களையும் அவற்றின் விளக்கமாக 81 வெண் பாக்களையும் கொண்ட சிவஞானபோதம் பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என்னும் நான்கு இயல்களாக மலர்ந்தது.

பாட்டு : தன்னனனான தானன தன்ன

சைவசித்தாந்த நூல்களுக்கெல்லாம்
முடிமணியாகும் முதனூலிதுவே
பன்னிரு திருமுறை உட்பொருளைப்
பன்னிரு சூத்திர மாவடித்தார்
சிவஞான போதப் புதையல் இதுவே
சைவசித்தாந்தத் தலைபணியாகும்.

மெய்கண்டார் தந்த சிவஞான போதமே சைவசமயத்தின் ஞானப் பொக்கிசமாகும். இதனைப் போற்றிப் படித்து நற்கதி பெறுவோம்.

மங்களம் மங்களம் மங்களம்.

மெய்கண்டர் குருபூசை விழாவில் இளவாலை மெய்கண்டான் ம.வி மாணவர் செய்தது.

அரங்கப்படையல் நூலில் வெளிவந்தது - 2007

வில்லிசை

# 4. நாவலர் பெருமான்

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே.

வேறு

வாணி சரஸ்வதியே - சரஸ்வதியே
மணிவாக்குத் தாருமம்மா
தேவி உனைத் தொழுதோம் - உனைத் தொழுதோம்
சொல்வாக்குத் தாருமம்மா

வேறு

சபையிலுள்ள பெரியோரே தாய்மாரே சான்றோரே
தம்பியரே தங்கையரே எல்லோருக்கும் எம் வணக்கம்.

வேறு

ஈழத்திரு நாட்டினிலே இனியதமிழ் பாடவல்லார்
வாழுகின்ற இரத்மலானை இந்துமைந்தர்
வில்லெடுத்தோம்
ஈழநல்லூர் நாவலரின் இனியகதை பாடிடுவோம்
வாழவைத்த தெய்மவர் வாழ்வியலைக் கேட்டிடுங்கள்.

உதவி 1 : ஆமா யார் கதை என்று சொன்னீர்கள்?

முதல்வர் : ஈழத்திருநாட்டின் மணிமுடியாகத் திகழ்கின்ற யாழ்ப்பா ணத்து நல்லூர ஆறுமுகநாவலர் பெருமானின் கதையைச் சொல்வோம்.

நாம் பேசுகின்ற இந்தச் செந்தமிழும், நமது சமயமாகிய சைவமும் எங்களுக்கு அவர் தந்த அரும்பெரும் சொத்துக்கள் தம்பி.

உதவி 2 : அதெப்படி நாவலர் தந்த சொத்தென்பீர்கள்?

பாட்டு : அன்னியர்வந்து அடிமைப்படுத்தி
ஆண்டனர் எங்கள் திருநாட்டை
முன்னேவந்த போர்த்துக்கேயரும்
பின்னேவந்த டச்சுக்காரரும்
அடுத்துவந்த ஆங்கிலேயரும்
கெடுத்தே விட்டனர் நம்வாழ்வை.

முதல்வர் : அவர்கள் ஏறக்குறைய 450 வருடகாலம் நம்மவரை அடக்கியாண்டனர். ஆங்கிலமே அரசமொழி, கிறிஸ்தவமே மக்கள் சமயம் என்று நம்மவரை அடிமைப்படுத்தினர். தமிழும் சைவ மும் நிலைகுலைந்தன. அந்த வேளையில் ஒரு விடிவெள்ளி தோன்றியது.

உதவி 1 : விடிவெள்ளியா? அதென்ன?

முதல்வர் : அந்த விடிவெள்ளி யாழ்ப்பாணத்து நல்லூரிலே தோன்றியது. அதுதான் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் பெருமான் என்னும் விடிவெள்ளி.

உதவி 2 : அப்படியா? அதை நாம் கேட்கத்தான் வேண்டும். அவர் கதையைச் சொல்லுங்கோ.

பாட்டு : மெத்தப்படித்தவர்கள் மேல் நிலையில் உள்ளவர்கள்
சுத்தசைவப் பெரியார்கள் வாழுகின்ற நல்லூரில்
உத்தமர் கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியர்
வித்தகர் ஆறுமுகம் பிள்ளையைப் பெற்றெடுத்தார்.

உதவி 1 : ஓகோ ஆறுமுகம்பிள்ளைதான் ஆறுமுகநாவலரோ?

முதல்வர் : அவரேதான். ஆறுமுகம்பிள்ளை ஆறுமுகநாவலரான கதை ஒரு தனிக்கதை. அதைப் பின்பு பார்ப்போம்.

உதவி 2 : இவர் எப்போது பிறந்தார்?

பாட்டு : சித்திரபானு ஆண்டு மார்கழி ஐந்து அவிட்டத்திலே
இத்தரை போற்றிடவே பிறந்தாரே நாவலரே

முதல்வர் : 1922ஆம் ஆண்டு டிசம்பர் 18ந் திகதி புதன்கிழமை இரவு சிங்கலக்கினத்தில் பிறந்தார்.

உதவி 1 : நல்லூரிலே கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். அவருடைய முன்னோர் சிறப்பு என்ன?

முதல்வர் : தந்தப்பிள்ளை ஆங்கிலேயர் ஆட்சியிலே கச்சேரி முதலியாராகக் கௌரவ உத்தியோகம் பார்த்தவர். அவரின் சந்ததி பசுக்கொலைக்கு அஞ்சிப் பரதேசம் போன ஞானப்பிரகாச முனிவர் சந்ததி.

உதவி 2 : அதென்ன பசுக்கொலைகு அஞ்சிப் பரதேசம் போன ஞானப் பிரகாச முனிவர் என்கிறீர்கள்?

பாட்டு : அந்நியர் பறங்கியர்கள்
ஆட்சியிலே அவர்களுண்ண
ஆளுக்கொரு பசுகொடுக்கும்
அநியாயம் தனக்கஞ்சியே
இந்நாட்டை விட்டகன்று
தென்னாட்டில் வாழ்ந்த ஞானி
ஞானப் பிரகாசர் வம்சத்திலே
வந்தே அவதரித்தார்
ஆறுமுக நாவலனார்.

முதல்வர் : சுப்பிரமணிய உபாத்தியாயர் அவர்கள் ஏடுதொடக்கி வைத்தார். அவரிடமே ஆரம்பக்கல்வியைக் கற்றுத் தேறினார்.

சரவணமுத்துப் புலவர், சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் உயர்தமிழ்க் கல்வியையும், சமஸ்கிருதத்தையும் கற்றார். 12 வயதிலே பேர்சிவல் பாதிரியார் அதிபராயிருந்த கிறிஸ்தவக் கல்லூரிக்குப் போனார். கிறிஸ்தவராக மாறுபவருக்கே அங்கே கற்கமுடியும். இவர் மதம் மாற மறுத்துவிட்டார். இவருடைய திறமையைக் கண்ட பாதிரியார் இவருக்கு ஆங்கிலம் கற்பிக்க இணங்கினார். அதேவேளையில் இவரைத் தனக்குத் தமிழ் கற்பிக்கும் பண்டிதராகவும் ஏற்றுக்கொண்டார்.

உதவி 1 : ஓகோ நாவலருக்கு ஆங்கிலக்குரு பேர்சிவல் பாதிரியார். பேர்சிவல் பாதிரியாருக்குத் தமிழ்க்குரு நாவலர். இது பெரிய அதிசயம்தான்.

முதல்வர் : அதுமட்டுமல்ல அக்கல்லூரியிலே மாணவர்களுக்குத் தமிழும் ஆங்கிலமும் கற்பிக்கும் ஆசியரும் ஆனார்.

பாட்டு : பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்றார்
பாதிரி இவரிடம் தமிழைக் கற்றார்
இருதுருவங்கள் ஒருவர்க் கொருவர்
குருவானார் இது அதிசயமே

முதல்வர் : கிறிஸ்தவர்கள் அல்லாதோர் போகமுடியாத அக்கல்லூரிக்கு நாவலர் திருநீறும் உருத்திராக்கமும் அணிந்து சைவ வேடத்துடன் போனார். பாதிரியாரும் இவரின் நுண்மாண் நுழைபுலத் திறமையைக் கண்டு "மமகுரு" என அனுமதித்தார்.

பாட்டு : பத்தொன்பதாவது வயதினிலே
பற்பலகலையும் கற்றுணர்ந்தார்
செந்தமிழ் ஆங்கிலம் சமஸ்கிருதம்
வேதம் ஆகமம் சித்தாந்தம்
அத்தனை கல்வியும் கற்றுணர்ந்தே
வித்தகராகப் புகழ் பெற்றார்.

முதல்வர் : கிறிஸ்தவர் விவிலிய வேதம் ஆகிய பைபிளை இவர் மூலம் தமிழில் மொழிபெயர்ப்பித்தார் பேர்சிவல் பாதிரியார். அதனை அரங்கேற்றுவதற்கு நாவலரையும் அழைத்துக்கொண்டு சென்னைக்குச் சென்றார் பாதிரியார். அங்கு அக்காலத்தில் மகாவித்துவானாக இருந்த மகாலிங்கையர் நாவலரின் யாழ்ப்பாணச் செந்தமிழைக் கண்டு மெச்சிப் புகழ்ந்தார். இருவரும் மகிழ்ச்சியுடன் மீண்டனர்.

பாட்டு : பைபிளைப் பெயர்த்ததனால்
கிறித்தவத்தை நன்கறிந்தார்
மெய்யான சைவத்தின்
மேன்மையையும் நன்குணர்ந்தார்
சைவத்தையும் தமிழினையும்
காக்கவெனக் புறப்பட்டார்.

முதல்வர் : நாவலரின் கல்வி கேள்வி அறிவுத்திறனைக் கண்டு பெற்றாரும் சகோதரர்களும் பெருமை அடைந்தார்கள். திருமணம் செய்யும்படியும், அரச உத்தியோகத்தில் சேரும்படியும் வேண்டினார்கள். நாவலர் மறுத்துவிட்டார்.

பாட்டு : உத்தியோகம் பார்க்கமாட்டேன்
திருமணமும் செய்யமாட்டேன்
நைட்டிகப் பிரமச்சாரி
ஆகவே நான் வாழ்ந்திடுவேன்
என்று உறுதிபூண்டார். சைவத்தையும் தமிழையும் காப்பதே தனது வாழ்வின் இலட்சியம் எனக்கொண்டார். பேர்சிவல் பாதிரியாரின் கல்லூரி யில் கற்பித்தலையும் துறந்துவிட்டார். சைவசமயத்தவர் களைப் பாதிரிமார் கிறிஸ்துவத்துக்கு மதமாற்றம் செய்வதை எதிர்த்துப் போராடத் தொடங்கினார்.
இதற்கு வழி சைவசமயத்தவர்க்குச் சைவத்தின் பெருமையை அறியச் செய்வதும் தமிழ்க்கல்வி அறிவை ஊட்டுதலுமே என எண்ணினார்.

பாட்டு : பள்ளிக்கூடம் கட்டவேண்டும் - அங்கு
பலகல்வி புகட்ட வேண்டும்
பிரசங்கம் செய்யவேண்டும் - அதில்
சமய அறிவு ஊட்டவேண்டும்
புத்தகங்கள் எழுதவேண்டும் - அதை
படித்திடவே செய்யவேண்டும்
அச்சுக்கூடம் வைக்கவேண்டும் - அதில்
அச்சடித்துக் கொடுக்கவேண்டும்
எல்லாம் இலவசமாகவே - இங்கு
எல்லோர்க்கும் செய்யவேண்டும்.

உதவி 1 : இதையெல்லாம் செய்தாரா?

முதல்வர் : எனத்திட்டமிட்டுச் செயற்படத் தொடங்கினார். 1947 டிசம்பர் 31 வெள்ளிக்கிழமை வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் சைவப் பிரசங்கம் செய்யத் தொடங்கினார். வெள்ளி தோறும் தொடர்ந்து செய்தார். மற்றவர்களையும் மற்றக் கோயில்களிலும் பிரசங்கம் செய்யப் பழக்கினார். அக்காலத்தில் தமிழில் பாடப்புத்தகங்கள் இருக்கவில்லை. அதனால் தானே மாணவர்கள் இலகுவாகக் கற்கக்கூடியதான முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் பாலபாடங்கள் முதலாம், இரண்டாம் சைவ வினாவிடைகளை எழுதினார்.

உதவி : எழுதியவற்றை அச்சிட என்ன செய்தார்?

முதல்வர்: சென்னைக்குச் சென்று அச்சுக்கூடம் வாங்கிவந்து வித்தியானுபாலன அச்சுக்கூடம் எனப் பெயரிட்டு நல்லூரிலே நிறுவினார். அதிலே புத்தகங்கள் அச்சாகின.

பாட்டு : எண்ணிய தெல்லாம் எண்ணியபடியே
திண்ணிய நெஞ்சுடன் செய்திட்டார்
கண்ணியவான்கள் பிரபுக்கள் கூடி
புண்ணியச் செயலெனப் பொருளீந்தார்
நண்ணியே மாணவர் தோள் கொடுத்தார்
நற்பணி பலவும் தொடர்ந்தனவே.

முதல்வர்: சைவத் தமிழ் மாணவர்கள் சைவப் பண்பாட்டுடன் கல்வி கற்கவென 1848ஆம் ஆண்டு தனது 26வது வயதினிலே வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாலயத்தை நிறுவினார். அங்கு படிக்கும் மாணவர்களுக்கு உடையும் உணவும் புத்தகங்களும் இலவசமாகவே வழங்கப்பட்டன.

பாட்டு : இலவசக் கல்வி இலவசப் புத்தகம்
இலவச உணவும் உடைகளுடன்
எல்லோர்க்கும் கல்வி என்னும் கொள்கையில்
ஏற்றத்தாழ்வின்றிக் கற்கவைத்தார்.

உதவி 1 : அதுசரி, இப்ப எங்கள் நாட்டிலும் இலவசக் கல்விதானே நடைமுறையில் இருக்கு.

முதல்வர்: ஆமாம், எங்கள் நாட்டில் டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா கல்விமந்திரியாக இருந்த காலத்தில் 1944இல் இலவசக் கல்விமுறையைக் கொண்டுவந்தார். நாவலர் இதற்கு முன் ஏறக்குறைய 100 வருடங்களுக்கு முன்பே 1848இல் இலவசக் கல்வியை அறிமுகம் செய்தார்.

உதவி 2 : அப்ப நாவலர்தான் இந்த நாட்டில் இலவசக் கல்வியை முதன்முதல் அறிமுகம் செய்தார் என்று சொல்லுங்கோ.

முதல்வர்: அதுமட்டுமல்ல இப்ப அரசாங்கம் செய்யுது. அப்ப நாவலர் தனியாக நின்று செய்தார்.

கல்விப்பணி தொடர்ந்தது. சென்னையிலும் ஒரு அச்சுக் கூடத்தை நிறுவினார். செய்யுள் நடையில் இருந்த பல

நூல்களை வசனநடையில் எழுதி அச்சிட்டார். பல ஏட்டுப் பிரதி களைப் பரிசோதித்து அச்சேற்றினார்.

பாட்டு : புதியனவாக எழுதி அச்சிட்ட
நூல்கள் இருபத்தாறாகும்
பரிசோதித்துப் பதிப்பித்த நூல்கள்
முப்பத்தொன்பதின் மேலாகும்
உரைகள் எழுதிப் பதிப்பித்த நூல்கள்
ஒன்பதின் மேலாம் அறிவீரே
நாவலர் பதிப்பில் ஒருவிதபிழையும்
மருந்துக்கும் கண்டிட முடியாதே.

முதல்வர் : நாவலர் காட்டிய வழியில் ஊர்கள் தோறும் சைவப் பிரகாச வித்தியலாலயங்கள் தொடங்கப்பட்டன. சைவக் கல்வியும் தமிழ்க்கல்வியும் பண்பாடும் தலைநிமிர்ந்தன.

முதல்வர் : நாவலர் பெருமான் இலங்கையுடன் மட்டும் நிற்க வில்லை. தமிழ்நாட்டிலும் பணியைத் தொடர்ந்தார்.

இவருடைய ஆழந்த அகன்ற நுண்ணிய அறிவையும் பிரசங்க வன்மையையும் நேரிற்கண்ட திருவாவடுதுறை ஆதீன முதல்வர் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் "நாவலர்" எனும் பட்டமளித்துக் கௌரவித்தார். ஆறுமுகம் பிள்ளை அன்று முதலே ஆறுமுகநாவலரானார். திருவண்ணாமலை ஆதீனம் உருத்திர சஞ்சிகை சூட்டிக் கௌரவித்தது. மதுரை ஞான சம்பந்தர் ஆதீனம் சுந்தரவேடம் சூட்டிக் கௌரவித்தது. 1864இல் சிதம் பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவி னார். அது இன்றும் நடைபெறுகிறது. ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் இணையிலாப் பணிசெய்த நாவலர் பெருமான் தனது இறுதிப் பிரசங்கத்தை 1879 ஆடிச் சோதி நாளில் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நிகழ்த்தினார்.

உதவி 1 : இறுதிப்பிரசங்கம் என்கிறீர்களே

முதல்வர் : ஆமாம் இறுதிப் பிரசங்கம்தான். ஆடிச்சோதியில் பிரசங்கம் செய்தவர் நோயுற்றுக் கார்த்திகை மாதத்தில் 1879 டிசம்பர் 5ந் திகதி தனது 57ஆவது வயதில் சிவபதம் சேர்ந்தார்.

பாட்டு : நாவலர் செய்த நற்பணிகள் - இந்த
நானிலம் உளவரை நிலைத்திருக்கும்
நாவலர் தோன்றா விடில் எங்கள்
சைவமும் தமிழும் அழிந்தி ருக்கும்.

உதவி 1 : இவ்வளவு பெரும் பணிகள் செய்த நாவலருக்கு நம்மவர் என்ன செய்தார்கள்?

முதல்வர் : 1968ஆம் ஆண்டு நாவலர் பிறந்த யாழ்ப்பாணத்து நல்லூரில் கந்தசுவாமி கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள அவரது காணியில் அம்மையப்பன் வளவில் நாவலர் மணிமண்டபம் கட்டப்பட்டது. கொழும்பிலிருந்து நாவலர் சிலை ஊர்வலமாகக் கொண்டுபோய் நாட்டப்பட்டது.

தமிழர் வாழும் இடமெல்லாம் கார்த்திகை மகத்தில் குருபூசை செய்யப்படுகிறது.

உதவி 2 : இலங்கை அரசு ஒன்றும் செய்யவில்லையோ?

முதல்வர் : செய்தது. அவருக்குத் தேசிய வீரர் எனும் கௌரவம் அளித்து 1971 அக்டோபர் 29ஆம் நாள் முத்திரை வெளியிட்டு மேன்மைப்படுத்தியது.

உதவி : அண்மைக்காலத்திலே பத்திரிகைகளிலே நாவலர்சிலை திறப்புவிழாச் செய்திகள் அடுத்தடுத்து வருகுதே அதுபற்றிச் சொல்லவில்லயே

முதல்வர் : கொழும்பில் நாவலர் நற்பணிமன்றம் ஒன்று பெரியார் கருணை ஆனந்தன் ஐயா தலைமையில் இயங்குகிறது.

அவர் இந்த நாட்டிலுள்ள பெரிய கல்லூரிகளில் நாவலர் சிலைகளைத் தன் செலவில் நிறுவி வருகிறார். சென்ற ஆண்டு றோயல் கல்லூரியில் தொடங்கிக் கொழும்புக் கல் லூரிகளில் நாட்டினார். இந்த ஆண்டு கடந்த மாதம் மலை நாட்டுக் கல்லூரிகளில் நாட்டினார். இப்போது வடமாகாணக் கல்லூரிகளில் நாட்டிக் கொண்டிருக்கிறார்.

உதவி : இதெல்லாம் அவர்தான் செய்கிறாரோ?

முதல்வர் : ஆமாம், ஆமாம். அவர் செயற்கரிய செய்யும் பெரியார். எல்லாம் நாவலர் கடாட்சத்தால் நடக்கிறது.

உதவி 2 : நாவலர் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்த பணி களைச் சொன்னீர்கள். சமூகப்பணி ஒன்றும் செய்ய வில்லையோ?

பாட்டு : பஞ்சத்தில் வாடிய மக்களைக் காக்கக்
கஞ்சித் தொட்டித் தர்மம் செய்தார்
வைசூரியால் மக்கள் மாண்டபோதில்
அரசுடன் சேர்ந்து அவர்களைக் காத்தார்
நெல்வயல் எல்லாம் அழிந்திட்டபோது
விதைநெல் வருவித்துக் கொடுத்துக் காத்தார்.

உதவி 1 : இதெல்லாம் எப்ப நடந்தது?

முதல்வர் : 1877 பஞ்சம் வந்தபோது யாழ்ப்பாணம் சிறாம்பியடியில் தொட்டிகட்டிக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்து மக்களைக் காத் தார். அதே ஆண்டு யாழ் குருநகர், பாஷையூர் பகுதிகளில் வைசூரி எனும் வயிற்றோட்டம் வந்து மக்கள் தொகை தொகையாக இறந்தபோது அரசாங்கத் தின் மூலம் நோய்த் தடுப்புச் செய்து காத்தார்.

பாட்டு : நாவலர் பெருமான் பணிகளை நாங்கள்
சொல்ல நினைத்தால் சொல்லில் அடங்கா
நாவலரே எங்கள் காவலர் அவரை
நாளும் பொழுதும் நினைந்திடுவோம்
நாவலர் வழியில் நடந்திடுவோம்
நாவலர் சொற்படி நாம் வாழ்வோம்.

மங்களம் மங்களம் மங்களம்

நாவலர் குருபூசையில் இரத்மலானை இந்துக்கல்லூரி
மாணவர்கள் செய்தது - 2016

வில்லிசை

## 5. தன்வினை தன்னைச் சுடும்

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வந்தருள்வாய் சரஸ்வதியே
வரம்நீ தந்தருள்வாய் சரஸ்வதியே.

வேறு

நாடிலங்கை நாட்டினிலே
நல்லதமிழ் பாடவல்லார்
கூடிவந்தோம் மாணவர்நாம்
பாடிடுவோம் வில்லுப்பாட்டு
நாடிஇங்கு வந்திருக்கும்
நல்லோரே கேட்டிடுவீர்
நாமுமக்குக் கைகுவித்து
நல்வணக்கம் சொல்லுகின்றோம்
வணக்கம் வணக்கம் வணக்கம்.

உதவி 1 : ஆமாம் இன்று என்ன கதை சொல்லப் போகின்றீர்கள்?

முதல்வர் : புத்திகெட்ட தன்செயலால் தானே அழிந்த கதை சொல்லப் போகின்றேன். அதாவது தன்வினை தன்னைச் சுடும் என்ற கதை.

உதவி 2 : தன் செயலால் தான் அழிந்தானா?
அதெப்படி சொல்லுங்கள், பார்ப்போம்.

பாட்டு : இந்தியாவில் சிந்துதேசம்
என்ற ஒரு நாட்டினிலே
முந்தியொரு காலத்திலே
விருத்தசத்திரன் எனும்மன்னன்
வீராதிவீரனாக அரசாட்சி செய்துவந்தான்
தன்னைப்போல் ஒருவீரன்
தன்மைந்தன் ஆகவென்று
தவமிருந்து பெற்றெடுத்தான்
ஜெயத்திரதன் என்பவனை

வசனம் : ஜெயத்திரதன் தந்தையைப் போலத் தன்னேரில்லாத வீரனாக வளர்ந்தான். யானை ஏற்றம், குதிரை ஏற்றம், வில் வித்தை, வாள்வித்தை, மல்யுத்தம் எல்லாம் பயின்று மாபெரும் வீரனானான்.

உதவி 1 : சிந்துதேச மன்னன் விருத்தசத்திரன் விரும்பியது நிறை வேறியதென்று சொல்லுங்கள்.

முதல்வர் : ஆமாம், அப்படியே நடந்தது. அதுமட்டுமல்ல

பாட்டு : தந்தை விருத்தசத்திரன் தன்போல் நாட்டை ஆளவே
மைந்தனான ஜெயத்திரதனை சிந்துநாட்டின் மன்னனாக
முடிசூட்டி மன்னரெல்லாம் அடிதொழவே வைத்திட்டான்.

வசனம் : சிந்து நாட்டுக்கு மன்னனாக முடிசூடிய ஜெயத்திரதன் தன் வீரத்தினாலே பல மன்னர்களை வெற்றிகொண்டு தன்னேரில் லாத தலைவனாகினான்.

உதவி 2 : அப்போ ஜெயத்திரதனுக்கு எதிரிகளும் இருப்பார்கள் தானே.

முதல்வர் : இருந்தார்கள். ஜெயத்திரதனின் தந்தையான விருத்தசத்தி ரன் ஒருபுறம் மைந்தனின் வீரத்தைக் கண்டு மகிழ்ந்தான். மறுபுறம்?

உதவி 1 : என்ன மறுபுறம் என்கறீர்கள்?

முதல்வர் : ஆமாம், ஜெயத்திரதன் பிறந்தபோது கேட்ட அசரீரியை நினைந்து கவலை கொண்டான்.

உதவி 2 : அசரீரியா அது என்ன?

முதல்வர்
பாட்டு : இன்று பிறந்திட்ட இந்த மைந்தன்
வீராதி வீரனாய் விளங்கிடுவான்
வெற்றிமேல் வெற்றிகள் பெற்றிடுவான்
ஈற்றிலே மாபெரும் வீரனாலே
வீரமரணத்தைப் பெற்றிடுவான்

வசனம் : என்று அசரீரி சொன்னதை விருத்தசத்திரன் எண்ணி னான். தனக்குள்ளே ஒரு சபதம் கொண்டான்.

உதவி 1 : சபதமா? என்ன சபதம்?

பாட்டு : என்மகனை யாரும் கொல்லவே விடமாட்டேன்
கொன்றிட்டால் கொன்றதலை நூறாய் வெடித்திடும்
வென்றவன் இறப்பான் வெல்லவே விடமாட்டேன்
இதற்காகவே காட்டில் தவம் செய்யப்போவேன்.

வசனம் : அதாவது என்மகனை எவனொருவன் வெற்றிகொள்ள நினைக்கிறானோ, யார் கையால் என்மகன் தலை நிலத்தில் வீழ்த்தப்படுமோ அவன் தலை வெடித்துச் சாவான் என்று சபதமிட்டு அதற்காகவே கானகம் சென்று தவம் செய்து கொண்டிருந்தான்.

உதவி 2 : பொல்லாத சபதமாச்சே!

உதவி 1 : இப்பதான் கதை களைகட்டுது. மீதியைச் சொல்லுங்கோ.

வசனம் : உங்களுக்கு மகாபாரத யுத்தம் தெரியும்தானே.

உதவி 2 : நாங்கள் காணேல்லை. படித்திருக்கிறோம்.

பாட்டு : பாண்டவருக்கும் கௌரவருக்கும்
யுத்தமொன்று மூண்டது
மன்னரெல்லாம் இருபக்கமும்
சேர்ந்து நின்று போரிட்டார்
பாரதத்து மன்னரெல்லாம்
சேர்ந்து போர் செய்ததாலே
மகாபாரதப் போர் எனவே
நடந்த அந்தப் போரிலே.

உதவி 1 : ஜெயத்திரதனும் சேர்ந்திருப்பான்.

முதல்
வசனம் : ஆமாம் ஜெயத்திரதன் கௌரவர் பக்கத்திலே சேர்ந்து பாண்டவர்களை எதிர்த்துப் போரிட்டான். பாண்டவர்கள் தர்மம் காக்கப் போரிட்டார்கள். 13ஆம் நாள் போரிலே ஒரு கொடுமையான அதர்மம் நடந்தது.

உதவி 2 : அதென்ன கொடுமையான அதர்மம்?

பாட்டு : வில்லுக்குவீரன் அச்சுனனுக்கும்
வீரமங்கை சுபத்திரைக்கும்
வீராதிவீரன் அபிமன்யு என்றோர்
வெற்றித் திருமகன் பிறந்திருந்தான்

வசனம் : அவன் தந்தை அர்ச்சுனன் பக்கமாகிய பாண்டவர் பக்கத்தில் நின்று போரிட்டான். கௌரவர் சேனை கதிகலங்கியது. இவனைத் தனித்து யாரும் வெல்ல முடியாதென எண்ணிய கௌரவர் பக்கத்து வீரர்கள் துரியோதனன் மட்டுமல்ல துரோணர், கிருபர், கர்ணன் முதலான எல்லாரும் வளைத்து மறித்து நிற்க அபிமன்யு ஆயுதம் எல்லாம் இழந்து வெறுங் கையனாக நிற்கையில் ஜெயத்திரதன் அபிமன்யுவை வெட்டிக் கொன்றுவிட்டான்.

பாட்டு : ஐயகோ வீரமைந்தன் அபிமன்யு மாண்டானோ
மெய்யான வீரனை வெல்ல முடியாமல்
வஞ்சனையாய்ச் சூழ்ந்து நின்று
கொன்றாரோ பாவியர்கள்
வீராதிவீரன் அபிமன்யு மாண்டசெய்தி
நாராசம் போலே கேட்டானே அர்ச்சுனன்.

வசனம் : வேறு பக்கத்தில் நின்று போராடிய அர்ச்சுனன்
அபிமன்யு வதம் செய்யப்பட்ட சேதிகேட்டு
அவ்விடம் விரைந்து வந்தான்
வெஞ்சினங் கொண்டான்
என்மைந்தனைக் கொன்ற மாபாவி ஜெயத்திரதனை
நாளை சூரியன் மறையுமுன்னே கொல்வேன்
இல்லையேல் அக்கினியில் பாய்ந்து உயிர்விடுவேன்
எனச் சபதமிட்டான்.

உதவி 1 : கௌரவர் பக்கம் கலக்கம் அடைந்திருக்கும்

முதல்வர்
வசனம் : பாண்டவர் பக்கமும்தான் கலக்கம் அடைந்தது. ஜெயத் திரதனைக் கொல்லாவிட்டால் அர்ச்சுனன் இறந்து விடுவானே என்று. அன்றிரவு மௌன இரவாய்க் கழிந் தது. மறுநாள் பதினாலாம் நாள் போர் தொடங்கியது.

பாட்டு : ஜெயத்திரதனை நடுவிருத்தி நாற்புறமும் சூழ்ந்துநின்று
கௌரவர் சேனையெல்லாம் காவலாக நின்றார்கள்
பத்மவியூகம் வகுத்து ஜெயத்திரதனைக் காத்திடவே
பலமான மதில்போலே பாதுகாத்து நின்றார்கள்

வசனம் : அந்தப் பத்மவியூகத்தை ஊடறுக்கவெனப் பாண்டவர் சேனைகளும் பாடாய்ப்பட்டார்கள். கிருஷ்ணன் தேரினிலே அர்ச்சுனனும் வாயுவேக மனோவேகத்தில் சுற்றிச் சுழன்று போரிட்டும் ஜெயத்திரதனுக்குக் கிட்டவும் போகமுடிய வில்லை. சூரியனும் மறையும் வேளையாயிற்று. மாயக் கிருஷ்ணன் ஒருலீலை செய்தான்.

பாட்டு : சக்கர ஆயுதத்தைச் சுழற்றிவிட்டான் வான்வெளியில்
சக்கரம் சூரியனை மறைத்திடவே இருண்டதுவே
சூரியன் மறைந்திரவு வந்ததெனக் கௌரவர்கள்
வெற்றிப் பெருமிதத்தில் வியூகம் விட்டுப்போனார்கள்
சக்கரத்தைக் கிருஷ்ணன் திருப்பி அழைத்திடவே
வந்ததுவே வெய்யில் எல்லோரும் திகைத்தார்கள்
தன்னந்தனியாகச் செல்கின்ற ஜெயத்திரதன்
தலையினை அறுத்திடவே அம்புவிட்டான் அர்ச்சுனனும்

உதவி 1 : ஓகோ கௌரவர்கள் ஏமாந்தார்கள்.

உதவி 2 : ஜெயத்திரதனின் தலையை வெட்டிவீழ்த்தினால் அர்ச்சுனன் தலை வெடித்துச் சாவானே.

வசனம் : இது தெரியாதா கிருஷ்ணனுக்கு. ஜெயத்திரதன் தலைக்கு அம்புவிட்ட அர்ச்சுனனுக்கு சொன்னான் கிருஷ்ணன். அர்ச் சுனா ஓர் அம்பால் ஜெயத்திரதன் தலையை வெட்டி மறு அம்பால் அவன் தலையை அதோ போர்க்கள எல்லைக் காட்டில் தவம் செய்யும் முனிவர் மடியில் விழும்படி அடித்துவிடு என்றான். தலை போய் முனிவர் மடியில் விழுந் தது. எதிர்பாராத முனிவர் சீயென நிலத்தில் தட்டிவிட்டார். அக்கணமே அவர் தலைவெடித்துச் செத்தார்.

உதவி 1 : ஓகோ அந்த முனிவர்தான் ஜெயத்திரதன் தந்தை விருத்தசத் திரனோ?

பாட்டு : அவரேதான்

தான்போட்ட சாபம் தனக்கே பலித்திடவே
தன்மகன் தலையாலே தன்தலையும் வெடித்திடவே
தன்செயலால் தன்மகனும் தானும் அழிந்தனரே
தான் தறித்த பனையதுவே தன்மேலே வீழ்ந்திடவே
தானழிதல் போலாச்சு தம்மாலே தாமழிந்தார்
தன்வினை தன்னைச்சுடும் என்பது மெய்யாச்சு.

**மங்களம்.**

விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டுக் கேட்டவர்கள்
எல்லோருக்கும் எங்களது வணக்கம் - எங்களை
மதித்தவர்கள் எல்லோருக்கும் வணக்கம்
மங்களம் மங்களம் மங்களம்.

உ
சிவமயம்

வில்லிசை

## 6. தீதும் நன்றும் பிறர்தர வாரா

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் சரஸ்வதியே - வரம்நீ
தந்தருள்வாய் சரஸ்வதியே.

வேறு

தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளம்போட்டு
வில்லிசை பாட வில்லிசை பாட
வந்தருள்வாய் சரஸ்வதியே.

**சபை வணக்கம்**

தன்ன னன்ன தன னானா தானானா தானனனா

சபையிலுள்ள பெரியோரே தாய்மாரே தோழர்களே
சுவையான செய்தியொன்று சொல்லுகிறோம்
வில்லினிலே
அமைதியாக இருந்ததனை அனைவீரும் கேட்டிடுவீர்
உமைவணங்கிக் கதையினைநாம் சொல்லுகிறோம்
கேளும்

கேளும்

உதவி 1 : ஆமா முதலிலே செய்தியென்றீர்கள், பின்பு கதை என்கிறீர் கள். என்னதான் சொல்லப்போறீங்கள்?

முதல்வர் : செய்தியைத்தான் கதையிற் சொல்லப் போகிறேன்.

உதவி 2 : என்ன செய்தி, யார் சொன்ன செய்தி?

முதல்வர் : சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனார் சொன்ன செய்தி.

உதவி 1 : கணியன் பூங்குன்றனாரா? அவர் பெரிய புலவராயிற்றே.

உதவி 2 : அப்ப அவர் நல்ல செய்தியாத்தான் சொல்லியிருப்பார். சொல்லுங்கள் கேட்போம்.

பாட்டு : தன்ன தனன தனதன தன்னனா

சங்கப் புலவர் கணியன்பூங் குன்றனார்
தங்கத் தமிழில் சொல்லிய செய்தி
தீதும் நன்றும் பிறர்தர வாரா
யாவரும் கேளிர் என்பது செய்தி.

உதவி 1 : தீதும் நன்றும் பிறர்தர வாராவா? அதெப்படி?

முதல்வர் : நமக்கு வருகிற தீமைகளோ நன்மைகளோ மற்றவர்களால் வருவதில்லை.ட நம்மாலேதான் நமக்கு வருகிறது.

உதவி 2 : அதெப்படி ஐயா. நமக்குத் தீமையோ, நன்மையோ மற்றவர் கள் தானே செய்கிறார்கள். நமக்குத் தீமை நாமா செய்கி றோம். என்னையா ஒரே குழப்பமாயிருக்கு.

முதல்வர் : குழம்பவும் வேண்டாம், குழப்பவும் வேண்டாம். கொஞ்சம் பொறுமையாய்க் கேட்டால் எல்லாம் தெளிவாய் விளங்கும்.

பாட்டு : தான தனன தனதன தானா

தீதும் நன்றும் பிறர்தர வாரா
யாவரும் இதனை அறிந்திட வேண்டும்
தினையை விதைத்தவன் தினையை அறுப்பான்
வினையை விதைத்தவன் வினையை அறுப்பான்

உதவி 1 : ஆமா தினையை விதைத்தவன் தினையைத்தான் அறுப்பான் வினையை விதைத்தவன்...?

முதல்வர் : விதைத்ததைத்தானே அறுக்க வேண்டும். அதுவும் விதைத் தவன்தானே அறுக்கவேண்டும்.

உதவி 2 : அதுவும் சரிதான்.

முதல்வர் : இன்னும் இருக்கு கேளும்.

பாட்டு : தா னானா தன்னனன

தாம்தாமே செய்தவினை
தாம்தாமே அனுபவிப்பர்
புண்ணியம்ஆம் பாவம்போம்
பொனநாட் செய்தஅவை
மண்ணினிலே பிறந்தவர்க்கு
வைத்தபொருள் அறியீரோ

உதவி 1 : இப்ப நல்லா விளங்குது. ஔவையார் சொன்னதுதானே. சின்ன வயசிலை படித்தது இப்பதான் நல்லா விளங்குது. ஆமா நீங்க சொல்ல வந்த செய்தி என்ன?

முதல்வர் : இதேதான். அதாவது "தீதும் நன்றும் பிறர்தர வாரா" இதுதான் செய்தி.

உதவி 2 : இந்தச் செய்தியை எந்தக் கதையிலும் வைத்துச் சொல்ல லாம். உங்களுக்கு எந்தக்கதை வேண்டும்?

உதவி 1 : நாங்கள் கேக்கிற கதையிலை வைத்து நீங்கள் இந்தச் செய்தியைச் சொல்வீர்களோ?

முதல்வர் : சொல்லுவேன்.

உதவி 1 : சமாளிக்கக் கூடாது. சரியாய்ச் சொல்லவேண்டும்.

முதல்வர் : சமாளிப்பு இல்லை. உங்களுக்கு எந்தக் கதை வேண்டும்?

உதவி 1 : சூதாட்டக்கதை. அதாவது மகாபாரத்திலே தருமர் சூதாடித் தோற்றாரே அந்தக் கதை.

உதவி 2 : அதாவது தருமரும் சகுனியும் சூதாடினார்கள். சகுனிதான் வஞ்சகமாகக் காயுருட்டினான். தீவினையான வஞ்சகச் சகுனிக்குத் தோல்விதானே வந்திருக்க வேண்டும்.

உதவி 1 : ஆனால் வஞ்சனை செய்த சகுனி வென்று மகிழ்ந்தான். நேர்மையாக ஆடிய தருமர் தோற்று நாடு நகர் எல்லாம் இழந்து துன்புற்றாரே. இது என்ன நியாயம்?

பாட்டு : தான தான தானன தன்ன

சூதும்வாதும் வேதனை செய்யும்
என்பதை அறியா தவரோ தருமர்
தெரிந்தும் தீயதைச் செய்தார் தருமர்
வருந்தும் படியாய் ஆனது முடிவு.

முதல்வர் : சூதும் வாதும் என்ன செய்யும்?

உதவி 2 : வேதனை செய்யும்.

முதல்வர் : எல்லா அறமும் அறிந்த தருமனுக்குச் சூதாடுதல் தீது என்பது தெரியாதோ? தீதெனத் தெரிந்தும் தீதினைச் செய்தார் தருமர். தீதே விளைந்தது அவருக்கு.

உதவி 1 : தருமர் தோற்றது சரிதான். ஆனால் வஞ்சனை செய்த சகுனி வென்றானே அதெப்படி? அவன் செய்த வஞ்சனை ஆகிய தீவினை என்னாச்சு?

பாட்டு : தானன தான தனன தன்னன தனனன தன்னானே

பாரதப் போரில் தருமம் வென்றது தருமனும் வென்றானே
சூதினில் வென்ற சகுனி போரினில் தோற்றே மாண்டானே
முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும் என்பது அறியீரோ
முன்னே செய்த வஞ்சனை அவனைப் பின்னே கொன்றது

அறிவீரே

உதவி 2 : நீங்கள் பெரிய ஆள் ஐயா. என்ன மாதிரிக் கதைக்குள்ளே நுழைந்து நுழைந்து வினையின் விளையாட்டைக் கண்டு பிடிக்கிறியள்.

உதவி 1 : சரி ஐயா, இதற்கென்ன பதில் சொல்லப்போகிறீர்கள்? அதாவது தருமர்தானே சூதாடி நாடு நகர் எல்லாம் இழந்தார். அதற்கு அந்த அப்பாவிப் பெண் திரௌபதி சபையில் வைத்துத் துகில் உரியப்பட்டாளே. அவள் செய்த தீவினை என்ன?

முதல்வர் : நுட்பமான கேள்விதான். அதுக்கும் பதில் இருக்கு. அவள் செய்த முன்வினைதான் பின் விளைந்தது. அதனையும் கேளுங்கள். பாண்டவரும் கௌரவரும் அண்ணன் தம்பி பிள்ளைகள். பாகப்பிரிவினை செய்து வெவ்வேறாக வாழ்ந் தார்கள்.

உதவி 2 : அதுதான் தெரியுமே.

முதல்வர் : சரி இதுவும் தெரியுமோ.

பாட்டு : தானன தானனனே - தன்னா

பாண்டவர் பூமியிலே - அங்கோர்
பளிங்குமா ளிகை கட்டினரே
இந்திரப் பிரஸ்தத்திலே - அந்த
எழுநிலைமாட மாளிகையில்
குடிபுகும் விழாவினுக்கு - எட்டுத்
திக்குள மன்னரும் வந்திருந்தார்
கௌரவர் தாமுமங்கே - தர்மன்
அழைப்பினை ஏற்றங்கு வந்தனரே.

முதல்வர் : துரியோதனன் தம்பிமாரும் சகுனியும் பின்னே வரத் தான் முன்னே வந்தான். மாளிகையின் பளிங்கு நிலத்தைப் பார்த் தான். அது சுத்தமான பளிங்கு. தண்ணீர் தளம்புவது போலத் தெரிந்தது. தண்ணீர்தான் என்று கருதி ஆடையை ஒதுக்கிக் கொண்டு முன்னே போனான். கால்வைத்ததும் அது பளிங்கு நிலம் என அறிந்து வெட்கினான். எங்கிருந்தோ ஏளனச் சிரிப் பொலி கேட்டது. நிமிர்ந்து பார்த்தான்.

பாட்டு : தானனன்ன தானனன்ன தன்ன னன தானனன்ன

மாளிகையின் மீதினிலே வண்ணநிலா முற்றத்திலே
தோழியரும் துரௌபதியும் சிரித்து ஏளனம் பண்ணினரே
துரியோதனன் அறியாமைக்குக் கைகொட்டிச் சிரித்தனரே
சபையிருந்த மன்னர்களும் கண்டு தாமும் சிரித்தனரே.

முதல்வர் : துரியோதனனுக்க அவமானம் தாங்க முடியவில்லை. மாமா சகுனியைப் பார்த்தான். சகுனி சொன்னான்

மருமகனே மன்னர் சபைமுன் எம்மை ஏளனம் செய்து சிரித்த துரௌ பதியை மன்னர் சபையிலே எல்லோரும் பார்க்க மானபங்கம் செய்வோம். இருந்துபார் என்றான்.

உதவி 1 : துரௌபதி விருந்தாக வந்த கௌரவரை தலைகுனிய வைத்த தீவினை.

உதவி 2 : அவளையும் பாண்டவர்களையும் மன்னர் சபைமுன் தலை குனிய வைத்தது. பொம்பிளை சிரிச்சாப் போச்சு என்பது சரியாப் போச்சு.

உதவி 1 : அது சரிதான். ஆனால் அதற்குப் பிறகு துரௌபதியைத் துகில் உரியும்போது ஆடைகள் வளர்ந்து வளர்ந்து அவள் மானத்தைக் காத்ததே. அதெப்படி?

முதல்வர் : அதிலும் பெரிய கதை இருக்கு. ஒருநாள் கண்ணன் கோபியருடன் சேர்ந்து நீர் விளையாடிக் கொண்டிருந் தான்.

பாட்டு : தன்ன தனனா தானன னனனா

கண்ணன் ஒருநாள் கோபிய ருடனே
ஜமுனையில் நீர்விளை யாடுகையில்
கண்ணனின் ஆடையை ஆற்றின் நீரது
அடித்துக் கொண்டு போனதுவே
ஆடையை இழந்த கண்ணன் வெளியே
வரமுடி யாமல் தவித்தனனே
அதனை அறிந்த துரௌபதிதனது
ஆடையைக் கிழித்துக் கொடுத்திடவே
கண்ணன் அதனைக் கட்டிக் கொண்டு
தன்மா னத்தைக் காத்தனனே.

முதல்வர் : இது முன்னே துரௌபதி செய்த நல்வினையல்லவா. இப்போது துரௌபதியை மன்னர் சபையினிலே வைத் துக் கௌரவர் துகில் உரியும்போது அங்கிருந்த யாரும் உதவிக்கு வரவில்லை.

உதவி 2 : ஆமாம். அவள் கண்ணா கண்ணா கோவிந்தா என்னைக் கண்பாராயோ என்று கதறினாள். அது கண்ணன் காதில் கேட்டது. தனது மானத்தைக் காத்தவளின் மானத்தை அவன் இப்போ மறைந்து நின்று காத்தான்.

முதல்வர் : அதுதான் உண்மை. அன்று அவள் ஒரு துண்டுத்துணி கொடுத்தாள். இன்று அது,?

பாட்டு : தன்னனன தன்னனா - தன

பொன்இழை பட்டிழையாய்ப் - பல
புதுப்புதுப் புதுப்புது ஆடைகளால்
வண்ணப்பட் டாடைகளாய் - அது
வளர்ந்து வளர்ந்து வளர்ந்ததுவே

முதல்வர் : சிறிதளவு நல்வினை செய்தாலும் அது பல்கிப் பெருகி விளைந்து பெரும் பயன் தரும் என்பதற்கு இது நல்ல உதாரணமல்லவா?

பாட்டு : தன்னன தன்ன தன்னன தன ன

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
முழுவதும் உண்மை மறவாதீர்
திரௌபதி முன்னே செய்தநல் வினையே
அவள்மா னத்தைக் காத்ததுவே.

உதவி 1 : கதை நல்லாத்தான் இருக்கையா. இன்னும் ஒரு சந்தேகம்.

முதல்வர் : ஒன்றுதானா? அதையும் கேளும்.

உதவி 1 : பாண்டவர்கள் தர்மவான்கள். கௌரவர்கள் அதர்மவான்கள். இரு பகுதிக்கும் நடந்த போர் தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் நடந்த போர். அந்தப்போரில் கௌரவர் பக்கத்தார் எல்லாரும் இறந்தார்கள். பாண்டவர் பக்கத்தார் எல்லாரும் தப்பி இருக்க வேண்டுமல்லவா. ஆனால் பாண்டவர் பக்கத்திலும் அபிமன்யு முதலான பாண்டவர் மைந்தர்கள் இறக்கக் காரணம் என்ன?

முதல்வர் : பாண்டவர்களும் போரில் சில தீய செயல்கள் செய்தார்கள். தருமர் "அசுவத்தாமன் இறந்தான்" என்று சொன்ன ஒரு பொய்யால் அவர்களின் குருவான துரோணாச்சாரியாரே இறந்தார். தருமர் சொன்ன பொய்யாகிய தீவினையால் தான் பாண்டவர் பக்கத்திலும் பலர் அழிந்தனர்.

உதவி 2 : இப்பதான் எல்லாம் வடிவாக விளங்கிற்று. தீதும் நன்றும் பிறர்தர வாரா என்ற கணியன் பூங்குன்றனாரின் செய்தி உண்மையிலும் உண்மைதான்.

பாட்டு : தனதன தன்னா தன்னா தனதன

நடப்பது எல்லாம் நன்றாய் நடக்குது
என்பது கீதை உபதேசம் - அதை
நன்றாய் உணர்ந்தால் தீதும் நன்றும்
நமக்கு நாமே செய்வது தான்
நடப்பதை நன்றாய் ஆராய்ந்தறிவீர்
நல்லதைச் செய்தே உய்திடுவீர்.

உதவி 1 : இந்த உலகத்துக்குத் தேவையான உச்சமான செய்தியையும் கதையையும் சொன்னீர்கள் உங்களுக் குக் கோடி வணக்கமன்றோ.

**மங்களம்**

பாட்டு : மங்களம் மங்களம் மங்களம்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
என்பதைக் கேட்ட உங்களுக் கெல்லாம்
மங்களம் மங்களம் மங்களம்.

உ
சிவமயம்

சிலப்பதிகார வில்லிசை - 01

# 7. கோவலன் பிரிவு

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே.

தாயே சரஸ்வதியே - சரஸ்வதியே - எங்கள்
நாவில் வருவாய் அம்மா - எங்களுக்கு
நல்வாக்குத் தாரும் அம்மா - உங்களை
நாடியே வந்தோம் அம்மா.

வசனம் : எங்கள் வில்லிசை கேட்க வந்திருக்கும் சபையோர்களே உங்களுக்கு எங்கள் இனிய வணக்கம்.

பாட்டு : இந்தநல்ல சபைதனிலே - சபைதனிலே
ஈழத்தமிழ் இளையவர்நாம் - இளையவர்நாம்
செந்தமிழிற் சொல்லெடுத்துச் - சொல்லெடுத்துத்
தித்திக்கும் இசைவிருந்து - இசைவிருந்து
சுந்தரத் தமிழர்வாழ்வின் - தமிழர்வாழ்வின்
சொந்தக் கதை சொல்லுகிறோம் - ஆமாம் சொல்லுகிறோம்

**வேறு**

மூவேந்தர் நாட்டுக்கதை முத்தமிழில் நடந்தகதை
பாவேந்தர் இளங்கோதந்த பண்ணிசைக்கும் சிலம்பின்கதை
பாடிடுவோம் கேட்டிடுவீர் - தமிழ்ப்
பண்பாட்பைப் போற்றிடுவீர்.

முதல்வர் : செந்தமிழ்ச் செல்வர்களே! உங்கள்முன்னே கோவலன் பிரிவு என்னும் சிலப்பதிகாரக் கதையை வில்லடித்துச் சொல்ல வந்தோம்.

உதவி : சிலப்பதிகாரக் கதையென்றால்

முதல்வர் : சிலம்பு பற்றிய இலக்கியக்கதை

உதவி : சிலம்பென்றால் என்ன?

முதல்வர் : அந்தக் காலத்திலே செல்வச் செழிப்பு மிக்க நம்தமிழ் மங்கையர்கள் காலிலே அணிகின்ற பொன்னால் செய்யப்பட்ட ஓர் அணிகலன்.

உதவி : அது எப்படி இருக்கும்?

பாட்டு : சம்பூநதப் பொன்னெடுத்துச்
சந்திரவட்டம் வளைத்து
மத்தக மணியினொடு
வரிசையாய் வயிரம்கட்டி
பத்தி பத்தி யாய்ப்பதித்த
சித்திரப் பொற்சிலம்பு.

உதவி 2 : ஓகோ இது பெரிய பெறுமதியுடையதாயிருக்குமே.

முதல்வர் : அதுதான் சொன்னேனே.

பாட்டு : ராஜபோகத்தினிலே மகிழ்ந்திருக்கும் மங்கையர்கள்
காலில் அணிந்துவரும் கனகமணிப் பொற்சிலம்பு
ஜல்ஜல் என ஒலிக்க நடைபயிலும் காற்சிலம்பு.

உதவி : ஆமாம், இது யார் அணிந்த சிலம்பின் கதை?

முதல்வர் : கற்புக்கரசி கண்ணகி என்பாள் அணிந்த சிலம்பின் கதை.

பாட்டு : சோழவள நாட்டினிலே - நாட்டினிலே
பூம்புகார் வளநகரில் - வளநகரில்
வாழ்வுயர்ந்த தனவணிகன் - தனவணிகன்
மாநாய்க்கன் செல்வமகள் - செல்வமகள்
கண்ணகியின் காற்சிலம்பு - காற்சிலம்பு
காவியமாம் பொற்சிலம்பு - ஆமாம்
காவியமாம் பொற்சிலம்பு

உதவி 2 : ஓகோ இது மெத்தப் பெரிய இடத்து மேன்மைக் கதை போலிருக்கே. இது யார் பாடிய காவியம்?

முதல்வர் : சேரநாட்டின் இளவரசராயிருந்து துறவுபூண்ட பெரும் புலவன், பாவடிகள் தேன்வடியப் பாடும் இளங்கோவடிகள் பாடிய காவியம்.

உதவி 1 : என்ன 'பாவடிகள் தேன்வடியப் பாடும் இளங் கோவடிகளா? அடே எங்கப்பா நீங்கள் சொல்லவே வாயூறுது படித்தால் எப்படி இருக்கும். நீங்கள் பாடுங் கள் நாங்கள் கேட்போம்.

முதல்வர் : இது இராமாயணம், பாரதம் போன்ற வடநாட்டிலிருந்து தமிழுக்கு வந்த கதை அல்ல. தமிழ் நாட்டார் கதை.

உதவி 2 : தமிழர் கதையா? பாடுங்கள், பாடுங்கள்.

பாட்டு : மூவேந்தர் ஆண்டுவந்த
சேரசோழ பாண்டி நாட்டில்
வாழ்ந்த தமிழர் வாழ்வில் மலர்ந்து
செந்தமிழ் நாட்டு மண்ணில் விளைந்த
சீர்பெறும் மூல இலக்கியம் இதுவே
தமிழர் வாழ்வு கலை பண்பாடும்
சமயமும் அரசியல் பொருள் வளமும்
இத்தரை போற்றும் முத்தமிழ்ச் சுவையும்
நிறைந்த ஒப்புயர்வற்ற அற்புத இலக்கியம் இது.

உதவி : சரி, சரி கதையைச் சொல்லுங்கோ, ஆவலை அடக்க முடியவில்லை.

முதல்வர் : ஆமாம், பூம்புகார்த் தனவணிகன் மாநாய்க்கன் என்பான் மகள் பன்னிரு வயதுக் கன்னி கண்ணகிக்கும் அந்நகர்ப் பெருவணிகன் மாசாத்துவான் என்பான் மகன் பதினாறு வயதுடைய வாலிபன் கோவலனுக்கும் முறைப்படி மணம் பேசித் திருமணமாம் பெருமணம் செய்தார்கள்.

உதவி : அதுசரி, வணிகர் என்றால்

முதல்வர் : வணிகர் என்றால் செட்டியார்

உதவி : ஓகோ அப்ப பெரிய பணக்காரராய் இருப்பார்களே. இராசா வீட்டுக் கலியாணம் போலிருக்கும்.

முதல்வர் : அப்படியேதான்- இதோ இளங்கோ பாடுவதைக் கேளுங்கள்.

பாட்டு : மாலைதாழ் சென்னி வாயிரமணித் தூணகத்து
நீல விானத்து நித்திலம்பூம் பந்தற்கீழ்
வானூர்மதியம் சகடணைய வானத்து
சாலி ஒருமீன் அனையானைக் கோவலன்
மாமுதுபார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்து திருமணம் கண்டார்கள்.

உதவி : வானூர்மதியம் சகடு அணைய
வானத்துச் சாலி ஒருமீன் அனையானை
என்றது விளங்கவில்லையே.

முதல்வர் : மதியம் என்றால் சந்திரன், சகடு என்றால் ரோகினி நட்சத்திரம். சாலி ஒருமீன் என்றால் அருந்ததி நட்சத்திரம்.

அதாவது சந்திரனை ரோகினி சேர்கின்ற முகூர்த்தத்தில் அருந்ததி போன்ற கற்புடைய கண்ணகிக்குத் திரும ணம் செய்து வைத்தார்கள் என்பது பொருள்.

உதவி : இலக்கியம் என்றால் இலக்கியம்தான். மேலே சொல் லுங்கோ.

முதல்வர் : கோவலனும் கண்ணகியும் மன்மதனும் ரதியும் போலக் கொண்ட மணக்கோலத்தைக் கண்குளிரக் கண்டு களித்து வாழ்த்தவென மங்கல மங்கையர்கள் மங்கலப் பொருட் களைக் கொண்டு மயில் போலச் சாயலுடன் அன்னம்போல் நடை நடந்து வருகின்றார்கள்.

பாட்டு : பூரண கும்பங்கள் பொன்னின் கலங்கள்
சுண்ணப் பொடியுடன் சுடர்விளக்கேந்தி
சந்தனச் சாந்தோடு அகிலின் புகையும்
பன்னிற மலர்களும் மாலையும் செண்டும்
முளைப்பாலிகையுடன் தாம்பூலத்தட்டேந்தி
பூத்திட்ட முல்லைக் கொடிபோல் ஓசிந்து
புன்னகைவீசிட வாழ்த்தியெ வந்தனர்
காதலர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
தீதறுக வென்றே வாழ்த்தி மகிழ்ந்தனர்.

உதவி 1 : அடேயப்பா கண்கொள்ளாக் காட்சி. நேரில் பார்த்தால் எப்படி இருந்திருக்கும்.

உதவி 2 : ஊர்கோலமே இப்படி என்றால் கல்யாணச்சாப்பாடு எப்படி இருந்திருக்கும்?

உதவி 1 : வாயூறாமல் கதையைக் கேள்.

முதல்வர் : கோவலனுடைய தந்தையின் ஏழு நிலை மாடியில் இடையில் உள்ள ஒரு மாடியில் இருவரும் குடிபுகுந் தனர். இருவரும் ஒருவர் அழகில் ஒருவர் மயங்கி ஒருவரை ஒருவர் நலம் பாராட்டினர்.

உதவி 2 : கோவலன் கண்ணகியை எப்படிப் பாராட்டினான் என்பதைப் பாவடிகள் தேன்வடியப் பாடும் இளங்கோ அடிகள் பாடியதை ஒருக்கால் பாடிக் காட்டுங்கோ.

முதல்வர் : பாடுகிறேன் கேளுங்கள்.

பாட்டு : மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே

உதவி 1 : ஆகா ஆகா

முதல்
பாட்டு : அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமுதே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழ் இருங் கூந்தல் தையால் நின்னை

உதவி 2 : என்ன அருமையான பாராட்டு. கண்ணகி கோவலனைப் பாராட்டியதையும் பாடுங்கோ. அது இன்னும் நல்லா யல்லோ இருக்கும்.

உதவி : முட்டாள். அது சினிமாப் பெண்களெல்லோ அப்படிப் பாடுவர். இவள் குடும்பப் பெண் நேரே பாடுவாளோ.

முதல்வர் : இப்படியே கோவலன் கண்ணகியில் இல்லறவாழ்வு - (2)
இனிதே தொடர்ந்தது இல்லறத்தானுக்குரிய
அறங்களான அறவோர்க் களித்தலும்
அந்தணர் ஓம்பலும், துறவோர்க் கெதிர்தலும்
தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்

சிறப்பாக நடந்தன. அதுமட்டுமல்ல வள்ளுவர் சொல்வாரே

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்
தான் என்று ஐம்புலத்தாறும் ஓம்பி

ஊரும் உலகும் போற்ற வாழ்ந்தார்கள். இப்படியே சிலகாலம் மகிழ்ச்சியாகக் கழிந்தது. ஒருநாள் தெரு விலே முரசறைந்து அறிவிக்கும் அறிவித்தல் ஒன்று கேட்டது. கோவலனும் கண்ணகியும் வாயிலில் சென்று பார்த்தனர்.

முதல்வர்
பாட்டு : காவிரிப்பூம் பட்டினத்தில் கலைவிருந்து ஒன்றிருக்கு
கணிகையர் குலத்துதித்த கட்டழகி மாதவியாள்
ஆடற்கலைபயின்று அரங்கேற்றம் செய்கின்றாள்
தேடற்கரியகன்னி தெய்வமகள் ஊர்வசிபோல்
பன்னிரண்டு வயதுடையாள் பவளமலர் போலிருப்பாள்
தென்னவன் முன்னிலையில் ஆடல் அரங்கேறவுள்ளாள்.

வசனம் : செல்வச் சீமான்களே சீமாட்டிகளே எல்லோரும் வாருங் கள். ஆடற்கலையின் அற்புதத்தைப் பார்த்திடலாம்.

என்று முரசறைந்து சொல்லிக்கொண்டு போனார்கள்.

உதவி 1 : புதுத்தம்பதிகள் இருவரும் போய்ப் பார்த்திருப்பார்கள்.

முதல்வர் : அதுதான் இல்லை. கோவலன் கண்ணகியை ஆடல் காண வாவென அழைத்தான். கண்ணகி மறுத்து விட்டாள்.

உதவி 2 : ஓகோ பிரச்சினை ஆரம்பமாகிவிட்டதோ?

முதல்வர் : கோவலன் எல்லாக் கலையும் வல்ல ஆணழகன் அல்லவா. கண்ணகி சொன்னாள் உங்களில் காணாத கலை அழகையா நான் அங்கே காணப்போகிறேன். நான் வரவில்லை என்றாள். கோவலன் மனம் போக வேண்டும் என உந்தியது. தனியாகவே போனான்.

முதல்
பாட்டு : ஆடற்கலைக்கெனவே அமைத்தகலை அரங்கினிலே

ஆடல்ஆசான் பாடல்ஆசான் யாழ்ஆசான் குழல்ஆசான்
மத்தள வித்தகரும் தண்ணுமை விண்ணர்களும்
குயிலுவக் கலைஞர்களும் கூடிஒன்றாய் இசைமுழங்க
பொன்னால் வடிவமைத்த பூங்கொடி பெண்ணுருவில்
மின்னல் கொடிபோல் ஆடக்கண்டவர்கள் மெய்மறந்தார்.

வசனம் : மாதவியின் ஆடலைக் கண்டவர்கள் மதிமயங்கிப் போனார்கள். அரசன் எழுந்தான். ஆடற்கலையழகியின் அற்புத ஆடலைப் பாராட்டி மாதவிக்குத் தலைக்கோல் பட்டமும், 1008 களஞ்சு பொன்முடிச்சும், பச்சை மாலையும் பரிசாகக் கொடுத்துச் சென்றான். கோவலன் மாதவியின் ஆடலில் தன்னை மறந்து லயித்து இருந் தான். திடீரென அரங்குக்கோர் கூனி வந்தாள்.

உதவி 1 : கூனியோ, கூனிக்கு அங்கென்ன வேலை? அங்கொரு கூனியால் அயோத்தி அரசே அழிந்ததே.

உதவி 2 : பாரதத்தில் வந்த சகுனியால் குருகுலமே அழிந்ததே. இந்தக் கூனியும் அழிவுக்குத்தான் வந்தாளோ?

முதல்வர் : எப்படியோ இந்தக் கூனி என்ன செய்கின்றாள் என்று இருந்து பார்ப்போம். அரங்கிற்கு வந்த கூனி அறிவிததல் ஒன்று சொன்னாள்.

"செல்வச் சீமான்களே, தனவந்தர்களே, பிரபுக்களே மன்னன் கொடுத்த இந்த மாலை 1008ப்பொற்களஞ்சு பெறுதியுடையது. இதனை விலைகொடுத்து வாங்கு வோர்க்கது எங்கள் ஆடல் அழகி மாதவியும் அவள் கலையும் சொந்தமாகும். வாங்குவோர் முன்னே வந்து வாங்கலாம்."

உதவி : கோவலன் வந்து வாங்கினானோ?

முதல்வர் : அப்படியேதான் நடந்தது. கோவலன் பொன்னைக் கொடுத்து மாலையை வாங்கினான். மாதவிக்கு அந்த மாலையைச் சூட்டினான். மாதவியுடன் போய்க் கூடிக் குலாவினான். கண்ணகியை மறந்தான்.

உதவி 2 : நான் சொன்னேன். கூனி வந்தால் கொடுமைதான் வரும் என்று.

உதவி 1 : ஐயையோ கண்ணகிப் பெண் பாவம். இது பெரிய கொடுமையாயிற்றே.

முதல்வர் : கண்ணகி தோழி தேவந்திமூலம் நடந்ததெல்லாம் அறிந்து, கண்ணீரும் கம்பலையுமாகக் கவலைக் கடலில் மூழ்கிக் கிடந்தாள். இன்று வருவார் நாளை வருவார் என்று நாட்களை எண்ணிக்கொண்டிருந்தாள்.

பாட்டு : மாசறு பொன்னே என்றும் வலம்புரி முத்தே என்றும்
ஆசையுடன் அணைத்தவர்என் அன்புமுகம் மறந்தாரோ
வாசமலரே தேனே வண்ணக்குல விளக்கே என்றார்
மோசம்செய்தாரே என்னை மோடிநான் என்ன செய்வேன்
என்று அழுதழுதே காலம் கழித்தாள்.

உதவி : குலமகள் கண்ணகிக்கு இப்படியும் ஒரு கொடுமையோ

முதல்வர் : இப்படியே பன்னிரண்டு ஆண்டுக்ள கழிந்தன. கண்ணகி யின் வாழ்வில் விளையாடிய விதி இப்போது மாதவி வாழ்வில் விளையாடத் தொடங்கியது. காவிரிப்பூம் பட்டினத்திலே ஆண்டு தோறும் சித்திரைப் பூரணையை முன்னிட்டு நடக்கும் இந்திரவிழாவில் கோவலனும் மாதவியும் கடலாடி மகிழ்வதற் குச் சென்றார்கள்.

கோவலன் மாதவியுடன் பொய்யாக ஊடல் கொண்டான். வேறொரு பெண்ணைப் புகழ்வதுபோல வீணையை மீட்டிப் பாடினான். பதிலுக்கு மாதவியும் வீணையை வாங்கித் தானும் வேறொருவனைப் புகழ்வதுபோலப் பாடினாள்.

கோவலன் அது உண்மை என நினைத்து இவள் கணிகையர் குலவழக்கப்படி என்னைவிட்டு வேறொரு வனை விரும்புகிறாள் என்று மாதவியை விட்டுப் பிரிந்து சென்றான்.

பாட்டு : குலமகளின் மனக்கோயில் குடியிருந்த தெய்வம் அது
விலைமகளின் வீட்டினிலே வீழ்ந்து கிடந்ததுவே
விலைமகளின் வீடுவிட்டு மீண்டும் புறப்பட்டதுவே
குலமகளின் வீட்டுக்கோ வேறெங்கோ போவாரோ

உதவி : ஊரறிய உலறியக் கட்டிய கண்ணகியை விட்டு மாதவியின் பின் போன கோவலன் இப்போ மாதவியை விட்டுப் போனான்.

முதல்வர் : கோவலன் பிரிவால் கண்ணகிக்கும் மாதவிக்கும் கோவலனுக்கும் துன்பமே சூழ்ந்தது.

பாட்டு : கோவலன் பிரிவென்னும் வில்லுப்பாட்டுக் கேட்டவர்கள்
எல்லோருக்கும் எங்களது வணக்கம் - எங்களை
மதித்தவர்கள் எல்லோருக்கும் வணக்கம்
வணக்கம் வணக்கம் வணக்கம்.

2016இல் கொழும்பு - 7 மகளிர் கல்லூரி மேடையேற்றியது.
பத்தினித் தெய்வம் நூலில் வெளிவந்தது.

உ
சிவமயம்



# 8. கண்ணகி வழக்குரை

**காப்பு**

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே.

**வணக்கம்**

வந்திருக்கும் பெரியோரே வாலிபரே வணிதையரே
சிந்தைமகிழ்ந் துங்களுக்கு நல்வணக்கம்
சொல்லுகிறோம்

உதவி : ஆமா. இன்றைக்கு என்ன கதை சொல்லப் போகிறீர்கள்?

முதல்
பாட்டு : மூவேந்தர் நாட்டுக்கதை முத்தமிழில் நடந்தகதை
பாவேந்தர் இளங்கோ தந்த பண்ணிசைக்கும்
சிலம்பின்கதை
கற்பரசி கண்ணகியாள் வழக்குரைத்து வென்றகதை
அற்புதமாய்ப் பாடிடுவோம் அன்புடனே கேட்டிடுவீர்.

இன்று உங்கள் முன்னிலையில் கண்ணகி வழக்குரை என்னும் கதை பாடப்போகின்றோம்.

உதவி : முதலில் கண்ணகி ஆரென்று சொல்லுங்கோ.

முதல்வர் : சோழவள நாட்டிலே பூம்புகார் என்னும் காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்த பெருவணிகர் மாநாய்க்கன் என்பவருடைய மகள் கண்ணகி. இந்தக் கண்ணகிக்கும் அந்நகர் பெருவணிகன் மாசாத்துவான் மகன் கோவலனுக்கும் திருமணம் செய்து வைத்தார்கள்.

பாட்டு : அருந்ததிபோல் கற்புடையாள்
அழகினிலே ரதியைப் போல்வாள்
திருமகள்போல் செல்வமகள்
தித்திக்கும் சொல்லழகி

கண்ணிக்கும் கோவலனுக்கும் மன்னர்தம் திருமணம் போல் மாபெரிய திருமணவிழா நடந்தது.

உதவி 1 : பெருவணிகர் என்றால் பெரிய செட்டிமார்தானே

உதவி 2 : செட்டிமாரிடம்தானே செல்வம் குவிந்திருக்கும். அப்படிப் பட்ட செட்டிமார் வீட்டுக் கலியாணம் என்றால் எப்படி இருக்கும்.

முதல்வர் : கோவலனும் கண்ணகியும் இல்லறவாழ்வெனும் இன்ப சாகரத்தில் மகிழ்ந்திருந்தார்கள்.

பாட்டு : எழுநிலை மாடத்திலே இடையிலொரு மாளிகையில்
அழகொளிரும் பஞ்சணையில் அன்றில்கள் போலிருந்தார்
கரும்புமதன் ரசமும்போலே கனியுமதன் சுவையும்போலே
இரு உடலுக் கோருயிர்போல் இன்புற்றே வாழ்ந்தார்கள்.

இவ்விதம் இணைபிரியாமல் வாழுங் காலத்திலே ஒரு நாள் சோழநாட்டு ஆடல் அழகி கணிகையர் குலத்து தித்த மாதவி என்பாளின் ஆடல் அரங்கேற்றம் காணக் கோவலன் போனான். அவன் மாதவியின் ஆடலில் மயங்கிக் கண்ணகியை மறந்து மாதவியுடனே இன்பக் கேளிக்கை களில் ஈடுபாடுகொண்டு வாழ்ந்தான்.

உதவி 1 : என்ன சொல்கிறீர்கள். கட்டிய பெண்ணைக் கைவிட்டு மற்றொருத்தியுடன் மகிழ்ந்திருந்தானா?

முதல்வர் : ஆமாம்

பாட்டு : மாதவியாள் ஆடலிலே மதிமயங்கித்தான் கிடந்தான்
கண்ணகியாள் தன்நினைவைக் கனவிலுமே நினைக்க
வில்லை

உதவி 2 : அப்போ கண்ணகி என்ன செய்தாள்?

உதவி 2 : அப்போ கண்ணகி என்ன செய்தாள்?

முதல்வர் : என்ன செய்வது? விதியை நொந்தாள். கண்ணான கணவன் கைவிட்ட கதையை மற்றவர்க்க எப்படிச் சொல்வது. இன்று வருவார் நாளை வருவார் எனக் காத்துக் கிடந்தாள்.

பாட்டு : பூவிழந்தாள் பொட்டிழந்தாள்
பொன்னகையெல் லாமிழந்தாள்
கூந்தல் முடிக்கவில்லை கண்ணுக்கு மைதீட்டவில்லை
சோர்ந்துவிழும் பூங்கொடிபோல்
துயர்க் கடலில் தான்கிடந்தாள்

முதல்வர் : இப்படியே பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன. கோவல னுக்கும் மாதவிக்கும் மணிமேகலை எனும் பெண் குழந்தை பிறந்து வளர்ந்து வந்தது. ஒருநாள் இந்திர விழாக்காண இருவரும் புறப்பட்டனர்.

உதவி : இந்திரவிழாவா அது என்ன?

முதல்வர் : காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் ஆண்டுதோறும் சித்தரைப் பூரணையை முன்னிட்டு நடக்கும் கோலாகல விழா. இந்திரலோகமோ என்று கண்டார் களிகொள்ளும் மிகப் பெரியவிழா. வானுலகத் தேவர்களும், பன்னாட் டுக் கலைஞர்களும் மண்ணாளும் மன்னர்களும் வந்து கடலாடி ஆடிப் பாடி மகிழும் விழா.

பாட்டு : வண்ண வண்ணக் கோலம் போட்டு
வாயில் தோறும் கும்பம் வைத்து
வாழை கமுகு நட்டு
மகரதோரணங்கள் கட்டி
பட்டுவண்ணக் கொடிகள் கட்டி
பக்கமெல்லாம் பந்தல்போட்டு
பொன்னுலகு வந்ததெனப்
புவியெல்லாம் அலங்கரித்தார்.

உதவி : கோவலனும் மாதியும் கடலாடப் போனார்களோ?

முதல்வர் : எல்லோரும் தேவலோகத்தவரோ என்று எண்ணும்படி தம்மை அலங்காரம் செய்து கடலாடியும் கவின்கலை

கள் ஆடிப் பாடியும் இன்புற்றார்கள். அவ்வண்ணமே கோவலனும் மாதவியும் ஆடிக் களித்தார்கள். திடீ ரெனக் கோவலன் யாழை வாங்கி வாசித்துக் கானல்வரி பாடினான். ஒரு ஆடவன் இரு பெண்களை விரும்புவது போல விளையாட்டாகப் பாடினான். உடனே மாதவியும் யாழை வாங்கி ஒரு பெண் இரு ஆடவர்களை மணப்ப தாக விளையாட்டாகப் பாடினாள்.

விளையாட்டு வினையாயிற்று. கோவலனுக்கு மாதவி மேல் சந்தேகம் வந்தது. இவள் கணிகையர் குலவழக் கப்படி இப்போ என்னை விட்டு வேறுயாரோ ஆடவனை விரும்புகிறாள் என்று எண்ணி அவளுடன் கோபித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டகன்றான். மாதவி கவலை யுடன் மீண்டாள்.

பாட்டு : குலமாது கண்ணகியின் கோயிலில் இருந்த தெய்வம்
விலைமாது மாதவியின் வீட்டில் கிடந்த துண்டு
விலைமாது மாதவிமேல் கோபங் கொண்ட காரணத்தால்
குலமாது கண்ணகியின் கோயிலுக்கே போகிறதே.

உதவி : ஐயோ பாவம். மானமிழந்து மதிகெட்டு மீண்டும் கண்ணகியிடமே போகிறாரோ?

முதல்வர் : வேறெங்கு போவார்? கண்ணகியிடம்தான் போகிறார். கண்ணகியின் தோழி தேவந்தி, கண்ணகியிடம் போகி றாள். கண்ணகிதான் கண்ட கொடிய கனவு ஒன்றைச் சொல்கிறாள். தெய்வ கோட்டத்திற்குப் போய் வழிபட் டால் எல்லாத் துன்பமும் தீரும் என அழைக்கிறாள். கண்ணகியோ எனக்குத் தெய்வம் என் கணவன்தான் வேறு தெய்வம் எதையும் வணங்கேன் என்று சொல்லி மறுக்கிறாள். இந்நேரம் கோவலன் கண்ணகி என அழைத்தபடி நாணிக்கோணி அவள்முன் நிற்கின்றான். கண்ணகி என் தெய்வம் வந்தீர்களா வாருங்கள் என வரவேற்று இருக்கச் செய்கிறாள். கோவலன் தன் முன் னோர் தேடிவைத்த செல்வமெல்லாம் தொலைத்து இழிநிலைக்கு ஆளானேனே. இனி எப்படி வாழ்வேன் எனக் கவலைப்படுகிறான். கண்ணகி தன் காற்சிலம்பை விற்று மீண்டும் வணிகத்தைத் தொடங்கலாம் எனச் சொல்கிறாள்.

பாடல் : பேதைஎனை ஆதரிக்கும் நீ பெண்ணல்லத் தெய்வமம்மா
யார்கண்ணிலும் படாமலேநாம் இரவோடிரவாகப்
பாண்டிநாடு சென்றிடுவோம் மதுரைநகர் பொற்கொல்லர்
வேண்டிடுவார் சிலம்பினையே நல்விலை தந்திடுவார்
இப்போதே புறப்படுவாய் இருபேரும் சென்றிடுவோம்.

என்று சொல்லக் கண்ணகியும் புறப்பட்டு இரவிரவாகக் கால் நடையாகக் கல்லும் முள்ளும் நிறைந்த பாதை வழியே போனார்கள்.

உதவி : ஐயோ பாவம் கண்ணகி. மண்ணில் பாடாத அவள் பாதங்கள் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுவழி நடக்கிறதே. பாவி கோவலன் செய்த குற்றத்தைத் தாங்கிக் கண்ணகியும் கஷ்டப்படுகிறாளே.

முதல்வர் : அவர்கள் இருட்டுவழியிலே வழிதெரியாமல் தவித்தார்கள். அந்த நேரத்தில் தெய்வம்போல வந்தவர் ஒருவர்,

உதவி : யார் அது?

முதல்வர் : கவுந்தி அடிகள் என்னும் துறவி. அவர் இவர்களை யாரென விசாரித்தறிந்து இரக்கம் கொண்டு பக்கத்தில் இருந்த ஆயர் சேரியில் ஆய்ச்சியர் தலைவி மாதரியிடம் அடைக்கலமாக ஒப்படைத்துவிட்டுச் சென்றார். அன்றிரவு அங்கேயே தங்கி னார்கள். மறுநாள் காலை கோவலன் கண்ணகியை ஆய்ச்சியருடன் இருக்கச் செய்துவிட்டுத் தனியாகச் சிலம்பு விற்க மதுரை நகர் சென்றான். கண்ணகி மீண்டும் பிரிவதா எனக் கவலை கொண்டாள்.

கோவலன்

பாட்டு : சிலம்பு விற்று வந்திடுவேன் செல்வமே நீ கலங்காதே
நலம்பெறவே வாழ்ந்திடலாம் பொற்சிலம்பு விற்றுவாறேன்
கண்மணியாள் கண்ணகியை ஆய்ச்சியரே காத்திடுவீர்
எண்ணமெல்லாம் உன்நினைவாய் என்னவளே வந்திடுவேன்

என்று ஆறுதல் கூறிவிட்டுக் கண்ணகியின் ஒருகால் சிலம்பையும் வாங்கிக்கொண்டு நடந்து சென்றான்.

முதல்வர் : ஆய்ச்சியர்கள் கண்ணகியை அழைத்துக்கொண்டு போய் பசுக்கூட்டங்களைக் காட்டி மகிழ்ந்தார்கள். அப்போது அவசகுனங்கள் தோன்றுதலைக் கண்டார் கள். கண்ணகிக்கு வலக்கண் துடிக்கிறது.

பாட்டு : கன்றுகள் பால் குடிக்கவில்லை பசுக்கள் பால் இரங்கவில்லை
காளைகளின் கண்களிலே கண்ணீர் வடிகிறதே
பாலும் உறையவில்லை பசுக்கள் இரை மீட்கவில்லை
காகம் கரைகிறதே கனசகுனம் தெரிகிறதே.

என்று ஆய்ச்சியர்கள் கவலைப்பட்டார்கள். குலவழக் கப்படி தங்களுக்குத் தீங்கொன்றும் வராமல் காக்கும்படி கண்ணனை வேண்டுதல் செய்து "ஆய்ச்சியர் குரவை பாடி கண்ணனை வழிபட்டார்கள். திடீரென மாதரி என்னும் ஆய்ச்சியர் தலைவி ஓலமிட்டபடி வந்தாள்.

உதவி : ஏதோ விபரீதம் நடந்துவிட்டது போலிருக்கிறதே.

முதல்வர் : மாதரி சொன்னாள். ஐயகோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. கண்ணகியே என்னென்று சொல்வேன். கோவலன் சிலம்பு விற்கப் போன இடத்தல் அச்சிலம்பு அரசியின் சிலம்பென்றும் கோவலன் கள்வனென்றும் அரசனாற் கொலை செய்யப்பட்டானாம். ஐயகோ என் செய்வோம் என்றழுதாள். கண்ணகி கதறித் துடித்தாள். திடீரென ஆவேசம் கொண்டவள் போல் எழுந்தாள்... காய்கதிர்ச் செல்வனே என் கணவன் கள்வனோ கள்வனோ. இப்போதே அரசனிடம் செல்வேன். என் கணவன் கள்வனல்லன் என்பதை நிரூபித்தன்றி உறங்கேன் எனத் தலைவிரி கோலமாய்ப் புறப்பட்டாள்.

உதவி : இதென்ன கொடுமையப்பா. கண்ணகியின் காற்சிலம் பைத் தானே விற்கப் போனான். எப்படிக் கள்வன் என்பர்?

முதல்வர் : மன்னனின் மாளிகைக்கே நேரே போனாள். காவலனைப் பார்த்து,

பாட்டு : வாயிலோயே வாயிலோயே
நற்றிறம்பஉராக் கொற்கைவேந்தன்

வாயிலோயே உன் மன்னனிடம் போய்ச்சொல்
மெய்யிற்பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் தனிச்சிலம்பும் கண்ணீருமாக ஒரு
காரிகை உன்னைக் காணவந்துள்ளாள் என்றுசொல்

எனக் கடட்ளை இட்டாள். வாயில் காவலன் பயந் தோடிப் போய் மன்னனிடம் சொல்ல மன்னன் வரச் சொன்னான். கண்ணகி மன்னன் முன் சென்றாள்.

உதவி : ஐயையோ என்ன நடக்கப் போகிறதோ கோவலனை வெட்டிய மன்னன் இவளையும் வெட்டிவிடுவானோ?

முதல்வர் : கண்ணகி சொன்னாள்.

தேராமன்னா செப்புவதுடையேன் நான்
ஒருபுறாவுக்காகத் தன்னுடல் கொடுத்த
சிபிச்சக்கரவர்த்தியும்
ஒரு பசுவின் கன்றுக்காகத் தன்மகனையே கொன்ற
மனுநீதிச் சோழனும் ஆண்ட சோழநாட்டவர் பெரும்
பெயர்ப் புகாரே என்னூர்
ஏகாச் சிறப்பின் இசைவிளக்கு பெருங்குடி
மாசாத்து வணிகன் மகனாகப் பிறந்து வாழ்தல் வேண்டி
ஊழ்வினை துரப்ப உன்மதுரை மாநகர்க்கு வந்து
என் காற்சிலம்பு விற்க வந்தபோது அந்தச்சிலம்பு
அரசியின் சிலம்பெனக் கள்ளப்பட்டம் சூட்டி
உன்னாற் கொல்லப்பட்ட கோவலன் மனைவி
கண்ணகிநான்

உதவி : என்று கோபக்கனல் பறக்கப் பேசியிருப்பாளோ. வீரப் பெண்ணென்றால் கண்ணகிதான். அதற்கு அரசன் என்ன சொன்னான்?

முதல்வர் : பெண்ணே! கள்வனைக் கொல்லுதல் கொடுங்கோல் அன்று. அதுவே செங்கோல். இதற்கேன் இத்தனை கோபம் என்றான்.

உதவி : கண்ணகி கோபம் இன்னும் கூடியிருக்கும்.

முதல்வர் : ஆமாம்

பாடல் : அறநெறி அறியாத மன்னவா
என்கணவன் கொண்டுவந்த சிலம்பெங்கே - இதோ
என் மற்றச் சிலம்பிருக்கு பார்மன்னா

என் சிலம்பின் உள்பரல்கள் மாணிக்கம்
இரண்டையும் நன்றாகப் பார்மன்னா

என்று கண்ணகி கூறியதும் மன்னன் ஏவலனைப் பார்த்துக் கோவலனிடம் பெற்ற சிலம்பைக் கொணர்க என்றான். சிலம்பு வந்தது. உன் காற்சிலம்பினுள் பரல்கள் மாணிக்கம் என்றாய் என் மனைவியின் காற் சிலம்பினுள் உள்ளவை முத்துக்கள் என்றான் மன்னன். கோபங்கொண்ட கண்ணகி கோவலன் கொண்டு வந்த தாக மன்னன் காட்டிய சிலம்பை எடுத்து நிலத்தில் எறிந்துடைத்தாள். அதற்குள் இருந்த மாணிக்கங்கள் மன்னன் முகத்தில் தெறித்துப் பறந்தன.

எல்லோரும் திகைத்து நின்றனர். மன்னன் பதை பதைத்தான்.

பாடல் : நானோ அரசன் நானே கள்வன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
நானோ அரசன் நானே கள்வன்
தென்னவன் நீதி என்முதற் பிழைத்தது
என்னுயிர் விடுவேன் என்னுயிர் விடுவேன்

என்று வீழ்ந்திறந்தான். கொடியும், குடையும், செங்கோலும் வீழ்ந்தன. கோப்பெருந்தேவியும் வீழ்ந்திறந்தாள்.

உதவி : ஐயையோ பொற்கொல்லன் பொய்யால் ஒரு அரசே அழிந்ததே. கண்ணகி என்ன செய்தாள்.

முதல்வர் : கண்ணகி கோபம் தணியவில்லை. குற்றமற்ற கோவலன் கொல்லப்பட்டதைப் பார்த்திருந்த மதுரை நகருள்ளாரைத் தீக்கிரையாக்குவேன்.

பாட்டு : மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாயின்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்
என்பட்டிமையும் காண்பீர் இதோ.

என்று புறப்பட்டாள். மதுரை தீக்கிரையானது
கண்ணகி வழக்குரை கேட்டவர்கள் எல்லோர்க்கும்
எங்கள் வணக்கங்கள்.

மங்களம் மங்களம் மங்களம்

2016இல் கொழும்பு மகளிர் கல்லூரியில் அரங்கேறியது.
பத்தினித் தெய்வம் நூலில் வெளிவந்தது.

உ
சிவமயம்

சிலப்பதிகார வில்லிசை - 03

# 9. கற்புக்கனல்

காப்பு

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே.

வணக்கம்

வந்திருக்கும் பெரியோரே வாலிபரே வனிதையரே
சிந்தை மகிழ்ந்திருக்கும் சிறுவர்களே முதியோரே
உங்களுக்கு எங்களது உள்மார்ந்த வணக்கங்கள்
எங்களுக்கும் உங்களது நல்வாழ்த்தைத் தந்திடுங்கள்.

உதவி : ஆமா. இன்றைக்கு என்ன கதை சொல்லப் போகிறீர்கள்?

முதல்வர்: கற்புக்கனல் கண்ணகியின் கதைசொல்லப் போகிறோம்.

உதவி : கற்பரசி கண்ணகி என்று கேள்விப்பட்டிருக்கிறோம். நீங்கள் கற்புக்கனல் என்கிறீர்களே.

முதல்வர்: ஆமாம். கண்ணகியின் கற்புக் கனலான கதைதான் சொல் லப் போகிறோம்.

உதவி : சரி, சொல்லுங்கள்.

பாட்டு : சோழவள நாட்டினிலே காவிரிப்பூம் பட்டினத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்திருந்த பெருவணிகன் மாநாய்க்கன்
செல்வமகள் கண்ணகியின் கதையை நாம் சொல்லவந்தோம்

உதவி : பெருவணிகன் மாநாய்க்கன் என்றால்

முதல்வர்: கப்பல் வைத்து வெளிநாட்டு வியாபாரம் செய்கின்ற பெருஞ் செல்வச்சீமான். அவர் பெயர் மாநாய்க்கன்.

உதவி : ஒகோ பெருஞ்செல்வர் கதை என்று சொல்லுங்கோ

பாட்டு : கண்ணகியாள் பன்னிரண்டு வயதுடைய கன்னியானாள்
அருந்ததியோ ரதிதானோ அழகின் திருவுருவோ
பூத்திருக்கும் பொற்கொடியோ புண்ணியத்தின் புண்ணியமோ
என்று கண்டவர்கள் மனதைக் கொள்ளை கொள்ளும் வித மாக வளர்ந்தாள். மணப்பருவம் எய்தியவளுக்கு மணம் பேசினார்கள்.

உதவி : மணமகன் யாரோ

முதல்வர்

பாட்டு : காவிரிப்பூம் பட்டினத்துத் தனவணிகன் மாசாத்துவான்
கோவேந்தர் செல்வத்திலும் கூடியதோர்
பெருஞ்செல்வன்
மாசாத்துவானின் மைந்தன் மன்மதன்போல்
அழகுடையான்
தேசத்துக் கலைகளெல்லாம் கற்றறிந்த
பெருங்கலைஞன்
பதினாறு வயதுடையான் கோவலனாம் குமரனுக்கும்

மணம் பேசி முடித்தார்கள். நாடாளும் மன்னர் வீட்டுத் திருமணம் போலக் கோலாகலமாகத் திருமணம் நடந்தது.

உதவி : இருவரும் மன்மதனும் ரதியும் போல இருந்திருப்பார் கள். மீதிக்கதையைச் சொல்லுங்கள்.

முதல்வர் : இருவரும் ஏழுநிலை மாடத்தின் இடையேயுள்ள பொன் வண்ண மாளிகையில் பூஞ்சிட்டுக்களாக வாழ்ந்தார்கள்.

பாட்டு : தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்று
ஐம்புலத்தா றோம்பி அகமகிழ்ந்து வாழ்ந்தார்கள்

இப்படியே சில ஆண்டுகள் இன்பமாகக் கழிந்தன. ஒருநாள் வீதியிலே முரசறைந்து அறிவித்தல் ஒன்று கேட்டது.

உதவி : அப்படி என்ன அறிவித்தலாயிருக்கும்

முதல்
பாட்டு : காவிரிப்பூம் பட்டினத்தில் கலைவிருந்து ஒன்றிருக்கு
கணிகையரின் குலத்துதித்த கட்டழகி மாதவியாள்
ஆடற்கலை பயின்று அரங்கேற்றம் செய்கின்றாள்
தேடற்கரிய கன்னி தெய்வமகள் ஊர்வசிபோல்
பன்னிரண்டு வயதுடையாள் பவளமலர் போலிருப்பாள்
மன்னவனின் முன்னிலையில் ஆடலரங் கேறவுள்ளாள்.

என்ற அறிவித்தல் கேட்டது. கோவலன் கலைஞனல் லவா. ஆடல் காண ஆவலுடன் போனான். மாதவியின் ஆடலில் மனதைப் பறிகொடுத்தான். கண்ணகியை மறந்தான். மாதவியோடு வாழல் உற்றான். மாதவியின் ஆடலிலும் பாடலிலும் மதிமயங்கி இந்த உலகத் தையே மறந்து மாதவியே தஞ்ச மென்று கிடந்தான்.

உதவி : ஐயோ பாவம் கண்ணகி. கண்ணீரும் கம்பலையுமாகக் காலம் கழித்திருப்பாள்.

முதல்வர் : அப்படியேதான் நடந்தது. ஆனால் காலம் ஒரேமாதிரி இருப் பதில்லை. பன்னிரண்டு ஆண்டுகள் பறந்தன. ஒருநாள் காவிரிப்பூம் பட்டினக் கடற்கரையில் நடந்த இந்திர விழா வுக்கு இருவரும் போனார்கள். ஆடிப்பாடி ஆனந்தமாய் இருந்தார்கள். திடீரெனக் கோவலன் வீணையை வாங்கி வாசித்து இரு பெண்களை ஒரு ஆடவன் விரும்புவதுபோலப் பாடினான். மாதவியும் அதேமாதிரி ஒரு பெண் இரு ஆண்களை விரும்புவது போல விளையாட்டாகப் பாடினாள்.

உதவி : ஓகோ விளையாட்டு வினையாயிற்றோ

முதல்வர் : ஆமாம். கோவலனுக்கு மாதவிமேல் சந்தேகம் வந்தது. மாதவி வேறொருவனை விரும்பினாள் என்று கோபித்துக் கொண்டு போகப் புறப்பட்டான். மாதவி எவ்வளவோ கேட் டும் மறுத்துவிட்டுப் போய்விட்டான்.

உதவி : எங்கே போயிருப்பான்.

முதல்வர் : வேறெங்கே போவது. கண்ணகியின் வீட்டுக்கே போனான்.

பாட்டு : உலகறிய மணந்த பெண்ணை உதறிவிட்டுப் போனமகன்
உலகவர்க்கு அஞ்சிஅஞ்சி இரவிரவாய்த் திரும்பிவந்தான்
வந்தவனை உதறாமல் வாருங்கள் என்று சொல்லி
நிந்தனைகள் செய்யாமல் கண்ணகியாள் வரவேற்றாள்

உதவி : எந்தப் பெண்தான் இப்படி வரவேற்பாள். எங்கள் பெண்களா யிருந்தால் தும்புக்கட்டை எடுத்து அடித்துத் துரத்தி இருப் பார்கள்.

முதல்வர் : கண்ணகி கணவனையே கண்கண்ட தெய்வமாக மதிப்ப வள். அப்படிச் செய்வாளா?
கோவலன் கண்ணகிமுன் வெட்கித் தலைகுனிந்து நின் றான். கைப்பொருள் எல்லாம் இழந்தேனே. இனி வாழவழி இல்லையே எனக் கவலைப்பட்டான். கண்ணகி சொன்னாள்

பாட்டு : செல்வமெல்லாம் இழந்தாலும் என்காற் சிலம்பிருக்கு
நல்லவிலை போகுமிதை விற்றுத் தொழில் செய்திடலாம்

என்று சொல்லி ஒரு காற்சிலம்பைக் கழற்றிக் கோவலன் கையில் கொடுத்தாள். அதை வாங்கிய கோவலன் ஊரார் உற்றார் அறியாவண்ணம் இரவோடிரவாகப் பாண்டிய நாட் டிற்குப் போய்ப் பொற்கொல்லர் வாழும் மதுரை நகரில் விற் றிடலாம் என்னுடன் வா என்று புறப்பட்டான்.

உதவி : பாவம் கண்ணகி. திரும்பவும் ஏமாறப் போகின்றாளோ. கடவுளே நீதான் காப்பாற்ற வேண்டும்.

முதல்வர்
பாட்டு : இரவோடிரவாக யாருமறியா விதத்தில்
இருவருமே கால்நடையாய் நடையாய் நடந்தார்கள்
பூப்போலப் பாதங்கள் பொங்கிரத்தம் வடிந்திடவும்
நாவரண்டு காய்ந்திடவும் நடையாய் நடந்தார்கள்.

வேறுவழியின்றி விதியை நொந்தவராய் நடந்து பாண்டிய நாட்டை அடைந்தார்கள்.

முதல்வர் : கோவலன் அங்குள்ள இடைச்சேரி ஆய்ச்சியரிடம் கண்ண கியை அடைக்கலமாக இருக்கவிட்டு மதுரைப் பொற்கொல்லர் வீதிக்குச் சிலம்பு விற்கப் போனான். கோப்பெருந்தேவியின் காற்சிலம்பொன்றைக் களவெ டுத்த அரண்மனைப் பொற்கொல்லன் எதிர்ப்பட்டான். சிலம்பைப் பார்த்தான். அரசியின் சிலம்பு போலவே இருந்தது. இவனை மாட்டிவிட்டுத் தான் தப்பித்துக் கொள்ளலாமென்ற வஞ்சக எண்ணம் கொண்டான். இது அதிகவிலை பெறும். அரசமாதேவிக்குப் பொருத்த மானது. இங்கேயே நில்லுங்கள் நான் விலைபேசி வருகின்றேன் என்று சொல்லிவிட்டுச் சிலம்புடன் போனான்.

உதவி : பாவம் கோவலன். பொற்கொல்லனின் வஞ்சக எண்ணத்துக் குப் பலியாகப் போகிறானே.

முதல்வர்
பாட்டு : அரசமா தேவியின் சிலம்பிது - மன்னா
அங்கொரு கள்வனிடங் கண்டேன்
விலைபேசி வந்திட்டபோதிலே - அவன்
என்கையில் வந்து அகப்பட்டான்
அரசியின் சிலம்பிதோ கிடைத்தது - அவனைச்
சிரச்சேதம் செய்வதே முறை என்றான்.

மன்னன் சேவகர் இருவரை அழைத்து அந்தக் கள்வனைக் கொன்றுவிட்டுச் சிலம்பைக் கொண்டுவாருங்கள் என்று கட் டளையிட்டான்.

உதவி : கோவலன் கொலையுண்டானா?

முதல்வர் : ஆமாம். கோவலன் தலைவெட்டிக் கொல்லப்பட்டான். செய்தியறிந்தாள் கண்ணகி. சீறி எழுந்தாள். என் கணவன் கள்வனோ. காய்கதிர்ச் செல்வனே. நீயே எல்லாம் அறிபவன். என் கணவன் கள்வனோ எனக் கதறினாள். இல்லை இல்லை என்று அசரீரி கேட்டது. மறுகாற் சிலம்பை யும் கையில் கொண்டு ஆவேசமாகப் பாண்டியன் அரண் மனைக்குப் போனாள்.

பாட்டு : நீதிஅறியாத மன்னவா - என்ன
மோசம் செய்தாய் என் கணவனை

கொலையுண்ட கோவலன் மனைவிநான் - இங்கே
கொண்டுவா அந்தச் சிலம்பினை
ஒற்றைச் சிலம்பிதோ இருக்குது - இதோ
மற்றக்கால் சிலம்பைய் வைத்துக்கொள்
என் காற்சிலம்பினுள் மாணிக்கம் - இதோ
இரண்டையும் ஒத்துநீ பார்த்திடு.

பாண்டியன் சொன்னான்

கோப்பெருந்தேவியின் சிலம்புளே - கொற்கை
முத்துப்பரல்களே உள்ளன

என்றான்

கோவலன் சிலம்பினைக் கொண்டுவா - இதோ
உடைக்கிறேன் பார்இப்போ மணிகளை

என்று சொல்லி நிலத்தில் எறிந்துடைத்தாள். மாணிக்கக் கற்கள் பாண்டியன் முகத்தில் தெறித்தன.

உதவி : சரியான வேலை செய்தாள் கண்ணகி.

முதல்வர் : ஆமாம், பாண்டியன் கொலுவைவிட்டு எழுந்து
பதறித்துடித்தான், என் நீதி பிழைத்தது
நானோ அரசன் நானே கள்வன்
என்னால் பாண்டியன் செங்கோல் வளைந்ததே
ஐயகோ உயிர்விடுவேன் என்று சொல்லி வீழ்ந்திறந்தான்.

உதவி : கோப்பெருந்தேவி?

முதல்வர் : அவளும் கணவனை இழந்த எனக்கு வாழ்வெதற்கு என்று கதறியழுது வீழ்ந்திறந்தாள்.

உதவி : பாண்டியன் குலமே பாழ்பட்டதே. காலத்தால் மாறாப் பழியாயிற்றே.

முதல்வர் : கண்ணகியின் கோபம் இன்னும் அடங்கவில்லை. மேலும் ஆவேசமாகப் புறப்பட்டாள். குற்றமற்ற என் கணவனைக் கள்வனென்று பழிசுமத்திக் கொலைக்களப்பட வைத்துப் பார்த்திருந்த மதுரையைத் தீக்கிரையாக்குவேன் என

மதுரை நகரைச் சுற்றிச் சுற்றி ஊழிகாத்துக் காளிபோல் திரிந்தாள்.

பாட்டு : மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாயின்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்
என் பட்டிமையும் காண்பீர் மாநிலத்தீர்

என்று ஓடித்திரிந்தாள்.

உதவி : இதென்ன விபரீதம் அப்பா மன்னன் செய்த குற்றத்திற்கு மக்கள் என்ன செய்வார்கள்?

முதல்வர் : ஒரு பாவத்தைச் செய்தவனுக்கு மட்டுமல்ல அதைப் பார்த்திருப்பவனுக்கும் பாதிப்பாவம் சேரும் என்பது ஆன் றோர் வாக்கல்லவா.

உதவி : ஆமாம் எப்படி மதுரையை எரியூட்டினாள்.

முதல்வர் : தன்னுடைய இடது முலையைத் திருகி எடுத்து அக்கினி தேவனே இப்போதே வா பாழ்பட்ட மதுரையை எரித்து அழித்துவிடு என்று அழைத்தாள்.

உதவி : அக்கினி தேவன் வந்தானோ?

முதல்வர் : வந்தான். சுவாலை விட்டு எரியும் கோலத்தில் கண்ணகி முன் வந்து நின்று, கற்புடைத்தாயே நான் யார் யாரை எல் லாம் எரிக்க வேண்டும் என்று பணிந்து கேட்டான்.

பாட்டு : பார்ப்போர் அறவோர் பசுபத்தினிப் பெண்டிர்

மூத்தோர் குழந்தைகள் நோயாளர் இவரைவிட்டுத்

தீத்திறத்தோர் பக்கமே சென்று எரித்திடுவாய்

உதவி : அப்ப மதுரையுள்ளார் எல்லாரையும் எரிக்கவில்லை என்று சொல்லுங்கள். கோபத்தின் போதும் கண்ணகி அறந்தவறவில்லை.

முதல்வர் : ஆமாம் மதுரை எரிந்தது. நல்லோர் தப்பினர். கெட்டோ ரும் அவர்களைச் சேர்ந்தார்களும் அழிந்தொழிந்தனர். கண்ணகி இப்போதும் கோபக்கனல் பறக்க ஆவேசமாக மதுரையைச் சுற்றிவந்தாள். அப்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

உதவி : என்ன அதிசயம் அது?

முதல்வர் : மதுரையின் காவல்தெய்வம் அதுதான். மதுராபதித் தெய்வம் தோன்றியது. பாதி பெண்ணும் பாதி ஆணு மாகத் தோன்றிய தெய்வம் கண்ணகியைப் பார்த்து,

பாட்டு : கற்புக்கனல் கண்ணகிப் பெண்ணே - உன்றன்
கோபத்தை இத்துடன் விட்டிடு
மதுரை நகர்த்தீயும் அணையட்டும் - உன்றன்
மகத்துவத்தை நாடு அறிந்திடும்
கவலையை விட்டிடு கண்ணகி - இதோ
உன்தீவினை இத்துடன் தீர்ந்தது.

முதல்வர் : என்று ஆறுதல் கூறி மேலும் சொன்னது
கண்ணகி பாண்டியனும் பிழை செய்திலன்
நீயும் பிழை செய்யவில்லை
கோவலனும் பிழை செய்யவில்லை
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டியதாலே
தான் எல்லாம் நடந்தன என்பதை நீ அறிவாய்
மதுரைமா நகர் தீயால் அழியுமென முன்பே
ஒருசாபம் இருந்தது.

பாட்டு : ஆடித்திங்கள் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளிவாரத்து ஒள்ளெரி உண்ண
உரைசால் மதுரையொடு அரசு கேடுறும்.

அதாவது ஆடிமாதத்து அபரபக்கத்து அட்டமித்திதி கூடிவரும் வெள்ளிக்கிழமையில் மதுரை எரியும் அரசும் அழியும் என்பது சரியாயிற்று. அந்த நாள் இன்றேயானது. நீ கருவியானேயேயன்றி நீ குற்றவாளி யல்ல.

உதவி : நடப்பதெல்லாம் முன்வினைப்பயனாகத்தான் நடக்கிறது. இதுதான் விதியோ. அப்படியானால் கோவலன் கொல்லப் பட்டதற்கும் ஏதாவது காரணம் உண்டோ.

முதல்வர் : உண்டு, உண்டு. மதுராபதிக்குத் தெய்வம் அதனையும் சொன்னது.

உதவி : அதெப்படி?

முதல்வர் : முந்திய பிறப்பிலே

பாட்டு : கலிங்கநன் நாட்டினிலே - நாட்டினிலே
சங்கமன் எனும் வணிகன்
தன் கபிலபுரத்தைவிட்டுச் சிங்கபுரம் சென்றங்கே
தானும் தன்மனைவியுமாய் வியாபாரம் செய்துவந்தான்
பரதன் எனும் பெயருடை அரசாங்க ஒற்றனவன்
சங்கமனை எதிர்நாட்டு ஒற்றனெனச் சாட்டிவிட்டான்
பரதன் சொல் கேட்ட மன்னன் சங்கமனைக்
கொன்றுவிட்டான்
சங்கமனின் மனைவிநீலி மலைமீது ஏறிநின்று
இவர்களும் இப்படியே சாவரெனச் சாபமிட்டு
தானும் வீழ்ந்திறந்து போகச் சாபமின்று பலித்ததுபார்.

முதல்வர் : காட்டிக்கொடுத்த பரதன்தான் உன் கணவன் கோவலனாயும் அவனைக் கொன்ற அரசன்தான் பாண்டியன் நெடுஞ் செழியனாயும் பரதன் மனைவி நீலிதான் நீயாகவும் வந்து பிறந்த முன்வினைப் பயனால் இந் நிலைக்கு ஆளானீர்கள். நீ இனி உன் கணவன் கோவலனை மனித உருவில் காணமாட்டாய். இன்றைக் குப் பதினாலாம் நாள் உன் கணவன் சேரநாட்டுக்குச் செங்கோட்டுமலை உச்சியில் தேரோடு தேவ உருவில் வரக்காண்பாய். உன்னை அவன் தேவ உலகுக்கு அழைத்துச் செல்வான். நீ பத்தினித் தெய்வமென வணங்கப்படுவாய். என்று சொல்லிவிட்டு மதுராபதித் தெய்வம் மறைந்தது.

உதவி : ஓகோ இவ்வளவு கதையும் நடந்திருக்கே. நம் வாழ்விலும் நடப்பதெல்லாம் காரணத்துடன்தான் நடக் குது என்பது இப்போதான் விளங்குது. ஆமா கண்ணகி என்ன செய்தாள்?

முதல்வர்
பாட்டு : அக்கணமே கண்ணகியாள் அங்குநின்ற கோலத்துடன்
தன்கணவன் கோவலனைக் காணும்வரை தரிக்கேன்
எனக்
செங்கோட்டு மலைநோக்கித் தீவிரமாய் நடை நடந்து
அங்கோர் வேங்கை மரத்தடியில் கால்கடுக்கக் காத்து
நின்றாள்.

சொன்னபடி பதினாலாம் நாள் கோவலன் தேருடன் வந்து தேவலோகம் அழைத்துச் சென்றான்.

உதவி : பிறகு என்ன நடந்தது?

முதல்வர் : சேரநாட்டு மன்னன் செங்குட்டுவன் இதையறிந்து கண்ணகியென்னும் பத்தினித் தெய்வத்துக்கு அந்த இடத்தில கோயில் கட்டிப் பத்தினித் தெய்வ வழிபாட்டைத் தொடக்கி வைத்தான்.

பாட்டு : கற்பரசி கண்ணகியாள் பதிவிரதையாதலினால்
பத்தினித் தெய்வமெனப் பாரறிய ஆனகதை
இத்துணையும் இங்கிருந்து கேட்டவர்கள் யாவருக்கும்
பத்தினியாள் அருள்தருவாள் யாவருக்கும் மங்களமே.

வணக்கம்.

2016 கொழும்பு - 7 மகளிர் கல்லூரியில் அரங்கேறியது.
பத்தினித் தெய்வம் நூலில் வெளிவந்தது.

உ
சிவமயம்

சிலப்பதிகார வில்லிசை - 04

# 10. பத்தினித் தெய்வம்

காப்பு

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே.

வணக்கம்

பத்தினித் தெய்வம் எனும்
வில்லிசையைக் கேட்பதற்கு
இச்சபையில் வந்திருக்கும்
இளையோரே முதியோரே
எல்லோர்க்கும் எங்களது
இனியபல வணக்கங்கள்.

முதல்வர் : அன்பர்களே இன்று உங்கள்முன் பத்தினித் தெய்வம் எனும் வில்லிசை பாடவந்தோம்.

உதவி : பத்தினித் தெய்வம் என்றால் அது எந்தத் தெய்வம்?

முதல்வர் : அதுதான் கண்ணகித் தெய்வம்

உதவி : ஓகோ நாம் பங்குனித் திங்களில் கண்ணகை அம்மன் கோயில்களில் பொங்குவோமே அந்தக் கண்ணகைதான் பத்தினித் தெய்வமோ.

முதல்வர் : ஆமா, ஆமா. கண்ணகி என்பவள் பத்தினித் தெய்வம் ஆனகதைதான் இது.

உதவி : பாடுங்கள் கேட்போம்.

முதல்வர்
பாட்டு : நாடுமிக நல்லநாடு - ஆமா நல்லநாடு
சேரமன்னர் ஆண்டநாடு - சேரர் ஆண்டநாடு
இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் என்னுமொரு

மாமன்னன் ஆண்டநாடு மலைவளங்கள் நிறைந்தநாடு
அவன்மைந்தன் செங்குட்டுவன் சேரநாட்டை ஆள்கையிலே
அங்கோர் அதிசயத்தை கேட்டுமகிழ் வடைந்தார்கள்.

உதவி : அதென்ன அவ்வளவு பெரிய அதிசயம்

முதல்வர் : ஒருநாள் சேரன் செங்குட்டுவன் அரசபைக்கு குறவர்கள் வந்தார்கள். அவர்கள் ஒரு செய்தி சொல்ல வந்தார்கள்.

பாட்டு : மன்னவா ஒரு சேதி கேளும் - எங்கள்
மலைமீது கண்டதோர் அதிசயம் கேளும்
செங்கோட்டு மலைஉச்சி மீதோர்
சேயிழை தலைவிரி கோலமாய் ஏறி
வேங்கை மரத்தின் கீழ்நின்றாள் - அவள்
வேதனை தோய்ந்த முகத்துடன் நின்றாள்
நாட்கள் பலவாக நின்றாள் - அங்கோர்
நாள்வானில் நின்றொரு தேர்வரக் கண்டோம்
தேரில் இருந்தொரு அழகன் - அவளைத்
தேடிவந்தவன் போலக் கட்டியணைத்தான்
இருவரும் தேரிலே ஏற - அது
எங்கோவான் வழியிலே சென்று மறைந்தது
இந்த அதிசயம் சொல்ல - மன்னா
இங்கு வந்தோம் இது ஏதென்றறியோம்.

என்று சொன்னார்கள். அதிசயப்பட்ட மன்னன் ஏது நடந்தது என்று அமைச்சரிடம் கேட்டான். அமைச்சர் நாமும் அப்படித் தான் அறிந்தோம் மன்னா புலவர் சாத்தனார் இதை நன்கறிவார் மன்னா. அவரிடம் கேட்போம் என்றார்.

உதவி : புலவர் சாந்தனார் என்ன சொன்னார்.

முதல்வர் : இதில் ஒரு பெரிய வரலாறு இருக்கிறது. இக்கதை சோழ நாட்டில் தொடங்கிப் பாண்டிய நாட்டுக்கு வந்து சேரநாட்டில் முடிந்திருக்கிறது என்றார்.

பாட்டு : சோழவள நாட்டினிலே காவிரிப்பூம் பட்டினத்தில்
வாழ்வுயர்ந்த வளம் கொழிக்கும் தனவணிகர் குலத்தினிலே

கோவலனும் கண்ணகியும் மணம்புரிந்து வாழ்ந்தார்கள்
ஆடல்கலையழகி மாதவியில் மதிமயங்கி
கோவலனார் கண்ணகியைக் கைவிட்டுப் போய்விட்டார்.

சிலகாலம் மாதவியுடன் மகிழ்ந்திருந்த கோவலன்
செல்வமெலாம் இழந்து விதிவசத்தால் மீண்டும்
கண்ணகியிடம் வந்தான்.

உதவி : போன மச்சான் திரும்பிவந்தான் என்று சொல்லுங்கோ.

முதல்வர் : வாழுவதற்கு வழியில்லாமல் கண்ணகியின காற்சிலம்பை விற்றுத் தொழில் செய்யலாமென இரவோடிரவாகப் பாண்டிய நாட்டு மதுரைக்குப் போனார்கள். அங்கு கோவலன் அரசியின் சிலம்பெடுத்த கள்வன் பொற்கொல்லனின் வஞ்சனையால் அரசனால் கொல்லப்பட்டான்.

உதவி : துன்பத்தின்மேல் துன்பம் வருகிறதே.

முதல்வர் : ஆமாம், துன்பம் வந்தால் தொடர்ந்து வரும் என்பது தானே விதி. கண்ணகி தன் கணவன் கள்வனல்லன் என்பதைத் தன் கால் சிலம்புடைத்து நிரூபித்தாள். அரசன் தான் நீதி தவறினேனே என்று வருந்தி இறந்தான். கண்ணகி கோபம் தணியாமல் தன் இடது முலையைத் திருகி எறிந்து மதுரைமாநகரைத் தீக்கிரையாக்கிவிட்டு மதுராபதியின் கட்டளைப்படி முன்னைப் பிறப்பை உணர்ந்து சேரநாட்டுக்கு வந்து செங்கோட்டு மலையுச்சியில் பதினாலு நாள் தவமிருந்து தேவலோகத்திலிருந்து தேரில் வந்த தன் கணவனுடன் தெய்வமானாள் என்று நடந்த கதையைச் சாத்தனார் சொன்னார்.

உதவி : சாத்தனார் எல்லா வரலாறும் தெரிந்திருந்தார் போலிருக்கே.

முதல்வர் : ஆமாம், சாத்தனார் சொன்னதைக் கேட்ட செங்குட்டுவன் கற்பின் கனலென கண்ணகி எங்கள் நாட்டுக்குச் செங்கோட்டு மலையில் வந்து தெய்வமானது எங்களுக்கே பெருமை. கண்ணகிக்கு நாம் கோயில் கட்டி விழா எடுக்கவேண்டும். நீர் என்ன சொல்கிறீர் முதலமைச்சர் பெருமாக்கோதையாரே என்று கேட்டான்

செங்குட்டுவன். அவரும் இது நல்ல யோசனை மன்னா உடனே செய்யவேண்டும் என்றார்.

பாட்டு : கயிலைமலையிலே கல்லெடுக்க வேண்டும்
கங்கையில் நீராட்டிக் கொண்டுவர வேண்டும்
தமிழைப்பழித்த வடநாட்டு மன்னர்கள்
கனகனையும் விசயனையும் கைது செய்யவேண்டும்
கனகவிசயரின் முடித்தலையில் வைத்துக்
கல்லினை இங்கு நாம் கொண்டுவர வேண்டும்
கண்ணகிக்கு அக்கல்லில் சிலைவடிக்க வேண்டும்

செங்குட்டுவன் சொன்னார், தளபதியாரே சரியாகச் சொன்னீர் படை புறப்படட்டும் கனகனையும் விசயனை யும் போரிலே வென்று கல் கொண்டுவர நானும் வருகி றேன். அமைச்சரே வடநாட்டு மன்னர்க்கு இப்பொழுதே ஓலை அனுப்புங்கள். படையுடன் வருகிறேன் திறை செலுத்த வேண்டுமென்று.

பாட்டு : கண்ணகிக்குக் கோயில்கட்டி விழாவெடுக்க வேண்டும்
கண்ணகிக்குக் காவியமும் படைத்திட வேண்டும்
சாத்தனாரும் இளங்கோவும் காவியத்தைப் பாட
அமைச்சரே கோவிலைக் கட்டுவிப் பீரே
கண்ணகி சிலைக்குநான் கல்கொண்டு வருவேன்
காரியத்தை இப்போதே தொடங்கிடு வீரே

என்று சொல்லி மன்னன் புறப்பட்டான்.

உதவி : ஒரே நேரத்தில் மூன்று பணிகள் அடேயப்பா. செங்குட்டுவன் வீராதி வீரன்தான்.

முதல்வர் : கண்ணகி சிலைக்குக் கல் கொணர்தல் மன்னன்பணி. கோயில் கட்டுதல் அமைச்சர் பணி. கண்ணகி காவியம் பாடுதல் புலவர்பணி.

புலவர் சாத்தனாரும், இளங்கோவும் காவியம் பாடுதல் பற்றிக் கலந்துரையாடினார்கள். கண்ணகிகதை சோழ நாட்டில் தொடங்கிப் பாண்டிநாட்டுக்கு வந்து சேரநாட் டில் முடிந்த கதை ஆதலால் மூன்று தமிழ் நாட்டையும் மக்களையும் கலை, சமயம், பண்பாடு, அரசநீதி எல் லாம் பாடவேண்டும். இளங்கோவே நீங்கள் சேரநாட்டு இளவரசாயிருந்து துறவியானவர் - கலை நுணுக்கங்கள் எல்லாம் அறிந்தவர்.

பாட்டு : முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே பாடவேண்டும்

என்றார். இளங்கோவும் சம்மதித்தார். பாடத் தொடங்கினார்.

பாட்டு : அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் போற்றலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டிடும்என்பது
சூழ்வினைச் சிலம்பு காரணமாக
கொட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யும்

என்று கண்ணகி காவியத்தை இளங்கோ பாடச் சாத்தனார் கேட்டு மகிழ்ந்தார்.

உதவி : கண்ணகி காவியம் சிலப்பதிகாரம் எனப் பாடப்பட்டுவிட்டது. கோயில் கட்டு வேலை

முதல்வர் : கண்ணகி சிலைக்கு கல்லு

பாட்டு

முதல்வர் : வட நாட்டுமன்னர் கனக விசயரைத்
திடமாகப் போரிட்டு சிறையும் பிடித்து
இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி
கனகவிசயர் தலையிலே சுமப்பித்துக்
கல்லும் கொணர்ந்தான் சிலையும் வடித்தார்.

உதவி : அப்போ இனிக் கண்ணகி கோயில் திறப்புவிழாதான்.

முதல்வர் : உலகம் அறியக் கண்ணகி கோயில் திறப்புவிழாவுக்கு எல்லா நாட்டு மன்னர்களுக்கும் அழைப்போலை அனுப்பப் பட்டது.

பாட்டு : செங்கோட்டு மலைமீது கோயிலும் கட்டி
இமயத்தின் கல்கொண்டு சிலையும் வடித்து
சிலப்பதிகாரக் காவியமும் படைத்து
சித்திரைத் திங்கள் பூரணை நாளில்
சித்தரை போற்றிடப் பெருவிழா எடுத்தான்

முதல்வர் : கண்ணகி கோயில் நாளணி விழா அழைப்பை ஏற்று சோழ, பாண்டிய மன்னர்களும், குடகுநாட்டுக் கொங்க

ரும், மாளுவ தேசத்து மன்னர்களும் கடல்சூழ் இலங்கைக் கயபாகு மன்னனும் நாட்டிலுள்ள பெருமக்களும் வந்து கூடினார். கண்ணகி தெய்வமானதைக் கண்ட செங்கோட்டுமலைக் குறவர்கள் தங்கள் குலவழக்கப்படி குன்றக்குரவை ஆடிப் பாடினார்கள்.

பாடல் : தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந்தாயினன் நான் அவன் ஒன்மகள்
வெல்வேலான் குன்றில் விளையாட்டு நான் அகலேன்
என்னோடும் தோழியீர் எல்லீரும் வம்மெல்லாம்
வஞ்சியீர் வஞ்சி இடையீர் மறவேலான்
பஞ்சடி ஆயத்தீர் எல்லீரும் வம்மெல்லாம்
கொங்கையால் கூடல் பதிசிதைத்துக் கோவந்தை
செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும் வம்எல்லாம்.

என்று பாடிக் குன்றக் குரவை ஆடினார்கள்.

உதவி : சேரன் செங்குட்டுவன்தான் கோயில் திரைநீக்கம் செய்திருப்பான்.

முதல்வர்: ஆமாம், பன்னாட்டு மன்னர்களும், பாவலர்களும், மந்திரி பிரதானிகளும், எண்ணில்லா மக்களும் கூடியிருந்த கண்ணகி கோயில் முன்றலிலே நின்று செங்குட்டுவன் வேண்டுதல் செய்தான்.

பாட்டு : சோழவள நாட்டினிலே கண்ணகியாய்ப் பிறந்து
பாண்டியன் நாட்டினிலே கற்புக்கனலாகி
சேரநன் நாட்டினிலே பத்தினித் தெய்வமாய்
பாரெல்லாம் வணங்கவந்த தேவியே
உனைத்தொழுதோம்
கோயில் எடுத்தென்றும் கும்பிடுவோர் எங்களுக்கு
நோய் நொடிகளின்றி காத்திடுவாய் தாயே நீ

உடனே சிலைவடிவிலிருந்து பத்தினித் தெய்வத்தின் கண்களும் வாயும் திறந்தன. பத்தினித் தெய்வம் எல்லோர்க்கும் வாக்களித்தாள்.

பாட்டு : எந்தெந்த நாட்டினிலே யார்என்னைத் தொழுதாலும்
அந்தந்த இடங்களிலே வந்தவர்க்கு அருள்புரிவேன்
என்கதையைப் படிப்பவர்கள் கேட்பவர்கள் யாவரையும்
முந்திவந்து காத்திடுவேன் காத்திடுவேன் காத்திடுவேன்

என்று அருளிச் செய்து கண்கள் மூடி மீண்டும் சிலையானாள்.

உதவி : கற்சிலை பேசியது அதிசயமாகவல்லவா இருக்கிறது.

முதல்வர் : அதிசயமல்ல அதுவே நிஜம். வந்து நின்ற மன்னர்கள் ஒவ் வொருவரும் பத்தினித் தெய்வத்தின்முன் வீழ்ந்து வணங்கித் தங்கள் தங்கள் நாடுகளில் பத்தினித் தெய்வத்திற்குக் கோயில் கட்டி வழிபடுவதாகச் சங்கற்பம் செய்தார்கள். இலங்கையிலே இருந்து சென்ற 'கடல்சூழ்' இலங்கைக் கஜபாகு மன்னனும் தான் கண்டியில் பத்தினித் தெய்வ கோட்டம் அமைத்து ஆடிப் பூரணையில் பெருவிழா எடுப்பதாச் சங்கற்பம் செய்தான்.

உதவி : அதுதான் கண்டியில் பத்தினித் தெய்வத்துக்கு ஆடிப் பூரணையில் நடக்கும் பெரகராவோ.

முதல்வர் : அதுவேதான் சந்தேகமில்லை.

எல்லோர்க்கும் கேட்க வான் வழியே பத்தினித் தெய்வத் தின் வாக்குக் கேட்டது.

உதவி : அது என்ன வாக்கு?

முதல்வர் : உத்தமப் பெண்களைப் பத்தினியாய்ப் போற்றிடுவீர் என்ற வாக்குக் கேட்டது.

உதவி : கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் செய்த கற்கோயி லைப் பற்றிச் சொன்னீர்கள். சேரன் தம்பி இளங்கோ செய்த சொற்கோயிலைப் பற்றிச் சொல்லவில்லையே.

முதல்வர் : இளங்கோவின் சொற்கோயில் சிலப்பதிகாரத்தைப் பற்றிச் செல்லாமல் விடுவேனா.

பாட்டு : பாவடிகள் தேன்வடியப் பாடுமிளங் கோவடிகள்
பாடிவைத்த சொற்கோயில் அதுதமிழின் பொற்கோயில்
முத்தமிழின் வித்தைநிறை மூலமுதற் பெட்டகமாய்
இத்தலத்தில் தமிழர்தலை நிமிரவைக்கத் தக்கதமிழ்
மக்களின் வாழ்வில் மலர்ந்து தமிழ் மண்ணில்
எழும்கதை

தமிழ்மக்கள் பண்பாடு கலைசமயம் வாழ்வுமுறை
அமிழ்தான தமிழினிலே ஆன சிலப்பதிகாரம்

உதவி : சிலப்பதிகாரம் எங்கள் தமிழ் மண்ணில் வாழ்ந்த தமிழர் பண்பாடு பாடும் தமிழ்ப்பேரிலக்கணம் என்று சொல்லுங்கோ.

முதல்வர்

பாட்டு : சிலப்பதிகார நாயகி கண்ணகி
பத்தினித் தெய்வமாய்
பாரினில் மலர்ந்தகதை
கேட்டவர் எல்லோர்க்கும்
மங்களம் மங்களம் மங்களம்.

2016 கொழும்பு - 7 மகளிர் கல்லூரியில் அரங்கேறியது.
பத்தினித் தெய்வம் நூலில் வெளிவந்தது.

உ
சிவமயம்

வில்லிசை

## 11. எல்லோர்க்கும் கல்வி

பாட்டு : தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட ........... வில்லிசைபாட
வந்தருள்வாய் சரஸ்வதியே - நல்வார்த்தை
தந்தருள்வாய் சரஸ்வதியே.

தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளங்கூட்டி
தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளங்கூட்டி

முதல்வர் விழாவின் தலைவரே விருந்தினரே பெரியோரே
நடை : அன்பான சபையோரே அனைவருக்கும் நம் வணக்கம்.

பாட்டு : தன்னா னத் தன்னனன தன்னனன தன்னனன

எல்லோர்க்கும் கல்வியெனும் இனியதொரு
பொருளினிலே
வில்லெடுத்தோம் பாடுதற்கு விருப்புடனே கேட்டிடுவீர்
சொல்லினிய செந்தமிழில் சுவைததும்பும்
இசைவகுத்து
நல்விருந்தாய் நாம்தருவோம் நயப்புடனே கேட்டிடுவீர்.

வசனம் : அன்பான சபையோர்களே இன்று உங்கள் முன்னி லையில் எல்லோர்க்கும் கல்வி எனும் விடயம் பற்றி வில்லிசை பாட வந்துள்ளோம்.

உதவி 2 : என்ன விடயம் எல்லோர்க்கும் கல்வியா அதெப்படி?

பாட்டு : தன்னான தன்னான தன்னா தன

கல்லோர்க்கும் பிறப்புரிமை கல்வி - அதை
நல்லாயுணர்ந்திடனும் தம்பி
கல்லாதோர் எல்லாரும் நன்றாய்க் - கல்வி
கற்றறிவு தேடவேண்டும் தம்பி.

உதவி 1 : கல்வி கற்காவிட்டால் வாழமுடியாதோ? எத்தனை பேர் ஒரு படிப்பும் இல்லாமல் வெளிநாடுகளுக்குப் போய் லட்சம் லட்சமாக உழைக்கிறார்கள். இங்கையிருந்து படித்தவர்கள் உழைப்பதிலும் பலமடங்கு கூட உழைக் கிறார்களே.

முதல் : தம்பி லட்சங்கள் மட்டும் வாழ்வாகாது. மனிதன் மனிதனாக வாழவேண்டும். அதுதான் வாழ்வாகும்.

உதவி 2 : ஏன் அவர்கள் மனிதர்களாகத்தானே வாழ்கிறார்கள்.

முதல் : தம்பி மனிதராக வாழ்வதற்கு மனிதப் பண்புகள் அதாவது மனித விழுமியங்கள் வேண்டும். அதைக் கல்வியினாலே தான் பெறமுடியும்.

பாட்டு : தனன தனனா தானனனா தன்ன

மனிதன் மனிதனாய் வாழ்வதற்கு - நல்ல
மனித விழுமியம் தேட வேண்டும்
அன்பு, உண்மை, அறநெறி, சாந்தி,
இன்சொல், பணிவு, ஈகை, அகிம்சை
என்னும் மனித விழுமியங்கள்
என்றும் தருவது கல்வியன்றோ.

உதவி : மனிதவிழுமியமா? அப்படியென்றால் என்ன?

முதல் : அதுதான் அன்பு, உண்மை, அறநெறி, சாந்தி, இன்சொல், பணிவு, ஈகை, அகிம்சை முதலான பண்புகள். மனிதர் மனிதராய் வாழவேண்டுமானால் இந்த மனித விழுமியங் களைத் தரும் கல்வியை எல்லோரும் கற்க வேண்டும்.

பாட்டு : தனன தனனா தானனனா தன்ன

ஒவ்வொரு மனிதரின் உள்ளேயும் - மிக மிக
உயர்ந்த ஆற்றல் நிறைந்திருக்கு
அவ்வவர் ஆற்றலும் வெளிப்படவே
ஆக்கம் தருவது கல்வியன்றோ.

உதவி 2 : எங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல்கள் கல்வி யினாலே தான் வெளிக்கொணரப்படும் என்கிறீர்கள்.

முதல் : ஆமாம் அதுதான் உண்மை. அதனாலேதான் கல்வி கற்றவர்கள் திறமைசாலிகளாக இருக்கிறார்கள்.

உதவி 1 : கல்லாதவர்கள் முட்டாள்களாய்த் திரிகிறார்கள் என்று சொல்லுங்கோ.

உதவி 2 : ஆமா கல்வி கற்பவர்கள் மாணவர்கள். அப்போ மாணவர்க் கல்லவோ கல்வி. நீங்கள் எல்லோர்க்கம் கல்வி என்று குழப்புகிறீர்களே.

முதல் : குழப்பாதையுங்கோ தம்பியவை. மாணவர்கள் மட்டு மல்ல யார் யாருக்குக் கல்வியறிவு இல்லையோ அவர்க ளெல்லாரும் கற்க வேண்டும்.

பாட்டு : தானதான தன்னன னே தானனனானே தன்ன

பாடசாலை செல்பவரே மாணவர் ஆவார் - அங்கு
செல்லாத சிறுவர்களும் பல்லோர்கள் உள்ளார்
பதினாறு வயதுவரை கட்டாயக் கல்வி - இங்கு
எல்லோர்க்கும் பொதுவான சட்டமிது தம்பி.

முதல்
வசனம் : பதினாறு வயதுக்குட்பட்டவர்கள் எல்லாரும் கட்டாயக் கல்வி கற்கவேண்டும். பாடசாலைக்குப் போகாதவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து தண்டனை வழங்கப்படும்.

உதவி 2 : ஆமா பாடசாலை போகாத சிறுவர்கள் எங்கிருக் கிறார்கள்?

பாட்டு : தானானனே தானானே தானானே தானே தன்ன

பாடசாலை போகாமல் பாழாவார் சிறுவர் - அவரைப்
பார்த்தழைத்து வந்து கல்வி கற்கவைக்க வேண்டும்
வீட்டு வேலைக்காரராயும் தொழிற்சாலைக் கூலியாயும்
வீதியிலே பிச்சையேற்றும் வியாபாரச் சிறுவராயும்
எத்தனையோ பேர் படிப்பை விட்டார் - அவர்கள்
அத்தனைபேரையும் படிக்க வைக்க வேண்டும்.

எல்லோர்க்கும் இலவசக் கல்வியும் உண்டு.

உதவி 2 : அதுசரி இந்த இலவசக் கல்விமுறை எப்போதிருந்து நடைமுறைக்கு வந்தது?

முதல் : ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதுகளில் கல்வி அமைச்ச ராயிருந்த டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்கள் இலவசக் கல்விமுறையை நடைமுறைக்குக் கொண்டுவந் தார். இப்பொழுது இலவச உணவும் இலவச சீர் உடையும் வழங்கப்படுகிறது.

பாட்டு : தன்னனனத் தானனனா தனனனன தானனன

இலவசமாய்ச் சீருடையும் இலவசமாய்ச் சத்துணவும்
இலவசமாய்ப் புத்தகமும் இந்நாட்டில் கிடைக்கையிலே
பலவசதி இருந்தும் இங்கு படிக்காத சிறுவர்களைப்
பார்த்துத் தேடிப்பிடித்து வந்து படிக்க வைக்க வேண்டும்.

உதவி 1 : இதற்கு முன்பு இலவசக் கல்வி எங்கள் நாட்டில் இருந்த தில்லையோ?

முதல் : இருந்தது இருந்தது. நல்லூர் சிறீலசிறீ ஆறுமுக நாவலர் பெருமான் 1848இலே அதாவது இலங்கை அரசு இலவசக் கல்வியைக் கொண்டுவருவதற்கு நூறு வருடங்களுக்கு முன்பே இலவசமாக உணவும் உடையும் கொடுத்து இலவசக் கல்வியும் கொடுத்தார்.

உதவி 1 : எல்லோர்க்கும் கல்வி என்று சொல்கிறீர்களே சிறுவர் களுக்கு இலவசக் கல்வி இருக்கு. மற்றவர்களுக்கு?

பாட்டு : தனனனனத் தானனனா தனனனன தானனன

மூத்தவர்கள் இளையவர்கள் என்றபேதம் ஏதுமின்றி
எல்லோரும் கல்விகற்க வேண்டும் - அதற்கு
ஏற்றவழி முறைகள் இன்று பல இருக்கு.

உதவி 2 : ஆமா எழுதப்படிக்கத் தெரியாத கிழவர் கிழவிகளும் பாடசாலைக்கு வந்து கல்வி கற்க வேண்டுமோ?

பாட்டு : தனனத் தனனத் தனனனத் தனனத் தனன தானான

எழுதப்படிக்கத் தெரியாத முதியோர்கள் எல்லோர்க்கும்
முதியவர்கள் கல்விநிலையம் உண்டு - அவர்க்கு
புது முறையில் கல்வி வசதி உண்டு.

உதவி 2 : வெட்கப்படாமல் கிழவர் கிழவிகளும் படிப்பார்களோ?

முதல் : படிக்காமல் முட்டாள்களாக இருக்கிறதுதான் தம்பி வெட்கம். படிக்கிறதிலே என்ன வெட்கம். படிப்பறிவு இல்லாதவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள் ஆவர்.

உதவி 1 : அதெப்படி கண்ணிருந்தும் குருடாக முடியும்?

முதல் : தம்பி, எங்கள் வீதிகள் எல்லாம் பாதுகாப்புப் படையினர் நிற்கிறார்கள்தானே. அவர்கள் ஒருவீதியைத் தடை செய்வதற்காக இந்த வீதி தடை செய்யப்பட்டுள்ளது என்று எழுதி வைத்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். வாசிக்கத் தெரிந்தவர்கள் வாசித்து விட்டு வேறு வழியால் போவார்கள். வாசிக்கத் தெரியாத வர்கள் என்ன செய்வார்? அவருக்கு அது விளங்குமோ? அவர் தொடர்ந்து போவார். என்ன நடக்கும்? வாங்கிக் கட்டுவார். உனக்கென்ன கண் குருடோ மாடு என்று கேட்டுக் கேட்டு அடி கொடுப்பார்கள். ஆனபடியால் கல்வி கற்றவர்தான் கண்ணுடையார். கல்லாதவர் கண்ணிருந்தும் குருடர்.

பாட்டு : தன்னன தன்னன தன்னான தனத்தன

கண்ணுடையார் என்பர் கற்றோர்கள் முகத்திரு
புண்ணுடையவர்கள் கல்லாதவர்
விலங்கொடு மக்கள் அனையவர்கள்
இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்.

வசனம் : என்று உலகப் பொதுமறையாம் திருக்குறளில் வள்ளுவப் பெருமான் சொல்லியுள்ளார்.

உதவி 2 : அது உண்மைதான். முதியவர்களுக்கு யார் கல்வி கற்பிக்கிறார்கள் என்பதை விபரமாகச் சொல்லுங்கள்.

முதல் : இப்பொழுது எங்கள் நாட்டில் அரச சார்பற்ற நிறுவனங் கள் பல பாதிக்கப்பட்டோர்க்குப் பலவிதமான உதவிகள் செய்கிறார்கள். தெரியுந்தானே.

உதவி 2 : ஆமாம் - யு.என்.எச்.சி.ஆர், கெயர், ஐ.சி.ஆர்.சி, ரி.ஆர்,ஆறோ முதலான நிறுவனங்கள் தானே.

முதல் : ஆமாம், இப்படியான பல நிறுவனங்கள் முதியோர்க்குக் கல்வி வசதிகளைச் செய்து வருகின்றன.

உதவி 1 : அதுசரி, செய்துதரவேண்டிய உதவிகள் எவ்வளவோ இருக்க இவர்கள் ஏன் கல்வியிலை கவனம் செலுத்துகிறார்கள்?

முதல் : தம்பியவை இப்பொழுது எங்கள் நாட்டிலை எங்கை பார்த் தாலும் என்ன நடக்கிறது? காலையிலை எழுந்து ரி.வியைப் போட்டால், பேப்பரைப் பார்த்தால் கொள்ளை யும் கொலையும், வழிப்பறியும், பாலியல் வல்லுறவும் எல்லாம் வன்முறை தான். பார்க்க மனம் பதைக்கிறது. இதற்கெல்லாம் காரணம் எங்கள் மக்களுக்கு மனித நேயப் பண்பாட்டுக் கல்வி இல்லாமைதான்.

பாட்டு : தன்னனனானா தன்னனனா தன்னனனா தன்னா

இரே இரவில் ஒன்பது வீட்டில் ஐம்பது இலட்சம் கொள்ளை எதிர்த்துவந்த எட்டுப் பேரை வெட்டிக் கொன்று போட்டார்

ஹீரோகொண்டா இளைஞர் வீதியில் பெண்ணின் தாலி அறுத்தார்
தனியாய் வீட்டில் இருந்த பெண்ணைப் பாலியல் பண்ணிக் கொன்று கிணற்றுள் போட்டார்
சிறுவர் இல்லங்களிலே பாலியல் துஷ்பிரயோகம் நடக்குது
முதியவர் வீட்டில் தேடுவாரின்றி முடங்கிக் கிடந்து மாண்டார்

இவை தானே தினம் தினம் வரும் செய்திகள்.

உதவி 2 : அதுசரி இதற்கும் கல்விக்கும் என்ன தொடர்பு?

முதல் : அப்படிக்கேள். நல்ல மனிதநேயத்துடன் கூடிய பண்பாட் டுக் கல்வி எல்லார்க்கும் கிடைக்காமைதான் தம்பி இந்த வன்முறைகளுக்குக் காரணம். இந்த வன் முறை களை ஒழிக்க வேண்டுமானால் எல்லார்க்கும் மனித விழுமியம் நிறைந்த பண்பாட்டுக் கல்வி புகட்ட வேண்டும். இதற்காகத் தான் அரசாங்கமும், அரசசார்

பற்ற நிறுவனங்களும் ஏன் ஐக்கிய நாடுகள் சபை கூட எல்லார்க்கும் கல்வி எனும் திட்டத்தைச் செயற்படுத்து கின்றன.

பாட்டு : தன்னானனா தன்னானனா தன்னானனா தன்னானனா

நாட்டிலுள்ள வன்முறையை
நாமொழிக்க வேண்டுமெனில்
வீட்டிலுள்ள எல்லாருக்கும்
கல்வி வாய்ப்பு நல்கவேண்டும்.

உதவி 2 : எல்லோரும் கல்வி கற்றால் தான் நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவும் என்பது உண்மைதான்.

உதவி 1 : உண்மைதான்.

பாட்டு : தன்னானத் தன்னனனத் தானா தன்னனனத்

எல்லோரும் கல்விகற்க வேண்டும் - எங்கள் நாட்டில்
எல்லோரும் கற்விகற்க வேண்டும்

தன்ன னன்ன தன்னன னன்னா

அன்பு பண்பு அறநெறி கருணை
இன்சொல் பணிவு ஈகை அகிம்சை
என்னும் மனித விழுமியங்கள்
என்றும் நிலைக்கும் கல்வி கற்போம்

எல்லோரும் கல்வி கற்கவேண்டும் எங்கள் நாட்டில்
எல்லோரும் கற்வி கற்க வேண்டும்.

வணக்கம்.

மங்களம் மங்களம் மங்களம்.

(01.08.2006இல் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி மாணவர்கள் யாழ் மாவட்டத் தமிழ்த் தினப்போட்டியில் முதற்பரிசு அரங்கப்படையல் - நூலில் வெளிவந்தது 2007)

உ
சிவமயம்

வில்லிசை

# 12. சேர்ந்தாரைக் கொல்லும் சினம்

காப்பு : தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட.... வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே.

தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளங்கூட்டி
தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளங்கூட்டி

(தான தன்னா தானதன்னா தானதானத் தன்னா னன்னா)

நாடுபுகழ் ஈழமதில் நல்லதமிழ் பாடவல்லார்
நாடிவந்தோம் மாணவர்நாம் வில்லெடுத்தோம் பாடுதற்கு
பாடுகிறோம் வில்லுப்பாட்டுப் பக்குவமாய்க் கேட்டிடுவீர்
ஆமா பக்குவமாய்க் கேட்டிடுவீர்.

உதவி : ஆமா என்ன கதை சொல்லப் போகின்றீர்கள்?

முதல்வர் : முதலில் சபையோர்க்கு வணக்கம் சொல்லிவிட்டு அப்புறம் கதை சொல்கிறேன்.

(தன்னா னானா தானனானா தன்னானானா தானனனா)

முதல்வர்
பாட்டு : சபையிலுள்ள பெரியோரே தாய்மாரே தந்தையரே
தம்பியரே தங்கையரே அண்ணன்மாரே அக்காமாரே
சுவையான கதையொன்று சொல்லுகிறோம் கேட்டிடுவீர்
ஆமா சொல்லுகிறோம் கேட்டிடுவீர்.

உதவி : இனிச் சொல்லுங்கள். என்ன கதை சொல்லப் போறீங்கள்? நல்ல கதையாச் சொல்லவேணும்.

முதல்வர் : 'சேர்ந்தாரைக் கொல்லும் சினம்' என்ற கதை

உதவி : என்னையா எங்கைபார்த்தாலும் கொலை... கொலை இன்றைக்கும் கொலைக் கதைதானா?

முதல்வர் : கொலை அல்ல சினம் பற்றிச் சொல்லப்போகிறோம்.

உதவி : அதென்ன சினம் - அது எங்களுக்கு இனமோ?

முதல்வர் : ஆமாம், எங்கள் எல்லோரிடமும் இருக்கும் குணமானது. உங்களுக்க நவரசங்கள் தெரியுமோ?

உதவி : நன்றாய்த் தெரியும். சனிக்கிழமையிலை இஞ்சி, உள்ளி, கொத்தமல்லி, மிளகு, சீரகம், உப்புப் புளி எல்லாம் சேர்த்து அம்மா வைப்பா ரசம். சோக்காயிருக்கும்.

முதல்வர் : எந்தநேரமும் சாப்பாட்டு நினைவுதான்.
அந்த ரசம் இல்லையப்பா, இரசிக்கிற இரசனையைக் கேட்டேன்.

உதவி : ஓ ஆதுவோ? அதுவும் சாப்பாட்டு ரசனைதானே.
உறைப்புப் புளிப்பு, கைப்புக் கார்ப்பு, துவர்ப்பு இனிப்பு அதுவும் சாப்பாட்டு ரசனைதானே.

முதல்வர் : அது அறுசுவையப்பா. நான் கேட்பது நவரசம். அதாவது ஒன்பது விதமான ரசனைகள்.

உதவி : எங்களுக்குத் தெரியாது. நீங்களே சொல்லுங்கோ.

முதல்வர் : எங்கள் வாழ்க்கையில் ஏற்படும் ஒன்பது விதமான ரசனைக் குணங்களைப்பற்றி எங்கள் மிகப் பழைய நூலான தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டிருக்கு.

(தன்னனன னானா தன்னன்ன னானா
தன்னனன னானா தன்னன்ன னானா)

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப
அதனுடன் சாந்தம் ஒன்பது ரசமே"

உதவி : என்னையா எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.
இதென்ன தமிழ்ப்பாட்டா அல்லது வேறை...?

முதல்வர் : நகை என்றால் - நகைத்தல் அதாவது சிரிப்பு
அழுகை என்றால் - சோகம்
இனிவரல் என்றால் - அருவருத்தல்
மருட்கை என்றால் - ஆச்சரியம்
அச்சம் என்றால் - பயம்
பெருமிதம் என்றால் - பெருமைப்படல்
வெகுளி என்றால் - கோபம் - சினம்
உவகை என்றால் - மகிழ்ச்சி
சாந்தம் என்றால் - அமைதி
இவைகள் தான் நவரசங்கள்.

உதவி : எனக்குத் தெரியுமே. நாடகங்களிலை நாட்டியங்களிலை பார்த்திருக்கிறன். செய்து காட்டட்டோ?

முதல்வர் : முடியுமானால் செய்துகாட்டு.

(செய்து காட்டல்)

முதல்வர் : இந்த நவரசங்களிலே கோபம் என்ற சினம் பற்றியே இன்று கதை சொல்லப்போகின்றேன்.

உதவி : அதுதான் 'சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லும்' என்ற கதை என்றீர்களே. சொல்லுங்கள்.

பாட்டு : (தானன்ன னானன்னனானா - தன்ன தானன்ன தானன்ன
தானன்னனானா)

முதல்வர் : சினங்கொள்ளக் கூடாது தம்பி - அந்தச்
சினம் என்றும் சேர்ந்தாரைக் கொன்றிடும் தம்பி -
சினங்...
எத்தனை போர்களைக் கண்டோம் - இங்கு
அத்தனை போர்களும் வந்தது சினத்தால்
உலகமகாயுத்தம் கண்டோம் - அது
ஒன்றல்ல இரண்டிலும் பலகோடி மாண்டார்
பாரதப் போரினைப் பார்த்தோம் - அதில்
பங்குகொண்டோரெல்லாம் மாண்டு மடிந்தார்
ராமாயணப்போரும் பார்த்தோம் - அதில்
அரக்கர் குலம்முற்றும் அழிந்ததே தம்பி
எத்தனை யெத்தனை போர்கள் - இங்கு
அத்தனையும் சினத்தால் வந்த தன்றோ - சினங்கொள்ள..

உதவி : வீட்டுக்கு வீடு போர், நாட்டுக்கு நாடு போர், இனமும் இனமும் போர், மதமும் மதமும் போர். போரில்லா இடமே இல்லைப்போல் இருக்கே. கோழிச்சண்டை, மாட்டுச்சண்டை, ஆட்டுச்சண்டை, அண்ணன் தம்பி சண்டை எத்தனை சண்டையப்பா.

முதல்வர் : போர்களுக்குக் காரணம் சினம்தான். சினத்தை அடக்கினால் போர் வராது. சாந்தி சமாதானமே வரும்.

உதவி : அதுசரி, சினம் வரக்காரணம் என்ன?

முதல்வர் : பிறர்மீது பொறாமை கொண்டால் சினம் வரும்
பிறர் பொருளில், செல்வத்தில் பேராசை கொண்டாலும் சினம் வரும்.

உதவி : கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கோ.

முதல்வர் : (தானன னானன தானனனே - தானன னானன தானனனே)

பாரதநாட்டின் சோதரர்கள், பாண்டவர் கௌரவர் அறிவீரே
கௌரவர்தலைவன் துரியோதனன் பாண்டவர்மீது
பொறாமை கொண்டான்
பாண்டவர் அரசைத் தான்கவரப் பலப்பல சூழ்ச்சிகள்
செய்தனனே
பாண்டவர் அரசைத் தான்கவர்ந்து வனவாசகத்துக்
கனுப்பினானே
கௌரவர் பொறாமை தாங்காது பாண்டவர் பொறுமை
இழந்திட்டார்
மூண்டது கோபக்கனலங்கே பாரதப்போரும் மூண்டதுவே
பாரதநாடே பாழாகிப் போனது சினத்தின் கேடன்றோ.

உதவி : சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லும் என்பது கொஞ்சம் விளங்கிச்சுது.

முதல்வர் : ஆமாம், பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் சினம் உண்டானது. அதனால் போர் மூண்டது. போரில் இருபகுதியினர்க்கும் உதவிக்கு வந்த மன்னர்களும் படைகளும் மாண்டு மடிந்தனர். அந்தச் சினம் சினங்கொண்டவர்களை மட்டுமன்றி அவர்களைச் சேர்ந்தவர்களையும்

அழித்தது. - பொறாமையால் வந்த சினம் செய்த அழிவைப் பார்த்தோம்.

உதவி : ஆமா, பேராசையாலும் சினம் வரும் என்றீர்களே. அந்தக் கதையையும் கொஞ்சம் சொல்லுங்கோ.

முதல்வர் : ஆசையினால் கோபம் வந்த கதையா?

இராமலட்சுமணர்கள் வனவாசம் செய்த காலத்தில் இராவணன் தங்கை சூர்ப்பனகைக்கு இராமர்மேல் ஆசை வந்தது. அவள் ஒரு அழகிய பெண்வடிவு கொண்டு வந்தாள்.

(தன்னனன னன்னனன தன்னனன தன்ன)

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவமனுங்க
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியளாகி
அஞ்சொலின மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

உதவி : ஆகா! ஆகா! கேட்கும்போதே இவ்வளவு அழகாயிருக்கே. அவளைப் பார்த்தால் எப்படியிருக்கும்?

முதல்வர் : அழகிலேதான் ஆபத்திருக்குத் தம்பி. ஆசைப்படாதே. சொல்வதைக் கேள்.

(தன்னன தன்னன தன்னனவே - தன்னன தன்னன தன்னனவே)

அரக்கரின்குலத்துப் பெண் சூர்ப்பனகை
அழகிய ராமனில் ஆசை கொண்டாள்
அழகிய பெண்போல உருமாறி
ஆசைமொழிபல பேசினளே
அறிந்தான் தம்பி இலக்குமணன்
அனலாய்ச் சினமே மூண்டதுவே
எடுத்தான் அம்பினைக் கையினிலே
சிதைத்தான் மார்பையும் மூக்கையுமே.

சூர்ப்பனகைக்கு வந்த ஆசையால் இலக்குமணனுக்குச் சினம் வந்தது. இலக்குமணன் சினத்தால் சூர்ப்பனகை மார்பையும் மூக்கையும் இழந்தாள்.

உதவி : உண்மைதான். கதை நல்லாயிருக்கு.

முதல்வர் : சினம் தொடர்ந்தது. மார்பையும் மூக்கையும் இழந்த சூர்ப்பனகை சினங்கொண்டாள். அண்ணன் இராவண னிடம் போனாள்.

(தன்னானே தன்னானே தனனனன தன்னானே)

அண்ணாவோ அண்ணாவோ அரனிருந்த மலையெடுத்த
அண்ணாவோ அண்ணாவோ என்நிலையைப் பாரும்
அண்ணா
பொன்னான என்மூக்கும் மார்பும் அறுபட்டனவே
சின்னஞ்சிறு மானிடர்கள் செய்த துயர் பாரும் அண்ணா.

என்று அழுது தொழுத அண்ணன் இராவணனிடம் முறையிட்டாள்.

உதவி : இப்பொழுது இராவணனுக்கும் சினம் வந்தது என்று சொல்லுங்கள்.

முதல்வர் : ஆமா, சூர்ப்பனகையின் ஆசையால் இலக்குமண னுக்குச் சினம் வந்து அந்தச் சினம் சூர்ப்பனகைக்கு வந்து இப்போது அவளிலிருந்து இராவணனுக்கு வந்து விட்டது. மன்னாதிமன்னன் இராவணன் சும்மா இருப்பானா?

(தன்னன்னத் தனதன்னத் தனதன்ன - தன
தன்னன்னத் தனதன்னத் தனதன்ன

முதல்வர் : என்தங்கைக் கவமானம் செய்தவன் - அவன்
எங்கிருந்தாலும் நான் விடுவனோ
அவன் மங்கையைக் கவர்ந்திடுவன் யான் - அந்த
அற்ப மானிடரை நான் விடுவனோ.

என்று பொங்கிவரும் கோபத்துடன் எழுந்தான் இராவ ணன். சீதையைக் கவர்ந்துவந்து அசோகவனத்தில் சிறை வைத்தான். செய்தியறிந்த இராமலக்குவரக்குச் சினம் மூண்டது.

உதவி : சூர்ப்பனகையின் ஆசையால் இலக்குவனுக்கு வந்த சினம் திரும்பிச் சூர்ப்பனகைக்கு மூண்டது. அவளி

லிருந்து இராவணனுக்கு மூண்டு இப்போது இராம லக்குவர்களுக்கும் மூண்டுவிட்டது. சினம் நெருப்பு என்றது சரிதான். அப்புறம் என்னவாயிற்று?

முதல்வர் : இராம ராவண யுத்தம் மூண்டது. அரக்கர் குலம் அடியோடு அழிந்தது.

(தனனத் தானன தனனனனா)

சினத்தைத் தூண்டிய அரக்கர்குலம்
சினத்தால் அழிந்தது பாரீரோ
சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லுமென்ற
பொய்யா மொழியிது மெய்யன்றோ.

உதவி : அதுசரிதான், உலகப்போர்களைப் பற்றிச் சொன்னீர்கள் அதுவும் சினத்தால்தான் வருமோ?

முதல்வர் : போருக்குக் காரணம் சினமேதான்.

தனன தானன தனனன்னே

உலகநாடுகள் தமக்குள்ளே
ஒன்றோடொன்று சினங்கொண்டு
போர்கள் மூண்டிடும் அதனாலே
பொதுவில் அழிவே முடிவாகும்
உலகப் போர்தரும் பாடமிது
உணர்ந்திட வேண்டும் நாமெல்லாம்.

முதலாம் இரண்டாம் உலகப் போர்கள் மட்டுமல்ல இக் காலத்தில் நடைபெறும் போர்களும் அழிவில்தான் முடிகின் றன.

உதவி : சினத்தை நீக்கினால் எல்லாம் சரிவரும் என்கிறீர்கள்.

முதல்வர் : (தானனா தனனா தனனன்னா
தனனா தனனா தானன்னா)

சினமே இல்லா இடத்தில் தான்
சிரித்து மகிழ்ந்து வாழ்ந்திடலாம்
சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்வதனால்
சினத்தை ஒழித்து வாழ்ந்திடுவோம்

சினமே இல்லா உலகினைநாம்
சேர்ந்தே படைப்போம் வாருங்கள்.

அன்பான சபையோர்களே சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லுமென்ற கதைகளை நாம் கேட்டோம். சினத்தைக் கிட்டவும் சேரவிடாமல் நீக்கி எல்லாரும் சேர்ந்து மகிழ்ந்து வாழ்வோம்.

விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டுக் கேட்டவர்கள்
எல்லாருக்கும் எங்களது வணக்கம் - உங்கள்
எல்லாருக்கும் எங்களது வணக்கம்.

மங்களம் மங்களம் மங்களம்.

நீர்கொழும்பு விஜயரத்தினம் மத்திய கல்லூரி தமிழ்த்தினப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றது

சிவகாமிதமிழ் - 2012இல் வெளிவந்தது

வில்லிசை

## 13. மாற்று வலுவுடையோரை மதித்திடுவோம்

பாட்டு : தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட ........... வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம் நீ
தந்தருள்வாய் கணபதியே.

நாடுபுகழ் ஈழமதில் நல்லதமிழ் பாடவல்லார்
கூடிவந்தோம் மாணவர்நாம் வில்லெடுத்தோம் பாடுதற்கு
மாற்றுவலு உடையவராம் மாந்தர்கதை பாடவந்தோம்
ஏற்றிடுவீர் அன்புடனே எங்கள்கதை கேட்டிடுவீர்.

உதவி : ஆமா, என்ன கதை சொல்லப்போகிறீர்கள்?

முதல்வர் : முதலில் சபையோர்க்கு வணக்கம் சொல்லிவிட்டு அப்புறம் கதை சொல்கிறேன்.

பாட்டு : சபையிலுள்ள பெரியோரே தாய்மாரே தந்தையரே
தம்பிமாரே தங்கைமாரே அண்ணன்மாரே அக்காமாரே
உங்களுக்கு எங்களது உளமார்ந்த வணக்கங்கள்
எங்களது வில்லிசையை இருந்துகேட்டு மகிழ்ந்திடுவீர்.

உதவி : இனிச் சொல்லுங்கள். என்ன கதை சொல்லப் போகிறீர்கள்?

முதல்வர் : மாற்றுவலுவுடையோர் கதை.

உதவி : என்னையா சொல்லுகிறீர்? மாற்றுவலுவுடையோர் கதையா?

முதல்வர் : ஆமா, ஆமா. மாற்றுவலுவுடையோர் கதைதான்.

உதவி : அதென்ன மாற்றுவலுவுடையோர்? என்னவாயிருக்கும்... எனக்கு மூளை குழம்புது... கண்ணும்கூட கூசுது. காதும் அடைக்குது.

முதல்வர் : அதுதான் கதை.

உதவி : என்னையா குழப்புறீர்?

முதல்வர் : குழம்பாதே, குழம்பாதே...
கண்ணும் காதும் மூளையும் நாவும் காலும் கையும் இவைகளில் ஒன்று இயங்காதவரை எப்படிச் சொல்வீர்?

உதவி : வலதுகுறைஞ்சவை என்று சொல்வோம்.

முதல்வர் : வேறெப்படிச் சொல்வீர்?

உதவி : வலு இழந்தோர் என்றும் சொல்வோம்.

முதல்வர் : அப்படிச் சொல்லக்கூடாது. அவர்களை மாற்றுவலுவுடையோர் என்று சொல்லவேண்டும்.

உதவி : சரிசரி, சொல்லுவம். இப்ப கதையைச் சொல்லுங்கோ.

பாட்டு : அண்டசராசரம் அனைத்திலுமுள்ள
அத்தனை பொருளுக்கும் வலுவுண்டு தம்பி
அப்படி இருக்கையில் எப்படி இவரை
வலுவிழந்தோரெனச் சொல்லிடுவீர் நீர்.

முதல்வர் : தம்பி! எல்லாப் பொருளும் வலுவுடையனவே.

உதவி : வலு என்றால்?

முதல்வர் : சக்தி.

உதவி : ஓகோ, இப்ப விளங்குது.
எல்லாப் பொருள்களுக்கும், எல்லா உயிர்களுக்கும் சக்தி, அதாவது வலு உண்டு, உண்டு, உண்டு.

முதல்வர் : அப்படி வாரும் வழிக்கு. நாங்கள் இப்போ மனிதரைப் பற்றி சிந்திப்போம். உமக்கு உயிர் இருக்கோ?

உதவி : என்ன கேள்வி ஐயா இது? உயிரில்லாமலா நான் உங்களுக்குப் பக்கத்தில இருக்கிறன்?

முதல்வர் : சரிசரி, உயிர் எங்கே இருக்கு.

உதவி : உடம்புக்குள்ளே இருக்கு.

முதல்வர் : உடம்பு எப்படி இயங்குகிறது?

உதவி : உயிராலைதான் இயங்குகிறது. உயிரில்லாவிட்டால் உடம்பு செத்துச் சவமாகப்போம். இது தெரியாதா?

முதல்வர் : ஆமாம், இந்த உடல் இயங்குவதற்கு இதற்குள்ளே பல இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கு. அவற்றை நாம் அறிகருவிகள் என்றும் தொழிற்கருவிகள் என்றும் சொல்வோம்.

உதவி : ஆமா, அறிகருவிகள் என்றால் என்ன?

முதல்வர் : நாம் விடயங்களை அறிவதற்குத் துணையான கருவிகள். அவைதான் ஐம்பொறிகள்.

பாட்டு : அறிகருவிகள் எமக்கு ஐந்துண்டு
அவையே ஐம்பொறி புலனாகும்
மெய்வாய் மூக்குக் கண் செவி என்னும்
ஐவகைப் பொறிகளும் அறிகருவி.

முதல்வர் : அறிகருவிகள் என்றால் எவை?

உதவி : மெய், வாய், மூக்கு, கண், செவி எனும் ஐந்தும்.

முதல்வர் : மெய்யால் தொட்டறிவோம். வாயால் சுவைத்தறிவோம். மூக்கால் மணந்தறிவோம். அப்புறம்...?

உதவி : கண்ணால் பார்த்தறிவோம், காதால் கேட்டறிவோம்.

பாட்டு : மெய்யால் தொட்டும் வாயால் சுவைத்தும்
மூக்கால் மணந்தும் கண்ணால் பார்த்தும்
செவியால் கேட்டும் அறிவதெல்லாம்
பொறிவழியறியும் புலன்களென்போம்.

உதவி : அறிகருவிகள் என்றால் மெய், வாய், மூக்கு, கண், செவி எனும் ஐந்து பொறிகளும் ஊறு, சுவை, மணம், ஒளி, ஓசை எனும் ஐம்புலன்களும்தானே.

பாட்டு : ஐம்புலன் அறிவே ஐந்தறிவு
ஆறாம் அறிவே மனமாகும்
மனத்தை உடையவராதலினால்
மனிதர் எனும் பெயர் எமதாகும்.

முதல்வர் : ஐந்தறிவுடையவை.

உதவி : பறவைகளும், விலங்குகளும்.

முதல்வர் : ஆறறிவுடையவன் மனிதன். ஆறாவது அறிவுதான் மனம். மனத்தையுடையவன்தான் மனிதன். சரி எது, பிழை எது என்பதை அறிவது மனம். ஆதலால் மனிதப்பிறப்பே உயர்வானது.

உதவி : ஆமா! மாற்றுவலுவுடையோர் என்ற கதை சொல்வ தென்றீர்கள். இப்போ வேறே எங்கேயோ போகிறீர்கள்.

முதல்வர் : வேறெங்கேயும் போகவில்லை. சரியான இடத்துக்குத் தான் வந்திட்டம். இந்தப் புலன்கள் சரியாக இயங் காதவர்களைத் தான் மாற்றுவலுவுடையோர் என்று சொல்வோம்.

பாட்டு : செவிப்புலன் இல்லாவிடில் செவிடர்
கட்புலன் இயங்காவிடில் குருடர்
நாவியங்காவிடில் ஊமையர்கள்
காலியங்காவிடில் சப்பாணி
கையியங்காவிடில் கூழங்கை
மெய்யாயிவர்தான் வலுவிழந்தோர்

உதவி : ஓகோ இப்ப விளங்குகிறது.

முதல்வர் : இல்லையில்லை. அது தவறு. அப்படிச் சொல்லக்கூடாது.
நாகரிகமில்லாத ஆரம்பகாலத்தில் இவர்களைச் சமூகம் பயத்துடன் பார்த்தது. சிறிதுகாலம் செல்லச்செல்ல அனுதாபத்துடன் பார்த்தது. இப்போ நாகரிக வளர்ச்சிக் காலத்தில் சமூகம் அவர்களுக்கும் சமத்துவம் கொடுத்துத் தம்முடன் ஏற்றுக்கொண்டது.
ஆதலால் இப்போ செவிடர் என்று சொல்லக்கூடாது. செவிப் புலவலு இழந்தோர் என்று சொல்லவேண்டும். கண்பார்வையில்லாதோர்

உதவி : கட்புலவலு இழந்தோர்

முதல்வர் : மனவலுக் குறைந்தோரை

உதவி : மூளைவிருத்தி குறைந்தோர்

முதல்வர் : கால், கை, நா முதலாகிய உறுப்புகள் இயங்காத வர்கள் எல்லாரையும் எப்படி அழைக்கலாம்?

உதவி : வலது குறைந்தோர்

முதல் : விடிய விடிய இராமர்கதை விடிந்து பார்த்தால் சீதைக்கு ராமர் என்ன முறை என்ற மாதிரி எல்லோ கிடக்குது உமது பதில்.

உதவி : ஓகே மறந்துவிட்டேன். அவர்களை மாற்றுவலு உடையோர் என்று சொல்லவேண்டும்.

முதல்வர் : ஏன் மாற்றுவலுவுடையோர் என்று சொல்லவேண்டும்?

உதவி : நீங்களே சொல்லுங்கள்.

முதல்வர் : அவர்களுக்கு ஒரு உறுப்பு இயங்காவிடிலும் மற்ற உறுப்புக் கள் இயங்குமல்லவா. அந்த உறுப்புகளூடாக இந்த உறுப் பின் வேலையையும் செய்வார்கள்.

பாட்டு : ஒருவலு இழந்தவர் மாற்றுவலுவால்
உயர்நிலை அடைவார் அதுவே உண்மை
வலுவிழந்தோரை நம்போல் மதிப்போம்

மாற்றுவலுவை ஆக்கிடுவோம்.

உதவி : ஆமா ஒருவலு இழந்தோரை எப்படி மாற்றுவது உடையோராக்குவது

முதல்வர் : எந்த வலுவை ஒருவர் இழந்திருக்கிறாரோ அந்த வலுவை விருத்தி செய்வதற்குரிய கற்பித்தல் முறை களையும் கருவி களையும் பயன்படுத்தி அந்தக் கற்பித் தல் முறையில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் மாற்றுவலுவை விருத்தி செய்யலாம்.

உதவி : ஓகோ, இப்பதான் நினைவு வருகுது. நாங்கள் பாடசாலை மூலம் கல்விச்சுற்றுலா போனது.

முதல்வர் : எங்கெல்லாம் போனீர்கள்?

உதவி : கைதடி நவீல்ட் பாடசாலை, சுன்னாகம் வாழ்வகம், உடுவில் ஆர்க், கோண்டாவில் சிவபூமி. அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோ.

பாட்டு : மனவளர்ச்சி குன்றியோர்க்கு மனவிருத்தியுண்டாக்க
உடுவிலிலே இருக்குது ஆர்க் என்னும்
பாடசாலையொன்று
கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப்பாடசாலை
இருக்குதங்கே இவர்களுக்கு மாற்றுவலுவூட்டுகிறார்.

உதவி : உடுவிலிலே ஆர்க் என்றீர்களே அதென்ன?

முதல்வர் : யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம் 1978இல் மூளை விருத்தி குன்றியவர்களுக்காகத் தொடக்கி நடத்தி வருவதுதான் உடுவில் ஆர்க் பாடசலை.

உதவி : அப்ப சிவபூமி என்பது?

முதல்வர் : மூளைவிருத்தி குன்றியவர்களுக்காகக் கோண்டாவி லிலே செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர் களால் 2004ல் தொடக்கி நடத்தப்பட்டு வருவது தான் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை.

உதவி : மூளைவிருத்தி அல்லது மனவிருத்தி குறைந்தோர்க்கு மாற்றுவலுவுடையோராக்கு உடுவில் ஆர்க் கோண்டாவில் சிவபூமி. மற்றவர்களுக்கு?

பாட்டு : விழிப்புல வலுவிழந்த பிள்ளைகட்கு வாழ்வளிக்க
இருக்குதையா சுன்னாகத்தில் வாழ்வகம்
விழிப்புலனும் செவிப்புலனும் இல்லார்க்கு வாழ்வளிக்க
இருக்குதையா கைதடியில் நவீல்ட் என்னும் பாடசாலை.

உதவி : விளக்கமாகச் சொல்லுங்கோ.

முதல்வர் : இரத்மலானையிலை விழிப்புலன், செவிப்புலன் இழந்தோர்க் காக இங்கிலாந்தைச் சேர்ந்த நவீல்ட் எனும் பிரபுவின் பண உதவியால் அங்கிலிக்கன் திருச்சபையால் அவருடைய பெயரிலே நவீல்ட் பாடசாலை தொடக்கப்பட்டது. தமிழ்ப் பிள்ளைகளின் வசதிக்காக நவீல்ட் பாடசாலை கைதடியில் 1956 பெப்ரவரி 20 தொடக்கம் இயங்கிவருகிறது.

உதவி : அது சரி, சுன்னாகம் வாழ்வகம்?

முதல்வர் : தெல்லிப்பழையில் 1988இல் அன்னை அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வாழ்வகம் சுன்னாகத்தில் சொந்தக் கட்டிடத்தில் 2002 மார்ச் 9 தொடக்கம் இயங்குகிறது.

உதவி : அதுசரி கால், கை இல்லாதவர்களுக்கும் ஏதாவது உண்டோ?

முதல்வர் : உண்டு உண்டு. ஜெய்ப்பூர் நிறுவன் யாழ் நகரில் இயங்குகிறது. அவர்களுக்கு வேண்டிய மாற்று உறுப்புப் பொருத்தி தொழிற்சாலைப் பயிற்சியும் வழங்குகிறது.

உதவி : இவ்வளவும் தானோ இன்னும் இருக்கோ?

முதல்வர் : இருக்கு இருக்கு. இவர்களுடைய வாழ்வை வளம்படுத்தவென பல சங்கங்கள் இருக்கின்றன.

1976 மே 23இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ் விழிப்புலன் அற்றோர் சங்கம், 1990 பெப்ரவரி 4இல் தொடங்கப்பட்ட வலுவிழந்தோருக்கு வலுவூட்டும் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் என்பன இவர்களுக்கு பேருதவி புரிந்துவருகின் றது.

உதவி : இவர்களுக்குப் பெற்றார் என்ன செய்யலாம்?

முதல்வர் : வலுவிழந்த பிள்ளைகளைப் பெற்றார் ஒதுக்கிவைக்கக் கூடாது. குழந்தைப்பருவத்தில் பிள்ளைகள் பெற்றாரிடமிருந்துதான் உணர்வுகளையும், மொழிப்பயிற்சியையும், உடல் அமைப்புக்களையும் கற்றுக்கொள்கின்றனர். ஆதலால் குழந்தைக்கு முதல் ஆசிரியர் பெற்றோரே என்பதை அவர்கள் மறவாமல், அவர்களை ஒதுக்கா மல் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துப் பக்குவமாய் வளர்க்க வேண்டும். பெற்றாரின் தவறான நடத்தைகளால்தான் அதிகமான பிள்ளைகள் வலுவிழக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

உதவி : வலுவிழந்தோரை மாற்றுவலுவுடையோராக்க நாம் என்ன செய்யலாம்?

முதல்வர் : அதுதான் கேட்கவேண்டிய கேள்வி.

வலுவிழந்தோரைப் பார்த்துப் பார்த்து
பயந்தகாலம் மலையேறிப் போச்சு
வலுவிழந்தோர்க்கு அனுதாபம் சொன்ன
காலமும் இப்போ மலையேறிப்போச்சு
வலுவிழந்தோரை எம்மில் ஒருவராய்
ஏற்றுக்கொண்டு கூடி வாழ்வோம்
கூடியிருந்து கலைபல பயில்வோம்
கூடிக்கல்வி தொழில்களும் பயில்வோம்
மாற்றுவலுவுடையோரவர் என்பதை
மறவாதே நாம் சேர்ந்து வாழ்வோம்.

உதவி : மாற்றுவலுபுடைவயர்கள் சமூகத்தில் உயர்நிலையிலுள் ளாரோ?

பாட்டு : பல்கலைக்கழகப் பட்டதாரிகள்
பல்கலைவல்ல கலைஞர்கள் கவிஞர்கள்
கல்விகற்பிக்கும் பேராசிரியர்கள்
கணினி இயக்கிடும் கணிப்பொறியாளர்

காலால் பேனா பிடித்தே எழுதும்
கல்விமான்கள் பலருள்ளார்
காலால் ஓவியம் தீட்டும் கலைஞர்
கனபேர் உள்ளார் உலகினிலே.

உதவி : எங்களுக்குத் தெரிந்தோர் பலரும் உளரே

முதல்வர் : இப்போது வாழ்வகத்தை தலைமைதாங்கி நடத்துபவர் யார் தெரியுமா? கட்புலவலுவிழந்திருந்த மாற்றுவலு வுடைய திரு. ரவீந்திரன் அவர்கள். பட்டதாரியாகி, கல்விக்கல்லூரி விரிவுரையாளராகி வாழ்வகத் தலைவ ராயிருந்து அன்னை அன்னலட்சுமி அமரத்துவமடைந்த பின் அவரே நடத்தி வருகின்றார்.

உதவி : இப்பொழுதுதான் எங்களுக்கு கண் திறந்தது.

பாட்டு : மாற்றுவலுவுடையோரை மதிப்போம்
மனதால் அன்பு செய்திடுவோம்
ஏற்றம் பெற்றே எல்லோர் வாழ்வும்
இன்பமாய் மலரக் கண்டிடுவோம்

விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டுக் கேட்டவங்கள்
எல்லோருக்கும் எங்களது வணக்கம்: எங்களை
மதித்தவர்கள் எல்லோருக்கும் வணக்கம்

மங்களம் மங்களம் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம்

உ
சிவமயம்

வில்லிசை

## 14. செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை

காப்பு : தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட.... வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே

தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளம் கூட்டி
தந்தனத்தோம் என்று சொல்லித்
தத்தித் தெய்யெனத் தாளம் கூட்டி - தந்தன

பாட்டு : சபையிலுள்ள பெரியோரே தாய்மாரே தந்தையரே
தம்பிமாரே தங்கையரே அக்காமாரே அண்ணன்மாரே
சுவையான கதையொன்று சொல்லிடுவோம் கேட்டிடுவீர்
எல்லோருக்கும் எங்களது இனிதான வணக்கம் இதோ.

முதல்வர் : அன்பர்களே, உங்களுக்கு இன்றைக்கு "நன்றி கொன்றவர்க்கு உய்வில்லை" என்பதற்கு ஒரு கதை சொல்லப் போகின்றோம்.

உதவி 1 : அது என்ன கதை?

உதவி 2 : அதுதான் நன்றி கொன்றவர்க்கு உய்வில்லை என்ற கதை என்று சொன்னாரே.

உதவி 1 : ஆமா, அது யாருடைய கதை?

முதல்வர் : பாரதநாட்டை ஆண்ட மன்னர்களில் நன்றி கொன்றவர்களின் கதை.

உதவி : சரி சொல்லுங்கோ.

முதல்வர் : பாரதநாட்டை அந்தக் காலத்தில் குருகுல மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். சந்தனு மகாராசன் அவன் மகன் விசித்திரவீரியன், அவன் மக்கள் திருதராட்டிரன், பாண்டு என்போர் ஆண்டு வந்தார்கள்.

பாட்டு : பாரதநாட்டைக் குருகுலவேந்தர்கள்
பன்நெடுங்காலம் ஆண்டுவந்தார்
குருகுலுவேந்தன் சந்தனு மைந்தன்
விசித்திரவீரியன் புதல்வர்கள் இருவர்
மூத்தவன் திருதராட்டிரன் குருடன்
இளையவன் பாண்டு நோயாளி.

வசனம் : திருதராட்டிரனுக்கு நூறு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்தார்கள். அவர்கள் கௌரவர் என அழைக் கப்பட்டார்கள்.

உதவி 2 : பாண்டுவுக்கு

முதல்வர்
வசனம் : பாண்டுவுக்கு ஐந்து மைந்தர்கள் பிறந்தார்கள். அவர்கள் பஞ்சபாண்டவர் எனப்பட்டார்கள். கௌரவரில் மூத்தவன் துரியோதனன், பாண்டவரில் மூத்தவன் தருமர்.

பாட்டு : பாதி அரசை அத்தினா புரியில்
கௌரவர் இருந்து ஆண்டார்கள்
மீதி அரசை இந்திரப் பிரஸ்தத்தில்
இருந்து பாண்டவர் ஆண்டார்கள்.

உதவி 1 : அண்ணன் பிள்ளைகள் கௌரவர்களுக்குப் பாதி அரசு. தம்பி பிள்ளைகள் பாண்டவர்களுக்குப் பாதி அரசு

உதவி 2 : கௌரவர் அத்தினாபுரியில், பாண்டவர் இந்திரப்பிரஸ் தத்தில்.

பாட்டு : கௌரவர் தலைவன் துரியோதனனோ
பேராசை பொறாமை உடையவனானான்
பாண்டவர் தலைவன் தருமபுத்திரன்
தருமம் தவறாமல் ஆட்சி செய்தான்.

முதல்வர்
வசனம் : பேராசையும், பொறாமையும் கொண்ட துரியோதனன் வஞ்சகமாகப் பாண்டவர் அரசைக் கவரத் திட்டமிட்டான்.

பாட்டு : பொறாமை கொண்ட துரியோதனனனோ
சூதாடித் தருமரைத் தோற்கடித்தான்

சூதில் தோற்ற பஞ்சபாண்டவர்
நாட்டைவிட்டுக் காடுசென்றார்.

உதவி 1 : ஓகோ பாண்டவர் சூதாட்டத்தில் நாட்டை இழந்ததால் காட்டுக்குப் போனார்களோ?

முதல்வர் : ஆமா, சூதில் தோற்றதால் 12 வருட வனவாசமும் ஒரு வருட அஞ்ஞானவாசமும் முடித்துவந்தால்தான் உங்கள் ராச்சியம் கிடைக்கும் எனத் துரியோதனன் அவர்களைக் கலைத்துவிட்டான். பாண்டவர்கள் காட்டில் பர்ணசாலை அமைத்து வாழ்ந்தார்கள். முனிவர்களும், ரிஷிகளும் அவர்களுக்கு உதவி செய்தார்கள்.

இதனைத் துரியோதனன் தன் ஒற்றர்கள் மூலம் அறிந்தான்.

உதவி : அவன் சும்மா விடமாட்டானே.

முதல்வர் : ஆமா, அவன் என்ன செய்தான் தெரியுமோ?

பாட்டு : பாண்டவர் இருந்த காட்டினுக்கும்
துரியோதனன் போய் நெருப்புவைத்தான்
காட்டினுக்குரிய கந்தர்வன் போய்
துரியோதனனைச் சிறைப்பிடித்தான்.

முதல்வர் : அந்தக் காடு ஒரு கந்தர்வனுக்குச் சொந்தமானது. கந்தர்வன் போர் செய்து துரியோதனனைப் பிடித்ததும் சிறைவைத்தான். துரியோதனன் வெட்கத்தை விட்டுப் பாண்டவர்களை வந்து தன்னைக் காப்பாற்றுமாறு ஓலமிட் டான்.

பாட்டு : துரியோதனன் அழுது ஓலமிடப்
பாண்டவர் இரங்கி மீட்டுவந்தார்
இனிமேல் தீமைகள் செய்யமாட்டேன்
என்றே பணிந்து மீண்டு சென்றான்.

உதவி 1 : ஆமா, தனக்கு உதவி செய்து விடுவித்ததற்காகப் பாண்ட வரை நாட்டுக்குக் கூட்டிச் சென்றிருக்கலாமே.

உதவி 2 : அதுதான் அவன் நன்றி கெட்டவனாச்சே

உதவி 1 : ஆமா, அப்புறம் என்ன நடந்தது?

முதல்வர் : கௌரவர்களின் ஒரேயொரு தங்கையான துச்சளையைச் சிந்துநாட்டு மன்னன் ஜயத்திரதன் மணம் முடித்திருந்தான். அவனும் துரியோதனன் போலக் கெட்டவன். பாண்டவரை மானபங்கப்படுத்த வேண்டும் என்று ஒருநாள் அவர்கள் இருந்த காட்டுக்குப் போனான்.

பாட்டு : பாண்டவர் மானம் போக்கிடவே
பாவகருமம் ஒன்று செய்தான்
திரௌபதி காட்டில் தனித்திருக்கத்
தூக்கிச் சென்றான் தன் தேரில்
அவலச் சத்தம் கேட்ட வீமன்
ஓடிச் சென்று போர் செய்து
அவனைப் பிடித்துக் கொண்டுவந்தான்.

உதவி 1 : அந்த ஜயத்திரதனை என்ன செய்தார்கள்?

முதல்வர் : அவனுடைய தலையை வெட்டப் போனார்கள். தருமர் தடுத்தார். "தம்பி, கௌரவர் தங்கை துச்சளை எங்களுக்கும் தங்கைதானே. தங்கையின் கணவனைக் கொல்லல் தகாது. அவனை விட்டுவிடுங்கள். பிழைத்துப் போகட்டும்" என்றார். வீமனும் தம்பிமாரும் மிக்க கோபம் உடையவராயிருந்தும் அண்ணன் சொல்லைத் தட்டக்கூடா தென விட்டுவிட்டார்கள்.

உதவி 2 : ஜயத்திரதன் தப்பினேன் பிழைத்தேன் என்று ஓடியிருப்பான்.

முதல்வர் : இப்படியே வனவாசம் 12 வருடமும் அஞ்ஞானவாசம் ஒரு வருடமுமாகப் 13 வருடம் முடிந்து பாண்டவர்கள் நாட்டுக்கு வந்தார்கள்.

(வேறு சந்தம்)

பாட்டு : வனவாசம் முடிந்ததுமே பாண்டவர்கள் மீண்டுவந்தார்
தமதுபங்கு அரசியலைத் தரவேண்டித் தூதுவிட்டார்
நன்றிகெட்ட துரியோதனன் நாடுமில்லை வீடுமில்லை
நாட்டைவிட்டுப் போங்களென நயவஞ்சகம்
பேசிநின்றான்

வசனம் : துரியோதனன் காட்டில் அவர்கள் தனக்குச் செய்த உதவியையும் மறந்து நாட்டில் பங்கில்லை எனக் கூறித் தர மறுத்துவிட்டான். பாண்டவர்கள் போர் செய்து எங்கள் நாட்டை மீட்போமெனப் போருக்குப் புறப்பட் டார்கள்.

பாட்டு : பாண்டவர்க்கும் கௌரவர்க்கும்
மூண்டதுவே பாரதப்போர்
மாண்டு மடிந்தார்கள்
மாபெரிய சேனையெல்லாம்
பதின் மூன்றாம் நாட்போரில்
பழியொன்று செய்தார்கள்.

உதவி 1 : அதென்ன பழி யார் செய்தார்?

முதல்வர் : பண்டவர்கள் காட்டில் திரௌபதியைக் கடத்திய ஜயத்திர னைக் கொல்லாது விட்டார்களல்லவா - அவன் நன்றி மறந்து அர்ச்சுனன் மகன் அபிமன்யுவைப் பின்னால் பதுங்கி இருந்து கொன்றுவிட்டான்.

பாட்டு : அர்ச்சுனனின் வீரமைந்தன் அபிமன்யு தனித்துநிற்க
கௌரவர்தளபதிகள் சூழ்ந்து நின்று தாக்கிடவே
பாவி ஜயத்திரதன் பதுங்கிப் பின்னாலிருந்து
அபிமன்யு பிடரியிலே அடித்தவனைக் கொன்றுவிட்டான்.

உதவி 2 : பின்னாலிருந்து தாக்குதல் போர்த்தர்மம் அல்லவே

உதவி 1 : அபிமன்யுவின் தந்தை அர்ச்சுனன் சும்மா இருப்பானா?

முதல்வர்
பாட்டு : கண்டான் அர்ச்சுனனும் கடும் சபதம் தான் செய்தான்
நாளைப்பொழுது மறையுமுன்னே நான்கொல்வேன்
ஜயத்திரதனை
நாளையே கொல்லாவிட்டால் நான் இறப்பேன்
தீக்குளித்து

வசனம் : என்று சபதம் செய்தான். இச்செய்தி எல்லார்க்கம் அறிவிக்கப்பட்டது. 14ஆம் நாள் போர் தொடங்கியது. ஜயத்திர தனை அர்ச்சுனனிடமிருந்து காக்கவேண்டும்

என்பதற்காக அவனை நடுவிலே விட்டு ஏனைய கௌரவர் சேனைகள் அவனைச் சூழ்ந்து நின்று அர்ச்சுனனுடன் போரிட்டனர். நேரம் மாலையாகிவிட்டது.

உதவி 1 : பொழுதுபடுமுன்னே ஜயத்திரதனைக் கொல்லாவிட்டால் அர்ச்சுனன் தீக்குளித்து இறந்துவிடுவானே.

முதல்வர் : அதுமட்டுமல்ல ஜயத்திரதனின் தந்தை ஒரு முனிவர். அவர் தன் மகனின் தலை யார் கையால் விழுகிறதோ அவன் தலை வெடித்துச் சாவான் எனச் சாபம் இட்டுத் தவம் செய்துகொண்டிருந்தார்.

உதவி 2 : அப்படியானால் ஜயத்திரதனுடைய தலையை வெட்டிக் கொன்றால் அர்ச்சுனன் தலைவெடித்துச் சாவான். வெட்டிக் கொல்லாவிட்டால் தீக்குளித்துச் சாவாவன். இதென்ன கொடுமை!

முதல்வர் : அப்படித்தான் துரியோதனனும் சந்தோஷப்பட்டுக் கொண்டு நின்றான். அர்ச்சுனனுக்குத் தேரோட்டிய கிருஷ்ணன் வழமைபோல் ஒரு உபாயம் செய்தார்.

பாட்டு : மாலைப்பொழுதினிலே சூரியனை மறைத்திடவே
சக்கரப் படையதனை ஏவிவிட்டான் மாயவனும்
சக்கரப் படைமறைக்கச் சூரியன் மறைந்திடவே
இருட்டாகிவிட்டதென எல்லோரும் கலைந்தார்கள்
சக்கரப் படையதனைத் திருப்பி அழைத்திடவே
சூரிய ஒளிவரவும் எல்லோரும் திகைத்தார்கள்
ஜயத்திரதன் வெளியில்வர அர்ச்சுனன் அம்புவிட்டான்.

முதலர்வர்
வசனம் : அர்ச்சுனன் விட்ட அம்பு ஜயத்திரதன் தலையை அறுத்தது. மற்றுமோர் அம்பாலே அவன் தலையைத் தவம் செய்யும் தந்தையின் மடியில் விழச்செய் என்றான் கிருஷ்ணன். அப்படியே அர்ச்சுனன் அறுத்த தலையை அவர் மடியில் விழச் செய்தான். கண்மூடித் தவம் செய்த அவர் அத்தலையைச் சீ என அருவருத்து எடுத்து எறிந்துவிட்டார். அவரிட்ட சாபத்தால் அவர் தலையே வெடித்துச் செத்தார்.

உதவி 1 : நன்றிகெட்ட ஜயத்திரதனும் இறந்தான். அவனுக்கு உதவப் போன தந்தையும் இறந்தார்.

உதவி 2 : துரோகி துரியோதனனுக்கு என்ன நடந்தது?

முதல்வர் : 18ஆம் நாட்போரிலே வீமனால் தொடை பிளக்கப்பட்டுத் துரியோதனனும் இறந்தான்.

பாட்டு : உயிர்ப்பிச்சை கொடுத்த பாண்டவரை
உயிர்க்கொலை செய்ய நினைத்தவர்கள்
துரியோதனனும் ஜயத்திரதனும்
பெரிதாம் படையுடன் மாண்டனரே
செய்நன்றி கொன்றார்க் குய்வில்லை
என்பது மெய்யெனக் கண்டேமே.

மங்களம் மங்களம் மங்களம்
வில்லுப்பாட்டுக் கேட்டவர்கள் எல்லோருக்கும் மங்களம்
எங்களை மதித்தவர்கள் எல்லோருக்கும் மங்களம்.

வில்லிசை

# 15. சங்கம் தந்த ஐந்திணை மரபு

காப்பு : தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட.... வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே

(தான தன்னா தானதன்னா தானதானத் தன்னா தன்னா)

நாடுபுகழ் ஈழமதில் நல்லதமிழ் பாடவல்லார்
நாடிவந்தோம் மாணவர்நாம் வில்லெடுத்தோம் பாடிடவே
பாடுகிறோம் வில்லுப்பாட்டு பக்குவமாய்க் கேட்டிடுவீர்
வந்திருக்கும் யாவருக்கும் வணக்கம் நாம் சொல்லு
கிறோம்.

முதல்வர் : பெரியோர்களே! அன்பர்களே! நண்பர்களே! இன்று உங்கள் முன் "சங்கம் தந்த ஐந்திணைமரபு" எனும் வில்லுப்பாட்டுப் பாடவந்திருக்கின்றோம்.

உதவி : அதென்னையா சங்கம் தந்த ஐந்திணை மரபு?
எந்தச் சங்கம் தந்தது என்ன சாமான் அது?
ஒன்றும் விளங்கவில்லை.

முதல்வர் : உமக்கு என்னதான் விளங்கும்? விளக்கமாகச் சொல் கிறேன், கேளுங்கள்.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் நம் தமிழர்கள். அந்தக் காலத்தில் நந்தமிழர் வாழ்ந்த வாழ்வொழுக்கத் தைச் சங்க இலக்கியங்களில் பாடிவைத்துள்ளார்கள்.

பாட்டு : தன்னத் தனதன்ன தன்னத் தனதன்ன

சங்கத் தமிழ்தந்த ஐந்திணை மரபினைத்
தங்கத் தமிழினில் பாடவந்தோம்
எங்கள் தமிழர்கள் கேட்டிடுங்கள் இதை
எங்கும் எடுத்துநீர் சொல்லிடுங்கள்.

உதவி : இப்ப விளங்குது. ஆனால் ஒன்று சரியாக விளங்க வில்லை. ஐந்திணை என்றால் என்ன?

முதல்வர் : ஐந்திணை என்றால் ஐந்துவிதமான வாழ்வொழுக்கம்.

பாட்டு : தன்னன தன்னன தன்னன தன்னன

குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலும்
பாலையும் ஐந்து திணையாகும்
ஐந்து நிலத்திலும் வாழ்ந்தவர் ஒழுக்கமே
ஐந்து திணையெனச் சொல்லிடுவோம்.

உதவி : ஐந்து நிலங்களா? அதென்ன விபரமாகச் சொல்லுங்கள்.

முதல்வர் : சொல்கிறேன். அதற்கு முதல் இந்தப் பூமி எங்கிருந்து வந்தது தெரியுமோ?

உதவி : நாங்கள் அறிந்த காலம் முதல் இங்குதான் இருக்கிறதே.

முதல்வர்
பாட்டு : தன்னத்தானா தன்னன்தானா

இந்தப் பூமி எங்கே இருந்து
எப்படி வந்தது அறிவீரோ
இந்தப் படிஇது ஆவதன் முன்னே
எப்படி இருந்தது அறிவீரோ.

உதவி : நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பூமி எங்கோ இருந்து வந்தது போலல்லவா இருக்கு.

முதல்வர் : ஆமா, ஆமா.
உங்களுக்குச் சூரியனைத் தெரியுமோ.

உதவி : இதென்ன கேள்வி. சூரியனைத் தெரியாதவர் குருடரல்லோ.

முதல்வர்
பாட்டு : தானன தனனன தனனன தந்தன

சூரியன் சுழற்சியில் பிரிந்து வந்தவோர்
தீயின் பிழம்பு சுழன்று சுழன்று

ஆறிக் கல்லாய் மேடும் பள்ளமும்
ஆகிட மலைகள் தோன்றினவே.

தம்பி! நாம் காணுகின்ற இந்தச் சூரியன் பெரியதோர் அக்கினிக் குழம்பு. இது சுழன்று சுழன்று எரிந்து கொண்டே இருக்கிறது. இதன் சுழற்சியால் பிரிந்துவந்த ஒரு பிழம்பே சுழன்று ஆறி ஆறிப் பூமியானது.

உதவி : இது பெரிய விந்தையாய் இருக்கே. அதெப்படி?

முதல்வர்
பாட்டு : தன்ன தனனன தனன தனன

கல்லு மலையில் வெயிலும் மழையும்
காற்றும் பட்டுமண் தோன்றிடவே
மண்ணில் மரமும் செடியும் முளைத்து
மனித இனம்உரு வாகியதே.

நெருப்புக்குழம்பு கல்லாகிக் கல்லில் வெயிலும் மழையும் காற்றும் பட்டுப் பௌதிக மாற்றமடைந்து மண்ணுண்டாகி மண்ணில் மரஞ்செடி கொடிகளும் தோன்றி மனித இனமும் உண்டாகிப் பூமியானது.

உதவி : ஓகோ, இதைத்தான் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி" என்று சொல்கிறார்களோ.

முதல்வர் : இது சாதாரண வசனம் இல்லைப் "புறப்பொருள் வெண்பா மாலை" என்ற சங்கத்தமிழ் நூலில் உள்ள பாடல் தம்பி.

உதவி : பூமியில் ஐந்து நிலம் எப்படி வந்தது?

முதல்வர் : மலைச்சாரல் காடாகி மலையில் வீழ் அருவிகள் ஆறாகி ஆறு வளம்படுத்துமிடம் மருதமாகி, ஆறு கடலுடன் கலக்குமிடம் நெய்தலானது. காடும் மலையும் வெப்பத்தால் கருகிப் பாலைவனமான பகுதி பாலை நிலமானது.

பாட்டு : தனன தனன தனன தனன

மலையும் மலைசார் நிலமும் குறிஞ்சி
காடும் காடுசார் நிலமும் முல்லை
வயலும் வயல்சார் நிலமும் மருதம்
கடலும் கடல்சார் நிலமும் நெய்தல்
பாலை வனமாய் இருப்பது பாலை.

உதவி : சரி. இந்தக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற பெயர்கள் எப்படி வந்தன?

முதல்வர் : அந்தந்த நிலங்களுக்கே உரிய சிறப்பான மரஞ் செடிகொடிகளின் பெயரே நிலப்பெயர் ஆனது.
மலைநிலம் குறிஞ்சிப்பூச் செடியாலும், காட்டுநிலம் முல்லைப் பூச்செடியாலும், வயல்நிலம் மருத மரத்தாலும், கடற்கரை நெய்தல் செடியாலும், பாலைநிலம் பாலை மரத்தாலும் பெயர் பெற்றன.

உதவி : அது சரி, திணை என்றால் ஒழுக்கம் என்றீர்கள். இந்தப் பெயர்கள் எப்படி ஒழுக்கப் பெயர்கள் ஆயின?

முதல்வர் : நம் பண்டைத் தமிழர் இயற்கையின் இயல்பை நன்கு அறிந்து, இயற்கைக்கு இயைவாகத் தம் வாழ்வை அமைத் துக்கொண்டனர். அதனால் தாம் வாழ்ந்த நிலத்துக்குரிய வாழ்வொழுக்கத்தை நிலத்தின் பெயரால் அழைத்தார்கள்.

பாட்டு : தனன தானன தன்ன தனன

மலையில் தோன்றிய மக்கள் கூட்டம்
படிப்படியாக வளர்ச்சி பெற்றே
காடும் வயலும் கடற்கரைப் புறமும்
வாழ்விடமாகக் கொண்டனரே.

உதவி : இது எமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய விசயமாய் இருக்கே. ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய திணையாகிய வாழ்வொழுக்கம் என்றீர்களே. அதை விபரமாகச் செல்லுங்கள்.

முதல்வர் : விபரமாகச் சொல்கிறேன் கேளுங்கள்.

பாட்டு : தனன தனனன தானன தனன

மலைசார் குறிஞ்சியில் வாழ்பவர் குறவர்
தினையும் விதைத்து வேட்டையும் ஆடுவர்
மலைத்தேன் கிழங்கு காய்கனி யுண்டு
காதலில் திளைத்தே இன்பம் காண்பார்.

குறிஞ்சி நிலத்தவராகிய குறவர் தினை விளைவித்தும் வேட்டையாடியும் தேனும் காய்கனியும் உண்டு காதலின்பம் காண்பார்கள்.

உதவி : முல்லை நிலத்தவர் எப்படிப்பட்டவர்?

முதல்வர்
பாட்டு : தானன தானன தானன தனன

காடுசார் முல்லையில் வாழ்பவர் இடையர்
மந்தைகள் மேய்த்தும் பால்தயிர் உண்டும்
மந்தைகள் காக்கப் போர்கள் புரிந்தும்
காடுறை வாழ்வில் களித்திருப்பார்கள்.

உதவி : முல்லை நிலத்து இடையர்கள் மந்தை மேய்த்துப் பால்தயிரோடு வேட்டையும் ஆடுவர் சரி. மருத நிலத்தவர்?

முதல்வர்
பாட்டு : தனன தனத்தன தானன தனன

மருத நிலத்திலே வாழ்பவர் உழவர்கள்
வயல்களில் பலபயிர் விளைத்திடுவார்கள்
ஓய்வான காலத்தில் கலைகளும் வளர்ப்பார்
காவலுக்காகப் போர்களும் செய்வார்.

உதவி : மருநிலத்தோர் உழவர், வயல்விளைவிப்பார். கலைகளும் வளர்ப்பார். காவலுக்காகப் போரும் செய்வார். நெய்தல் நிலத்தோர்?

முதல்வர்
பாட்டு : தனனன தனனன தன்னன தனன

கடல்சார் நிலத்திலே வாழ்பவர் நுளையர்
கடல்மீன் பிடிப்பார் உப்பம் விளைப்பார்

கப்பலில் சென்று வர்த்தகம் செய்வார்
அயல்நாட் டுப்பொருள் கொணர்ந்து குவிப்பார்.

நெய்தல் நிலத்து நுளையர் மீன்பிடிப்பர், உப்பு விளைப்பர். கப்பலோட்டி வாணிபமும் செய்வார்கள்.

உதவி : பாலை நிலத்தவர்?

முதல்வர்
பாட்டு : தனனன்ன தனனன்ன தனனன்ன தானன்ன

மரஞ்செடி கொடியின்றி வரண்டிட்ட பாலையில்
வழிப்பறி செய்து வாழ்பவர் எயினர்
இரக்கமொன் றின்றிக் கொலைகளும் செய்வர்
பிறரை வருத்தியே மகிழ்ந்திடுவார்கள்.

உதவி : பாலைநில எயினர் மெத்தக் கொடியவர்களாய் இருக்கே. ஐந்து திணைக்கும் உரிய ஒழுக்கங்களை இலக்கியங்கள் எப்படிச் சொல்கின்றன.

முதல்வர்
பாட்டு : தனன தனன தனன தனன

குறிஞ்சி புணர்தல் முல்லை இருத்தல்
மருதம் ஊடல் நெய்தல் இரங்கல்
பாலை பிரிதல் உடன்போக் கென்று
ஐந்திணை ஒழுக்கமும் சொல்லிடு வாரே.

உதவி : ஒவ்வொரு திணைக்கும் உரிய மக்கள், தொழில், உணவு, உறவுகள், நடத்தைகள் எல்லாம் சொன்னீர் கள். ஐந்திணை ஒழுக்க மரபில் அந்தக் காலத்தில் கடவுள் வணக்கம் எப்படி?

முதல்வர்: கடவுளை வணங்கா திருப்பாரோ
குறிஞ்சிக்கு முருகனும், முல்லைக்குக் கண்ணனும்
மருதத்துக்கு இந்திரனும் நெய்தலுக்கு வருணனும்
பாலைக்குக் கொற்றவை எனும் காளியும்
தெய்வங்களாக இருந்தார்கள்.

பாட்டு : தனன தனத்தன தனன தனத்தன

குறிஞ்சி நிலத்தவர் முருகனைத் தொழுதனர்
முல்லை நிலத்தவர் கண்ணனைத் தொழுதனர்
மருத நிலத்தவர் இந்திரன் தொழுதனர்
நெய்தல் நிலத்தவர் வருணனைத் தொழுதனர்
பாலை நிலத்தவர் கொற்றவை தொழுதனர்
படையல் படைத்துப் பாடித் தொழுதனர்.

உதவி : சங்கம் தந்த ஐந்திணை மரபு உண்மையில் நமக்குப் பெருமைதான். போர் செய்தார்கள் என்று சொன்னீர்களே அதெப்படி?

முதல்வர் : ஒவ்வொரு நிலத்தவரும் தங்கள் நிலத்தைக் காப்பதற்கும், அயல்நிலப் பொருள்களைக் கவர்வதற்கும் போர் செய்வார்கள். போர் செய்வதற்குப் போகும்போது தத்தம் நிலத்துக்கு உரிய சிறப்பான பூக்களைச் சூடிச் செல்வர்.

பாட்டு : தனன தனன தன்னன தனன

குறிஞ்சி வீரர் வெட்சிப்பூ அணிவர்
முல்லை வீரர் வஞ்சிப்பூ அணிவர்
மருத வீரர் உழிஞைப்பூ அணிவர்
நெய்தல் வீரர் தும்பைப்பூ அணிவர்
பாலை வீரர் வாகைப்பூ அணிவர்.

உதவி : ஓகோ இதைத்தான் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பது புறத்திணை என்றார்களோ.

முதல்வர் : ஆமாம், ஐந்திணை மரபு அன்பின் ஐந்திணை அகத்திணை என்றும் மற்றும் புறத்திணை என்றும் சொல்லப் படும்.

காதல் தழுவிய அன்பு வாழ்வு அகத்திணையாகும். போர் கொடை ஒழகிய வாழ்வு புறத்திணை எனவும் எங்கள் சங்க இலக்கியப் பாடல்களில் புலவர்கள்

பாடிவைத்துள்ளார்கள். நம் பண்டைத் தமிழர் வாழ்வொழுக்கத்தை அறிந்து இன்புறுவோம்.

பாட்டு : தன்ன தன்ன தன்னன தனன

சங்கம் தந்த ஐந்திணை மரபைத்
இங்கே தங்கத் தமிழினில் சொன்னோம்
எங்களை மதித்து கேட்டவர்க் கெல்லாம்
எங்கள் நன்றி சொன்னோம் வணக்கம்
மங்களம் மங்களம் மங்களம்

வணக்கம்.

உ
சிவமயம்



# 16. நோதலும் தணிதலும்

பாட்டு : தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட... வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே

சபைவணக்கம்

தன்ன னன்ன தனனானா தானனா தானனனா

பாட்டு : சபையிலுள்ள பெரியோரே தாய்மாரே தோழர்களே
சுவையான கதையொன்று சொல்லுகிறோம் வில்லினிலே
அமைதியாக இருந்ததனை அனைவீரும் கேட்டிடுவீர்
உமைவணங்கிக் கதையினைநாம் சொல்லுகிறோம் கேளும்
கேளும்

உதவி 1 : ஆமா என்ன கதை சொல்லப் போகிறீர்கள்?

முதல்வர் : நோதலும் தணிதலும் அவற்றோரன்ன என்ற கதை.

உதவி 2 : இதென்ன கதையா கட்டுரையா?

முதல்வர் : கதைதான் கதைதான்
சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில் சொன்ன செய்தியைச் சொல்லும் கதை.

உதவி 1 : கணியன் பூங்குன்றனார் பெரிய புலவராயிற்ளே. கதை நல்லாத்தான் இருக்கும். சொல்லுங்கோ.

பாட்டு : தன்ன தனன தனதன தன்னனா

சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனார்
தங்கத் தமிழில் சொல்லிய செய்தி
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன.

உதவி 2 : ஆமா வில்லுப்பாட்டுக்கதை "நோதலும் தணிதலும் அவற்றோரன்ன" என்று சொன்னீர்கள். இப்போ தீதும் நன்றும் பிறர்தரவாரா என்கிறீர்கள்.

முதல்வர் : கணியன் பூங்குன்றனார் சொன்ன ஒரே பாடலில்தான் இரண்டும் இருக்கு. தீதும் நன்றும் பிறர்தர வாரா அதே போலத் தான் நோதலும் தணிதலும் என்று கூறுகின்றார்.

உதவி 1 : அதென்ன நோதலும் தணிதலும்?

முதல்வர் : அதாவது நமக்கு நோதல் ஆகிய துன்பம் வருவதும் அது தணிதலாகிய இன்பம் வருதலும் பிறரால் வருவதல்ல என்று கூறுகின்றார். நம்மாலேதான் நமக்கு வரும்.

உதவி 2 : அதெப்படி நமக்கு நன்மையோ தீமையோ மற்றவர் தானே செய்கிறார். மற்றவரால்தானே இன்பதுன்பம் வருகின்றன.

பாட்டு : தானா தன்னனன - தானானா தன்ன னன

தாம்தாமே செய்தவினை
தாம்தாமே அனுபவிப்பர்
தினையை விதைத்தவனே
தினையை அறுத்திடுவான்
வினையை விதைத்தவன்தான்
வினையை அறுத்திடுவான்.

முதல்வர் : தினையை விதைத்தவனுக்குத்தானே தினை விளைவு கிடைக்கும். அதுபோல வினையை விதைத்தவனுக்கு அந்த வினை விளைவு கிடைக்கும்.

உதவி 1 : அப்போ நாம் எப்பவோ யாருக்கோ செய்த தீமைதான் எமக்கு இப்போ நோதலாக வருகுது. நாம் யாருக்கோ செய்த நன்மைதான் இப்போ நமக்கு நன்மையாய் வருகுது என்று சொல்கிறீர்கள்.

உதவி 2 : அது விளங்குது கதையைச் சொல்லுங்கோ.

முதல்வர் : மாண்டவ்ய முனிவர் என்று ஒருவர் தவச்சாலையில் இருந்து தவம் செய்துகொண்டிருந்தார். அப்போது அங்கொரு விபரீதம் நடந்தது.

உதவி 1 : தவச்சாலையில் விபரீதமா?

பாட்டு : தானன தானனனே - தன தானனனே தன தானனனே

மாண்டவ்ய முனிவரென்பார் - தவச்
சாலையிலேதவம் செய்திருந்தார்
மன்னவன் மாளிகையில் - முத்து
மாலை களவெடுத்த கள்ளர்களை
தூதுவர் கலைத்துவரத் - தவச்
சாலையில் கள்வர் வந்து புகுந்தனரே.

உதவி 2 : முனிவரின் தவச்சாலைக்குள் முத்துமாலை களவெடுத்த கள்ளர் வந்து புகுந்தார்களோ.

முதல்வர் : ஆமா, பின்னாலே மன்னனின் தூதுவர்கள் கலைத்துக் கொண்டு வந்தார்கள். கள்வர் தவச்சாலையில் முனிவர் தவத்தில் இருப்பதைக் கண்டவுடன்

பாட்டு : முனிவரின் கழுத்தினிலே - முத்து
மாலையைப் போட்டுவிட்டு ஒளித்தனரே

உதவி : ஓகோ முனிவர் எல்லோ அகப்படப்போறார் பாவம்.

முதல்வர் : ஆமாம், கள்வரைக் கலைத்துக்கொண்டு வந்த தூதுவர் கள் பார்த்தார்கள் முனிவரின் கழுத்தில் இருக்கிறது முத்துமாலை ஓகோ களவெடுத்து வந்த கள்ளன் எங்களைக் கண்டவுடன் சாமியார்போல ஆசாமி வேடம் போட்டிருக்கிறார் என்று அவரைப் பிடித்துக்கொண்டு போய் மன்னனிடம் கொடுத்தார்கள்.

பாட்டு : தன்ன னன்ன தானனன்ன - தன்ன னன்ன தானனன்ன

கையும் மெய்யுமாய்ப் பிடித்தோம்
கள்வர்தலைவன் இவன்ஐயா
முத்துமாலை இவன்கழுத்தில்
இருப்தையும் பாருங்கள்
சாமியாரைப் போலிருக்கும்
ஆசாமியைப் பாருங்கள்.

முதல்வர் : என்று சொல்லி மன்னனிடம் ஒப்படைத்தார்கள். மன்னன் அவரைப் பலவாறு விசாரித்தான். அவரோ நாமறியோம்,

நாமறியோம் என்று சொன்னாரேயன்றி வேறெதுவும் சொல்லவில்லை. தூதுவர்களுக்கு மன்னன் கட்டளை யிட்டான்.

பாட்டு : தானனதானன தானனதானன - தன்னன தன்னன தானனவே

கள்வனைக் கொல்லுதல் தான்முறையாகும்
கழுவிலே கொண்டுபோய் ஏற்றுங்கள்
கொன்றவன் உடலினைக் காக்கைக்குவிருந்தாக
கொடுத்துவிட்டு வந்து சொல்லுங்கள்.

முதல்வர் : மன்னன் அவரைக் கழுவேற்றும்படி கட்டளையிட்டான்.

உதவி 1 : ஆமா, கழுவேற்றுதல் என்றால் என்ன?

முதல்வர் : அதுதான் அந்தக் காலத்தில் மரணதண்டனை முறை. வேல் போன்ற கூரான இரும்பின் மேலே அவரைத் தூக்கி இருத்தி விடுதல். அவர் உடல் இரு கூறாகப் பிளந்து இறப்பார்.

உதவி 2 : ஓகோ, கோவிலிலே அலவாங்கில் இளநீர் குத்து வார்களே அப்படியோ?

முதல்வர் : அப்படியேதான்.

உதவி 1 : ஐயோ பாவம். களவெடுத்த கள்ளர் ஒளித்திருக்கத் தவம் செய்த மாண்டவ்ய முனிவர் கழுவேறலாச்சே.

முதல்வர் : கொஞ்சம் பொறுங்கள். இன்னும் கதை முடியவில்லை.

முனிவரைத் தூக்கிக் கழுவில் இருத்தினார்கள். அவருடலைக் கழுமரம் பிளக்கவில்லை. அவர் கழுமரத்தில் இருந்து தவம் செய்தார். சேவகர்களுக்குக் கோபம் வந்து விட்டது.

உதவி 2 : என்ன செய்தார்கள்?

பாட்டு : கூரிய நீண்ட ஆணியொன் றெடுத்து
மார்பிலே வைத்தே அறைந்தார்கள்
அறைந்த ஆணி முதுகினைப் பிளக்கவும்
அப்படியே அவர் அசையாதிருந்தார்.

உதவி 1 : ஆச்சரியமாயிருக்கே. நெஞ்சிலே ஆணி அறைந்தும் அசையாதிருந்தாரோ?

முதல்வர் : ஆமாம், சேவகர்கள் பயந்துவிட்டார்கள். இவர் கள்வர் அல்ல. உண்மையான சுவாமிதான் என்று அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார்கள். அவர் சிரித்தார்.

பாட்டு : நோதலும் தணிதலும் அவரவர் வினையே
இதற்கேன் நீங்கள் அஞ்சுகிறீர்கள்
எனக்கொரு உதவி செய்திடவேண்டும்
செய்வீரோ நீர் என்றே கேட்டார்.

முதல்வர் : சுவாமி, ஒரு உதவியா? ஓராயிரம் உதவி செய்வோம். சொல்லுங்கள் என்று பணிந்து நின்றார்கள். முனிவர் சொன்னார் அன்பர்களே! நான் சிவனுக்குப் பூசை செய்வதற்கு ஒவ்வொரு நாளும் பூக்கூடையில் பூ எடுப்பது வழக்கம். அந்தப் பூக்கூடையைக் கொழுவு வதற்கு என் நெஞ்சில் அடித்த ஆணி உதவும். இது நீளமாயிருக்கு கொஞ்சம் வெட்டிவிடுங்கள் என்று கேட்டார். அவர்கள் அப்படியே ஆணியைக் கட்டையாக வெட்டிவிட்டுச் சென்றனர்.

உதவி 2 : இது பெரிய ஆச்சரியமாயிருக்கே.

முதல்வர் : இன்னும் கதை இருக்கு கேளுங்கள். முனிவர் தரும தேவதையைக் கேட்டார்.

பாட்டு : தனதனதனதன தனதன தானா - தன்னா தனன தானனனே
அவரவர் வினைப்பயன் அவரவர்க்கீயும்
அப்பா தரும தேவதையே
எனக்கேன் இந்தத் தண்டனை தந்தாய்
எனக்கதையை நீ சொல்லிடுவாயே.

முதல்வர் : என்று கேட்டார். தருமதேவதை சொன்னது - நீ சிறுவனா யிருக்கும்போது ஒரு தும்பியைப் பிடித்து அதன் வாலில்

முள்ளைக் குத்திப் பறக்கவிட்டாய். அந்த முள் இந்த ஆணியாய் வந்து உன் நெஞ்சில் தைத்தது என்றது. அன்று முதல் அவருக்கு ஆணிமாண்டவ்யர் என்று பெயர் வந்தது.

உதவி 1 : ஒகே. நாமும் கவனமாய்த்தான் இருக்கவேணும்.

பாட்டு : தாம்தாமே செய்தவினை தாமே அனுபவிப்பார்
நோதலும் தணிதலும் தாம்தாம் செய்தது
நோவாதிருக்க நல்லன செய்வோம்.

மங்களம் மங்களம் மங்களம்.

வில்லிசை

# 17. மங்கையர் மாண்பு

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்திடுவாய் சரஸ்வதியே - வரம்நீ
தந்தருள்வாய் சரஸ்வதியே.

வேறு

சபையிலுள்ள பெரியோரே தம்பியரே தங்கையரே
ஆமா தம்பியரே தங்கையரே
மங்கையர்கள் தினவிழாவில்
பங்குகொள்ள வந்திருக்கும்
உங்களுக்கு எங்களது
உளம்நிறைந்த வணக்கங்கள்

வேறு

நாடிலங்கை மாநகரில்
நல்லதமிழ் பாடவல்லார்
கூடிவளர் கொழும்பினிலே
குடியிருக்கு் மங்கையர்நாம்
தேடிநல்ல பாட்டெழுதித்
தித்திக்கும் இசைவகுத்துப்
பாடுகின்றோம் வில்லுப்பாட்டு
பக்குவமாய்க் கேட்டிடுவீர்.

உதவி 1 : ஆகா வில்லுப்பாட்டென்றால் நல்லாத்தான் இருக்கும் பாடுங்கோ கேட்போம்.

உதவி 2 : ஆமா, என்ன கதை பாடப்போகிறீர்கள்?

முதல்வர் : எங்கள் கதையைத்தான் பாடப்போகிறோம்.

உதவி 1 : எங்கள் கதை என்றால்? பெண்கள் கதையோ?

முதல்வர் : ஆமாம், மங்கையர் மாண்பு என்னும் எங்கள் கதைதான்.

பாட்டு : மங்கையர்கள் நாம்ஒன்று4டி - இன்று
மங்கையர் மாண்பினைப் பாட
இங்கித மாகவில் லெடுத்தோம் - இங்கு
இன்பமாய்க் கேட்டு மகிழ்வீர்.

உதவி 1 : அதுசரி, நாங்களும் மங்கையர்கள்தானே. எங்கள் கதையை நாங்கள் பாடுவது சரியோ?

உதவி 2 : ஆமாம், அது தற்புகழ்ச்சியாகுமே. தன்னைத்தானே பாடலாமோ?

முதல்வர் : தன்னை அறியாதார் மத்தியில் தன்னைப்பற்றித் தானே சொல்வது தகுதியாகும் என்று எங்கள் இலக்கண நூலே சொல்கிறது.

இந்த உலகம் பெண்களின் அருமை பெருமைகளை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

உதவி 2 : ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

முதல்வர் : இந்த உலகம் அன்றுமுதல் இன்றுவரை பெண்களுக்குச் செய்த, செய்கின்ற கொடுமைகளை நினைத்துப் பாருங்கள்.

பாட்டு : கற்பின் செல்வி அன்னை சீதையை
அக்கினிப் பிரவேசம் செய்யவைத்தார்
கர்ப்பிணியாக இருக்கையில் அவளைக்
காட்டில் தனியே விட்டுவிட்டார்.

உதவி 1 : உண்மைதான். மிதிலை மாநகரின் அரசிளங்குமரியாயிருந்த சீதையை இராமன் காதலித்து, வில்வளைத்து, மணம் முடித்துக் கொண்டுவந்து அயோத்திக்குப் பட்டத்துராணியாக்காமல் 14 வருடம் காட்டில் தன்னோடு அலையவைத்தாரே. அதுமட்டுமா அவளை இராவணன் சிறைவைத்ததற்காகச் சந்தேகப்பட்டுத் தீக்குளிக்க வைத்தாரே.

உதவி 2 : அதுமட்டுமா? கர்ப்பிணியாய் இருந்த அவளைக் காட்டில் தன்னந்தனியே கொண்டுபோய் விட்டாரே. இது கொடுமை அல்லவா?

முதல்வர் : இவர்களா மங்கையர் மாண்பைத் தெரிந்தவர்கள்? இன்னும் கேளுங்கள்.

பாட்டு : காதல் கொண்ட சூர்ப்பனகைப் பெண்
மார்பும் மூக்கும் அறுத்தெறிந்தார்

இலக்குமணன்மேல் காதல்கொண்ட சூர்ப்பனகையை மார்பும் மூக்கும் அறுத்துக் கலைத்துவிட்டார்களே. அவளின் ஒருதலைக் காதலை விலக்க வேறுவழி இவர் களுக்குக் கிடைக்கவில்லையா? ஒரு பெண்ணின் மார்பை யும் மூக்கையும் அறுப்பது மனிதாபிமானமற்ற கொடிய ஈனச் செயலல்லவா?

முதல்வர் : இதுமட்டுமா?

பாட்டு : அப்பாவி கோவலன் தலையை வெட்டிக்
கண்ணகி கைம்பெண் ஆக்கிவிட்டார்.

உதவி 1 : கோவலன் செய்யாத குற்றத்திற்காக விசாரனை ஏதுமின்றி அவன் தலையை வெட்டிக் கொலைசெய்து காதல் மனையாள் கண்ணகியைக் கைம்பெண் ஆக்கிவிட்டார்கள். இவர்களா மங்கையர் மாண்பை அறிந்தவர்கள்?

முதல்வர் : இன்னும் கேளுங்கள்.

பாட்டு : பத்தினிப் பெண்ணாள் பாஞ்சாலி மாதைப்
பணயப் பொருளாய்ச் சூதாடினார்
பல்லோர் அரசர் சபையின் முன்னே
இழுத்து வந்து துகிலுரிந்தார்.

இதெல்லாம் அன்று செய்த கொடுமைகள் சில இன்று நடப்பதைப் பாருங்கள்.

பாட்டு : பிறந்தது பெண்ணெனக் கண்டதுமே
இறந்திடக் கள்ளிப்பால் ஊற்றுகின்றார்
கட்டுவதற்கோ கோடி சீதனம்
கொண்டுவாவெனக் கேட்கின்றார்
வாழாவெட்டியாய் பெண்களை வைத்து
மங்கையர் மாண்பைக் கெடுக்கின்றார்.

உதவி 1 : சீதனக்கொடுமையோ கொடுமை.

ஒரு பெண்பிள்ளையை டாக்டராகப் படிக்க வைக்க 50 இலட்சம் செலவு. அவள் 50 ஆயிரம் சம்பளம் எடுக்கிறாள். அவளைக் கல்யாணம் செய்வதற்குக் கேட்கும் சீதனம் 50 இலட்சமும் காரும் வீடும். இதுதான் படித்த பெண்ணுக்கு எங்கள் சமூகம் செய்யும் மரியாதை.

முதல்வர் : இப்போ என்ன சொல்கிறீர்கள். மங்கையர் மாண்பை அறியாத இந்த உலகத்துக்கு மங்கையர் மாண்பைச் சொல்லத்தானே வேண்டும்.

உதவி 2 : சொல்லத்தான் வேண்டும். சொல்லுங்கோ. நன்றாகச் சொல்லுங்கோ. உறைக்க உறைக்கச் சொல்லுங்கோ.

முதல்வர் : பெண் என்றால் மண்ணும் கல்லும் மரமும் கொண்டு செய்த உணர்ச்சியற்ற பிண்டமா அல்லது பட்டும் பொன்னும் சூட்டிப் பார்க்கும் பொம்மையா?

மனித குலத்தை மகிழ்விக்கவல்ல நல்ல பண்புகளை எல்லாம் ஒன்றாய்த் திரட்டிப் பெண்ணுருவமாகப் பிரமன் படைத்துவிட்டான்.

உதவி 1 : மங்கையர்களில் நிறைந்துள்ள அந்தப் பண்புகளை யெல்லாம் சொல்லுங்கள்.

முதல்வர்
பாட்டு : அன்பு, பொறுமை, அடக்கம், தியாகம்
இன்பம், அழகு, இரக்கம், கருணை
மென்மை, தொண்டு மேலாம் அறிவு
என்னும் உயர்ந்த பண்புகள் எல்லாம்
ஒன்றாய்த் திரண்ட வடிவே பெண்மை.

உதவி 2 : உண்மைதான். உண்மைதான். அப்போ ஆண்கள்

முதல்வர் : அன்பர்களே இந்த உலகை உற்று நோக்குங்கள். உங்களுக்கு உண்மை தெரியும்.

பாட்டு : அழகிய உலகினைப் பாருங்கள்
அனைத்துமே ஆண்பெண் வடிவன்றோ

ஓரறிவுடைய புல்மரம் முதலாய்
ஆறறிவுடைய மனிதர்கள் ஈறாய்
அனைத்தும் ஆண்பெண் வடிவன்றோ
அனைத்தும் இயற்கையின் கூறன்றோ
ஆண்பெண் சேர்க்கையி னாலேதான்
அனைத்தும் பிறத்தல் காணீரோ.

உதவி 1 : உண்மைதான் எதைப்பார்த்தாலும் ஆணும் பெண்ணு மாகத் தான் இருக்கு.

உதவி 2 : ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் புதிய பிறப்புகள் பிறக் கின்றன. எல்லாம் ஆண்பாதி பெண்பாதியாகத்தான் இருக்கின்றன.

முதல்வர் : ஆணும் பெண்ணும் சரிபாதியாயிருந்தாலும் ஆனால் தன் இனத்தைப் பெறமுடியாது. பெண்ணால்தான் பெறமுடியும்.

பாட்டு : பெண்ணில் இருந்தே எல்லாம் பிறக்கும்
பெண்ணில் லாமல் பிறப்பு முண்டோ
பெண்ணில் இருந்தே பிறந்தவர் பெற்ற
பெண்ணை வதைத்தல் கொடுமை யன்றோ
பெண்ணைப் போற்றுதல் தான்தர்மம்
பெண்ணால் பெருமை பெறவேண்டும்.

உதவி 2 : அப்போ நாம் எல்லாரும் பெண்பிள்ளைகள் என்று சொல்லுங்கள்.

முதல்வர் : பெண்பெற்ற பிள்ளைகள் பெண்ணின் பிள்ளைகள் தானே. பெற்ற தாயின் பெருமைதான் மங்கையர் மாண்புக்கு உரை கல்லாகும்.

உதவி 1 : தாய்க்குலத்தின் மாண்பைச் சொல்லுங்கள்.

முதல்வர் : நம்மை வாழவைக்கும் நாடும், மொழியும், கல்வியும், செல்வ மும், ஞானமும், பூமியும் எல்லாம் தாயாகவே போற்றப்படு கின்ற உண்மையைப் பாருங்கள்.

பாட்டு : பிறந்த நாடு தாய்நாடு
பேசும் மொழியும் தாய்மொழியே
கல்வி தருபவள் சரஸ்வதித்தாய்

செல்வம் தருபவள் லக்குமித்தாய்
ஞானம் தருபவள் சத்தித்தாய்
நம்மைத் தாங்குபவள் பூமித்தாய்
எங்கும் எல்லாம் தாய்தானே
தாயாம் பெண்மை தெய்வமன்றோ.

உதவி 2 : எங்கள் தாய்க்குலமாகிய மங்கையர் மாண்பை இன்னும் சொல்லுங்கோ.

முதல்வர் : எங்கள் வாழ்வில் பெண் எத்தனை பாத்திரங்களில் நின்று எங்களை மகிழ்விக்கிறாள்.

உதவி 2 : மகளாய், சகோதரியாய், மனைவியாய்

உதவி 1 : மாமியாய், பாட்டி யாய் இன்னும் எத்தனையோ.

முதல்வர்
பாட்டு : மகளாய்ப் பிறக்கையில் பெற்றவர்க் கின்பம்
பெண்ணாய் வளர்க்கையில் சகோதர்க் கின்பம்
மனைவியாய் வாழ்கையில் கணவனுக் கின்பம்
தாயாய் மலர்கையில் பிள்ளைகட் கின்பம்
மாமியாய் வருகையில் மருகருக் கின்பம்
பாட்டியாய் அணைக்கையில் பேரருக் கின்பம்.

பெண் எந்த உறவில் வந்தாலும் எல்லோர்க்கம் இன்பம் தந்திடுவாள்.

உதவி 1 : அதுசரி, எங்கள் பழைய இலக்கியங்கள் பெண்களுக்கு ஏழு பருவங்கள் வகுத்துச் சொல்லி இருக்கிறார்களாமே.

முதல்வர் : ஆமாம், அதையும் பாருங்கள்.

பாட்டு : பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை
அரிவை தெரிவை பேரினம் பெண்ணென
பெண்ணில் ஏழு பருவம் கண்டு
கண்ணெனப் போற்றினர் நம்முன்னோர்.

உதவி 1 : பேதைப் பருவம் என்றால் என்ன?

முதல்வர்
பாட்டு : பிறந்து வளர்ந்து தவழ்ந்து எழுந்து
தளர்நடை பயில்வது பேதைப் பருவம்.

உதவி 2 : பெதும்பைப் பருவம் என்பது

முதல்வர்
பாட்டு : புத்தகப் பையுடன் சிட்டாய்ப் பறந்து
நித்தமும் மகிழ்வது பெதும்பைப் பருவம்.

உதவி 1 : மங்கைப் பருவம் என்றால்

முதல்வர் : பெண்மை மலரப் பூப்பினை எய்தி
கன்னிய ராவது மங்கைப் பருவம்.

உதவி 2 : மடந்தைப் பருவம் என்றால்

முதல்வர் : திருமணம் கண்டு பொட்டும் பூவுமாய்
கணவனை அணைவது மடந்தைப் பருவம்.

உதவி 1 : அரிவைப் பருவம் என்றால்

முதல்வர் : மக்களைப் பெற்று மகராசி யாகித்
தாயாய்த் திகழ்தல் அரிவைப் பருவம்.

உதவி 2 : தெரிவைப் பருவம் என்பது

முதல்வர் : பேரரைத் தோளிலும் மடியிலும் வைத்துத்
தாலாட்டுப் பாடும் பருவம் தெரிவை.

உதவி 1 : பேரினம் பேண் என்றால்

முதல்வர் : பல்லும் கழன்று சொல்லும் தளர்ந்து
பொல்லுப் பிடிக்கும் கிழவிப் பருவம்
எந்தப் பருவம் வந்தாலும் எல்லாம் பிறர்க்கு இன்பம்தான்.

உதவி 2 : எப்படிப் பார்த்தாலும் மங்கையர்கள்தான் உயர்ந்தவர்கள் என்று சொல்லுங்கோ.

முதல்வர் : அப்படியில்லை. ஆணோ பெண்ணோ உயர்ந்தவர்கள் என்று எடைபோடக் கூடாது. இருவர் உயர்வையும்

இருவரும் உணர்ந்து ஒருவரை ஒருவர் மதித்து வாழவேண்டும்.

பாட்டு : ஆணோ பெண்ணோ உயர்ந்தவர் என்று
ஆராய்வது நம் அறியாமை
ஆணின் உயர்வையும் பெண்ணின் உயர்வையும்
அறிந்து போற்றுதல் அறிவுடைமை
இரண்டு கண்களை இறைவன் தந்தான்
இரண்டும் இணைந்தே ஒன்றைப் பார்க்கும்
அதுபோல் ஆணையும் பெண்ணையும் படைத்தான்
இருவரும் இணைந்தே முழுமை பெறலாம்
ஆணைப் பெண்ணும் மதித்திட வேண்டும்
பெண்ணை ஆணும் மதித்திட வேண்டும்.

இந்த உலகு பெண்களுக்குரிய மதிப்பை இன்னம் பூரணமாக வழங்கவில்லை. பெண்களின் மதிப்பு பூரணமாக உயரும்போதுதான் உலகு உயரும். மனித குலம் மேம்படும்.

உதவி 1 : அது உண்மைதான். ஆனால் பெண்கள்தான் கற்புடையவர்களாக இருக்க வேண்டும் என்கிறார்களே. ஆண்களுக்குக் கற்புத் தேவையில்லையோ?

முதல்வர் : கற்பு என்றால் என்ன? கற்பெனப்படுவது சொல்திறம்பாமை என்றார் ஔவையார். சொல் திறம்பாமை என்பது முன்னோர் சொல்லிவைத்த அறநெறியில் வழுவாது வாழ்தல். அறநெறி தவறாது வாழும் நெறியே கற்பு நெறி. இப்பொழுது ஆண் பெண் உறவையே கற்பு என மட்டுப்படுத்திப் பொருள் கொள்வது தவறு. அறநூல்கள் கூறும் வழியில் வாழ் தலே கற்பு. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவே.

பாட்டு : கற்பெனப்படுவது ஆணுக்கும் பெண்ணுக்கும்
பொதுவாய் உள்ள ஒழுக்க நெறி
ஒருத்தனுக் கொருத்தி ஒருத்திக்கு ஒருத்தன்
என்பதே ஆண் பெண் உறவாகும்
உனக்கு நானே எனக்கு நீயே

இருவர் நாங்கள் உணர்வால் ஒருவர்
என்றே ஒன்றாய் வாழ்வதே கற்பு
நன்றாம் அறநெறி காப்பதே கற்பு.

உதவி 2 : மங்கையர் மாண்பைப் போற்றவேண்டும் என்றால் அதெப்படி என்ன செய்ய வேண்டும்.

முதல்வர் : பெண்களைத் தாய்போல் போற்றிடுங்கள்
கண்களைப் போலவே காத்திடுங்கள்
பெண்களின் அறிவு ஆற்றல்கள் எல்லாம்
எங்கும் ஓங்கிட வழிவிடுங்கள்
காவியம் கவிதை கதை எதிலும்
கண்ணியமாகவே எழுதுங்கள்
மங்கையர் மாண்பை மதியுங்கள்
மாநிலம் உயர்ந்திடம் பாருங்கள்.

மங்களம்.

விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டுக் கேட்டவர்கள்
எல்லோருக்கம் எங்களது வணக்கம் எங்களை
மதித்தவர்கள் எல்லோருக்கும் வணக்கம்
வணக்கம் வணக்கம் வணக்கம்.

(சைவ மங்கையர் கழக மாணவிகள் கொழும்புத் தமிழ் சங்கத்தில் செய்தது
கலையும் வாழ்வும் நூலில் வெளிவந்தது.)
2017

உ
சிவமயம்

வில்லிசை

# 18. மாதவி மாண்பு

தந்தனத் தோம் என்று சொல்லியே வில்லிசைபாட
வந்தருள்வாய் விநாயகனே வரம்நீ தந்தருள்வாய்
விநாயகனே

**வேறு**

தேவி சரஸ்வதியே சரஸ்வதியே - எமக்கு
நல்வாக்குத் தாருமம்மா - ஆமா
நல்வாக்குத் தாருமம்மா.

வணக்கம்: சபையிலுள்ள பெரியோரே தாய்மாரே சகோதரரே
எல்லோர்க்கும் எங்களது இனிமையான வணக்கங்கள்.

ஆடல்அழகி மாதவியின் மாண்புபற்றிப் பாடுகிறோம்
அன்புடனே கேட்டிடுவீர் அதை மனதில் ஏற்றிடுவீர்.

உதவி 1 : ஆமா இன்று என்ன கதை பாடப்போறோம்

உதவி 2 : அதுதான் சொன்னாரே மாதவி மாண்பு என்று.

முதல்வர் : ஆமாம் ஆமாம் தன்கற்பு நெறியைத் தானே காத்து
நிறைகாத்த மாதவியின் கதை நெஞ்சை அள்ளும்
சிலப்பதிகாரத்தில் பாவடிகள் தேன்வடியப் பாடிய
இளங்கோ அடிகள் சொன்ன கதை.

பாட்டு : மூவேந்தர் ஆண்டநாடு முத்தமிழும் வளர்ந்த நாடு
சேரசோழ பாண்டியர்கள் செங்கோண்மை செய்தநாடு.

வசனம் : முத்தமிழ் நாடுகளிலே சோழவள நாடு
தனிச்சிறப்புடையது. சோழ மன்னர்கள்

பாட்டு : ஆனைசேனை படைகளுடன் கொடிகுடையும் கொண்டு
ஆதிமுதல் ஆண்டதிந்தச் சோழவள நாடு.

அதுமட்டுமல்ல

ஈழம்முதல் இமயம்வரை வெற்றிவாகை சூடி- தங்கள்
புலிக்கொடியைப் பறக்கவிட்ட வீரம்விளை நாடு.

உதவி 1 : ஓகோ சோழமன்னர்க்கு இத்தனை பெருமை உண்டோ?

முதல்வர்: ஆமா எல்லா வளமும் மிக்க சோழநாட்டின் தலைநகரம் எது என்று தெரியுமோ?

உதவி 2 : நீங்களே சொல்லுங்கோ.

பாட்டு : காவிரி ஆறுவந்து கடலோடு கலக்குமிடம்
காவிரிப்பூம் பட்டினமாம் கவின்மிகுந்த பெருநகரம்
பூவிரியும் சோலைகளும் பொன்மாட மாளிகையும்
பொன்னுலகமோவென்று பொலியும் எழில் தவழும் நாடு.

வசனம் : காவிரிப்பூம் பட்டினம் துறைமுகப் பட்டினம். ஆதலால்

பாட்டு : பற்பல நாடுகளின் கப்பல்கள் கூடுமிடம்
அற்புதக் கலைப்பொருட்கள் அழகழகாய் குவியுமிடம்
பன்னாட்டு நாகரிகம் இந்நாட்டில் வளருமிடம்
இந்நாட்டுப் பொருட்களெல்லாம் ஏற்றுமதி செய்யுமிடம்.

உதவி 1 : அந்தக் காவிரிப்பூம்பட்டினத்தைப் பார்க்கவேணும் போலிருக்கு.

உதவி 2 : நாளைக்குப் போகலாம். இப்போ கதையைக் கேள்.

முதல்வர்: அந்தக் காவிரிப்பூம் பட்டினத்திலே ஒரு கலைக்குடும்பம் அது

பாட்டு : அழகுக் கலைகளிலே அற்புதங்கள் செய்துகாட்டும்
ஆடற்கலைவளர்க்கும் கணிகையர் குலத்தலைவி
சித்திராபதியென்னும் சேயிழையாள் புத்திரியாய்
வந்து பிறந்தாள் ஓர் வானுலகத் தெய்வமகள்
மாதவிப் பெயர் உடையாள் மாதர்குல மாணிக்கம்.

உதவி 1 : ஆமா என்ன குலம் என்று சொன்னீர்கள்?

முதல்வர்: கணிகையர்குலம்

உதவி 2 : கணிகையர் குலம் என்றால் அதுதான் தேவதாசிகள் குலமோ?

முதல்வர் : ஆமாம், தெய்வத்துக்குக் கலைத்தொண்டு செய்யும் குலம்.

உதவி 1 : அப்ப, அவர்களைத்தானே தாசிகள் என்றும் தேவடி யாள் என்றும் பரத்தையர் என்றும் சொல்கிறார்களே.

முதல்வர் : பிற்காலத்தில் நம்மவர்கள் அப்படித்தான் அவர்களைத் தங்கள் போகப் பொருளாக்கித் தாழ்த்திவிட்டார்கள். மாதவி அப்படித் தாழ்ந்தவள் அல்ல. கதையைக் கேளுங்கள் மாதவியின் மாண்பு தெரியும். மாதவிக்கு ஐந்து வயதான போதே அவளின் தாய் சித்திராபதி அவள் ஆடற்கலை பழக ஆவனசெய்தாள்.

பாடல் : ஆடல்பாடல் யாழிசை மத்தளம்
நாடகம் ஒப்பனை யாவும் பயின்றாள்
அழகுக் கலைகள் அத்தனை வித்தையும்
ஏழாண்டுகாலம் எழிலுறப் பயின்றாள்.

உதவி 1 : இதெல்லாம் யாரிடம் பயின்றாள்?

முதல்வர் : ஆடல் ஆசானிடம் ஆடலும் பாடல் ஆசானிடம் பாடலும் யாழிசை ஆசானிடம் யாழும், மத்தள வித்துவானிடம் மத்தளமும், குழலிசை ஆசானிடம் குழலும் இயல்தமிழ் புலவனிடம் தமிழும் ஒப்பனைக் கலைஞரிடம் ஒப்பனை யும் ஆக அனைத்துக் கலைகளும் பயின்றாள்.

உதவி 2 : அடேயப்பா 12 வயதுக்குள்ளே இத்தனையும் பயின்றா ளாம்.

பாட்டு : பன்னிரண்டு வயதினிலெ பருவமங்கையாய் மலர்ந்தாள்
பார்த்தவர்கள் தேவலோக ஊர்வசியோ என மகிழ்ந்தார்
அரசனின் முன்னிலையில் அரங்கேற்றம் செய்திடவே
அரியதொரு நன்னாளில் ஆனதெல்லாம் செய்தார்கள்.

வசனம் : முரசறைவோனை அனுப்பி எல்லோர்க்கும் அழைப்பு விட்டார்கள்.

உதவி 1 : முரசறைதல் என்றால் என்ன?

உதவி 2 : இது தெரியாதோ இந்தநாளிலை ஒலிபெருக்கியிலை ஊரெல்லாம் சொல்வது போல அந்தநாளிலை முரசென் னும் பறை அடித்துச் சொல்லுதல்தான் அது.

உதவி 1 : உனக்கு இதெல்லாம் தெரியுமோ? என்னமாதிரி முரசறைந் திருப்பான்?

பாட்டு : காவிரிப்பூம் பட்டினத்தில் கலைவிருந்து ஒன்றிருக்கு
கணிகையர் குலத்துதித்த கட்டழகி மாதவியாள்
ஆடற்கலை பயின்று அரங்கேற்றம் காண்கின்றாள்
தேடற்கரிய செல்வி தெய்வமகள் ஊர்வசிபோல்
பன்னிரண்டு வயதுடையாள் பவளமலர் போலிருப்பாள்
மன்னவன் முன்னிலையில் ஆடல் அரங்கேறுகிறாள்
எல்லோரும் வாருங்கள் இன்பக்கலை பாருங்கள்.

என்று முரசறைந்தார். மக்கள் கூட்டம் அலைமோதியது. சோழமன்னரும், பிரபுக்களும், பெருவணிகர்களும், கலைஞர்களும் தத்தமக்குரிய இருக்கையில் இருந்தார்கள்.

உதவி 1 : ஆமாம், அந்தக் காலத்தில் இந்தக்காலம் போல அழகான அரங்குகளும் மண்டபங்களும் இருந்தனவோ.

முதல்வர் : இந்தக் காலத்தைவிடப் பன்மடங்கு அழகான அரங்கில்தான் அரங்கேற்றம் நடந்தது.

உதவி 2 : எங்கே அந்த அரங்கைப் பற்றிச் சொல்லுங்கோ பார்ப்பம்.

**மேடை**

பாட்டு : ஏழு கோல் அகலத்து எண்கோல் நீளத்து
ஒரு கோல் உயரத்து உறுப்பினதாகி

**அரங்கு**

உத்தரப் பலகையோடு அரங்கின்பலகை
வைத்த இடைநிலம் நாற்கோலாக
ஏற்ற வகையில் இரண்டுடன் பொலிய
தோற்றிய அரங்கில் தொழுதனர் ஏத்த

அரங்கத்திரை

பூதரை எழுதி மேல்நிலை வைத்து
தூண் நிழல் புறம்பட மாண்விளக் கேற்றி

ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்
கரந்து வரல் எழினியும் புரிந்துடன் வகுத்து.

**அரங்க அலங்காரம்**

ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுடன் நாற்றி
விரந்துபடக் கிழந்த அருந்தொழில் அரங்கத்து

உதவி 1 : அடே அப்பா இவ்வளவு நுட்பமான அரங்கு. இப்பவும் இல்லையே.

உதவி 2 : அரங்கு சரி, ஆட்டத்தைச் சொல்லுங்கோ.

முதல்வர் : ஆடற்கலைக்கெனவே அமைத்தகலை அரங்கினிலே ஆடல் ஆசான், பாடல் ஆசான், யாழ் ஆசான், குழல் ஆசான், மத்தள வித்தகரும், கண்ணுமை விண்ணர் களும் குயிலுவக கலைஞர்களும் கூடியொன்றாய் இசை முழங்க பொன்னால் வடிவமைத்த பூங்கொடி பெண் ணுருவில் மின்னல் கொடி போலாடக் கண்டவர்கள் மெய்மறந்தார்.

உதவி 1 : இன்னும் சொல்லுங்கோ எப்படி ஆடினாள்?

பாட்டு : குயிலுவக் கலைஞர் நெறிப்பட நிற்க
வலக்கால் முன்மிதித்து ஏறி அரங்கத்து ஏறி

**வெண்பா**

எண்ணும் எழுத்தும் இயல்ஐந்தும் பண்நான்கும்
பண்ணின் கூத்துப் பதினொன்றும் - மண்ணின்மேல்
போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவி
வாக்கினால் அரங்கத்தில் வந்து.

முதல்வர் : அற்புதமான ஆடலைக் கண்டு மன்னன் மிக மகிழ்ந் தான். கலைஞர்க்கு வழங்கப்படும் அதிஉயர் விருதா கிய தலைக்கோல் கட்டமும், பச்சைமாலையும், 1008 களஞ்சு பொன்னால் செய்யப்பட்ட பொன்மாலையும், மாதவிக்குப் பரிசாகக் கொடுத்துப் பாராட்டினான். விழா முடிந்தது. கணிகையர் குலவழக்கப்படி அந்தப் பச்சை மாலையை யார் அதிகவிலை கொடுத்து வாங்கு

கிறாரோ அவருக்கே மாதவி சொந்தமாவாள் என அறிவிக்கப்பட்டது. கூனி என்பாள் சந்திச் சதுக்கத்தில் நின்று மாலையை விலை பேசினாள்.

பாட்டு : வாங்குவாருண்டோ பச்சைமாலை வாங்குவாருண்டோ
மாதவியின் ஆடல்கண்டு மன்னன்தந்த பச்சைமாலை
இந்தமாலை வாங்குவார்க்கு மாதவியாள்
சொந்தமாவாள்
அதிகவிலை தருவார்க்கே அவள் அழகும்
சொந்தமாகும்.

உதவி 1 : இது பெரிய புதமையாயிருக்கே.

உதவி 2 : அதுதான் கணிகையர் வழக்கம் என்றாரே. பொறு பொறு என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

முதல்வர் : சபையிலே இருந்த கோவலன் என்பான் எழுந்தான் ஆடலும், பாடலும், அழகும் நிறைந்த அற்புதக் கலையரசி மாதவியை நீங்கள் கேட்கும் பணம் தந்து வாங்குவேன் என்று கேட்ட பணம் கொடுத்தான். மாலை அவன் கைக்கு வந்தது. மாதவியின் கழுத்தில் மாலையைச் சூட்டி அவளுடன் அவள் மாளிகைக்கே போனான்.

உதவி 1 : அது சரி. இவன் யார்? எங்கிருந்து வந்தவன்? கலியாணம் கட்டியவனோ என்றெல்லாம் பார்ப்பதில்லையா?

முதல்வர் : இல்லைப் பணத்தைத்தான் பார்ப்பது கணிகையர் வழக்கம்.

உதவி 2 : அது கிடக்கட்டும். உங்களுக்கும் கோவலனை யாரென்று தெரியாதோ?

முதல்வர் : தெரியும். சொல்கிறேன் கேளுங்கள்.

பாட்டு : காவிரிப்பூம் பட்டினத்துப் பெருஞ்செல்வச் சீமானாம்
மாசாத்துவான் மகன் கோவலன் என்னும் இவன்
தேசம் புகழ் பெருவணிகன் மாநாய்க்கன் திருமகனாம்
மங்கையர் திலகமான கண்ணகியை மணமுடித்தோன்
பொங்குபுகழ்ப் பெருங்கலைஞன் மாதவிபின் போனானே.

முதல்வர் : கோவலன் தன் மனைவி கண்ணகியை மறந்தான். மாதவியின் அழகும் ஆடலுமே தஞ்சமெனக் கிடந்தான். அங்கே கண்ணகி அழுது புலம்பினாள். இங்கே மாதவி இன்பக்களி கொண்டாள். காலம் ஓடியது. காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா வந்தது.

உதவி 2 : அதென்ன இந்திரவிழா என்றால்?

முதல்வர் : சித்திரைமாதப் பூரணை நாளில் காவிரிப்பூம் பட்டினத்தை இந்திரலோகம் போல அலங்கரித்து, மக்கள் எல்லோரும் வந்து கூடி மகிழ்வார்கள்.

பாட்டு : பெருஞ்செல்வச் சீமான்களும் அரசர்களும்
துணைவியரும்
அருங்கலைஞர் யாவருமே அங்குவந்து கூடிடுவார்
திரும்புகின்ற பக்கமெல்லாம் களியாட்டம் கோலமிடும்
விரும்பும் வகையிலெல்லாம் ஆடிப்பாடி
மகிழ்ந்திடுவார்.

உதவி 1 : அங்கு கோவலன் மாதவி வரவில்லையா?

முதல்வர் : வராமல் விடுவார்களா? வந்தார்கள். கோவலன் யாழ் வாசித்துக் காட்டினான். மாதவி அற்புதமாக ஆடினாள். 11 வகைக் கூத்துக்களும் ஆடினாள். கடலாடிக் களித்தார்கள்.

உதவி 2 : அது என்ன பதினொரு வகைக் கூத்து?

பாட்டு : கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லிக்கூத்து
குடைக்கூத்து. துடிக்கூத்து, மற்போர்க் கூத்து
குடக்கூத்து. பேடிக்கூத்து, பாவைக் கூத்து
கடையக் கூத்து. மரக்கால் கூத்து ஏனம் பதினொன்று
ஆடிக்களித்து ஆனந்தங் கொண்டார்கள்.

முதல்வர் : கோவலன் யாழை வாங்கி யாழ் மீட்டிப் பாடினான். காதல் பெண் ஒருத்தியை நினைந்து பாடுவதுபோல் பாடினான்.

மாதவியும் யாழை வாங்கி அவன்போலவே காதலன் ஒருவனை நினைந்து பாடுவதுபோலப் பாடினாள். கோவலனுக்கு மாதவிமேல் சந்தேகம் வந்துவிட்டது.

இவள் கணிகைதானே. என்னைவிடுத்து வேறு யார்மீதோ காதல் கொண்டாள் என எண்ணிப் பிரிந்து போனான். மாதவியோ கோவலன் பிரிவு தாங்காமல் ஊன், உறக்கம் இன்றிக் கிடந்தாள்.

உதவி 1 : இதென்ன ஆச்சரியம். இப்படியும் நடக்குமோ?

உதவி 2 : ஏன் நடக்காது. முன் கண்ணகியை விட்டுப்பிரிந்து மாதவி யிடம் வந்தவன்தானே.

உதவி 1 : எங்கே போவான்?

உதவி 2 : வேறெங்கே கண்ணகியிடம்தான் போனான்.

பாட்டு : பொன்னோடும் பொருளோடும் போன கோவலன் - இப்போ
மண்பார்த்து வெறுங்கையாய் வெட்கிவந்தான்
வாருங்கள் வாருங்கள் என்று கண்ணகி - அவனை
வரவேற்று ஆறுதல் செய்து நின்றனள்
செல்வமெல்லாம் தொலைத்துவிட்டேன் கண்ணகிமாதே -
இப்போ
செய்வதொன்றும் தெரியாமல் திகைக்கின்றேன் பெண்ணே.

முதல்வர் : என்று அழுது நின்றான். கண்ணகி ஆறுதல் கூறினாள்.

பாட்டு : என்காலில் சிலம்பிருக்கு விற்றுவிட்டதை
நன்றாகத் தொழிலொன்றைத் தொடக்கிவாழலாம்

முதல் : என்று ஆறுதல் சொல்லி வாழ வழிகாட்டினாள். பாண்டி நாட்டு மதுரையிலே பொற்கொல்லர் வீதியிலே நல்ல விலைக்கு விற்கலாம் என்று இருவரும் சென்றார்கள். அங்கு சிலம்புக்கு விலைபேசுகையில், அரசியின் சிலம்பைக் களவெடுத்த பொற்கொல்லன், அரசனிடம் இந்தச் சிலம்பைக் காட்டி இவனே களவெடுத்தான் என மாட்டிவிட்டான். அரசன் ஏவலரை அனுப்பிக் கோவலனைக் கொன்று விட்டான்.

உதவி 1 : பாவம் கண்ணகி, ஆவேசம் கொண்டாள். அரசனிடம் நீதி கேட்டு வாதாடித் தன் மற்றச் சிலம்பைக் காட்டிக்

கோவலன் கள்வனல்லன் என்பதை நிலைநாட்டினாள். மன்னன்தான் செய்த பழிக்கஞ்சி உயிர்விட்டான். பாண்டிமாதேவியும் உயிர்விட்டாள். தன் கணவனைக் கொன்ற மதுரைமாநகரை தீக்கிரையாக்கிவிட்டுத்தான் சேர நாட்டில் கண்ணகி தெய்வ மானாள்.

இதையெல்லாம் அறிந்த மாதவி ஆறாத்துயர் கொண்டாள்.

கணவனே தெய்வமென்று எண்ணிவாழ்ந்த மாதவி இனி இந்தக் கணிகையர் வாழ்வே வேண்டாமென்று துணிந்தாள்.

பாட்டு : பொட்டிழந்தாள் பூவிழந்தாள்
பொன்னணியும் பட்டிழந்தாள்
ஊன் உறக்கம் தானிழந்தாள்
உயிர்விடவும் தான்துணிந்தாள்
ஆறுதல் சொன்னவரை அருவருத்து ஒதுக்கிவிட்டாள்

முதல்வர் : அவ்வூர்ப்புறத்தே தவமிருந்த அறவண அடிகள் என்பவரிடம் போனாள். தனக்கு நேர்ந்த துயரைச் சொன்னாள். அவர் ஆறுதல் கூறித் துன்பத்துக்குக் காரணம் பற்றுத்தான். பற்றைத் துறந்தால் துன்பம் தானாய் விலகிவிடும் என்று உபதேசித்தார்.

பாட்டு : பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிதிநீ என்றார்.

உதவி 1 : அங்கே கண்ணகி இங்கே மாதவி இருவருக்கும் இந்தக் கதியா?

உதவி 2 : அதுக்கு நாங்கள் என்ன செய்வது. கண்ணகி தெய்வமானாள். மாதவி என்னவானாள் என்று நீங்கள் சொல்லுங்கள்.

முதல்வர் : அறவண அடிகளிடம் உபதேசம் கேட்ட மாதவி எல்லாச் செல்வங்களையும் தாய் சித்திராபதியிடம் ஒப்படைத்து விட்டு இந்த கலையும் வேண்டாம் கணிகையர்குல வாழ்வும் வேண்டாம் என்று தலையை மொட்டையடித்துத் துறவியானாள். தனக்கும் கோவலனுக்கும் பிறந்த

செல்வக் குழந்தையான மணிமேகலையையும் மொட்டையடித்துத் துறவியாக்கினாள்.

உதவி 1 : ஐயோ பாவங்கள். கோவலனால் கண்ணகி, மாதவி, அவன் மகள் மணிமேகலையும் கதி இழந்தார்களே.

முதல்வர் : மாதவி மணிமேகலையையும் அறவண அடிகளிடம் உப தேசம் பெறச்செய்தாள். இருவரின் துறவு வாழ்க்கையை யும் கண்டு உலகம் வியந்தது. தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளும் நிறைகாத்து வாழ்ந்தார்கள்.

உதவி 2 : பிறகு என்ன நடந்தது?

பாட்டு : மாதவிமாதும் மணிமேகலையும் - இந்த
மன்னுயிர் வாழப்பணிபல செய்தார்
செல்வமும் இளமையும் நிலையாது என்று - தம்மைச்
சேர்ந்தவர்க் கெல்லாம் உபதேசம் செய்தாள்.

முதல்வர் : மாதவியின் துறவால் அரசன் திகைக்க, ஊரார் வியக்க சுற்றத்தார் இரங்க, பெற்றதாயும் வருந்தச் சீர்திருத்தம் செய்தாள். கணிகையர்குலத்து வாழ்வுக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்பதை நாடறியச் செய்தாள். தன் வயிற்றில் பிறந்த செல்வி மணிமேகலையைத் தவச் செல்வியாக்கினாள். சிறைக்கோட்டத்தை அறக்கோட்ட மாக்க வேண்டும், பசித்து வருந்துவோரின் பசிப்பிணி தீர்க்க வேண்டும் என்று தவமிருந்தாள். ஒருநாள்

பாட்டு : மணிமேகலையின் கனவில் ஒருநாள்
மணிமேகலையெனும் தெய்வம் தோன்றி
வைகாசிவிசாகப் பூரணை நிலவில்
மணிபல்லவத்தின் கடலின் நடுவே
அட்சயபாத்திரம் ஒன்று தோன்றும்
அமுத சுரபியாம் அதனை எடுப்பாய்
அதனுள் சிறிது அமுதம் இடுவாய்
அள்ள அள்ளக் குறையா அமுதம்
அதனுள் சுரக்கும் அதைக் கொண்டேநீ
பசித்தோர்க் கெல்லாம் உணவு கொடுத்து
பசிப்பிணி தீர்க்கும் பணியினைத் தொடர்வாய்.

முதல்வர் : என்று சொல்லி மறைந்தது. அந்தச் சொல் கேட்ட மணி மேகலை மணிபல்லவம் சென்று அட்சயபாத்திரம் தோன்றக் கண்டு எடுத்துப் பசித்தோர்க்கு உணவளிக் கும் பாவையானாள். இவளைக் கதாநாயகியாகக் கொண்டு மணிமேகலை எனும் காவியம் பிறந்தது.

உதவி 1 : அதுசரி, கண்ணகியின் வாழ்வு கணவனுக்காகவே வாழ்ந்து முடிந்தது.

உதவி 2 : கோப்பெருந்தேவியின் வாழ்வு கணவனுடன் முடிந்தது.

முதல்வர் : மாதவியின் வாழ்வு கலையில் தொடங்கி காதலில் மலர்ந்து அதையும் கடந்து அறத்துறையில் சென்றது.

பாட்டு : கணிகையர் குலத்தின் இழிபெயர் களைந்தாள்
துறவுபூண்டு அறநெறி வளர்த்தாள்
சிறைக்கோட்டங்கள் அறக்கோட்டமாக
பசிப்பிணி தீர்க்கும் மருத்துவராக
தன்மகள் மணிமேகலையை இந்தத்
தரணிபோற்றும் பாட்டுடைத் தலைவியாய்
சேற்றில் மலர்ந்து செந்தாமரைபோல்
தன்நிறை காத்த மாதவி மாதருள்
மாணிக்கமெனவே போற்றுவம் நாமே.

மங்களம் மங்களம் மங்களம்
எங்கள் வில்லுப்பாட்டுக் கேட்ட எல்லோருக்கும் மங்களம்.

சுபம்.

வில்லிசை

# 19. அறநெறி கற்போம்

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் சரஸ்வதியே - வரம்நீ
தந்தருள்வாய் சரஸ்வதியே

சபையில் உள்ள பெரியோரே, தாய்மாரே, தந்தையரே
உங்களுக்கு எங்களது உளமார்ந்த வணக்கங்கள்

முதல்வர் : அன்பான சபையோர்களே இன்று உங்களுக்கு மனதுக்கு இனியதோர் விருந்து தர இருக்கின்றோம்.

உதவி : என்ன விருந்தா? வில்லிசை என்று சொல்லி வர வழைத்து விட்டு விருந்து வைக்கப் போகிறீர்களா?

முதல்வர் : ஆமாம், ஆமாம்.
இந்த விருந்து வாய்வழியாக வயிற்றை நிரப்பும் விருந் தல்ல

உதவி 2 : எந்தநேரமும் இவனுக்குச் சாப்பாட்டெண்ணம்தான். இது எதுவோ ஒரு புதுவித விருந்துபோலிருக்கு. நீங்கள் சொல்லுங்கோ.

முதல்வர் : இந்த விருந்து செவிவழியாக அறிவை நிறைக்கும் விருந்து

உதவி : அப்படியென்றால்?

பாட்டு : அறநெறி கற்போம் அதன்படி வாழ்வோம்
என்பதைச் சொல்லும் இனியவிருந்து
அறநெறிக் கல்வியின் அவசியம் பற்றி
அனைவரும் அறியத் தந்திடும் விருந்து.

உதவி : அதென்ன அறநெறி. அதை முதல் சொல்லுங்கள்.

முதல்வர் : அதைத்தானே சொல்லப்போகின்றேன். தனக்கும் பிறர்க்கும் நன்மை தருவது எதுவோ அதுவே அறநெறி. அறம் என்றால் நல்லது என்று பொருள். நெறி என்றால் வழி என்பது பொருள். ஆகவே நல்லதைத் தேடிச் செல்லும் வழியே அறநெறி.

பாட்டு : நல்லதை நினைப்போம் நல்லதைச் செய்வோம்
நல்ல வழியில் நடந்திடுவோம்
நல்லதைச் செய்தால் நன்மையுண்டாகும்
அல்லதைச் செய்தால் தீமை உண்டாகும்.

உதவி : இப்படிப் போதிக்கின்றீர்களேயன்றி அறநெறியில் வாழ்பவர்கள் யாரையாவது காட்டமுடியுமா?

முதல்வர் : அதைக் காட்டத்தானே இதைச் சொல்லவந்தேன். கதையைக் கேளுங்கள்.

எங்கள் ஊரிலே ஒரு சாதாரண குடும்பத்தில் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். இருவரும் ஆண்பிள்ளைகள். மூத்தவனுக்கு ஆதித்தன் என்றும் இளையவனுக்கு ஆரூரன் என்றும் பேர் வைத்து அன்பாக வளர்த்து வந்தார்கள். கல்வி கற்றுவரும் காலத்தில் இருவரையும் அறநெறியில் சிறந்தோராய் வாழவைக்க வேண்டும் என்று விரும்பி அறநெறி பாடசாலைக்கு அனுப்பி வைத்தார்கள்.

பாட்டு : அறநெறிப் பாடசாலையிலே
ஔவையார் சொன்ன அறநெறிகள்
அறஞ்செய்ய விரும்பு முதலாக
ஆத்திசூடி படித்தார்கள்

அதுமட்டுமல்ல

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்றெனும்
தந்தைசொல் மிக்க மந்திரமில்லை
தாயிற் சிறந்த கோயிலுமில்லை
என்ற கொன்றை வேந்தனொடு
கல்வி ஒழுக்கமும் கற்றார்கள்

உதவி 1 : கவனமாகப் படித்தார்களோ அல்லது கடன்வழிக்குப் படித்தார்களோ

முதல்வர் : மூத்தவன் ஆதித்தன் கவனமாகப் படித்தான். இளையவன் ஆரூரனுக்குப் பாடத்தில் கவனம் செல்லவில்லை. அலட்சியம் செய்துவிட்டான்.

உதவி 2 : ஔவையாரின் அறநெறி மட்டும்தான் படிப்பித்தார்களா?

முதல்வர் : அதுமட்டுமல்ல, திருவள்ளுவர், இளங்கோவடிகள், சங்கநூற் புலவர்கள் சொன்ன அறங்கள் எல்லாம் கற்பித்தார்கள்.

உதவி 1 : அவர்கள் அப்படி என்ன அறங்கள் சொன்னார்கள்?

முதல்வர் : எல்லாவற்றையும் திரட்டிச் சொல்கிறேன் கேளுங்கள். உங்களுக்கும் உதவும்.

பாட்டு : உண்மை பேசுதல் நன்றாகும் பொய்மை பேசுதல் தீதாகும்
அன்பு செய்தல் நன்றாகும் கோபம் கொள்ளல் தீதாகும்
பொறுமை காத்தல் நன்றாகும் பொறாமை கொள்ளல் தீதாகும்
இல்லார்க்கீதல் நன்றாகும் களவு எடுத்தல் தீதாகும்
உயிரைக் காத்தல் நன்றாகும் உயிர்கொலை செய்தல் தீதாகும்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
கொள்ளைக் கோஷ்டியும் ஆகாது.

என்று இவ்விதமாக மனிதன் மனிதனாக வாழ்வில் உயர்வதற்குரிய அறங்கள் எல்லாம் கற்பிக்கப்பட்டன.

உதவி : அதுசரி ஆதித்தனும் ஆரூரனும் முறையாகக் கற்றார்களா?

முதல்வர் : ஆதித்தன் முறையாகக் கற்றான். கல்வியிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்து நீதிபதிப் பதவியும் பெற்றான். ஆரூரனுக்கோ அறநெறிக்கல்வி அடியோடு பிடிக்கவில்லை. கெட்ட கூட்டத்தினருடன் கூடிக் கொள்ளையடித்தும், குடித்தும், வெறித்தும் படாடோபமாக வாழ்ந்தான். பெற்றாரையோ அண்ணனையோ மதிக்காமல் அவர்களை மறந்தான்.

பாட்டு : கொள்ளையடித்தும் குடித்துக்கொண்டாடியும்
போதைப் பொருளைக் கடத்தி விற்றும்
மதுக்கடை வைத்தும் செல்வம் சேர்த்து
தன்பெயர் ஆகாஸ் எனவேமாற்றிப்
பென்னம் பெரிய பிரமுகர் போலே
பட்டணத்தினிலே பகட்டாய் வாழ்ந்தான்.

உதவி : ஆமா இதொன்றும் பெற்றார்க்கோ அண்ணனுக்கோ தெரியாதோ?

முதல்வர் : தெரியாது, அவன்தான் பெயரையும் ஆகாஸ் என மாற்றிப் பட்டணத்திலே யாரும் கிட்ட முடியாத பிரமுகர் போலே வாழ்கிறானே.

அவனுடைய வீட்டுக்கு

பாட்டு : அரசியல்வாதிகள் மந்திரிமார்
அடிக்கடி வந்து போவார்கள்
பென்னம் பெரிய முதலாளிமார்
புதுப்புதுக் கார்களில் வருவார்கள்
அல்சேசன் நாய்களும் காவல்காரரும்
கண்தூங்காமல் காத்திருப்பார்.

உதவி : இதெல்லாம் அரசாங்கத்துக்குத் தெரியாதோ?

முதல்வர் : பொய்மை கனகாலத்துக்கு மறைந்திருக்காது. என்ன நடந்தது பாருங்கள்.

பாட்டு : கொள்ளை அடித்த கூட்டத்தினர்க்குள்
பொல்லாப் பகைமை மூண்டதுவே
ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்தார்
ஒருநாள் வந்தது பெரும்படையே
வீட்டைச் சுற்றி வளைத்துப் பிடித்து
அங்குள கடத்தல் பொருளெலாம் பறித்து
ஆகாஷ் குடும்பமும் கைதானார்.

உதவி : ஓகோ! அறநெறி தவறிய செல்வமெலாம் அரை நொடிப் பொழுதில் அழியுமென அறநூல் சொன்னது சரியாச்சு.

முதல்வர் : அதுமட்டுமல்ல. ஆகாஷ் மீதான வழக்கு நீதிமன்றத் துக்கு விசாரணைக்கு வந்தது.

உதவி : நீதிபதி ஆதித்தன்தானோ?

பாட்டு : அறநெறி தவறா ஆதித்தன் தான்
அதற்கு நீதிபதியாய் வந்தார்
அனைத்துச் செல்வமும் பறிமுதல் செய்து
ஆகாசுக்கும் மறியல் தண்டனை
விதித்துத் தீர்ப்பு எழுதப்பட்டது.

உதவி : அதுசரி, ஆதித்தனுக்கு ஆகாஷ் தன் தம்பி என்பது தெரியாதோ?

முதல்வர் : தெரியாது. ஆரூரன்தான் ஆகாஷ் என்று யாருக்குமே தெரியாது.

உதவி : பிறகு என்ன நடந்தது?

முதல்வர் : ஆகாசுக்கு ஆதித்தனைத் தெரியும்தானே. ஓடிவந்து அண்ணா என்று அழைத்து ஆதித்தனின் காலில் வீழ்ந்தான் ஆகாஷ். அண்ணா நான் உன் தம்பி ஆரூரன் அண்ணா. எனக்கு இரங்கு அண்ணா என்றழுதான்.

பாட்டு : அவரவர் செய்த பாவத்தின் தண்டனை
அவரவர்க்குத்தான் உரியது ஆகும்
அறநெறி தவறிய உனக்கும் அதுதான்
உலகத்துக்கும் இதுவே படிப்பினை
என்றே சென்றார் ஆதித்தன்
அறநெறிக் கல்வியைக் கற்றிடுவோம்
ஆதித்தன்போலே உயர்ந்திடுவோம்.

மங்களம் மங்களம் மங்களம்
அறநெறிக் கல்விக்கு மங்களம்.

வணக்கம்.

உ
சிவமயம்

வில்லிசை

# 20. கல்விக்கண்

காப்பு

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே

வாணி சரஸ்வதியோ சரஸ்வதியே
நல்வாக்குத் தாருமம்மா - அம்மா
நல்வாக்குத் தாருமம்மா.

முதல்வர் : சபையில் உள்ள பெரியோரே, தாய்மாரே, தந்தையரே எமைப்போன்ற இளையோரே எல்லோர்க்கும் எம் வணக்கம்.

அன்பர்களே நாங்கள் இன்று உங்களுக்கு ஒரு இனிய செய்தி சொல்லப் போகின்றோம்.

உதவி 1 : இனிய செய்தியா, சொல்லுங்கள், சொல்லுங்கள்.

உதவி 2 : இனிப்பு, சொக்காவும் தருவீர்களா?

முதல்வர் : நினைக்க நினைக்க இனிக்கும் செய்தி.
ஆமா உங்களை ஒன்று கேட்பேன் சொல்வீர்களா.

உதவி 1 : கேளுங்கள், நீங்கள் கேட்பதற்குப் பதில் சொல்லத் தானே நாங்கள் வந்திருக்கிறோம்.

முதல்வர் : நீங்கள் என்றும் சந்தோசமாக வாழ்வதற்கு உங்களுக்கு என்ன வேண்டும்?

உதவி : பணம் வேண்டும், வீடு வேண்டும், கார் வேண்டும், நண்பர்கள் வேண்டும், நல்ல சாப்பாடு வேண்டும்...

முதல்வர் : இதெல்லாவற்றையும் தருவது எது?

உதவி : அது... அது... அது.. எது...

முதல்வர்
பாட்டு : எங்கள் வாழ்வு வளம் பெறவும்
இன்பமாக வாழ்ந்திடவும்
எங்கும் என்றும் கைகொடுக்கும்
இனியதொன்றுள எது தம்பி

..............................................................

அதுவே கல்வி என்பதைநீ
அறிவாய் அறிவாய் என்தம்பி

வசனம் : நீங்கள் சொன்ன பணத்தையும், வீட்டையும், கரையும், நண்பர்களையும், நல்ல சாப்பாட்டையும் நமக்குத் தருவது கல்விதான் தம்பி.

உதவி 1 : அதெப்படி எல்லாவற்றையும் கல்வி தரும் என்கிறீர்கள்?

உதவி 2 : ஆமா இதை நம்பமுடியவில்லையே.

முதல்வர் : நம்பமுடியவில்லையா? நாம் இப்போ எங்கள் நாட்டில் எங்கள் ஊரிலா வாழ்கின்றோம். இல்லையே. எங்கள் அப்பா அம்மாக்கள் புலம்பெயர்ந்து வரும்போது நாங்கள் இப்போது இருக்கும் வீட்டையும் நாம் ஓடுகின்ற காரையும், நாம் அனுபவிக்கின்ற செல்வத்தையும் அங்கிருந்தா கொண்டு வந்தார்கள்? இல்லையே. இங்கு தானே தேடினார்கள். எதைக் கொண்டு தேடினார்கள். தாங்கள் கொண்டுவந்த கல்வியைக் கொண்டுதான் தேடினார்கள்.

பாட்டு : நாங்கள் செல்லும் இடமெல்லாம்
எம்முடன் வருவது கல்வி தம்பி
எந்தப் பொருளையும் பிறர்கவர்வார்
எங்கள் கல்வியை எவர்கவர்வார்
கல்வி ஒன்று இருந்திட்டால்
எல்லாம் பெற்றிடலாம் தம்பி.

உதவி 1 : ஓமோம். நீங்கள் சொல்வது உண்மைதான். எங்களிட முள்ள எந்தச் செல்வத்தையும் கள்வர்கள் களவெடுப் பார். கல்வியை யாரும் களவெடுக்க முடியாது.

உதவி 2 : அதுமட்டுமல்ல. எல்லாம் அழிந்தாலும் கல்வி அழியாது. அதுக்கொரு பாட்டும் இருக்கே.

முதல்வர்
பாட்டு : வெள்ளத்தால் போகாது வெந்தழலால் வேகாது
வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைபடாது
கொடுத்தாலும் எடுத்தாலும் வளர்வது கல்விதான்!

உதவி 1 : ஆமா இப்பதான் விளங்குது.

வெள்ளத்தாலே, சுனாமியாலே, நெருப்பாலே, கள்வ ராலே எல்லாம் அழியும் என்பது உண்மைதான். ஆனால் கல்வி ஒன்றாலும் அழியாது என்பது உண்மை.

உதவி 2 : ஓகோ இதுதான் நீங்கள் சொல்லவந்த இனிப்பான செய்தியோ நல்லாயிருக்கு இன்னும் சொல்லுங்கோ.

முதல்வர்
பாட்டு : எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமென
ஔவை சொன்னதை அறியீரோ
கண்ணுடை யோரே கற்றவர் மற்றவர்
கண்ணிருந்தும் குருடாவாரே.

உதவி 1 : அதெப்படி கல்வி இல்லாதவர் கண்ணிருந்தும் குருடா வர் என்கிறீர்கள்?

முதல்வர் : எல்லாருக்கும் கண்ணிருந்தாலும் எழுதப்படிக்கத் தெரிந் தவர்களுக்குத்தான் கண்ணாற் பிரயோசனம் உண்டு.

வழிப்போக்கர் பலர் ஒருவழியால் போய்க்கொண்டிருக் கிறார்கள். சந்தியிலே வழிகாட்டியில் அந்த வீதி போகும் இடம் எது என்று எழுதப்பட்டிருக்கிறது. வாசிக் கத் தெரிந்தவன் அதைப்படித்துவிட்டுச் சரியான வழியில் போகிறார். வாசிக்கத்தெரியாதவர் அதிலே என்ன எழுதி இருக்கிறது என்று தெரியாமல் போகும் வழி அறியாமல் தடுமாறுகின்றார். அவருக்குக் கண் இருந்தும் குருடராகத்தானே தடுமாறுகிறார். ஆதலாலே கண்ணிருந்தும் கல்வி இல்லாதவர் குருடரேயாவார்.

பாட்டு : கல்வி கற்ற மனிதர்களே
கண்ணுடையோர்கள் ஆவார்கள்
கல்விகல்லா மனிதர்க்கு

கண்ணிருந்தும் அதுகுருடாகும்
கல்விக் கண்ணைத் திறந்துவிட்டால்
கண்ணின் பயனைப் பெற்றிடலாம்.

உதவி 1 : இப்போதான் விளங்கிச்சுது கல்விதான் கண் என்று.

உதவி 2 : கல்வி இல்லாதவர்கள் விலங்குகளே ஆவார்கள்.
கண் இருந்தும் குருடர்களே ஆவார்கள்

முதல்வர் : கற்றறிந்தவர்கள் எங்கு சென்றாலும்
கல்வியே அவர்க்குக் கைகொடுக்கும்
கல்வியிலாதார் எங்கு சென்றாலும்
குருடர் போல் தடுமாறிடுவார்.

உதவி 1 : ஆனபடியால் எல்லாரும் கல்வி கற்கவேண்டும்.

உதவி 2 : இதுதான் இன்றைய இனிய செய்தி.

முதல்வர்
பாட்டு : எல்லோரும் வாருங்கள் கற்றிடுவோம்
கல்வியால் எல்லாமும் பெற்றிடுவோம்
கல்வியே எங்களின் கண்ணாகும்
கல்விக் கண்திறந்திடல் கடனாகும்.

எல்லோரும்
பாட்டு : விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டுக் கேட்டவர்கள்
எல்லோருக்கும் எங்களுடை வணக்கம் - எங்களை
மதித்தவர்கள் எல்லோருக்கும் வணக்கம் வணக்கம்.

(2012இல் சுவிஸ் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் செய்தது)

உ
சிவமயம்

வில்லிசை

## 21. மானம் காத்த மன்னர்கள்

பாட்டு: தந்தனத் தோம் என்று சொல்லியே வில்லிசைபாட
வந்தருள்வாய் கணதியே வரம்நீ தந்தருள்வாய்
கணபதியே

சபையில் உள்ள பெரியோரே, தாய்மாரே, தந்தையரே
தம்பியரே தங்கையரே அண்ணன்மாரே அக்காமாரே
உங்களுக்கு எங்களது உளமார்ந்த வணக்கங்கள்
வணக்கம் வணக்கம் வணக்கம்

முதல்வர்: அன்பர்களே நாம் இன்று "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்" என்னும் வில்லுப்பாட்டு பாடவந்துள்ளோம்.

பாட்டு : நாடிலங்கை மாநகரில் நல்லதமிழ் பாடவல்லார்
கூடிவளர் கொழும்பினிலே
குடியிருக்கும் மாணவர்நாம்
செந்தமிழில் சொல்லெடுத்துத்
தித்திக்கும் இசைவகுத்து
பாடுகிறோம் வில்லுப்பாட்டுப்
பக்குவமாய்க் கேட்டிடுவீர்

உதவி 1 : ஆமா என்ன வில்லுப்பாட்டென்றீர்கள்?

முதல்வர்: மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் என்னும் வில்லுப் பாட்டு.

உதவி 2 : இது எங்கோ கேள்விப்பட்ட பெயராயிருக்கே.

முதல்வர்: ஆமாம், திருக்குறள் படித்தவர்கள்தானே. அதில் கேள்விப் பட்டிருப்பீர்கள்

பாட்டு : மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம்வரின் என்றுசொன்ன
வள்ளுவர் குறளுக்குக் கதைஒன்று சொல்வோம்
வடிவாக இருந்து கேளுங்கள் நீங்கள்

உதவி 1 : ஆமா கவரிமா என்றால் என்ன? அது ஏன் மயிர்நீக்க வேண்டும். அதுக்காக ஏன் உயிர்நீக்க வேண்டும்?

உதவி 2 : அதைத்தானே சொல்லப்போறாராம். வடிவாக இருந்து கேட்டுகவிடு. நீங்கள் கதையைச் சொல்லுங்கோ.

முதல்வர் : இமயமலைச் சாரலிலே கவரிமா என்று ஒரு விலங்கு இருந்ததாம். அதன் உடலெங்கும் நீண்ட மயிராம். அந்த மயிரிலே ஒரு மயிர் விழுந்தாலும் அத உயிரை விட்டுவிடுமாம்.

உதவி 1 : அந்தக் கவரிமா இப்பவும் இருக்கோ?

முதல்வர் : இப்ப இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு காலத்தில் இருந்ததாக எங்கள் பழந்தமிழ் இலக்கியங்களான புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கு.

உதவி 2 : ஏன் எங்கள் வள்ளுவரும் திருக்குறளில் சொல்லி இருக்கிறார்தானே. வள்ளுவர் சொல் பொய்யாகுமோ. நீங்கள் கதையைச் சொல்லுங்கோ.

பாட்டு : மயிர்போனால் உயிரைவிடும் கவரிமா போலே
மானம் காக்க உயிரைவிடும் மனிதரும் உள்ளார்
கவரிமாவுக்கு மயிர்போல உலகின் உள்ள
மனிதருக்கு மானம் பெரிதாகும் தம்பி
உயிரைவிட்டும் மானத்தைக் காத்திடனும் தம்பி
உயிரினும் மானமே பெரிதாகும் தம்பி.

உதவி 1 : மானம் என்றால் என்ன ஐயா?

உதவி 2 : இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறியே உனக்கு மானம் இருக்கா?

உதவி 1 : மானம் என்றால் என்ன என்று தெரிந்தால்தானே அது இருக்கா என்று சொல்லலாம்.

முதல்வர் : சபைக்கு முன்னாலே இருந்து மானக்கேடாக இருவரும் சண்டைபிடிக்க வேண்டாம். மானம் என்றால் அதான் கௌரவம், உலகம் மதிக்கின்ற மதிப்பு.

பாட்டு : மானமெல்லாம் போனபின்னே வாழ்வதுதான் ஒருவாழ்வா
மானம் இல்லா மனிதர்எல்லாம் விலங்கல்லவோ தம்பி.

உதவி 1 : சரி ஐயா, மானம் காப்பதற்காக உயிர் விட்டவர் கதையைச் சொல்லுங்கள் ஐயா.

முதல்வர்
பாட்டு : சங்கம் வைத்துத் தமிழ்வளர்த்த தென்பாண்டி நாட்டினிலே
பாண்டியன் நெடுஞ்செழியன் ஆட்சிசெய்த காலத்திலே
பாண்டிமா தேவியுடைய காற்சிலம்பு களவுபோச்சே
வேண்டிய இடமெல்லாம் தேடியும் கிடைக்கவில்லை.

வசனம் : அரண்மனைப் பொற்கொல்லனே அதனைக் களவெடுத்து விற்றுவிட்டான். வேறு யாரையாவது மாட்டிவிடலாம் எனக் காத்திருந்தான். அதேகாலத்தில் சோழநாட்டைச் சேர்ந்த கோவலன் என்பான் விதிவசத் தால் வறுமையுற்றுத் தன் மனைவி கண்ணகியின் காற் சிலம்பை விற்றுத் தொழில் செய்யலாம் என்று பாண்டி நாட்டு மதுரையிலே பொற்கொல்லர் வீதியிலே வந்தான். அரண்மனைப் பொற்கொல்லன் அவனைக் கண்டான்.

உதவி 1 : ஓகோ பொற்கொல்லன் அவனைக் கண்டான்.

உதவி 2 : நீ குழப்பாதை. கதையைச் சொல்லவிடு.

முதல்வர் : கோவலன் சிலம்பு வாங்குபவருண்டோ என்று கேட்டுக் கொண்டு வந்தான்.

பாட்டு : வாங்குவாருண்டோ பொற்சிலம்பு வாங்குவாருண்டோ
அத்தனையும் ரத்தினங்கள் வைத்திழைத்த பொற்சிலம்பு
வாங்குவா ருண்டோ பொற்சிலம்பு வாங்குவா ருண்டோ.

வசனம் : பொற்கொல்லன் வாங்கிப் பார்த்தான். அதிசயப்பட்டான். சரியாகத் தான் களவெடுத்த பாண்டிமா தேவியின் சிலம்பு போலவே இருந்தது. இவனைக் கள்வனெனப் பாண்டினிடம் மாட்டிவிட எண்ணினான். கோவலனுக்குச் சொன்னான் "தம்பி இது அற்புதமான பொற்சிலம்பு. அதிகவிலை போகக் கூடியது. சாதாரணமானவர்கள்

வாங்கமாட்டார்கள். இது இந்த நாட்டு அரசிக்குத்தான் பொருத்தம். நீ இங்கே இரு. நான் இதைக்கொண்டு போய்க் காட்டி விலை பேசிவிட்டு வந்து உன்னைக் கூட்டிச் செல்வேன்" என்று இருத்திவிட்டுப் போய்விட்டான்.

உதவி 1 : ஐயோ பாவம். கோவலன் இருக்க வேண்டியதுதான். அவன் சுத்திப்போட்டான்.

உதவி 2 : கோவலனும் கூடப் போயிருக்கலாமே. பாவம்!

முதல்வர்
வசனம் : கதை முடியவில்லை. கொஞ்சம் பொறுங்கோ.

பாட்டு : பொற்கொல்லன் பாண்டியன் அரண்மனைக்குப் போனான்
நற்செய்தி கொண்டுவந்தேன் மன்னவனே கேளும்
அரசியின் பொற்சிலம்பைக் களவெடுத்த கள்வன்
அகப்பட்டான் இதோபாரும் அரசியின் பொற்சிலம்பு.

வசனம் : என்று சொல்லிச் சிலம்பைக் கொடுத்தான். அது சரியாக அரசியின் சிலம்பு போலவே இருந்தது. அரசனும் நம்பிவிட்டான். உடனே ஏவலர்களுக்குக் கட்டளை யிட்டான்.

பாட்டு : ஏவலரே இப்போதே செல்லுங்கள் எனது
தேவியின் காற்சிலம்பைக் களவெடுத்த அந்த
பாவியைக் கொன்றுவிட்டுச் சிலும்புடனேஇங்கு
வாருங்கள் இப்போதே புறப்படுங்கள் என்றான்.

வசனம் : சேவகர்கள் பொற்கொல்லனின் பின்னே போனார்கள். பொற் கொல்லன் கோவலைக் காட்டி இவன்தான் கள்வன் என்று பிடித்துக்கொடுத்தான். அவர்கள் கோவலனைக் கொலைக் களத்துக்கு இழுத்துச்சென்று தலையை வெட்டிக் கொன்று விட்டார்கள்.

உதவி 1 : ஐயையோ, இதென்ன கொடுமை. இப்படியும் ஒரு கொடுமையா?

உதவி 2 : பொற்கொல்லனையல்லோ வெட்டிக் கொல்ல வேண்டும் பாவி, பாவி.

முதல்வர்

வசனம் : கோவலன் கொலையுண்டதை அவன் மனைவி கேள்விப்பட்டாள். கதறினாள், பதறினாள். செல்வமே இப்படியும் ஒரு கொடுமையா என்று கோபம் கொண் டாள். கூந்தல் அவிழக் கோபக்கணல் பறக்க மன்னன் அரசவைக்கப் போனாள்.

பாட்டு : மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் தனிச்சிலம்பும் கண்ணீரும் வடிந்தோட
வையைக்கோன் பாண்டியனின் அசவையில் நின்று
மெய்யாக நாடாளும் மன்னவனும் நீதானோ.

என்று கதறினாள். மன்னன் பெண்ணே நீ யார், ஏன் கோபத்துடன் ஆவேசமாகப் பேசுகிறாய்? என்றான். கண்ணகி மேலும் கோபத்துடன் உன் அரசியின் காற்சிலம்பைக் களவெடுத்த கள்வன் என்று கோவலன் என்பானைக் கொன்றாயே! அவன் மனைவி நான். நீதி கேட்க வந்திருக்கிறேன் என்றாள். மன்னன், பெண்ணே கள்வனைக் கொல்லுதல்தானே நீதி. அதில் என்ன பிழை என்றான்.

பாட்டு : என்காலில் சிலம்பு விற்கவந்த என்கணவன் கள்வனோ

மன்னா
என்காலில் மற்றச்சிலம்பிதோ இருக்கு
இதற்குள்ளே மாணிக்கப் பரல்களே இருக்கு
உன்கையில் இருக்கும் என்சிலம்பைப் பார்நீ
இரண்டினுள்ளும் மாணிக்கப் பரல்களே காண்பாய்.

வசனம் : மன்னன் சொன்னான், பெண்ணே என் மனைவியின் சிலம்புக்குள்ளே முத்துக்கள்தான் இருக்கு என்றான். கண்ணகி அரசன் கையில் இருந்த தன் சிலம்பை வாங்கி நிலத்தில் எறிந்தாள். இரத்தினக்கற்கள் தெறித் துப் பறந்தன. மன்னன் கண்டான் பதைபதைத்தான். ஆராயாமல் செய்த தீர்ப்பால் செங்கோல்நீதி தவறியதே நானோ அரசன் நானே கள்வன் என்று சொன்னபடி சிம்மாசனத்தில் இருந்து வீழ்ந்திறந்தான். பாண்டிமா தேவியும் வீழ்ந்திறந்தாள்.

உதவி 1 : ஐயோ பாவங்கள். அநியாயமாகக் கோவலனைக் கொன்ற பழியால் பாண்டியனும், பாண்டிமா தேவியும் இறந்தார்களே.

உதவி 2 : ஆமா இவர்கள் இறந்ததற்கும் மானத்துக்கும் என்ன தொடர்பு?

முதல்
வசனம் : அன்பர்களே அரசனுக்கு நீதி தவறாமல் அரசாட்சி செய்வது தான் மானம் - நீதி தவறினால் அவர் மானம் போய்விடும். உலகம் பழிக்கும். ஆதலால் மானத்தை விட்டு உயிர் வாழ்வதிலும் பார்க்க உயிரைவிட்டு மானத்தைக் காப்பதே மேல் என மன்னன் உயிரை விட்டான். இன்றும் பாண்டியன் நெடுஞ்செழியனை மானம்காத்த மன்னன் என்று உலகம் போற்றுகின்ற தல்லவா.

உதவி 1 : சரிதான், உயிரினும் மானமே பெரிது. உயிர் எப்பவோ ஒருநாள் போகத்தான் போகுது. மானம் ஒருகாலமும் போகக்கூடாதுதான்.

முதல்வர் : வள்ளுவர் என்ன சொன்னார்? உயிர் நீப்பர் மனம்வரின் என்றாரல்லவா. உயிரை விடுவதால் மானம் காப்பாற்றப்படுமானால் உயிரைவிடுதலே மேல் என்பதே பொருள். பாண்டியன் உயிரைவிட்டு மானம் காத்தான். உலகுள்ள வரை அவன் பெருமை பேசப்படும்.

உதவி 2 : ஆமா, இது மெத்தக் கஷ்டமானதல்லவோ, இப்படி மானங் காப்பதற்காக உயிர்விட்டவர்கள் வேறும் யாரும் இருக்கி றார்களோ.

முதல்வர் : ஏன் இல்லை. எத்தனையோ போர் இருக்கிறார்கள். இப்போ பாண்டிய நாட்டுக்கதை கேட்டீர்கள். சோழநாட்டுக் கதை சொல்வேன் கேளுங்கள்.

பாட்டு : மாப்பெரும் வளங்கொழிக்கும் சோழவள நாட்டினிலே
கோப்பெருஞ் சோழனெனும் மாமன்னர் ஆண்டுவந்தார்
மன்னனுக்கு மைந்தர் இருவர் இளவரசர் ஆனார்கள்
அன்னவர்கள் இருவரும் தாம்தாமே ஆளவெனத்
தம்முள்ளே பகைகொண்டார் தந்தையையும்
மதிக்கவில்லை
தான் என்ன செய்யலாம் என மன்னர் தவித்தாரே

முதல்வர் : தான் மைந்தர்களுடன் போரிட்டாலும் பழிச்சொல் வரும். அவர்கள் தம்முள் போரிட்டாலும் சோழநாட்டுக்குப் பழிச் சொல் வரும். தன்சொல்லை மதிக்காத பிள்ளைகளை அடக்கவும் முடியவில்லை. அவர்களுக்கு அடங்கவும் முடிய வில்லை. சோழநாட்டின் மானத்தைக் காக்க என்னவழி என்று சிந்தித்தார். தன் உயிரைவிட்டு மானத்தைக் காக்கத் துணிந்தார். வடக்கிருந்து உயிர் விட்டார்.

உதவி 1 : வடக்கிருத்தல் என்றால்?

முதல்வர் : உணவோ நீரோ பருகாமல், உறங்காமல், வடக்கு நோக்கி இருந்து உயிர்விடுதலே வடக்கிருத்தல்.

உதவி : பாண்டியநாட்டில் பாண்டியன் நெடுஞ்செழியன், சோழநாட் டில் கோப்பெருஞ்சோழன், சேரநாட்டிலும் யாரும் இருப்பார் களோ.

முதல்வர் : ஏன் இல்லை

பாட்டு : சேரனுக்கும் சோழனுக்கும் போர் ஒன்று மூண்டதப்போ
சேரனைச் சோழன் வெற்றிகொண்டு சிறையிட்டான்
சேரமன்னன் கணைக்கால் இரும்பொறை என்பவன்
சிறையிலே தாகத்தால் தவியாய்த் தவித்திட்டான்
தண்ணீர் தாருங்கள் எனக்கேட்கையிலே சேவர்கள்
தண்ணீரைச் சிரட்டையிலே கொண்டுவந்து கொடுத் தார்கள்.

வசனம் : சேரமன்னன் கணைக்கால் இரும்பொறைக்கு அவமானம் தாங்கமுடியவில்லை. அரசனாக இருந்த எனக்குச் சிரட்டையிலே நீர் தந்து அவமதித்தார்களே என்று எண்ணி, உயிரினும் மானமே பெரிதெனக் கருதி எதுவும் உண்ணாமல் சிறையிலே உயிர்விட்டான்.

பாட்டு : மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் என்ற குறளுக்கு
ஏற்றதொரு வில்லுப்பாட்டு இப்பொழுது கேட்டீர்கள்
ஏற்றிருந்து கேட்டதற்கு எங்களது நல்வணக்கம்.

கொள்ளுபிட்டி சென். தோமஸ் கல்லூரி
10.02.2018

வில்லிசை

# 22. சமநீதியே சரிநீதி

காப்பு : தந்தனத் தோம் என்று சொல்லியே வில்லிசைபாட வந்தருள்வாய் கணதியே வரம்நீ தந்தருள்வாய் கணதியே

வாணி சரஸ்வதியே சரஸ்வதியே நல்வாக்குத் தாருமம்மா
எமக்கு நல்வாக்குத் தாருமம்மா - நல்வாக்குத் தாருமம்மா

**வேறுசந்தம்**

சபையில் உள்ள பெரியோரே, தாய்மாரே, தந்தையரே
தம்பியரே தங்கையரே அண்ணன்மாரே அக்காமரே
உங்களுக்கு எங்களது உளமார்ந்த வணக்கங்கள்
வணக்கம் வணக்கம் வணக்கம்

வசனம் : அன்பர்களே நாங்கள் இன்று உங்கள் முன்னிலையில் "சமநீதியே சரிநீதி" என்னும் வில்லுப்பாட்டுப்பாட வந்துள்ளோம்.

பாட்டு : நாடிலங்கை மாநகரில் நல்லதமிழ் பாடவல்லார்
கூடிவாழும் கொழும்பினிலே குடியிருக்கும் மாணவர்நாம்
செந்தமிழில் சொல்எடுத்துத் தித்திக்கும் இசைவகுத்து
பாடுகிறோம் வில்லுப்பாட்டுப் பக்குவமாய்க் கேட்டிடுவீர்.

உதவி 1 : ஆமா என்ன வில்லுப்பாட்டு என்று சொன்னீர்கள்?

முதல்வர் : சமநீதியே சரிநீதி என்னும் வில்லுப்பாட்டு.

உதவி 2 : அதென்ன சமநீதியே சரிநீதி

உதவி 1 : வில்லுப்பாட்டென்றால் கதையெல்லோ சொல்ல வேண்டும்.

முதல்வர் : சமநீதியே சரிநீதி என்பது கதையினுடைய கருத்து. கதையை இனிச் சொல்கிறேன் கேளுங்கள்.

பாட்டு : தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வில்லாச்
செல்வமும் நிறைந்திருக்கும் சோழவள நாட்டினிலே
அள்ள அள்ளக் குறையாத அறநெறியில் தவறாத
வள்ளல்என நீதிகாத்து ஆண்டுவாறான் மனுவேந்தன்.

உதவி 1 : செங்கோல்நீதி தவறாத மன்னன் என்று சொல்லுங்கள்.

உதவி 2 : செங்கோல் என்றால் என்ன?

முதல்வர் : செங்கோல் என்றால் அரசனுடைய சிங்காசனத்தின்முன் நீதிக்கு அடையாளமாக இருக்கம் கௌரவமான சின்னம். பாராளுமன்றத்திலும் சபாநாயகருக்கு முன்னால் இருக்கும்.

உதவி 2 : ஓகோ எம்பிமார் சண்டைபிடிக்கும்போது அதைத்தான் தூக்கிக்கொண்டு ஓடுறவையோ?

முதல்வர் : செங்கோலில் யாருமே தொடக்கூடாது. அதைத் தூக்குபவர் மிக இழிந்தவராக எண்ணப்படுவர். செங்கோல்தான் நீதியின் சின்னம்.

உதவி 1 : செங்கோல் நீதி தவறாதவர் என்றால்?

முதல்வர் : நாடாளும் மன்னன்- இன்னார் இனியார், செல்வர் வறியவர், கற்றோர் கல்லாதவர், தாழ்ந்தோர் உயர்ந்தோர், நண்பர் பகைவர், நல்லோர் கெட்டோர் என்ற பேதமின்றி முறைப் பாட்டை நன்கு விசாரித்துத் தீர்ப்புச் சொல்லவேண்டும். ஒருதலைப்பட்சமாகச் சொல்லக்கூடாது. அதுதான் சமநீதி. சரிநீதியாகும்.

பாட்டு : மனுநீதிச் சோழனது ஆட்சியிலே ஓர்நாள்
தனதுமகன் தன்குலத்துக் கொருவனென உள்ளான்
தேரோட்டி வரும்போது பசுக்கன்று ஒன்று
தேர்ச்சில்லில் இடைப்புகுந்து நெரிந்து இறந்ததுவே.

உதவி 1 : ஐயோ பாவம் பசுக்கன்று

உதவி 2 : அரசகுமாரனும் பாவம்தானே. அவன் வேண்டுமென்று நெரிக் கவில்லைத்தானே. பசுக்கன்றுதனே சில்லில் இடைப்புகுந்து நெரிந்தது.

முதல்வர் : எப்படியோ, நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. தாய்ப்பசுவின் நிலை பார்க்கப் பரிதாபமாயிற்று.

பாட்டு : கன்றை இழந்தபசு கதறித்துடித்தழுதது
தன்உடல் நடுநடுங்கத் தடுமாறி மெல்லநடந்து
மன்னனின் அரண்மனையின் ஆராய்ச்சிமணிதன்னைத்
தன்கொம்பால் இழுத்தடித்துத் தடுமாறி நின்றதுவே.

உதவி 1 : அதென்ன அரண்மனை ஆராய்ச்சிமணி?

முதல்வர் : மனுநிதிச் சோழனிடம் தம்குறையை முறையிட வருபவர்கள் அந்த ஆராய்ச்சி மணியை அடித்தால் உடனே அரசன் அவர்களது முறைப்பாட்டைக் கேட்டு நீதி வழங்குவான். அங்கு எல்லாருக்கும் சமநீதி வழங்கப்படும்.

உதவி 2 : பசு ஆராய்ச்சிமணியை அடித்தது, அப்புறம் என்ன நடந்தது?

முதல்வர் : அதைக்கேட்டு அரசன் பதைபதைத்தான். நாட்டில் யாருக்கோ ஏதோ தீங்கு நடந்துவிட்டதேஎன வேதனைய டைந்தான். அமைச்சரை அழைத்தான். என்ன நடந்தது என வினவினான். நடந்த எல்லாவற்றையும் அறிந்திருந்த அமைச்சர் சொன்னார்.

பாட்டு : வளவநின் புதல்வன் ஆங்கோர்
மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில் பல்சேனை சூழ
அரசு உலாம் தெருவில் போங்கால்
இளைய ஆன்கன்று தேர்க்கால்
இடைப்புகுந்து இறந்ததாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்தது இச்செய்தி என்றார்.

வசனம் : மன்னன் பதைபதைத்தான். என் மைந்தனா இந்தப் பசுவின் கன்றைக் கொன்றான். ஐயையோ எந்த உயிருக்கும் எந்தத் தீங்கும் நடக்காத என் நாட்டில் என்மகனே பசுக்கன்றைக் கொன்றானோ? என வேதனைப்பட்டான். இந்தப்பாவம் தீர வழி என்ன என அமைச்சர்களை வினவினான்.

உதவி 1 : இறந்த கன்றை எழுப்பமுடியுமோ?

உதவி 2 : கன்றை இழந்து வருந்தும் பசுவின் கவலையைத் தீர்க்க வழியென்ன?

முதல்வர் : அமைச்சர்கள் கூடி ஆராய்ந்தார்கள். வேதத்தில் விதிக்கப் பட்டதைக் கூறினார்கள்.

உதவி 1 : என்ன சொன்னார்கள்?

முதல்வர் : அந்தணர்களுக்குப் பசுக்களைத் தானமாகக் கொடுத்தால் பசுவைக் கொன்ற பாவம் தீரும் என்றார்கள். மன்னன் கோபம் கொண்டான். அந்தணர்க்குப் பசுக்களைத் தானம் கொடுத்தால் கன்றை இழந்த பசுவின் துயர் தீருமா. இறந்த கன்று எழுந்து வருமா? முறையிட்டது ஐந்தறிவு உள்ள பசு. குற்றம் இழைத்தவன் என் மகன் அறு அறிவுள்ள மனிதன். எல்லா உயர்க்கும் சமநீதி வழங்கவேண்டியது அரசனது கடமையல்லவா அமைச்சரே என்றான்.

பாடல் : தன்கன்றை இழந்து வருந்திடும் பசுபோல்
என்மகனை இழந்துநான் வருந்திடல் வேண்டும்
என்மகனைக் கொண்டுபோய் வீதியில் நிறுத்தி
என்தேரினாலவனைக் கொன்று வாருங்கள்.

என்று கட்டளை இட்டான். எல்லோரும் அதிர்ந்து போனார்கள். அமைச்சரோ இந்தப் பாதகத்தைச் செய்வதிலும் இறப்பதே மேல் என உயிரை விட்டுவிட்டார். மற்றைய தளபதி பிரதானிகளும் மறுத்துவிட்டார்கள்.

உதவி 1 : இதென்ன கொடுமை. ஒரு பசுவின் கன்றுக்காக இளவரசனையே கொல்வதா?

உதவி 2 : அதுதான் அரசன் முன்பே சொல்லிவிட்டாரே. எல்லா உயிருக்கும் சமநீதி வழங்குவதே மன்னன் கடமை என்று.

உதவி 1 : இது பெரிய தருமசங்கடமாயிற்றே. பின் என்ன நடந்த தையா சொல்லுங்கள். கேட்கவே நெஞ்சு பதறுகிறதே.

முதல்வர் : மன்னன் எழுந்தான் மகனை அழைத்தான். வீதியின் நடுவே போய்ப்படு என்றான்.

பாட்டு : ஒருமைந்தன் தன்குலத்துக்கு
உள்ளான் என்பதும் உணரான்
தருமம்தன் வழிச்செல்கை
கடன் என்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி
உற ஊர்ந்தான் மனுவேந்தன்.

வசனம் : தன் மகனைத் தன்தேரால் தானே நெரித்துக் கொன்றுவிட் டான் மனுவேந்தன். அவனது அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ தான் பார்த்திருந்தோர் எல்லாரும் பதறிக் கதறி அழுது மயங்கி விழுந்தார்கள்.

உதவி 1 : எங்களுக்கே மயக்கம் வரும்போல இருக்கு.

உதவி 2 : அதைப் பார்த்தவர்களுக்கு எப்படி இருக்கும்?

முதல்வர் : மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்தார்கள். என்ன ஆச்சரியம் பசுவும் கன்றும் அரசனும் மகனும் சிரித்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் நின்றார்கள். மேலே பார்த்தார்கள் சிவபெரு மான் காட்சி கொடுத்தார்.

பாட்டு : தண்ணளி வெண்குடை வேந்தன்
செயல்கண்டு தரியாது
மண்ணவர் கண்மழை பொழிந்தார்
வானவர் பூமழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே
அணிவீதி மழவிடைமேல்
விண்ணவரும் தொழநின்றான்
வீதிவிடங்கப் பெருமான்.

உதவி 1 : சந்தோசமான செய்திதான். ஆனால் இந்த முடிவு சரியில்லையே.

உதவி 2 : ஏன் சரியில்லை?

உதவி 1 : அரசகுமாரன் பசுக்கன்றைக் கொன்றது கொலை என்றால் அரசன் மகனைக் கொன்றதும் கொலைதானே.

உதவி 2 : அதுதானே.

முதல்வர் : அதிலேதான் நீதிபற்றிய விசாரணை இருக்கு. சாதாரண மனிதனல்ல அரசன். அரசன்தான் கண்கண்ட கடவுள். அவன்தான் பூலோகத்தில் தெய்வம்போல நீதி செலுத்த வேண்டியவன். தனக்கொரு நீதி பிறர்க்கொரு நீதி என்றில் லாமல் எல்லார்க்கும் சமநீதி செலுத்த அதிகாரம் உள்ளவன் அரசனே.

பாட்டு : மாநிலம் காவலனாவான்
மன்னுயிர் காக்கும் காலை
தானதனுக்கு இடையூறு
தன்னால், தன்பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால்
உயிர்களால, கள்வர்தம்மால்
ஆனபகை ஐந்தும் தீர்த்து
அரசாள்வான் அல்லனோ.

வசனம் : அரசன் ஆனவன் தன்னாட்டிலுள்ள உயிர்களுக்கு தன்னால், தன்படைவீரரால், பகைவரால், வேறு உயிர்களால், கள்வரால் இந்த ஐந்து வழியிலும் வரக்கூடிய துன்பங்களையும் நீக்கிக் காக்க வேண்டும்.

இதுதான் செங்கோல்நீதி - இதுதான் சமநீதி - இதுதான் சரிநீதி.

முதல்வர்
வசனம் : ஒரு தாயானவள் தான் பெற்ற பிள்ளைகள் இருவரில் ஒருவருக்கு ஒரு மார்பால் பால்கொடுத்து மற்றவருக்கு மறு மார்பால் நீர் கொடுப்பாளோ. இல்லையே இருவர்க்கும் பால்தானே கொடுப்பாள். அதுபோலவே

அரசனும் சகல உயிர்க்கும் சமநீதியே செய்வான். அதுவே சரிநீதி. அதனால்தான் அரசனையும் இறை யெனக் கடவுள் பெயரால் அழைக்கின்றோம்.

உதவி 2 : சமநீதியே சரிநீதி என்பதற்கு மனுநீதிகண்ட சோழன் கதை மெத்தப் பொருத்தமானது.

உதவி 1 : எங்களுக்கும் நீதி என்றால் என்ன என்று இப்போதுதான் விளங்கிச்சுது.

முதல்வர்
பாட்டு : விருப்புடனே வந்திருந்து
வில்லுப்பாட்டுக் கேட்டவர்கள்
எல்லோருக்கும் எங்களது வணக்கம் - எங்களை
மதித்தவர்கள் எல்லோருக்கும் வணக்கம்
வணக்கம் வணக்கம் வணக்கம்

கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்
15.02.2018

உ
சிவமயம்

வில்லிசை - 04

# 23. பூம்பாவை

**காப்பு**

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லிசைபாட வில்லிசைபாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே.

வாணி சரஸ்வதியே சரஸ்வதியே
நல்வாக்குத் தாருமம்மா... நல்வாக்குத் தாருமம்மா

வில்லுப்பாட்டுக் கேட்கவென
வந்திருக்கும் சபையோரே
உங்களுக்கு எங்களது
உளம் நிறைந்த வணக்கங்கள்
வணக்கம் வணக்கம் வணக்கம்.

முதல்வர் : அன்பர்களே இன்று இந்த இனிய வேளையிலே எல்லார்க்கும் இன்பம்தரும் இனிய கதையொன்று சொல்லப்போகின்றோம்.

உதவி : அது என்ன கதை?

பாட்டு : பூம்பாவை என்னும் சைவப்
பொற்றொடியாள் தன்கதையை
யாம் பாட வந்திருந்தோம்
நல்லவரே கேட்டிடுவீர்.

உதவி 1 : பூம்பாவை என்னும் பெண்ணின் கதையா?
நல்லாத்தான் இருக்கும் பாடுங்கோ பாடுங்கோ.

உதவி 2 : ஆமாம் நாங்கள் யார் என்பதைச் சபையோர்க்குச் சொல்லவில்லையே.

பாட்டு : நாடிலங்கை வடபாலில்
நகுலேஸ்வரச் சாரலிலே

கூடிவளர் இளவாலை
குடியிருக்கும் அன்பர் நாங்கள்
செந்தமிழில் சொல்லெடுத்து
தித்திக்கும் இசைவகுத்து
பாடுகிறோம் பூம்பாவை
வில்லுப்பாட்டைக் கேட்டிடுவீர்.

முதல்வர் : தென்னாடுடைய சிவனே போற்றி என மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய பெருமைபெற்ற தமிழ்நாட்டிலே திருமயிலாப்பூர் என்று ஒரு துறைமுகப் பட்டினம். அங்கே சிவநேசச் செட்டியார் எனும் ஒரு பக்தர் வாழ்ந்து வந்தார். பெயருக்கேற்ப அவர் சிவன்மீது நேசம் மிக்கவர். மனைவியாரும் அப்படியே. இருவரும் திருமயிலாப்பூரில் எழுந்தருளியுள்ள சிவன் கபாலீச் சுரரையும் கற்பகவல்லியையும் இடையறாது வணங்கித் தொண்டு செய்து வந்தார்கள்.

உதவி 1 : ஒகோ எங்கள் வீரமணி ஐயர் பாடிய கற்பகவல்லிப் பாட்டுக் கோயிலோ.

முதல்வர் : அதுவேதான் சந்தேகமில்லை.

உதவி 2 : அந்தப் பாட்டிலை இரண்டுவரி பாடுங்கோ...

பாட்டு : கற்பகவல்லியுன் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாய் அம்மா - கற்பக...

உதவி 1 : அற்புதம் அற்புதம் - அந்தத் திருமயிலாப்பூரிலே நடந்த கதையென்றால் நல்லாத்தான் இருக்கும். சொல் லுங்கோ.

முதல்வர் : அவர்களுக்கு எல்லாச் செல்வமும் இருந்தாலும் ஒரு பிள்ளை இல்லையே என்ற குறை மனதை வாட்டியது. கபாலீச்சரரையும் கற்பகவல்லி அம்பிகையையும் தினமும் வணங்கித் தவமிருந்தார்கள்.

பாட்டு : இல்லற வாழ்வினிலே இன்பமெலாம் கண்டோம்
நல்லறம் வளர்ப்பதற்கு நமக்கொரு குழந்தையில்லை
வல்லவளே தாயே கற்பக வல்லி அம்மா
நல்ல குழந்தை உன்போல் நமக் கொன்று தாருமம்மா.

என்று வேண்டித் தவமிருந்தார்கள். செய்தவம் வீண் போகா தல்லவா. அவர்கள் வேண்டியபடியே குழந்தை ஒன்று பிறந்தது.

உதவி 1 : என்ன குழந்தை?

உதவி 2 : கற்பகவல்லியை வேண்டினால் பெண்குழந்தைதானே.

முதல்வர் : பெண்குழந்தை - அது பொன்குழந்தையாகக் கிடைத்த தென ஊருக்கெல்லாம் சொல்லி உச்சிமேல் வைத்துப் போற்றி வளர்தார்கள்.

உதவி 1 : ஊரறிய உலகறிய என்ன பேர் வைத்தார்கள்?

பாட்டு : பொன்னின் குடத்துப்
பூவொன்று வைத்ததுபோல்
பூம்பாவை என்னும் பேர்
வைத்து வளர்த்தார்கள்.

உதவி : அருமையான பெயர். பெயர் வைத்தால் இப்படியல்லோ வைக்க வேண்டும்.

முதல்வர் : பூம்பாவையைத் தினமும் கோயிலுக்குக் கொண்டுபோய் வழிபட்டு வந்தார்கள்.

உதவி : தலாட்டுப் பாடியிருப்பார்களே.

முதல்வர் : ஆமாம் பாடினார்கள். ஊஞ்சல் ஆட்டினார்கள்.

பாட்டு : தெய்வத் திருமகளே தாலேலோ - எங்கள்
செல்வக் குலவிளக்கே தாலேலோ
அமுதசுரபியென வந்துதித்த - எங்கள்
பூம்பாவை கண்மணிநீ கண்ணுறங்கு
சைவக் கலைநிதியே தாலேலோ - எங்கள்
சந்ததி தளிர்க் கொடியே தாலேலோ.

எனத் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார்கள். பூம்பாவை வளர்பயிர்போல் வளர்ந்தாள். தினமும் தங்கள் பூந்தோட்டத்தில் மலர் பறித்து மாலை தொடுத்து திருமயிலாப்பூர் பெருமானுக்கும் பெருமாட்டிக்கும் போட்டு வணங்குவதை நியமமாகக் கொண்டாள்.

உதவி : வீட்டுப் பூந்தோட்டத்தில் அவ்வளவு மலர் இருக்குமா?

பாட்டு : அல்லி முல்லை மல்லிகையும்
அழகிய றோசா சண்பகமும்
தாமரை குமுதம் செங்கழுநீர்
சாமந்தி செவ்வந்தி இருவாட்சி
பூத்துக் குலுங்கிய தோட்டத்திலே
புதுமலர் பறித்தே மாலை கட்டி

தினமும் பூசைவழிபாடு செய்து வந்தாள். பிள்ளையின் வளர்ச்சி கண்ட சிவநேசர் பெருமகிழ்ச்சி கொண்டார். அதே வேளையில் சீர்காழி ஞானசம்பந்தப் பெருமான் மூன்று வயதிலே ஞானப்பாலுண்டு தலந்தோறும் தேவாரம் பாடி அற்புதங்கள் செய்வதைக் கேள்விப் பட்டார். ஞானசம்பந்தப் பெருமானை மனதில் நினைந்து வணங்கினார்.

பாட்டு : ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனிமுதலை
வானத்தின் மிசை அன்றி
மண்ணில் வளர் மருக்கொழுந்தை
தேனக்க மலர்க் கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தில் எழுபிறப்பைக்
காணமிக ஆவல் கொண்டார்.

தான் தேடிய செல்வங்களையும் தன் செல்வமகள் பூம்பாவையையும் ஞானசம்பந்தருக்கே கொடுப்பதாக வும் மனதில் உறுதி பூண்டார். இவ்விதமாக மகிழ்வுடன் காலம் கழிந்துகொண்டே இருந்தது. ஒருநாள் பூம்பாவை பூப்பறித்தபோது பூம்பந்தலில் இருந்த பாம்பொன்று அவளைக் கடித்துவிட்டது.

உதவி 1 : ஐயையோ பாம்பு தீண்டியதா?

உதவி 2 : இதென்ன கொடுமை சுவாமிக்குப் பூப்பறித்தவளைப் பாம்பு தீண்டுவதா!

பாட்டு : பூப்பறிக்கும் வேளையிலே பூம்பந்தர் மேலிருந்து
பூநாகம் தீண்டியதே பொற்கொடியாள் மயங்கினளே.

விஷகடி வைத்தியர்கள் வந்து பார்த்தார்கள். பயனில்லை. பூம்பாவை மாண்டுவிட்டாள்.

உதவி 1 : தவமிருந்து பெற்ற தங்கள் செல்வமகளை இழந்து

உதவி 2 : தவியாய்த் தவித்திருப்பார்களே!

பாட்டு தவமிருந்து பெற்றெடுத்த
தவமகளே பூம்பாவாய்
அவமாகப் போயினையே
ஆரிடத்தில் போயுரைப்போம்
சிவனாரால் வந்தபிள்ளை
சிவதொண்டு செய்தபிள்ளை
சிவனுக்குப் பூப்பறிக்க
தீண்டியதோ பூநாகம்

என்று அழுது புலம்பினார்கள். செய்வதறியாது சிந்தை நொந்தார்கள். பெரியவர்கள் சொன்னபடி அவர்களின் குல வழக்கப்படி பூம்பாவையின் உடல் எரியூட்டப் பட்டது. எஞ்சிய சாம்பரையும், எலும்பையும் ஒரு புதுக்குடத்தில் எடுத்து வீட்டுக்குக் கொண்டுவந்து குடத்துக்குப் பொட்டிட்டுப் பட்டுக் கட்டிப் பூமாலை போட்டுக் கன்னிமாடத்தில் வைத்து விளக்கேற்றிப் பூம்பாவையாகவே நினைந்து வழிபட்டு மனம் ஆறினார்கள்.

உதவி 1 : சிவநேசர் பூம்பாவையை ஞானசம்பந்தருக்குக் கொடுப்பதாக எண்ணி இருந்தாரே - பாவம்.

முதல்வர் : இப்பவும் அவர் ஞானசம்பந்தரையே எந்நேரமும் நினைந்து வணங்கிக்கொண்டே இருக்கிறார். ஞானசம்பந்தர் திரு வொற்றியூரிலிருந்து திருமயிலாப் பூருக்கு வரப்போகிறார் என்று அறிந்தார்.

உதவி 2 : பெரிய மகிழ்ச்சி கொண்டிருப்பாரே!

முதல்வர் : ஆமாம் திருமயிலாப்பூரிலிருந்து திருவொற்றியூர் வரை பந்தலிட்டு வரவேற்க ஆயத்தம் செய்தார். வீதி எங்கும்

பாட்டு : வாழை கமுகு தாளைகள் நாட்டி
வீதியின்மேலே விதானம் கட்டி

மாவிலை தோரணம் மாலைகள் கட்டி
வாயில்கள் தோறும் கோலங்கள் போட்டு
நிறைகுடம் தூப தீபங்கள் வைத்து
வண்ணப் பொடிகள் நிலத்தினில் பரப்பி
மங்கல நாதம் சங்குகள் முழங்க
வானில் சிவசிவ நாமம் முழங்க

ஊரவர்கள் எல்லாரையும் கூட்டி ஊர்கோலமாய் ஞானசம்பந்தரை அழைத்து வந்தார். சம்பந்தப் பெருமான் மயிலாப்பூர் கபாலீச்சுரர் கோயிலுட் போய் பதிகம் பாடி வணங்கினார்.

உதவி 1 : நல்ல சந்தர்ப்பம். சம்பந்தருக்குப் பூம்பாவைக்கு நிகழ்ந்ததைச் சொல்லி இருக்கலாமே!

உதவி 2 : உனக்குள்ள மூளை அவர்களுக்கு இல்லையே. கொஞ்சம் பொறு அவர் சொல்லட்டும்.

முதல்வர் : சிவநேசர் சம்பந்தரின் காலில் வீழ்ந்து வணங்கிப் பூம்பாவைக்கு நிகழ்ந்ததைச் சொன்னார். சம்பந்தப் பெருமான் பூம்பாவையின் சாம்பரும் என்பும் உள்ள குடத்தைக் கோயிலின் புறமதிற்பக்கம் கொண்டுவரச் சொன்னார். அடியார் புடைசூழ சம்பந்தர் அங்கு சென்றார். குடம் கொண்டுவரப்பட்டது. சம்பந்தப்பெருமான் கபாலீச்சுரரையும் கற்பகவல்லித் தாயாரையும் நினைந்து வணங்கி “மட்டிட்ட புன்னை...” எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடினார். அதில் ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற விழாக்களைக் குறிப்பிட்டு நீ இதைக் காணாமல் போகிறாயோ எனப் பாடினார்.

பாட்டு : உருத்திர பல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே
போதியோ பூம்பாவாய் - போதியோ பூம்பாவாய்

ஐப்பசி ஓணவிழாக் காணாதே
போதியோ பூம்பாவாய்

கார்த்திகைநாள் விளக்கீடு காணாதே
போதியோ பூம்பாவாய்
மார்கழி ஆதிரைநாள் காணாதே

போதியோ பூம்பாவாய்
தைப்பூச நல்விழாக் காணாதே
போதியோ பூம்பாவாய்
மாசிக் கடலாட்டுக் காணாதே
போதியோ பூம்பாவாய்
பங்குனி உத்தரநாள் பெருவிழாக் காணாதே
போதியோ பூம்பாவாய்
பெருஞ்சாந்திப் பொற்றாப்புக் காணாதே
போதியோ பூம்பாவாய்

எனப் பாடப்பாட குடத்தில் இருந்த சாம்பரும் என்பும் படிப் படியாகப் பெண்ணாகிப் பன்னிரண்டு வயதுக் கன்னியாகிப் பூம்பாவை எழுந்து வணங்கி நின்றாள்.

உதவி 1 : இதுவல்லோ அற்புதம்

உதவி 2 : இதுவல்லோ அதிசயம்
நேரில் கண்ணாலே கண்டதுபோல் இருக்கு.

முதல்வர் : எல்லாரும் ஆனந்த பரவசமாகிச் சம்பந்தரையும் பூம்பாவையையும் மாறிமாறி வணங்கினார்கள். சிவநேசரும் மனைவியும் சம்பந்தர் காலில் வீழ்ந்து வணங்கி,

பாட்டு : சம்பந்தப் பெருமானே தாள்தொழுதோம்
எங்களை ஆட்கொள்ள வேண்டுமையா
எங்களின் செல்வி பூம்பாவையுடன்
எங்களின் செல்வமும் உங்களுக்கே
தந்திடவேண்டித் தவமிருந்தோம்
ஏற்றருள் செய்திட வேண்டுமையா.

என்று பணிந்து விண்ணப்பித்தார்கள்.

உதவி 1 : சம்பந்தர் என்ன செய்திருப்பார்?

உதவி 2 : நல்லது என்று ஏற்றிருப்பார்.

முதல்வர் : அதுதான் இல்லை. சம்பந்தர் சொன்னார்.

சிவநேசரே உங்கள் மகள் பூம்பாவை இறந்து விட்டாள். இப்பொழுது என்முன் நிற்கும் பூம்பாவை நான் உயிர் கொடுத்து எழுப்பிய பூம்பாவையல்லவா. இவள் எனக்கு

மகளாவாள். ஆதலால் உங்கள் எண்ணத்தை விடுங்கள். பூம்பாவை சிவனுக்குத் தொண்டு செய்து சிவகதி சேர்வாள். எல்லோரும் இன்புற்றிருங்கள் என்று ஆசி நல்கிச் சென்றார்.

உதவி 1 : பிறகு பூம்பாவை என்ன செய்தாள்?

முதல்வர்
பாட்டு : அப்போதே அலர்ந்த பூவில்
அழகிய மாலையாக்கி
எப்போதும் தப்பாமலே
இறைவனுக்கு அர்ப்பணித்து
சம்பந்தரின் பதிகங்களைப்
பண்ணுடனே பாடிப் பாடி
பெருமான் பணிசெய்து
பேரின்பப்பேறு பெற்றாள்.
பூம்பாவை கதைகேட்ட
புண்ணியர்கள் எல்லோர்க்கும்
நாம் வணக்கம் சொல்லுகிறோம்
நன்றாக வாழ்ந்திருப்பீர்.

மங்களம் மங்களம் மங்களம்.

வணக்கம்.

1974இல் இணுவில் காரைக்கால் சிவன்கோயிலில் செல்லத்துரை நாவரசனும் (5 வயது) சித்திரமேழி ஞான வயிரவர் கோயிலில் செல்லையா நவநீதகுமாரும் நிகழ்த்தியது.

## சைவப்புலவர்
## சு. செல்லத்துரையின் நூல்கள்

01. கலைவாணி இசைப்பாடல் - கீதம்
02. சித்திரத்தேரில் சிவகாமி அம்மை - பாடல்
03. வாக்கும் வாழ்வும் - வானொலிப்பேச்சு
04. காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும்
05. வள்ளல் ஏழுர் - சிந்துநடைக் கூத்து
06. ஆனந்த மாலை - பாடல்
07. அண்ணா பொன் ஏடு - வரலாறு
08. வாழ்வாங்கு வாழ்தல் - வானொலிப் பேச்சு
09. அரங்கப்படையல் - முத்தமிழ் நூல்
10. சிவநெறி - ஐரோப்பிய சிவநெறிக்கழகப் பாடநூல்
11. ஐயனார் புராண உரை
12. கல்வளை அந்தாதி - உரைவிளக்கம்
13. பஞ்சபுராணம் - உரை
14. மங்கல மனையறம்
15. மங்கலத் திருமணம்
16. சிவகாமித் தமிழ் - கவிதை
17. இன்பத் தமிழ் - வானலையில் வந்தவை
18. வாடா மல்லிகை - வரலாறு
19. பத்தினித் தெய்வம் - நாடகம், வில்லிசை
20. இறந்தபின் எங்கள் நிலை - வினாவிடை
21. நற்சிந்தனை 50 - வானலையில் வந்தவை
22. வில்லிசைப் பாடல்கள்.

## பண்டிதர் சி. அப்புத்துரையுடன் இணைந்து எழுதியவை

01. தொடக்கும் தொடர்பும்
02. அபரக்கிரியை விளக்கம்
03. பூப்புனித நீராட்டல்
04. திருமணக் கிரியைகள்

கணபதி பிறிண்டேர்ஸ்.